# புலவர்மணி கட்டுரைகள்

70

இலக்கிய கலாநிதி

ஏ. பெரியதம்பிப்பிள்ளை

வெளியீடு:

கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சு
வடக்கு – கிழக்கு மாகாணம்
திருகோணமலை.
நவம்பர் – 1999.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலவர்மணி கட்டுரைகள்

தொகுப்பாசிரியர்

பெ. விஜயரெத்தினம்

இரா. நாகலிங்கம்

(அன்புமணி)

வெளியீடு:

கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சு

வடக்கு - கிழக்கு மாகாணம்

திருகோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல்: புலவர்மணி கட்டுரைகள்
வகை: கட்டுரை
நூலாசிரியர்: இலக்கிய கலாநிதி, புலவர்மணி
ஏ. பெரியதம்பிப்பிள்ளை (அமரர்)
தொகுப்பாசிரியர்கள்: பெ. விஜயரெத்தினம்
இரா. நாகலிங்கம் (அன்புமணி)
வெளியீடு: வடக்கு - கிழக்கு மாகாண
கல்வி, பண்பாட்டலுவல்கள்
விளையாட்டுத்துறை அமைச்சு
பதிப்பு: பதிப்பகத் திணைக்களம், வ. கி. மா.,
திருகோணமலை.
பக்கம்: 159,
பிரதிகள்: 500
விலை: 200/=

Title: Pulawarmani Kadduraikal
Category: Collection of essays.
Author: Dr. Pulavarmani, A. Periyathambiplllai (Late)
Editors: P. Wijeyaretnam
R. Nagalingam (Anbumani)
Publishers: Ministry of Education, Cultural affairs & Sports (NEP)
Printed by: Printing Dept. NEP, Trincomalee.
Page: 159
Copies: 500
Price:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலவர்மணி கட்டுரைகள்

## பொருளடக்கம்


(i) அணிந்துரை
(ii) வெளியீட்டுரை
(iii) முன்னுரை
(iv) செயற்குழு உறுப்பினர் 1998
(v) தொகுப்பாசிரியர் உரை

**பகுதி I சமயம்**

1. கலித்தொகையின் கடவுள் வாழ்த்து
2. குணங்குடிமஸ்தான் சாகிபு பாடல்கள்
3. ஸ்ரீ காளிகாமடு கற்பகவிநாயகர்
4. சக்தி வழிபாடு

**பகுதி II இலக்கியம்**

5. இலக்கியமும் சமூகவாழ்வும்
6. வாழ்வாங்குவாழ வழிகாட்டும் இலக்கியம்
7 கம்பன் நாட்டிய தமிழ்நாகரீகம்
8. அகவாழ்வும் புறவாழ்வும்
9. ஒருவருக்கொருவர் உதவி வாழுதல்

**பகுதி III சமூகம்**

10. மட்டக்களப்பில் சிதைந்து வழங்கும் சொற்கள்
11. இலட்சியமும் சமநோக்கும்
12. மனிதனை மனிதன் உள்ளத்தால் அணுகுவதே மொழி
13. பாடறிந்து ஒழுகும்பண்பு
14. தியாக சேவை வேண்டும்
15. சூழ்ந்த பார்வையுள்ள நல்லாசிரியர் வாழ்க
16. பேராசை ஒருபல தலைப்பேய்
17. நாடகம் ஆடுவானேன் நாம் அதை நாடுவானேன்.

**பகுதி IV தமிழறிஞர்**

18. விபுலானந்த அடிகளார்
19. விபுலானந்த அடிகளாரின் கல்வித்தொண்டு
20. வித்தக விபுலானந்தரின் நினைவு
21. வைத்திலிங்க தேசிகர்
22. நாவலர் பெருமான்
23. தி. த. கனகசுந்தரம்பிள்ளை
24. வித்துவான் ச. பூபாலபிள்ளை
25. அடியார்க்கடியன் சரவணமுத்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

மட்டக்களப்பும் யாழ்ப்பாணத்தைப் போலவே சிறந்த தமிழறிவுப் பாரம்பரியத்தைத் தன்னகத்தே கொண்டது. திருக்கோணமலையும் அவ்வாறேயாம். இவ்வாறாக வடக்கு -கிழக்கின் பல்வேறு அறிவு நீரோட்டங்களையும், அவற்றில் வளம் பெற்ற நமது தமிழ் மரபையும், மாற்றங்களையும் நாம் அறிந்து கொள்ள வேண்டியது அவசியம். அவ்வாறான ஓர் அவசியத்தை நிறைவு செய்வதற்கான பயணத்தில் ஒரு மைற்கல்லாக புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்களின் இக்கட்டுரைத் தொகுப்பு அமைகின்றது.

புலவர்மணி அவர்கள் சுவாமி விபுலானந்தர் அவர்களின் மாணவர். ஏற்கனவே சுவாமியின் நூலின் திரட்டில் ஒரு பகுதியை எமது அமைச்சினூடாக வெளிக்கொண்டுவந்த நாம் இப்போது அவரது மாணவரான புலவர்மணியின் நூலையும் வெளிக்கொண்டு வருகிறோம். புலவர்மணியின் இக் கட்டுரைத் தொகுப்பின் ஊடாக சுவாமி விபுலானந்தரின் பல்வேறு மாணவப் பாரம்பரியத்தின் செயற்பாடுகள் மட்டக்களப்பில் ஏற்படுத்திய மாற்றங்களை நாம் அறிகிறோம். திருகோணமலை அறிஞர் கனகசுந்தரம்பிள்ளை அவர்களும், அவரது சகோதரர் சரவணமுத்துப்பிள்ளை அவர்களும், அவரது சகோதரியர் தையல்நாயகி அம்மையாரும் (திருகோணமலை மாதர்சங்க ஸ்தாபகி) ஆற்றிய அரும் பெரும் பணிகளை அறிகிறோம். யாழ்ப்பாணத்து நாவலர் பரம்பரையோடு மட்டக்களப்பு அறிஞர் குழாம் கொண்டிருந்த தொடர்பை அறிகிறோம். இவரதுமரபினர் தமிழுக்காற்றிய தொண்டுபற்றி அறிகிறோம்.

இவ்வாறான பல்வேறு அறிவோட்டங்களின் சங்கமத்தைக் காட்டும் ஒரு நூலாக புலவர்மணியின் கட்டுரைகள் அமைகிறது. இதனை வெளியிடுவதன் ஊடாக பெரும் பங்களிப்பைச் செய்த களிப்பு எமக்கு ஏற்படுவது தவிர்க்கமுடியாதது. இதற்கான தூண்டுகோலாய் இயங்கிய புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை நற்பணிமன்றத்தினர்க்கு எம் நன்றி.

**சுந்தரம் டிவகலாலா**
செயலாளர்
கல்வி, பண்பாட்டலுவல்கள்
விளையாட்டுத்துறை அமைச்சு,
வ. கி. மா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியீட்டுரை

எமது கல்வி, பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் ஊடாக பல்வேறு தரத்தனவான நூல்கள் அண்மைக் காலமாக வெளிக்கொண்டு வரப்பட்டுள்ளன. அவற்றில் கவிதைகள், சிறுகதைகள் என்பனவும் அடங்கும். ஆயினும் ஆய்வுமுறைக்குள் அடங்கும் நூல்களும் அவற்றிற்கு முன்னோடிக் குறிப்புகளை அடக்கிய கட்டுரைத் தொகுப்புகளும் அடங்கும். இரண்டும் கலந்த பாணியும் உண்டு. இவ்வகையில் சுவாமி விபுலானந்தர், ம. சற்குணம், புலவர்மணி. ஏ. பெரியதம்பிப் பிள்ளை ஆகியவர்களின் நூல்கள் அமைகின்றன.

இதனையிட்டு நாம் பெருமைப் படலாம். இவற்றிற்கு நாம் மட்டும் காரணரல்லர். இவற்றை ஆக்கியோரும், அவர்களது ஆக்கங்களை வெளிக்கொண்டு வரஇயங்கும் பணியகங்களும் காரணர் எனலாம். அவ்வகையில் புலவர்மணி ஏ. பெரிய தம்பிப்பிள்ளை நினைவுப்பணி மன்றம், இயங்குகிறது. அவர்களுக்கும் நூலை வெளிக் கொண்டுவர அநுமதிதந்த எமது செயலாளர் சுந்தரம் டிவகலாலா அவர்களிற்கும் இதைபதிப்பித்தபதிப்பகத் திணைக்களத்தினருக்கும் எமது மனப்பூர்வமான நன்றி.

**எஸ். எதிர்மன்னசிங்கம்**
கலாசார உதவிப்பணிப்பாளர்,
கல்வி, பண்பாட்டலுவல்கள்
விளையாட்டுத்துறை அமைச்சு,
வ. கி. மா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

கிழக்கிலங்கையின் புகழ் பூத்த தமிழறிஞர்களுள் சுவாமி விபுலானந்தருக்குப்பின் மக்கள் மனதில் இடம் பெற்றவர் அமரர் இலக்கிய கலாநிதி புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை ஆவார். இவர்கள் கிழக்கிலங்கையில் மட்டுமல்லாது தேசிய மட்டத்திலும் கடல்கடந்த நாடுகளிலும் தமது தமிழ்ப்புலமை யினால் முத்திரை பதித்தவர்கள். ஈழத்திலே வடக்குக்கும் கிழக்குக்கும் பாலமாய் அமைந்தவர்கள்.

ஈழத்தமிழ் இலக்கியப் பரப்பில் ஆறுமுகநாவலர் சுவாமி விபுலானந்தர், பண்டிதமணி கணபதிப்பிள்ளை, புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை ஆகியோர் இலக்கிய இரட்டையர்களா கவே தமிழறிஞர்களால் பேசப்படுகின்றனர்.

புலவர்மணி அவர்கள் 2-11-78ல் அதாவது அவரது 79வது வயதில் அமரரானார். அவர் மறைந்த இருவாரங்களுக்குள் அவர் பெயரில் புலவர்மணி நினைவுப் பணிமன்றம் உருவானது. அதன் முதல் தலைவராக தற்போதைய அரசாங்க அதிபரான திரு. அ. கி. பத்மநாதன் அவர்களும், செயலாளராக முன் னாள் கல்வி அதிகாரி திரு. ம. சிவநேசராசா அவர்களும் பணிபுரிந்தனர்.

அன்று முதல் இன்றுவரை இம் மன்றம் காத்திரமான பல இலக்கியப்பணிகளை நிறைவேற்றியுள்ளது. அவற்றுட் சில வருமாறு.

(i) புலவர்மணி கவிதைகள்-கவிதைத் தொகுதி வெளியீடு.

(ii) உள்ளதும்-நல்லதும் வாழ்க்கை நினைவுகள் வெளியீடு.

(iii) கலித்தொகை-இலக்கியக் கட்டுரைத் தொகுதி வெளியீடு

(iv) நினைவு முத்திரை வெளிவரச் செய்தமை

(v) யாழ். பல்கலைக் கழகத்திலும் கிழக்குப் பல்கலைக் கழகத்திலும் ஆண்டு தோறும் புலமைப்பரிசில் வழங்கும் ஏற்பாடு

(vi) ஆண்டுதோறும் நினைவு விழா நினைவுப்பேருரை

(vii) நினைவுக் கவிதை, கட்டுரைப் பேச்சுப் போட்டிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாண்டு முதல் யான் இம்மன்றத்தின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டேன். இவ்வாண்டில் இம்மன்றத்தின் செயற்பாடுகள் ஒரு புதிய பரிமாணம் பெற்றன. அதற்குக் காரணம் புலவர்மணி நூற்றாண்டு ஆகும்.

ஆம் **8-1-1899ல்** பிறந்த புலவர்மணி அவர்களின் நூற்றாண்டு இவ்வாண்டில் **8-1-1998** ஆரம்பமாகிறது. இதன் நினைவு வைபவம் தை **1999ல்** இடம்பெறும்.

இந்நூற்றாண்டையொட்டிப் பல்வேறு செயற்பாடுகள் இடம்பெறுகின்றன. மட், மாவட்டப் பாடசாலைகட்கிடையே பேச்சு, கட்டுரைப் போட்டிகள் சிறந்த கவிதைப்போட்டி சிலை நிறுவுதல் சிறப்புமலர் வெளியீடு நூல் வெளியீடு என்பன அவற்றின் சிலவாகும்.

இப்பணிகளுள் ஒன்றாக ''புலவர்மணி கட்டுரைகள்'' நூல் வெளிவருகிறது. இந்நூல் வெளியீட்டில் முக்கிய பங்களிப்புச் செய்த மூவரை இங்கு குறிப்பிடவேண்டும்.

(i) நூல் பதிப்புக்கான முழுப்பொறுப்பையும் ஏற்றுக் கொண்ட வ. கி. மாகாணக் கல்வி, கலாசார, விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் திரு. சுந்தரம் டிவகலாலா அவர்கள்.

(ii) புலவர்மணியின் கட்டுரைகளை, பல்வேறுமூலங்களிலிருந்தும் தேடிச் சேகரித்துத்தந்த புலவர் மணி அவர்களின் புதல்வர் திரு.பெ. விஜயரெத்தினம் அவர்கள்.

(iii) கட்டுரைகளை நல்லமுறையில் தொகுத்து வடிவமைத்த திரு. இரா. நாகலிங்கம் (அன்புமணி) அவர்கள். அழகியமுறையில் இந்நூலை அச்சிட்ட வ. கி. மாகாணப் பதிப்பகத் திணைக்களம் தனது திறமையை இந்நூல்மூலம் வெளிப்படுத்தியுள்ளதை நாம் அவதானிக்கலாம்.

எமது முயற்சிகளுக்கு என்றும் துணை நிற்கும் இன்னும் சிலரைப்பற்றியும் இங்கு குறிப்பிடவேண்டும்.

(i) தேவை ஏற்படும்போது நிதி உதவி வழங்கி ஊக்குவிக்கும் இந்துசமய கலாசார திணைக்களப் பணிப்பாளர் திரு. தில்லைநடராசா மற்றும் அவரது திணைக்கள உத்தியோகத்தர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ii) பல நடவடிக்கைகளில் இணைப்பாளராகச் செயற்படும் வ·கி மாகாண கல்வி, கலாசார, விளையாட்டுத் துறை அமைச்சின் கலாசார உதவிப்பணிப்பாளர் திரு· எஸ். எதிர்மன்னசிங்கம்

(iii) மன்ற நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பும் ஊக்குவிப்பும் தரும் புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்களின் குடும்ப அங்கத்தவர்கள்.

(iv) நூற்றாண்டு விழா செயற்பாடுகளுக்காக வெளிநாடுகளில் இருந்து நிதி உதவி வழங்கிய அன்பர்கள்.

இவ்வாறே இம்மன்றச் செயற்பாடுகள் அனைத்திலும் பங்களிப்புச் செய்துவரும் செயலாளர் திரு. தி. பொன்னம்பலம் பொருளாளர் திரு. கே. தங்கவேல், துணைச் செயலாளர் செல்வி க. தங்கேஸ்வரி மற்றும் செயற்குழு உறுப்பினர் அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

90B, தாமரைக்கேணி வீதி,
மட்டக்களப்பு,
20-10-98

சி. சண்முகம்
மன்றத் தலைவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாநிதி புலவர்மணி

# பெரியதம்பிப்பிள்ளை

## நினைவுப்பணி மன்றம், மட்டக்களப்பு

## செயற்குழு - 1998

| | |
|---|---|
| போஷகர்— | திரு. அ. கி. பத்மநாதன்,<br>(அரசாங்க அதிபர், மட்டக்களப்பு) |
| | திரு. எஸ். எஸ். மனோகரன்<br>(மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர்) |
| | திரு. ம. சிவநேசராசா,<br>(முன்னாள் கல்வி அதிகாரி) |
| தலைவர்— | திரு. சி. சண்முகம்<br>(மேலதிக அரசாங்க அதிபர்)<br>மட்டக்களப்பு |
| செயலாளர்— | திரு. தி. பொன்னம்பலம்<br>(பிரதேச கல்விப்பணிப்பாளர்,)<br>மட்டக்களப்பு |
| பொருளாளர்— | திரு. கே. தங்கவேல்<br>(முன்னாள் அதிபர்) |
| துணைத் தலைவர்கள்— | கலாசூரி வெ. விநாயகமூர்த்தி<br>பண்டிதர் ந. நாகலிங்கம்<br>(பிரசித்த நொத்தாரிஸ்) |
| துணைச் செயலாளர்— | செல்வி க. தங்கேஸ்வரி<br>(கலாசார உத்தியோகத்தர்) |
| செயற்குழு உறுப்பினர்— | திருவாளர்கள்<br>இரா. நாகலிங்கம் (அன்புமணி)<br>சி. க. பொன்னம்பலம்<br>காசுபதி நடராஜா<br>க. தங்கவேலாயுதன்<br>எஸ். மகேந்திரன்<br>சி. குமாரசாமி<br>அ. அந்தோனிமுத்து (முத்தழகு)<br>வே. ச. சுப்பையா<br>சி. காசிநாதர்<br>த. செல்வநாயகம் ஆசிரியசிரோன்மணி<br>திருமதி, வ. சோமசுந்தரம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொகுப்பாசிரியர் உரை

சுவாமி விபுலானந்தரைப் போலவே புலவர்மணி பெரிய தம்பிப்பிள்ளை அவர்களும் பற்பல இலக்கிய மேடைகளில் தலைவராகவும் சிறப்புப் பேச்சாளராகவும் கலந்துகொண்டு ஆழமான உரைகளை ஆற்றினார். இப்பேச்சுகளுக்கு உரைப் பிரதிகள் இல்லாத காரணத்தால் அவையெல்லாம் காற்றோடு கலந்து போயின.

அவ்வாறே அவர் வானொலியில் ஆற்றிய பல உரைகளுக்கும் உரைப்பிரதிகள் கிடைப்பதில்லை. ஆக அவர் அவ்வப்போது தினகரன், வீரகேசரி முதலிய பத்திரிகைகளிலும், சிறப்பு மலர்களிலும் எழுதிய கட்டுரைகளில் சிலவே இத் தொகுதியில் இடம்பெறுகின்றன.

இவற்றில் பலவற்றை பெரும் சிரமங்களுக்கு மத்தியில் அரச சுவடிக்காப்பகத்திலிருந்து பெறவேண்டியிருந்தது.

இவற்றை அவற்றின் பொருளமைதி நோக்கி சமயம், இலக்கியம், சமூகம், தமிழறிஞர் என்ற நான்கு வகுதிக்குள் அடக்கியுள்ளோம் மொத்தம் 25 கட்டுரைகள் மட்டுமே இத் தொகுதியில் இடம் பெறுகின்றன.

இக்கட்டுரைகள் புலவர்மணியின் நுண்மாண் நுழைபுலத்திற்கும் எளிய நடைக்கும் இலக்கிய ஆளுமைக்கும் சான்றுகளாகின்றன. பழந்தமிழ்ப் பண்பாட்டியல்புகளை அவர் இலக்கியப் பாடல்களின் துணைகொண்டு விளக்குவது கருத்துக்கும் சிந்தனைக்கும் விருந்தாக அமைகிறது. இவற்றுள் சில கட்டுரைகள் பற்றி விசேஷமாகக் குறிப்பிட வேண்டும். சமயம் என்ற வகுதியில் இடம்பெறும் ''மஸ்தான் சாகிபு பாடல்கள்'' என்ற கட்டுரை ஆழமான ஆய்வுக் கட்டுரையாகும். புலவர்மணி அவர்கள் முஸ்லிம் மக்களுடன் கொண்டிருந்த ஈடுபாடு நாம் அறிந்ததே அந்த வகையில் ஒரு முஸ்லிம் ஆத்மீகவாதியின் ஆக்கத்தை ஆழமாக நோக்கியிருப்பது கவனத்துக்குரியது. மஸ்தான் சாகிபு என்பவர் நம்நாட்டுச் சித்தர்கள் போன்றவர். அவரது பாடல்களில், சமயவரம்புகளுக்கு அப்பாற்பட்ட, வேதாந்த தத்துவங்கள் அடங்கியிருப்பது அவரது தனிச்சிறப்பாகும்.

இவ்வாறே ''காளிகாமடு கற்பகவிநாயகர் பற்றிய கட்டுரையும் இக்கோயிலின் காப்பாளராக இருந்த. திரு ஏரம்பமூர்த்தி என்பவரின் வேண்டுகோளின்பேரில் எழுதப்பட்டது. அக்கோயிலின் தல புராணமாகவே இக் கட்டுரை அமைகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''மட்டக்களப்பில் சிதைந்து வழங்கும் சொற்கள்'' என்ற கட்டுரை மட்டக்களப்பு மக்களின் வழக்குச் சொற்களில் உள்ள இலக்கிய நயத்தை கூறுகிறது.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக கிழக்கிலங்கையின் தமிழறிஞர்களான சுவாமி விபுலானந்தர், தி. த. கனகசுந்தரம் பிள்ளை, வித்துவான் ச. பூபாலபிள்ளை, வித்துவான் அ. சரவண முத்தன் மற்றும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வைத்திலிங்க தேசிகர், ஆறுமுகநாவலர் முதலியோரைப் பற்றிய கட்டுரைகளும் புதிய தகவல்கள் பலவற்றை நமக்குத் தருகின்றன.

புலவர்மணி அவர்களின் இந்த முதலாவது கட்டுரைத் தொகுதியைப் தமிழன்னையின் பாதங்களில் பணிவன்போடு சமர்ப்பிக்கின்றோம்.

மட்டக்களப்பு
20-10-98

**செ. விஜயரெத்தினம்**
**இரா நாகலிங்கம் (அன்புமணி)**
தொகுப்பாசிரியர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலித்தொகையின்

# கடவுள் வாழ்த்து

கலித்தொகை ஆசிரியர் நல்லந்துவனார் கடவுளை முன்னிலையாக்கி வாழ்த்துக் கூறித் தமது நூலைத் தொடங்குகின்றார். கலித்தொகையிலே கடவுள் வாழ்த்தாகக் கூறிய செய்யுள், நுட்பமுந் திட்பமும் வாய்ந்தது. இறைவன் இறைவியோடு பிரிப்பில்லாது நின்று இயற்றுகின்ற தொழில்களெல்லாந் திருவருட் குறிப்புடையனவே என்னும் உண்மையினை உணர்த்துவது. இறைவன் ஊரும் பேரும் உருவும் முதலியன இல்லாதவன்: ஐம்புலக் காட்சிக்கப்பாலகன்றவன்; சிந்தையும் மொழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுஞ் செல்லா நிலையினன் எனத் தோலாநாவின் மேலோர் கூறுவர். அங்ஙனங்கூறும் அவரே இறைவன் அன்புருவாகி அணுகி நிற்கும் இயல்பினையுமுடையன் என அவனுக்கு வடிவுங் கூறுவர். இக்கொள்கையினையும் இக்கடவுள் வாழ்த்து வலியுறுத்தி நிற்கின்றது. உண்மை வழியினையுணர்ந்த அந்தணருக்கு அருள்செய்தும்; யான் எனது என மக்கள் கொள்ளுகின்ற செருக்கினை யடக்கியும்; மும்மலங்களையும் நீக்கியும் உயிர்களுக்கு இறைவன் அருள்புரிகின்ற இயல்பினை நன்கு விளக்குகின்ற இச்செய்யுளின் அமைதியை ஒருவாறு நோக்குவோம்.

மனம் வாக்குக் காயங்களுக்கு எட்டாது மறைந்து நிற்கின்ற, வடிவமற்ற இறைவன், ஆறறியந்தணர்க்கு அருட்குரு வடிவாகிவந்து அருமறை பல பகர்ந்தான் என்னுந் தொடர்மொழி, நல்லுயிர்த் தொகைகளுக்கு ஞானநெறியை விளக்கும் அருமையினைக் குறிப்பாலுணர்த்தி நிற்கின்றது. ஆறறியந்தணரென்போர் நல்லாற்றால் நாடி அருளையே ஆளுகின்ற நடையினையுடையார்; அழகிய தண்ணளியுடையார். பொங்கியெழுந்த கங்கையின் செருக்கையடக்கிப் பொன்முடிச் சடையில் மறைத்த அருஞ்செயலானது யான், எனது என்னும் இரு செருக்கினையும் அடக்கி ஆன்ம கோடிகளைத் தன்னுடன் ஐக்கியப்படுத்துகின்ற இறைவனது காரணங் கருதாத கருணையைப் புலப்படுத்துகின்றது. தேறுநீர் என்பது தேறிய நீர்: தனது பெருக்கத்தினின்றுஞ் சுருங்கிய நீர். திரிபுரங்களையெரித்தல் ஆணவம், மாயை, கன்மம் என்னும் மும்மலங்களையும் நீக்கி ஆன்மாக்களுக்கு அருள் செய்தலைக் காட்டுகின்றது திரிபுரம் என்பது முப்புரம் எனவும் திரிகின்ற புரங்கள் எனவும் இரு பொருள் தரும். இயங்குகின்ற மாயக்கோட்டைகளைத் தமக்கு அரணாகக்கொண்டு அசுர வாழ்வு வாழ்ந்தோரை அமர வாழ்வு வாழச் செய்த அருஞ் செயலாகிய திரிபுர தகனத்தின் உட்பொருளும் இக்கடவுள் வாழ்த்துச் செய்யுளிலே நம்மால் உணர்ந்து கொள்ளக் கிடக்கின்றது.

இச் செய்யுளிலே இறைவனுக்குரியனவாகக் கூறிய மூவகை வடிவங்களும் ஏனைய வடிவங்களுமெல்லாம் அவன் ஆன்மாக்கள்மீதுகொண்ட அளப்பரிய அருள் காரணமாகத் தானே தரத் தோற்றுகின்ற புனிதமுடையனவாம். இந்நூலாசிரியரும் இறைவனது வடிவங்களுள்ளே தாம் காதல் கொண்டதோர் வடிவத்தை முன்னிலையாக்கி வழுத்துகின்றார். அவ்வடிவமோ மாறுபாடில்லாத கடுங் கூளிகளின் கொடும் போரையுடையது; மணி மிடறும் எண்கையும் வாய்ந்தது. மாறு பாடில்லாத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போரென்பது உலகத்து ஏனையோர் ஒருவரோடொருவர் பகை காரணமாகத் தம்முள் மாறுபட்டுப் புரியும் போர்போன்ற தன்று; வெற்றி தோல்விகளில் நிச்சயமற்ற போருமன்று; அஃது அருள் காரணமாகப் புரியும் போராகும். மணி மிடறென்பது திருநீலகண்டம்: அது நஞ்சினையமுதுசெய்து அமரர்களை வாழ் வித்தமைக்கு அடையாளமாகவுள்ளது: அதுவும் அருளின் திறத் தையே குறிக்கும். எட்டுத் திருக்கரங்களும் திருவருட் சின்னங் களையே தாங்கியிருப்பதால் அவையும் அருளையே பொருளாக வுடையனவாகும்.

கடவுள் வாழ்த்திலே மூன்று திருக்கூத்துகள் கூறப்பட்டி ருப்பதை இனி நோக்குவோம். அவை கொடு கொட்டி, பாண் டரங்கம், காபாலம் என்பன. கொடு கொட்டியென்பது திரிபுர மெரிதலால் வெந்து விழுந்த அவுணர்களின் வெண்சாம்பற் குவியல் பொருந்திய களத்தைத் தனக்கு அரங்காகக்கொண்டு உமையவள் ஒருபாலாக நின்று பாணி, தூக்கு, சீர் என்னுந் தாளங்களைப்போட இறைவன் வெற்றி மகிழ்ச்சியால் நின் றாடிய கூத்தாகும். திரிபுரமெரியக்கண்டு இரங்காது கைகொட் டியாடியதால் இதற்குக் கொடுகொட்டியென்பது பெயராயிற்று கொடுங்கொட்டியென்பது கொடுகொட்டியென மருவி நின்றது இது நின்றாடுங் கூத்துகள் ஆறுள் ஒன்றாகும்.

பாண்டரங்கமென்பது திரிபுர மெரித்தபின்னர் இறைவன் தன்முன்னின்ற பிரமன் காணுமாறு வானோராகிய தேரில் நான்மறையாகிய குதிரைகள் பூட்டி, நெடும்புறம் மறைத்து, வார்துகில் முடித்துக் கூர்முள் பிடித்து வெண்சாம்பரணிந்து ஆடிய கூத்து. வெண்சாம்பரணிந்து ஆடியமையாற் பாண்டரங் கம் எனப் பெயர் பெற்றது. பாண்டு அரங்கம் பாண்டரங்கம் எனக் கூடி நின்றது. பாண்டு வெண்மை; அரங்கம் கூத்துமேடை வெண்மை நிறம் அந்நிறமுடைய சாம்பலுக்காயிற்று. இதுவும் நின்றாடுங் கூத்து. வீழ்ந்தாடுங் கூத்துகளுமுண்டு. அவை ஐந்து:

காபாலமென்பது இறைவன் பிரம கபாலத்தைத் தனது அங்கையிலேந்தி நின்று ஆடிய கூத்தாகும். கபாலம் தலையோடு காபாலம் தத்திதாந்தம். அயன், அரி முதலியோர்க்கும் இறை வன் முதல்வனென்பது இத்திருக்கூத்தின் உட்பொருளாகும்.

இம்முத்திறத்து ஆடலையும் இறைவன் உமையவள் ஒரு பாலாக நின்று - ஆடுவான். சங்கார காலத்திலே இவ்வாடல் களை நிகழ்த்துங்கால் இறையவனுடன் உமையவளேயன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழிந்தோரொருவரும் இலராவர். இந்த நுட்பத்தினை இனிது விளக்குதற் பொருட்டே நுசுப்பினாள் கொண்ட சீர் தருவாளோ? கூந்தலாள் வளர் தூக்குத் தருவாளோ? முறுவலாள் முற்பாணி தருவாளோ? என்று ஆசிரியர் செய்யுள் செய்தார். ஆங்கே அவற்றைத் தருதற்கு வேறு பிறர் இல்லையே என்பது குறிப்பு.

சீர், தூக்கு, பாணி என்பன தாள நிகழ்ச்சியைக் குறித்து நிற்குங் கலைச்சொற்கள். தாளம் காலத்தை அடிப்படையாகக் கொண்டு நிகழ்வது. சீர் என்பது தாளம் முடியுங்காலத்தைத் தன்னிடத்தே கொண்டது. தூக்கென்பது தாளம் நிகழுங் காலத்தைத் தன்னிடத்தே கொண்டது. பாணி தாளம் முதலெடுக்குங் காலத்தைத் தன்னிடத்தே கொண்டது. ஒரு தாளத்துக்கு இம்மூன்றும் உரியனவேனும் ஒவ்வொன்று ஓராடலில் மிகுந்துவருஞ் சிறப்புப்பற்றி ஒவ்வொன்று கூறினார். அழித்தலாகிய தொழிலைச் செய்கின்ற காலத்தே உமாதேவியின் தாளத்துக்கு ஆடுகின்ற இறைவனே காத்தலாகிய தொழிலைச் செய்கின்ற காலத்தே நீ என்னுடைய தாளத்துக்கும் ஆடுகின்றாய் போலும். அன்புருவாகிய இறைவியின் தாளத்துக்கு நீயாடுதல் வியப்பன்று; அன்பில்லாத எனது திருகுதாளத்துக்கும் நீயாடுதல் எனக்குப் பெரு வியப்பாயிருக்கின்றது. இதற்குக் காரணங் கூறுவாயாக என்று ஆசிரியர் முன்னிலையாக்கிக் கேட்பது இறைவன் மீது அவர் கொண்டுள்ள பேரன்பினாலேயே என்பது நம்மால் அறிந்து கொள்ளத்தக்கது. ஆணமில் பொருள் என்று ஆசிரியர் தம்மைக் குறிப்பிடுதலால் இறைவனது பெருமையையும், தமது சிறுமையையும் புலப்படுத்தி. அதன் வாயிலாக எல்லா ஆன்மாக்களுக்கும் அவன் அருள் செய்யும் வள்ளல் என்பதையும் நன்கு நிலைநாட்டுகின்றார். ஆணம் என்பது நேயம்; நேயம் நேசம். ஒன்றுக்கும் பற்றாத என்னையும் ஒரு பொருளாக ஆண்டுகொண்ட இறைவனே உனது கருணைத்திறம் இருந்தபடியென்னை என்று ஆசிரியர் மருட்கையென்னும் மெய்ப்பாடுடையராய் இறைவனை வாழ்த்துகின்றார்.

ஆசிரியர் நவ்வந்துவனாரின் சமயம் சைவமென்பதும், இறைவனுடைய வடிவங்களிலே மாதொருபாகனாகவமைந்துள்ள வடிவத்திலே அவருக்கு மனம் பதிந்துள்ளதென்பதும் இறைவனை வணங்கி வாழ்த்துவதேயன்றி வரங்கேட்கும் மனப்பான்மை அற்றவரென்பதும் அன்பு நெகிழ்ச்சியுடையவரென்பதும். பிறவும் இக்கடவுள் வாழ்த்துச் செய்யுளாற் பெறப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குணங்குடி
# மஸ்தான் சாகிபு பாடல்

சாந்தி அல்லது சமாதானம் என்கின்ற இனிய மனச் செல்வத்தைப் பெற்ற மக்கள், உண்மையில் மக்களேயாகின்றார்கள். மக்களை மக்களாக்கி வாழ்விக்கின்ற இச் சிறந்த பேறு, உலகெங்கும் நிறைவுறுதற்காகச் சமயங்கள் தொண்டு செய்கின்றன. சாந்தியென்கின்ற அசையாத அத்திவாரத்தின் மீது கட்டப்பட்டுள்ளதே இஸ்லாமிய சமயம். மனிதனின் உள்ளழகாக மிளிர்ந்து, வெளியிலும் அழகு செய்கின்ற சாந்திக்கு இணையான செல்வம் இவ்வுலகினுமில்லை.

உள்ளத்திற் சமாதானம் உண்டானால் மாத்திரமே வெளியுலகிலும் நிரந்தர சமாதானம் உண்டாகும். மனச் சமாதானம் பெற்ற மகான்கள் உலகில் வாழ்வதாலேயே உலகம் வாழ்கின்றது. இஸ்லாத்தின் ஏகபரத்துவக் கொள்கையை, உலக சகோதரத்துவத்தை, அன்பின் நிலையை உலகெங்கும் பரவச் செய்த திருத்தூதர்; சாந்த சொரூப, தியாகத்தின் சின்னம், அருட் சோதி; இவ்வுலகையும் அவ்வுலகையும் ஒருங்கே அடைதற்கு வழிவகுத்த நவசிற்பி நபிகள் நாயகம் அவர்களின் கருணை வெள்ளம் உலகிலே கரைபுரண்டு ஓடுவதால், அகத்திலும் புறத்திலும் வறண்ட பாலை நிலங்களெல்லாம் மணங் கமழும் மலர் வனங்களாகி, ஒரு விகசிதமான மறுமலர்ச்சியினை அடைகின்றன. இருமையின்பமும் பெற்று உலகம் வாழ்கின்றது.

நாயகம் அவர்களின் அருள்வெள்ளம் பாய்தலால் அகம் நெகிழ்ந்து சாந்தி கண்ட தவச் செல்வர்கள் பலர், காலந் தோறும் இவ்வுலகிலே தோன்றுகின்றார்கள். மனுக் குலத்தை வாழ்விக்கின்ற அன்னாரின் அற்புதக் காட்சிகளை, மக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்ததி சந்ததியாகக் கண்டு களிக்கின்றார்கள். இத்தகைய தெய்விகக் காட்சிகள் முக்காலத்திலும் மக்கள் அனுபவித்தற்குரிய அழியாத செல்வமாக அமைகின்றன. நாம் அவற்றை அனுபவிக்கின்றோம்.

சாந்தி நிலை பரம்பரைச் செல்வமாகச் சிலருக்கு வாய்த்து விடுகின்றது. பலர் அதனை முயன்று பெறுகின்றார்கள். சாந்தி நிலை கண்ட தவச் செல்வர்களை நாம் நினைக்கும்போது, இற்றைக்கு நூறு ஆண்டுகளின் முன்பு, மதுரை மாநகரிலே சிறந்து விளங்கிய தூய இஸ்லாமிய பரம்பரையிற் பிறந்து, தமிழோடு வளர்ந்து, கலைப்பண்பு கனிந்து, பதினேழாவது வயதிலே துறவு நிலை புகுந்து, நாற்பத்தேழு வயதிலே மவுன சமாதியடைந்த ஒரு மகான் நமது அகக்கண்முன்னே தோன்றி நிற்கின்றார்.

பரிசுத்த திருக்குர் ஆன் என்னும் திருமறையினை முதல் முதல் தமிழாக்கஞ் செய்யும் பேறு பெற்றவர்களுள் ஒருவர் நூறுத்தீன் என்கின்ற பெரியார். அவரது பரம்பரையில் வந்தவர் இல்லறத் துறவியாகிய சேகு மீரான் சாகிபு என்பார். அன்னாருக்கு அவர் செய்த தவம் போன்று சுல்தான் அப்துல் காதிர் லெவ்வை யென்னும் ஒரு புதல்வர் உதித்தார்.

இந்தக் குழந்தைதான் பிற்காலத்தில் சாதிமத பேதமின்றி எல்லாராலும் போற்றிக் கொண்டாடப்படுகின்ற குணங்குடி மஸ்தான்சாகிபு என்னும் மகானாக நின்று நிலவுகின்றது.

இஸ்லாமிய ஞானியென்னும் பொருளமைந்த மஸ்தான் என்னும் பொதுப்பெயரைத் தமக்கே சிறப்பாக உரிமையாக்கப் பெற்ற இம்மகான், ஒரு ஞானக் கவிப்பெருங் கொண்டலாகவும் விளங்குகின்றார். திருமறைப் பொருளிலே திளைத்து, தமிழ் முதசாகரத்தைப் பருகி, குண மென்னுங் குன்றின்மேல் ஏறி, தத்துவஞானத் தனிநிலைச் சிகரத்தின் உச்சியில் நின்று, இந்த உத்தம இஸ்லாமியக் கவிக் கொண்டல் பொழிந்த அற்புதஞான அமிர்தக் கவிமழை, மஸ்தான்சாகிபு பாடல் என்னும் பெயரால் வழங்கிவருகின்றது.

> 'எல்லாப் படைப்பும் படைத்தும் இரணங்கள் ஈபவனே
> அல்லாஹ் ஒருவன்; அவனன்றி வேறில்லை.'

என்னும் பொருளே மஸ்தான் சாகிபு பாடலின் உயிராகும். தமது கவிகள் மூலமாக அப்பெரியார் உலகுக்கு எடுத்தோதுகின்ற அரும்பெரும் பொருளும் அதுவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமறையின் நெறிமுறைக்கு அமைந்து, கம்பீரமான நடையும், இசைநயமும் வாய்ந்து, செம்பொருளும், குறிப்புப் பொருளும் திகழ்ந்து, பழைமையிற் புதுமை மலர்ந்து, சமரசத் தேன் சொரிந்து படிக்குந்தோறும் பக்தி கனிந்து உணர்ச்சி பெறச்செய்கின்ற மஸ்தான் சாகிபு பாடல்கள். இஸ்லாமியர் களின் இனிய ஞானக் கருவூலமாகும். இந்துசமயத் தமிழ் மக்களுக்கும் சிறந்த ஆத்மீகச் செல்வமாக அவை விளங்குகின்றன.

'பரம யோகியைப் பற்றொன் றிலான் தனைக்
கரவி லாத கருணைக் கடலினைக்
குரவ னாகுங் குணங்குடி யான்தனைப்
பரவி னார்க்குப் பவப்பிணி யில்லையே'

என்று பாடுகின்றார் மகா வித்துவான் சரவணப் பெருமாள் ஐயர்.

'மாசிலா மணியே முனிவர்க ளிறையே
வள்ளலாய் வந்தகண் மணியே
தேசிக னாகத் திரண்டுரு வெடுத்த
சித்தனே யொளிர்சிந்தா மணியே
ஈசனே தேசோ மயந்தந்தாட் கொண்ட
என்னுயிர்க் குயிரதாந் துணையே
போசனே வாழி குணங்குடி வாழும்
பூரண மவுனதே சிகனே'

என்று மனமுருகி வழுத்தி நிற்கின்றார், சிவயோகி ஐயாச்சாமி முதலியார்.

'நீயே யீன்ற தாய்தந்தை நீயே குருவி னொடு தெய்வம்
நீயே யடியார்க் குதவு பொருள் நீயே சமய மறியும் வஸ்து
நீயே ஞான நெறிவிளக்கு நீயே விளங்கு குணக் குன்றம்
நீயே யெங்குங் குணங்கு குடியாய் நிறைந்து வடிவைக் காப்பதுவே

என்று அடிமை செய்து அகமுருகி நிற்கின்றார் வேங்கடராய பிள்ளைக் கவிராயர்.

'பருதிதேர்ப் பாகனைவந் திருளணுகுமோ
நினது பதுமத் தாளைக்
கருதுமடி யவர்கள் குழாத் திருக்குமெனை
அஞ்ஞானங் கலப்ப துண்டோ,

என்று தம்மை மஸ்தான் சாகிபு அவர்களின் அடியார்க்கு அடியனாகப் பாவித்துப் பாடுகின்றார் அட்டாவதானம் சபாபதி முதலியார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காயற் பட்டினம் செய்கப்துல் காதிர் நயினார்லெப்பை ஆலிம் புலவர், தாம்பாடிய இரண்டு பதிகங்களிலே இந்த மகா ஞானியை,

''வேதா குணங்குடியின் நாதா அருந்தவ
விநோதா புரந்தருள்கவே என்றும்,
''போற்றுமெளியோர்க்குதவி யாற்றுமிறை யோன்தன்மை
புகழுமஸ் தான்சாகிபே'' என்றும்
போற்றிப் புகழ்ந்து தலைவணங்கி நிற்கின்றார்.

இவரது திவ்வியமான செய்யுள்கள் இத்தகைய சீர்மை வாய்ந்து திகழ்வதற்குக் காரணங்கள் பலவுண்டு. மஸ்தான் சாகிபு அனுபூதி பெற்ற ஒரு மகான். இராமநாதபுரத்தைச் சேர்ந்த குணங்குடியென்னும் ஊரில் வாழ்ந்துவந்த இம்மகான் கீழைக்கரையில் வாழ்ந்திருந்த தைக்கா சாகிபு ஷெகு அப்துல் காதிறு லெப்பை ஆலிம என்னும் ஆசிரியரிடம் ஞானக்கலை பயின்றவர்: ஆலிம் என்னும் பட்டம் பெற்றவர்; திரிசிரபுரம் ஷாம் சாகிப் ஆலிம் என்னும் குரவரைச் சரணடைந்து உபதேசம் பெற்றவர் கடுமையான தவ விரதங்களை அனுசரித்துச் சிக்கந்தர் மலைக்குகையிலே தொடர்பாக நாற்பது நாள் யோக நிட்டையிலிருந்தவர்; பல மலைக் குகைகளைத் தமது தியான நிலையங்களாகக் கொண்டவர்; தனித்திருந்தவர்; விழித்திருந்தவர்; பசித்திருந்தவர்; தமது இருதயமாகிய குகையிலே ஆண்டவனைத் தரிசித்த அருளாளர்; சமரசச் செல்வர்.

பன்னிரண்டு ஆண்டுகள் தொடர்பான தியானத்தில் நிலை நின்று சமாதி கைகூடப் பெற்று, இறையருளில் இரண்டறக் கலந்த இம் மகானின் பாடல்கள் திவ்விய தேசோமயம் பெற்றுத் திகழ்வது ஒரு வியப்பன்று. மனமடங்கிய இம்மகானின் கெம்பீரமான செய்யுள் நடைகளினிடையே இவர் தம் தூய்மையான எளிமை கலந்து நிற்பதை எங்குங் காணலாம். (மஸ்தான் சாகிபு பாடல்களைப் பதினாறு பிரிவுகளாகப் பிரித்து நோக்கியிருக்கின்றார்கள் நமது முன்னோர் அவற்றின் அடைவை இங்கே காண்போம்).

குருபர தோத்திரம், முகியித்தீன் சதகம், கொச்சகக் கலிகள், அகத்தீசர் சதகம், கழி நெடிலடி ஆசிரிய விருத்தம், கட்டளைக் கலித்துறைகள், நேரிசை வெண்பாக்கள், ஆனந்தக் களிப்பு, நிராமயக் கண்ணி, பராபரக் கண்ணி, றகுமான் கண்ணி, எக்காலக்கண்ணி, கண்மணி மாலைக் கண்ணி, மனோன்மணிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணி, நந்தீஸ்வரக்கண்ணி, கீர்த்தனங்கள் என அடைவு செய்யப்பட்டிருக்கும் பாடல்களின் அமைதிகளை ஒவ்வொன்றாக நோக்கும்போது பலவித சிறப்புகளை அறிந்து கொள்ளுதல் கூடும்.

பெரும்பாலும் தாயுமான சுவாமிகளின் நடையில் அமைந்துள்ள இப்பாடல்கள், பல விடங்களில் அவரின் செய்யுளடிகளையும் பொருள்களையும் அவ்வாறே எடுத்தெடுத்து ஆண்டிருப்பதையும் நாம் காணலாகும். வேதாந்த சித்தாந்த சமரசக் கருத்துக்கள் மணியில் ஒளிபோலப் பாடல்கள் முழுவதிலும் நன்கு வெளிப்பட்டு நிற்பதும் ஆசிரியரின் துலாக்கோல் போன்ற மனத்தின் நடுநிலைமையினைப் பிரதிபலித்துக் காட்டுகின்றது. தென்னாட்டுச் சித்தர் பாடல்களின் நடையும், தொனியும் நூலின் பிற்பகுதியை நிறைவு செய்து நிற்கின்றன. இந்நூல் ஒரு சர்வ சமய சமரச கலைக்கோயில்.

முகியித்தீன் ஆண்டவராகிய குருபரனை ஒரு பரனாகப் பாவித்துப் பாடுகின்ற குருபர தோத்திரப் பதிகம் இக்கலைக் கோயிலின் முகப்பாக அமைந்துள்ளது.

'இணங்கு மெய்ஞ் ஞானப் பேரின்பக் கடலின்
இன்னமு தெடுத்தெமக் களிப்போன்
பிணங்கிய கோச பாசமாம் மாயைப்
பின்னலைப் பேர்த்தெறிந் திடுவோன்
வணங்கிய தவத்தி னோர்க்கருள் புரிய
வள்ளலாய் வந்தமா தவத்தோன்
குணங்குடி வாழும் முகியித்தீ னாமென்
குருபதம் சிரத்தின்மேற் கொள்வாம்'

என்னும் இக்குருவணக்கச் செய்யுளோடு பதிகம் தொடங்குகின்றது. இச் செய்யுளிலே குருவின் அருமையும், பெருமையும், எளிமையும்; சீடரின் பணிவும், ஒழுக்கமும், அருட்பேறும் நன்கு புலப்பட்டு நிற்கின்றன. உண்மையான குருவுக்கும் ஒரு முன் மாதிரி வேண்டும்; உண்மையான சீடனுக்கும் ஒரு முன் மாதிரி வேண்டும். வெறும் மதி நுட்பமும் நூலறிவும் மாத்திரம் துணையாக ஒருவர் குருவாதலும் முடியாது சீடராதலும் முடியாது என்னும் உண்மையினை இக்குரு வணக்கத்தின் வாயிலாக நாம் அறிந்து கொள்ளலாகும்.

ஒருவனது மனத்தில் தெய்வமென்பதோர் சித்தமுண்டானால் வாழ்க்கையில் அதுவும் ஓர் ஆனந்தமே; இறைவன் எவன்? அவன் எங்குள்ளான்? என்று நாடுவதும், எம்பெருமான் எங்குமுளன் என்று அறிந்து பாடுவதும் ஆனந்தமே; ஆண்டவனின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலகில்லாத அற்புதத் திருவிளையாடல்களைப் படிப்பதும் ஆனந்தமே! ஒருவன் தான் பாவியென உணரப் பெற்றால் அதுவும் ஆனந்தமே; இறைவனது மெய்ப் புகழையும், பேராற்றலையும், பெருங்கருணையையும் மனமாரத் துதிப்பதும், ஏக பரம்பரனின் மனவாசகங் கடந்த நிலையினை வாயார வாழ்த்துவதும் ஆனந்தமே; எம்பெருமான் என் துயர் துடைத்தருள்வான் என நம்புவதும், முன்னோர்க்கு அவன் அருள் செய்த முறைகளை நமது நம்பிக்கையை வளர்ப்பதற்குத் துணையாகக் கொள்வதும் ஆனந்தமே.

இத்தகைய பலவகை ஆனந்த நிலைகளில் நின்று குருபர தோத்திரப் பதிகத்தை ஆசிரியர் அனுபவசாதனமாகப் பாடுகின்றார். சமயத் துறையிலே மக்களைப் பல வேறு படிகளின் வழியாகச் செலுத்தி அனுபவம் பெறச் செய்கின்ற ஆசிரியரின் கருணை நோக்கம் இப்பதிகத்தில் நன்கு பிரதிபலிப்பதை நாம் காணலாகும்.

* கல்லுமொரு போதிற் கரைந்துருகு மென்மனக்
 கல் கரைவ திலை ஐயனே
 கவலைகளை இவளவென் றென்னாணை யென்னாற்
 கணித்துமுடி கூடுதிலையே

* அல்லுபக லாகவென் அபகீர்த்தி அபகீர்த்தி
 அம்மம்ம என்சொல்லுகேன்
 ஆனாலும் ஆர்க்காக அடிமைகொண் டாயிந்த
 அடியனேன் உய்யும்வண்ணம்

சொல்லுமெய்ஞ் ஞானச் சுகக்கடலை உண்டுயான்
 சும்மா விருக்க வருள்வாய்
 சுத்தபரி பூரணச் சுகவாரி தன்னிலோர்
 சொட்டாகி லுந்தொட்டபேர்

நல்லவர்கள் நல்லவர்கள் நல்லவர்கள் என்றைக்கு
 நானும்நல் லவனாவனோ
 நற்குணங் குடிகொண்ட பாத்துஷா வானகுரு
 நாதன் முகியித்தீனே

குருபர தோத்திரப் பதிகத்திலே காணப்படுகின்ற இச் செய்யுள் தாயுமான சுவாமிகளின் செய்யுள் நடையோடு கூடி, மேற்கூறிய ஆனந்த நிலைகளை வெளியிட்டு, மனத்துக்கு நல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருந்தாய் அமைந்துள்ளது. ஒருபொருளில் ஈடுபட்டு அதனோடு ஒன்றாகி நின்று பாடுவோர் அதன்மீது கொண்ட ஆராமை காரணமாக அதன் மயமாகிவிடுகின்றனர் என்னும் உண்மையினை இச்செய்யுள் நமக்கு எடுத்துக் காட்டுகின்றது. இந்த மெய்ஞ்ஞானச் செல்வர் தமது உணர்ச்சியோடு கலந்த கவிதா சக்தியால் ஒரு சொல்லையே பல தரம் அடுக்கி யடுக்கி மனங் கொண்ட மட்டும் பாடுகின்ற அடுக்குத் தொடர்கள் இதனை நமக்குக் காட்டுகின்றன. நூல் முழுவதிலும் இத்தகைய பிரயோகங்களை நாம் அடிக்கடி காணலாகும்.

அடுத்தது முகியித்தீன் சதகம். இது இரட்டையாசிரிய விருத்தங்கள் நூறு கொண்டது. முகியித்தீன் ஆண்டவராகிய குரு மூர்த்தியைத் துதித்து, எல்லா நற்பேறுகளும் தமக்குக் கிடைக்க முன்னிற்குமாறு வேண்டிக் கொள்ளும் பாவனையில் இச்சதகம் அமைந்துள்ளது.

சதகத்தின் பொருட் சுருக்கம்:

குருபரனே, எனது மனத்தினின்றும் மாயையின் விளையாட்டெல்லாம் மறைந் தொழியவும், உள்ளத்திலே உண்மைச் சுயவொளி பிரகாசிக்கவும் முன்னின்று அருள புரிவீராக. எல்லா உலகங்களிலும் பற்றியும் பற்றாதும் கலந்து நிற்கின்ற உண்மைப் பொருளைச் சிறியேன் தரிசிக்க விரும்புகின்றேன். பூத பௌதிகங்களாகிய சடப் பொருள்கள் வேறு; உண்மைப் பொருளாகிற ஆண்டவன் வேறு என்று பிரித்துக் காணவல்ல விஞ்ஞான ஞானத்தையும் அடியேன் பெறுதற்கு அவாவுகின்றேன். அவற்றை முன்னின்று அருள்வீராக; அருளின் இருப்பிடமே!

குருநாதா, காண்பவனாகிய ஏழையும், காட்சிப் பொருளாகிய ஆண்டவனும், காட்சியும் ஆகிய மூன்றும் ஒன்றாக நிற்கும் பரம ஐக்கிய நிலை எனக்கு வாய்க்க வேண்டும். அந்த நிருவிகற்ப சமாதி நிலையினைச் சிறியேன் அடையும் வண்ணம் முன்னின்று அருள்வீராக; தயாநிதியே!

அருட்பெருங் குரவரே, காந்தமும் இரும்பும் கலந்தது போன்று இறைவனோடு இணைந்து நிற்கும் நினைப்பு மறுப்பு அற்ற நிலை எனக்குக் கிட்டவேண்டும். அந்நிலை மாயாதிருக்கவும் வேண்டும். முன்னின்று அருள்வீராக; அருளுருவே!

என்னைவிட்டு ஆகாமியம் அகலவேண்டும். அகந்தைக் கிழங்கை என் உள்ளத்திலிருந்து அகழ்ந்து எறிய வேண்டும். தேவரீரே துணை. முன்னின்று அருள்புரிவீராக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்செயலாவது யாதொன்று மில்லை என்னும் நிலை சிறியேனுக்குக் கைகூடவும், அந்நிலை கைவந்தபின், அடியேன் அதில் நின்றும் வழுவாது நிற்கவும், இறைவன் என்னை எடுத்துச் சுமக்கும நிலையிலே, அந்த ஒருமை நிலையிலே, பிரிப்புணர்ச்சி என்னிடம் தலைகாட்டாத வண்ணம் நான் இறைவன் மயமாகி நிற்கவும் விழைகின்றேன். தலசிரேட்டரே முன்னின்று அருள் வீராக.

குருசிரேட்டரே, எம்பெருமானின் மகிமையைப் பலகோடி சமூகங்களிலு முள்ள பலகோடி சீடர்கள் அறிந்து போற்றுகின் றார்கள். அவர்களுள்ளே அடியேனும் ஒருவனாயிருக்க விருப்பு கின்றேன். முன்னின்று அருள்வீராக: குணப்பெருங் குன்றே!

முகியித்தீன் சதகத்தின் ஒவ்வொரு செய்யுளும் ஒவ்வோர் உயிரோவியமே. செத்தபாவிகளும் இச் செய்யுள்களால் உயிர் பெறுவர். இவற்றால் நல்லோர் பெறும் பேற்றினை நவில நம்மால் முடியுமோ? இந்த அமிர்த கவிகளின் பொருட்டுத் தமிழுலகம் இஸ்லாமிய உலகுக்குக் கடமைப்பட்டுள்ளது என் பதை இங்கே குறிப்பிடுதல் பொருத்தமாகும். உதாரணத்துக்கு ஒரு செய்யுளை இங்கே காண்போம்.

' அன்புப் பெருக்கைநல் லறிவுப் பெருக்கை மெய்ஞ்
ஞானாமிர் தப்பெருக்கை
அணையற்ற பேராசை வெள்ளப் பெருக்கையறி
வாகார வான் பெருக்கை

இன்பப் பெருக்கையருள் பொங்கும் பெருக்கைவெளி
எங்கெங்கு மொளிர் பெருக்கை
ஏகப் பெருக்கையனு போகப் பெருக்கைநல்
இனியசெந் தேன் பெருக்கைத்

தென்புப் பெருக்கை வெகு டம்பப் பெருக்கைமா
திவ்யமது ரப்பெருக்கைச்
சேரப் புகட்டவடி யேனுமுமை நம்பினேன்
சித்தம் வைத் தாளுதற்கே

வண்புப் பெருக்குவடி வுள்ளநீர் மின்தொடர
வள்ளலிற சூல்வருகவே
வளருமருள் நிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித்தீனே'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டம்பப்பெருக்கு - ஆண்டவனுக்கே எல்லா ஆடம்பரமும். வன்புப் பெருக்கு - சர்வ வல்லமை.

இனி, அகத்தீசர் சதகம் என்னும் பாடல்களை நோக்கு வோம். சதகம் என்னும் பெயருக்கு ஏற்ப இதுவும் நூறு பாடல் கள் கொண்ட ஒரு சிறு பிரபந்த மாகவே அமைந்துள்ளது. நூறு பாடல்களும் பத்துப் பத்துகளாக வகுக்கப்பட்டுள்ளன. மனத்துக்கு ஈசனாகிய குருபரனை நோக்கி மன நிறைவு தருமாறு வேண்டுகின்ற இச் சதகம், குருவருள் நிலை, தவ நிலை இயம நிலை, நியம நிலை, வளி நிலை, தொகை நிலை, பொறை நிலை, காட்சி நிலை, தியான நிலை, சமாதி நிலை என்னும் தலைப் பெயர்களைத் தாங்கி நிற்கின்றது.

குருவருள் நிலைப் பத்து அகத்தீசனாகிய குருபரனைத் தரிசனம் தருமாறு வேண்டுதல் செய்யும் பாவனையில் அமைந் துள்ளது. தவ விரதங்களிலே தவறாமல் நிலை நிற்க அருள செய்யுமாறும், தவ விரதங்களுக்கேற்ற ஒழுக்க நெறியில் நிற்க வல்லமை அருளுமாறும், நித்திய கரும அனுட்டானங்களைக் குறைவின்றி அனுசரித்தற்கு அருள் புரியுமாறும், குருபரனை வேண்டிக் கொள்ளும் பாணியில் அமைந்துள்ளன தவநிலைப் பத்தும், இயமநிலைப்பத்தும், நியமநிலைப் பத்தும்.

இரேசகம், பூரகம், கும்பகம் ஆகிய சுவாச நிலைகள் மூன்றையும் கட்டுப்படுத்த அருள் செய்யுமாறு குருபரனை வேண்டிக் கொள்ளும் பொருளுடையது வளிநிலைப்பத்து. மன மானது பொறிபுலன்களைத் தன்னகத்தை யடக்கித், தானும் புறம் போகாது அடங்கி நிற்கும் அசையா நிலையினை அருளு மாறு, குருபரனை வேண்டுகின்ற தொகை நிலைப்பத்தும், ஒருவழி நின்ற மனம் பொறுக்க முடியாத நிகழ்ச்சிகளுக்கு இலக்காகும் போது, குழப்பமடையாமல் பொறுமையில் நிலை நின்று திடம் பெற அருளுமாறு ஆரந்து வேண்டுகின்ற பொறை நிலைப்பத்தும், இரவுபகலற்ற இடத்தில் நின்று உண்மைக் காட்சியைக் காணும் ஒளி நிலையினை அருளுக என வேண் டுகின்ற காட்சி நிலைப் பத்தும், அகத்தொனியாற் கண்ட மெய்ப்பொருட் காட்சியை நினைப்பற நினைந்து பாவனை செய்யும் பேற்றினை வேண்டுகின்ற தியான நிலை பத்தும், தியானத்தின் பூரண நிலையினை, அதாவது காண்பவன், காட்சிப் பொருள், காட்சி யென்கின்ற மூன்றும் ஒன்றான ஐக்கிய வாழ்வினை அருளுகென வேண்டுகின்ற சமாதி நிலைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்தும் ஆகிய ஐந்தும் அகத்தீசர் சதகத்தின் உள்முகப் பொரு ளின் உயிர் போன்று அமைந்து நிற்கின்றன.

அகத்தீசர் சதகம் அனுபவ சாதனையின் வடிவானது. மனோ சக்தியை விருத்தி செய்து உள்ளொளியில் நிறைவுற அருளுமாறு குருபரனை வேண்டிக் கொள்ளும் நோக்கமைந்த இந் நூறு பாடல்களும் யோக சாத்திர சாரமாக விளங்குகின்றன

எல்லாச் சமய சாதனங்களும், பக்தியாகிய நிலைக்களத் திலே காலூன்றிப் பாங்காக வளர்ந்து நிறைவுறுகின்றன என் னும் சிறந்த உண்மையினைச் சிறப்பாக அகத்தீசர் சதகமும், பொதுவாக ஏனைய பாடல்களும் அழகாகக் கூறிச் செல்வது நம்மால் அறிந்து கொள்ளத்தக்கதாகும்.

'தான் செத் திருந்துலக முழுதுமர சாளுமோர்
தத்துவம் அருள்புரியவும்
தான் சாக வும்மருந் துண்பா ரியாரியான்
தான் சாக அருள்புரியவும்

நான் சாமுன் நான்சாக நாடினேன் நான் சாமுன்
நான் சாக அருள்புரியவும்
நாள் வருமுன் நான்சாக நாள் வந்து நான்சாக
நாள் வருமுன் அருள் புரியவும்

தீஞ்சியிரு பிடிசாம்ப லாகவுந் தானான
சித்தி யெற் கருள் புரியவும்
தேக நிலையல்லவே திருவரு ளிரங்கிமா
சீக்கிரம் அருள் புரியவும்

வாஞ்சாலை யான மெய்த் தவராச சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாருணங் குடிவாழு மென்னகத் தீசனே
யவுணதே சிகநாதனே'

அகத்தீசர் சதகத்திலுள்ள இச்செய்யுள் இகபர வாழ்வு இரண்டுக்கும் உறுதுணையானது. உலகிலே 'நான்' என்கின்ற அகங்காரமே மக்களின் இலௌகிகப் பண்பையும் வைதீகப் பண்பையும் கெடுக்கின்ற கொடுமையுடையது. ஒருவன் 'தான் சாகமுன் 'நான்' சாகவேண்டும்; சாகமுன் 'தான்' சாகப்பெற் றவன் தான், சாகும் நாள் வரும் போது சமாதானமாக இவ் வுலகை விட்டு நீங்குகின்றான் என்று கூறுகின்ற இச்செய்யுள் நமது நாளாந்த தியானமாக அமைதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மஸ்தான் சாகிபு பாடல்களின் நடுநாயகமாக நின்று விளங்குவது நபிகள் நாயகம் அவர்கள் மீது பாடியுள்ள தொண்ணூற்றாறு சீர்க் கழில் நெடிலடி யாசிரிய விருத்தம்.

'வெட்டவெட் டத்தளிர்கள் விட்டுப் படர்ந்தடரும்
வீசுபா சாடவியெனும்
வினையென்ற பெருமா வனக்கா னகக்காடு
வெட்டிநிர்த் தூளிபண்ணி
வெகுளிக ளெனும்பல பரட்டுமுட் காடெலாம்
வேரோ டறப்பிடுங்கி'

என்று தொடங்கி,

'பத்திவை ராக்கியக் கடல்மடை திறந்துகால்
பாய்ச்சியது பயிராகவே
பரிபாக பக்குவக் காலமது பிசகாது
பார்த்துப் பதந்தன்னிலே
பற்றிப் படர்ந்த தொண்ணூற்றாறு தத்துவப்
பலகளை யறப்பிடுங்கி
பரிபூர்ண மாகவே நாளுக்கு நாட்கதிப்
பலகோள் அறுப்பரிந்து
பாளையென் னும்பருவம் முற்றியே முத்திப்
பலன் பெற்ற சமுசாரி நீ'

என்று நடக்கின்ற இப்பாடல் ஆக்கியோனின் கற்பனைத் திறனுக்கு உரைகல் போன்று திகழ்கின்றது. முற்றும் உருவகமணியமைந்துள்ள இப்பாடலிலே, நபிகள் நாயகம் அவர்களின் ஞான வாழ்க்கையை ஒரு விவசாய வாழ்க்கையாக உருவகஞ் செய்து, விவசாய வாழ்க்கைக்குரிய சாதனங்களாக எல்லாத் தத்துவப் பொருள்களையும் இயைபுருவகஞ் செய்து வருணித்துச் செல்லுகின்ற சாதுரியம், ஆசிரியரின் கவிதா சக்திக்கு ஓர் உதாரணமாக விளங்குகின்றது.

நபிகள் நாயகம் ஆகிய விவசாயி, மனமாகிய நிலத்திலே அடர்ந்து இருண்டு வளர்ந்து நின்ற பந்தபாசமாகிய அடவியை வெட்டி, கோபமாகியபரட்டு முட்காட்டைப் பிடுங்கி, அகங்காரமாகிய வேங்கைப் புலியைத் துணித்து, ஆசைகளாகிய விலங்குகளை அடித்தோட்டி, மாயையென்னும் மலைப் பாம்பினை விவேகமென்னும் மண்டாவினாற் பிளந்து, கருவிகரணங்கள் என்னும் வேர்களை விசாரமென்னும் மண்வெட்டி கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடுங்கித், தவக்கனலாற் சுட்டெரித்துச் சுத்தமாக்கிய பின்பு, அந்தமனமென்னும் நிலத்தை உழுது பயிர் செய்வதற்குரிய கார்காலம் வருவதை எதிர்பார்த்து நிற்கின்றார்.

இந்நிலையிலே பிரணவ மென்னும் கருணை முகில் ஆனந்த மென்னும் மழையைப் பொழிகின்றது நாயகம் ஆகிய விவசாயி, காலத்தைப் பயனபடுத்தி கொண்டு, தாமதியாமல் அறிவாகிய கலப்பையிலே இன்ப துன்பங்களாகிய மாடுகளைப் பூட்டி உழுது பழக்கங்களாகிய மண்கட்டிகளை மிதித்துத் தூளாக்கிச் சமன் செய்து, சித்தாகிய விதையைவிதைத்துப் பயிராக்கிப், பக்தி வைராக்கியமாகிய நீர்பாய்ச்சிவளர்த்து, தொண்ணூற்றாறு தத்துவங்களாகிய களை களைப் பிடுங்கிப் பாதுகாத்து, முத்தியாகிய விளைவினை ஆன்மகோடிகளுக்கு ஆக்குகின்றார்.

இவ்வாறு நாயகம் அவர்களை ஓரு விவசாயியாக உருவகஞ் செய்து பாடுகின்ற இச்செய்யுள், ஓர் உருவக ஓவியச் சாலையாகவும், தத்துவ ஞானக் களஞ்சியமாகவும் காட்சி தந்து மனத்துக்கும், புத்திக்கும், உயிருக்கும் நல்விருந்தாய்ச் சமைந்து தித்தித்து நிற்கின்றது.

இனி நூலின் பிற்பகுதிக்கு வருவோம். சித்தர் நடையிலே செல்லுகின்ற இப்பாடற் பகுதிகளிலே முதலில் நிற்கின்ற ஆனந்தக் களிப்பு உள்ளக் கருத்தை வெளியிட்டு அருள் வள்ளலை இரந்து முன்னிற்பதாகப் பாடப்பட்டுள்ளது. பொன்னும் மணியும் புகழும் போகமும் பெற இரக்கவில்லை, இவைகள் யாவையுந் தியாகஞ் செய்து நிற்கின்ற இரப்புநிலையிலே, நல்லோர் கூட்டத்தையருளுமாறு இரக்கின்றார். பேரின்பத்தையும், அறிவைக் கொண்டு அறிவைத் தேடும் நிலையினையும், மனச் செருக்கு நீங்கும் வழியினையும், தன்னையறியுந் தன்மையினையும் அருளுமாறு இரக்கின்றார்.

'கற்பங்கள் உண்கிறோ மென்றே—வெறிக்
கஞ்சாவுங் கள்ளும் அபினியுந்தின்றே
துப்புக்கெட் டலையாமல் நின்றே—அருள்
தூயமெய்ஞ் ஞானச் சுடரினைப் போற்றி'

இரக்கின்றார். இந்தச் செய்யுளடிகள், மஸ்தானென்றும், பக்கீர் என்றும், வாவா வென்றும் புனைபெயர் வைத்துக்கொண்டு கஞ்சாவுக்கும், கள்ளுக்கும், அபினுக்கும் அடிமையாகிச் சாதாரண மக்களையலைக்கின்ற துப்புக்கெட்ட போலிகளுக்கு நல்ல சாட்டையடிகளாக உறைத்து நிற்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு சமயத்திலுள்ளவரும் தத்தம் சமய சாத்திரங்களைஓதியுணரவேண்டும். சாத்திரக் கருத்துகள் பக்தியும் விசுவாசமுங்கலந்து வாழ்க்கைக்கு உதவவேண்டும். மனிதனை மனிதனாக்க உதவாத வறண்ட சாத்திரக் கொள்கைகள் சமூகத்துக்கு உதவா தென்பதை நிராமயக்கண்ணி என்னும் பகுதியிலே நன்கு கூறியுள்ளதையும் இங்கே குறிப்பிடுதல் பயன் தருவதாகும்.

'சாத்திரங்க ளோதும் சழக்கர் தமக்கும் அருள்
மாத்திரைப்போ தேனும் வருமோ நிராமயமே'

நாம் சாத்திரம் பேசும் போது இந்த உண்மையை உணர வேண்டும்.

'மெத்தப் படித்த வெறும்பாச பித்தருக்கே
சித்தந் தெளியாதென் செய்கை நிராமயமே'

'தன்னை யறிந்தால் தலைவன் தனையறிந்த
தென்னு மொழியே யிதங்காண் நிராமயமே'

'எப்பொருளுந் தானாய் இயங்குமுனைப் பூசைசெய்யப்
புட்ப மெடுக்கவுந்தான் போமோ நிராமயமே

என்னும் பாடற்பகுதிகள் நம்மால் நன்கு சிந்திக்க வேண்டிய செம் பொருளைப் புகட்டி நிற்கின்றன. படித்தால் மனம் விசாலமாக வேண்டும்: தலை பெருத்தால் சித்தந் தெளியாது. ஒருவன் மற்றவனை அறிதற்கே இன்று முயன்று திரிகின்றான்; தன்னையறிய விரும்புவோர் மிகச்சிலரே. தன்னையறிந்தால், பிறனையறியலாம்: தலைவனையுமறியலாம் என்னும் பொருளை முதல் இரண்டு கண்ணிகளும் விளக்கி நிற்க, மூன்றாவது கண்ணி, உலகத்திலே எல்லாப் பொருள்களும் ஆண்டவனின் சக்திவடிவங்களே யென்று அறிந்தவன் ஆண்டவனை எங்குங் கண்டு வணங்குகின்றான் என்னும் உண்மையினை விளக்கி நிற்கின்றது.

'கொத்தோ டடிமை குடியாக என்றனையுன்
பத்தருக் கென்றோ படைத்தாய் நிராமயமே'

என்கின்ற இப்பாடல் ஆண்டவனின் அடியாரையும் நாம் குடி குடும்பங்களோடு சேர்ந்து ஆண்டவனின் பிரதிரூபமாகக் காண வேண்டும் என்னும் உண்மைத் தத்துவத்தை நமக்கு உணர்த்தி நிற்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பராபரக் கண்ணி என்னும் பகுதியிலே உலக விவகாரங்களில் நின்றும் காப்பாற்றிக் கரையேற்று மாறு வேண்டிக் கொள்கின்ற ஆசிரியர்,

'வல்லாரைக் கெஞ்சி வலியாரைக் கால்பிடித்து
இல்லாரை நம்பியிருந் திடைந்தேன் பராபரமே'

என்று பாடுகின்ற பாடல், வாழ்க்கையிலே நாம் சுயமரியாதையுடன் வாழவேண்டும் என்கின்ற நல்ல போதனையை நமக்கு வலியுறுத்தி நிற்கின்றது.

ஆண்டவனைப் பராபரனாகவும், தந்தையாகவும், தாயாகவும், கண்ணாகவும் பாடித்துதித்து நிற்கின்ற ஆசிரியர், மனோன்மணிக் கண்ணி யென்னும் பகுதியிலே காதலியாகப் பாவித்துப் பலவாறாகப் புனைந்து பாடுகின்ற அழகு, நூலின் இறுதியை நன்கு அலங்கரித்து நிற்பதைக் காணலாகும்.

'கண்ணேயென் கண்மணியே கண்குளிர்ந்த கட்டழகுப்
பெண்ணே யமிர்தப் பிழம்பே மனோன் மணியே'

'துவளுந் துடியிடையுந் தோகை மயில் நடையும்
பவள இதழுமென்று பார்ப்பேன் மனோன்மணியே'

'காதம் பரிமளிக்கும் கஸ்தூரிப் பொட்டிடுவேன்
போதுஞ்சவ் வாதணிந்து புணர்வேன் மனோன்மணியே'

'தலைக்கு மினுக்கெண்ணெய் தடவிச்சடை
பின்னிவைப்பேன்
முலைக்கு வன்னக் கச்சிறுக்கி முடிப்பேன்
மனோன்மணியே'

'காலாழி பீலிமுதற் கல்நகையும் பொன்னகையும்
நாலாட் சுமைவேண்டின் நடக்கும் மனோன்மணியே'

'என்னைவிட்டால் மாப்பிளைமார் எத்தனையோ
வுன்றனக்கே
உன்னைவிட்டால் பெண்ணெனக்கும் உண்டோ
மனோன்மணியே'

என்பது போன்ற நூறுகண்ணிகளால் ஆண்டவனைக் காதலியாகப் பாவித்துப் புனைந்து பாடுகின்ற பாடல்கள் எல்லோரும் படிப்பதற்கேற்ற இனிய பாங்கான நடையில் அமைந்துள்ளன. அவற்றினுள்ளே அமைந்து கிடக்கின்ற வாடாத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெய்வீகக் காதலை, தெய்வப் புணர்ப்பினை, தெவிட்டாத பேரின்பத்தினை எல்லோரும் அறிவாரோ? தம்மையறிந்தவர் அறிவார்.

நூலின் இறுதியிலே அமைந்துள்ள கீர்த்தனைப் பகுதி இசைநயமும், தாளலயமும் அமைந்து எழுச்சி பெற்றுச் செல்கின்ற நடைக்கு ஓர் உதாரணத்தை மாத்திரம் இங்கே காட்டிக் கட்டுரையை நிறைவு செய்ய விரும்புகின்றேன். பரமானந்த வெள்ளத்தை அள்ளியுண்போம். எல்லோரும் சேர வாருங்கள்; செகத்தீரே! என்று அழைக்கின்றது இப் பாடல்.

பல்லவி

'பரமுத்தன் குணங்குடி தெருவில் வரும்பவனி
பார்த்து வருவோம் வாருங்கள் — பர

அநுபல்லவி

வரமுத்தர் சுரர் கணம் தரமுற்றவர்களிரு
பரமொய் தினிய துதி வரமுத்தியருளும் நம் — பர

சரணங்கள்

சாத்திர வேதம் சலாம் சலாம் சலாமென்ன
சகசோதி மின்னல் பளீர் பளீர் பளீரென்ன
பேர்த்துளம் போற்றும் றகீம் றகீம் றகீமென்ன
பிசுமில்லா கிற்றகு மானிற்றகீமென்னுள்
அசையாம லொருநிலை விசுவாச மருளும் நம் — பர

நாசச் சரீரம் நரேல் நரேல் நரேலென்ன
நஞ்ச வினைகள் சரேல் சரேல் சரேலென்ன
வீசு மருட்கள் விறீல் விறீல் விறீலென்ன
வேதவா ளெடுத் தேந்திச் சோதிவாசியிலேறி — பர

நாடாத பேர்கள் பயம் பயம் பயமென்ன
நம்பிய பேர்கள் ஜயம் ஜயம் ஜயமென்ன
திக்குத் திசைகளெங்கும் மிக்க ஒளி பரப்பி
ஒக்க உலகமொரு கைக்குள் ளடங்கும் நம் — பர

குணங்குடி வாழ்க. மஸ்தான் சாகிபு மலரடி வாழ்க
அவர் தம் திருப்பாடல்கள் வாழ்க
சாந்தி சாந்தி சாந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ காளிகாமடு
# கற்பக விநாயகர்

வடக்கின் கண்ணே தேவாரம் பெற்ற திருக்கேதீச்சரச் செழும்பதியும், தெற்கின் கண்ணே திருப்புகழ் பெற்ற கதிர்காமத் திருப்பதியும் கிழக்கின் கண்ணே தேவாரம் பெற்ற தென் கயிலைத் திருகோணமலை வளம்பதியும், மேற்கின் கண்ணே மேன்மை சால் முனிச்சுர வியன்பெரும்பதியும் அமைந்து நாற்புறமும் அருட்காவல் பூண்டு நிற்பதால் நமது ஈழவளநாடு புனிதமுற்றுப் பொலிகின்றது. நாற்புறமும் சூழ்ந்துள்ள கடலரணிலும் பன்மடங்கு வலிமையுள்ள திருவருட் கடலரண் சூழ்ந்துள்ளமையால் ஊழி பெயரினும் நிலை பெயராத உறுதி பெற்று விளங்கும் ஈழ நன்னாடு பொன்னாட்டிலும் உயர்வுடையதாகும்.

இந் நன்னாட்டின் கிழக்குத் திசையிலே அகத்தியர் தாபனமாகிய திருக்கரசை, சிவ பக்தனாகிய இராவணன் கண்ட சப்த தீர்த்தமென்னும் கன்னியாய், வெருகலம்பதி, சிற்றாண்டி, மாமாங்கம், கொக்கட்டிச்சோலை, தில்லைமண்டூர், திருக்கோயில் முதலிய பல தலங்கள் நிலவுஞ் சிறப்பினால் ஈழநாட்டினும் கிழக்கிலங்கை மகிமை பெற்று விளங்குகின்றது. தமிழும், சைவமும் கமழ்கின்ற கிழக்கிலங்கையின் விழுமிய பண்பாடு பழமையும், பெருமையும் வாய்ந்ததாகும்.

நமது பழம் பெருமையையும், புத்துணர்ச்சியையும் துணையாகக் கொண்டு முயற்சித்து நமது முன்னோரளித்த அரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும் செல்வங்களை நாம் அனுபவித்தல் வேண்டும். அவர்களின் சிறந்த நடையினை நாம் அனுசரித்தல் வேண்டும். நமது சமய தாபனங்களைப் பற்றிய உணர்ச்சியும், ஆராய்ச்சியும் நம் உள்ளத்தில் உதித்தல் வேண்டும். திருவருள் வழிநடந்த நமது முன்னோரின் சக்தியை ஆதாரமாகக் கொண்டு நாம் முயன்றால் நமது நாட்டிலுள்ள புராதன தலங்களைப் புனிதமாக வைத்திருக்கவும், பாதுகாக்கவும், புனருத்தாரணம் செய்யவும் நன்றாக நிருவகிக்கவும் வேண்டிய ஆற்றல் நமக்குக் கைகூடும.

பின் தங்கியுள்ள நாம் நமது அண்மையிலுள்ள திருவருள் ஊற்றுகளைப் பாதுகாவாமலும், அனுபவியாமலும் விட்டு விட்டுப் பேருக்கும் புகழுக்குமாகப் பெரிய திருவருட் பிரவாகங்களை நோக்கித் தொலை தூரத்துக்கு அலையும் மனப்பான்மையைத் தற்காலிகமாக விட்டு விடுதல் வேண்டும். அங்கே பூசை திருவிழாக்களுக்காகப் பெரும் பணம் செலவிடுதலும் நமக்கு வேண்டாம். முதல் நமது நாட்டிற் பழுதடைந்து கிடக்கும் ஆலயங்களின் மீது நமது பார்வை விழட்டும். அவற்றைத் திருத்தியமைக்கத் தொண்டு செய்வோம். பின்பு வெளியுலகப் பணியிற் பங்கு கொள்வோம். கிழக்கிலங்கையில் நமது நோக்கம் செல்வதாக. இவற்றைத் தொள்ளாயிரம் ஆண்டுகளின் முன்பு நிகழ்ந்ததோர் தெய்வீகக் காட்சி நமது நினைவுக்கு வருகின்றது. அதுவும் நமது கிழக்கிலங்கையிலே, நமக்கு அண்மையிலே நிகழ்ந்த திருவருட் காட்சியாகும்.

வானோங்கிய மரங்களும், மரங்களிற் படர்ந்து மன்றல் கமழும் கொடிகளும், தளிர்த்துப் பூத்துச் செழித்துக் குலுங்கும் செடிகளும் செறிந்து இனிய பொதும்பர்கள் நிறைந்த மாபெருஞ் சோலையொன்று, கொம்பன் சோலையென்பது அதன் பெயர். அதுதான் ஏறுமாவூர், செங்கலடி, கொம்பன்துறை, சிகண்டிகுடி சந்திவெளி, காளிகாமடு முதலிய பிரதேசங்களைச் சார்ந்து நீண்டு பரந்து கிடந்தமையால் வன விலங்குகளுக்கும், பறவைக் கூட்டங்களுக்கும், கவர்ச்சியளிக்கும் இனிய வாசஸ்தலமாக அமைந்திருந்தது. இக் காட்டிலே சர்வாதிகாரி போல உலாவித் திரிகின்றது ஒரு கொம்பன் யானை. நடைமலை போன்றும், மதமலை போன்றும் திரிகின்ற அந்தக் கொம்பன் மேற்குறித்த இடங்கள் தோறும் அலைந்து மக்களை அவலமும் கவலையும் அடையச் செய்து செருக்கித் திரிகின்றது.

மதவெறி கொண்டு அலைந்து திரிந்த இந்தக் கொம்பன் யானை ஒருநாள் திருவருட் குறிப்பினாலே சிகண்டி குடியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கி வேகமாக வருகின்றது. அங்கே சிகண்டி முனிவர் என்னும் சித்தர் தவயோகத்திலிருக்கிறார். யானை அவரை நெருங்கி மேலும் வேகமாக வருகின்றது. இந்த யானையின் பிறப்பைத் திருக்குறிப்பால் அறிந்த சிகண்டி முனிவர் ஒரு வெற்றிலையை எடுத்து அதன் முன்னே எறிகின்றார். வெற்றிலை வேல்போல் வடிவெடுத்து யானையின் மத்தகத்தை இரு கூறாகப் பிளக்கின்றது. யானையின் இரு கூறுகளும் மறைய அவற்றினிடையே ஒரு மனித வடிவம் தோன்றி முனிவரின் பாதங்களில் விழுந்து வணங்க முனிவர் ஆசிர்வதித்து நீ முற்பிறப்பில் ஒரு கந்தருவனாயிருந்தாய். உனது பெயர் ஐராவசு. ஒரு சாபத்தினால் யானையாகப் பிறந்து இக்காட்டில் அலைந்துதிரிந்தாய். இன்று என்னைக் கண்டதும் உனது சாபம் நீங்கிப் பழைய வடிவம் பெற்றாய். இனிமேல் நீ நலமே வாழ்க! என்று கூறி முனிவர் அவனுக்கு விடை கொடுக்கின்றார். அவன் மீண்டும் வணங்கி யெழுந்து தனது நகரத்துக்குச் செல்கின்றான்.

அக்கொம்பன் யானை திரிந்த கொம்பன் சோலையே கூமாச் சோலையென்றும், கொம்பன் நீர் விளையாடிய கொம்பன்துறையே கொப மாதுறையென்றும், கொம்பன் ஏறுமாறாகத் திரிந்த ஏறுமாவூரே ஏறாவூர் என்றும் திரிந்து வழங்குகின்றன என்று பெரியோர் கூறுகின்றார்கள். அன்றியும் சிகண்டி முனிவர் வாழ்ந்த இடமாகிய சிகண்டி குடியே காலகதியில் சிற்றாண்டி குடியாயிற்று. இன்று சிற்றாண்டி குடிசித்திர வேலாயுத சுவாமி கோயிலில் நடக்கின்ற மயிற்கட்டுத் திருவிழா சிகண்டி முனிவரின் ஞாபகமாக நடக்கிறதென்றும் கூறுகின்றார்கள். மயிலுக்குச் சிகண்டியென்னும் ஒருபெயரும் இருப்பதால் இந்த ஐதீகம் ஆராய்ச்சியாளர்க்கு விருந்தாயமைக.

இந்த அற்புதச் செயல் நிகழ்ந்த சூழலிலே காளிகாமடுத் திருப்பதியென ஒரு பிள்ளையார் கோயில் அமைந்திருக்கின்றது. ஐராவசு எனும் கந்தருவன் யானையாக வாழ்ந்த பிரதேசத்தில் பிரணவ வடிவாகிய யானைமுகக் கடவுளுக்கு மக்கள் ஆலயமெடுத்து இத்த யானையால் இடையூறு நேரிடாவண்ணம் வணங்கி வந்திருக்கலாம் என்று நம்புதற்கு இடமுண்டு. அன்றியும் சிற்றாண்டி குடியில் இளைய பிள்ளையார் சித்திர வேலாயுத சுவாமி கோயில் கொண்டருளியது போல, அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த காளிகாமடுப் பகுதியிலே மூத்த பிள்ளையார் கற்பக விநாயகரும் கோயில் கொண்டருளியதும் பொருத்தமாக அமைந்திருக்கின்றது எனவும் பெரியோர்கள் கூறுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொக்கட்டிச்சோலை தான்தோன்றீசுவரர் கோயிலுக்குத் தாந்தா மலைத் திருப்பதியிருப்பது போன்று, சிற்றாண்டிச் சித்திர வேலாயுத சுவாமி ஆலயத்துக்குக் காளிகாமடுத் திருப்பதியிருப்பது மிகவும் பொருத்தமாகக் காணப்படுகின்றது. எந்த நோக்குடன் பார்த்தாலும் காளிகாமடு கற்பக விநாயகர் ஆலயம் திருவருள் சுரக்கும் தெய்வீக தலமென்பதிலே எள்ளளவும் ஐயமேயில்லை.

இத்தகைய அற்புதம். வாய்ந்த காளிகாமடுத் திருப்பதியானது செங்கலடிச் சந்தியிலிருந்து மேற்கு நோக்கிச் செல்லும் வதுளை வீதியிலே 2½ மைல் தூரத்தில் அமைந்துள்ளது. செங்கலடிச் சந்தியால் மேற்கு நோக்கிச் சிறிது தூரம் சென்றதும் வீதியின் மருங்கில் நமது இடப்புறத்தே நிற்கும் வேம்பிலும், அரசிலும் மாறிமாறிப் பாய்ந்து துள்ளிக் குதிக்கின்ற வானரக் கூட்டங்களை அங்கே காணலாம். தெய்வீகப் பிரசாத முண்ணும் பேறுபெற்ற இந்த வானரக் கூட்டங்கள் உறவு கலந்து விளையாடுமிடத்திலே அழகான சிறியதோர் ஆலயம் முதற் காட்சி தருகின்றது. இது ஒரு வைரவர் கோயில், காளிகாமடுக் கற்பக விநாயகர் கோயிலின் திருவாயிலைக் காவல் புரியும் அதிகாரம் பெற்ற வைரவர் இங்கே நிற்கின்றார்· இவரிடம் விடை பெற்றாலொழியக் காளிகாமடுத் திருப்பதியை அடைதல் கூடாது.

கி. பி. 1902 ஆம் ஆண்டளவிலேதான் இவ் வைரவர் ஆலயம்முதல் முதல் கட்டப்பட்டது. அப்போது ஏறாவூரிலிருந்த பிரபல வணிகர் திரு. க. ம. இளையதம்பி என்பவர் கட்டி உபகரித்த ஆலயக் கட்டிடம் கி. பி. 1957 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 25 ஆந் திகதி ஏற்பட்ட பெருவெள்ளத்தாற் சேதமடையலாயிற்று பின்னர் 1958 ஆம் ஆண்டு தை மாதம் 24 ஆந் திகதி மீண்டும் அத்திவாரமிடப் பெற்றுப் பொதுமக்களின் உதவியுடன் ஸ்ரீ காளிகாமடு ஆலய பரிபாலன சபைத் தனாதிகாரி திரு. சி. வ. வி. செல்லையா அவர்களின் முயற்சியால் இப்போதுள்ள வைரவர் கோயிற் கட்டிடம் பூர்த்தியாகி 1958 ஆம் ஆண்டு ஆடி மாதம் 28 ஆந் திகதி கும்பாபிஷேகமும் சிறப்புற நிறைவேறப் பெற்றது. இத் திருப்பணிச் செலவிலே பெருந்தொகைப்பணம் திரு. சி. வ. வி. செல்லையா அவர்களின் காணிக்கையேயாகும்

இந்தக் காவல் வைரவர் கோயிலிருந்து தெற்கு நோக்கி ஒரு செம்மண் வீதிசெல்கிறது. இவ்வீதி ஏறக்குறைய 330 யார் நீளமிருக்கும். இவ்வீதி முடியுமிடத்தில் ஒரு மண்மேடு அமைந்துள்ளது. இம் மண்மேட்டில் நின்று தெற்கு முகமாக நோக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னால் மிக மிக அண்மையிலே காளிகாமடு ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயம் கண்ணுக்கு இனிதாகக் காட்சியளிக்கும்.

மூன்று புறமுஞ் சூழ்ந்து கிடந்து இயற்கை அரணாகக் காட்சி தருகின்ற இனிய நீரோடை; அதனிடையே அமைந்து கிடக்கும் நீண்டு பரந்த நிலப்பரப்பு; அந்நிலப்பரப்பின் மீது குளிர்ந்த தளைகளையுடைய ஆலுமரசும், மாவும் மருதும், வேம்பும் வில்வமும் விண்ணோங்கியுயர்ந்து மென்விலைப் பந்தல் விரித்தாற் போன்ற குளிர் நிழற் கூடல் இக்கூடலின் நடுவிலே கோயில். இத்தனையும் ஒருங்கே பொருந்திய காளிகாமடுத் திருப்தியானது ஈழநாட்டின் திருவரங்கம் போன்று இனிதாக இலங்குங்காட்சி காண்போர்க்குப் பக்தியும் பரவசமும் ஊட்டு கின்றது. அற்புதம் வாய்ந்தது.

இத் திருப்பதியைச் சூழ்ந்துள்ள நீரோடை ஆழமற்றது மூக்கன் வெளி நீரோடை என்பது அதன் பெயர். மேட்டு நிலத் திலிருந்து நீரோடையிலிறங்கிக் கரையேறியதும் இயல்பாகவே கழுவப்பட்ட கால்களுடன் நாம் ஆசாரசீலர்களாக ஆலய வீதி யிற் பிரவேசிக்கும் பேறு நமக்குக் கிடைக்கின்றது. கால்கள் விரைந்து செல்லக் கற்பக விநாயகர் திரு முன்னிலையடைந்து மெய்மறந்து நிற்கும் பக்தர் குழாத்துடன் நாமும் ஒன்றாகி விடுகின்றோம் ஆலயமோ சிறிது. அருளோ பெரிது. பிரணவ சொரூபியாகிய பிள்ளையார்க்கு ஆலயமமைக்க யாரால் முடியும்.

கிழக்கிலங்கையிலே மூர்த்தி, தலம், தீர்த்தம் என்பன முறையே யமைந்து விசேடம் பெற்ற பல தலங்களுக்குள்ளே காளிகாமடுத் திருப்பதியும் ஒன்றாகும். அடர்ந்த வனமாகக் கிடந்த இந்தக் காளிகாமடுப் பிரதேசத்தினூடாகச் செல்லும் 'தாளைவீதி' என்கின்ற ஒற்றையடிப்பாதை வழியாக அக்கா லத்திற் பிரயாணிகள் வதுளைக்குப் போக்குவரவு செய்வது வழக்கமாகும். கி. பி. 1800 ஆம் ஆண்டு தொடக்கம் இவ் வழக்கம் இருந்து வந்தது. இக்காலத்திலே இதற்கு அயற் கிராமங்களிலுள்ள மக்கள் காடு வெட்டிப் பூமி திருத்திக் கமஞ் செய்யும் முயற்சியில் ஈடுபட்டபோது இப்போது ஆலய மிருக் கும் மேட்டுப் பூமியில் வன்னித்தம்பிரானையும், காளிமா தேவியையும் வழிபட்டு வந்தார்கள், பிரயாணிகளும் இவ்வழி பாட்டிற் கலந்து கொள்வதுண்டு. ஆயினும், அப்போது குறிப் பிடத்தக்க கோயில் எதுவும் கட்டியதாகத் தெரியவில்லை.

கி. பி. 1870ஆம் ஆண்டளவிலேதான் ஒற்றையடிப்பாதை பகிரங்க பாதையாகத் திருத்தியமைக்கும் வேலை தொடங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கியது. பாதையமைக்கும் தொழிலில் ஈடுபட்டிருந்த 'பயனியர்கள்' என்போர்க்குத் தலைவராயிருந்த செங்கலடி ஆறுமுகம் முருகப்பர் அவின்தார் முதலி என்பவரே காளிகாமடு ஆலயத்தை முதன் முதலாகக் கட்டுவித்தவராவர். செங்கலடியைச் சேர்ந்த மாணிடவர் என்பவரும், நம்பியார் குமாரவேலு என்பவரும் தொடக்கத்தில் பூசகர்களாயிருந்தார்கள். செங்கலடியிலே பழுத்த மருந்துமாமரம் போல் திகழ்ந்த சித்தவைத்தியர் கிருஷ்ணபிள்ளைச் சாமியார் அவர்கள் ஆறுமுகம் முருகப்பர் அவின்தார் முதலி என்பவரது புதல்வரேயென்பது இங்கே குறிப்பிடத்தக்கதாம்.

காளிகாமடு என்னும் இத்திருப்பதிக்கும், காளிதேவிக்குமுள்ள தொடர்புபற்றி இப்போது ஒன்றுஞ் சொல்வதற்கு ஆதாரம் யாதும் காணப்படவில்லை. காளிகம் என்கின்ற மணித்தக்காளி இப்பகுதியின் பக்கத்தே காணப்படுவது கொண்டு காளிகாமடு என்னும் பெயர் இந்த மருந்துப் பூண்டினால் வந்திருக்கலாம் எனச் சிலர் அபிப்பிராயப் படுகின்றார்கள். ஆராய்ச்சியாளரிடம் இதனை விட்டு விடுதல் நல்லதாகும்.

1878 ஆம் ஆண்டு தொடக்கம் அர்ச்சகராயிருந்த குமாரவேலு என்பவர் 1892 ஆம் ஆண்டிலே காலமாகி விட்டார். அதன்பின் குமாரவேலு மகன் சின்னப்பு என்பார் அர்ச்சகரானார். சின்னப்புவின் காலத்திற்குப் பின் மாணிடவரின் மைத்துனர் மூத்ததம்பி என்பார் பூசகரானார். இந்நிலையிலே, முன்பு 1902 ஆம் ஆண்டில் வைரவர் கோயிலைக் கட்டுவித்த ஏறாவூர் திரு. சு. ம. இளையதம்பி என்பவர் காளிகாமடு ஆலயத்தின் பூசை திருவிழா நிகழ்ச்சிகளைப் பிரபலப்படுத்த முயற்சிக்கலானார். அயற் கிராமங்களிலுள்ள மக்களின் ஒத்துழைப்போடு வேல்திருவிழா, தைப்பூசத் திருவிழா ஆகிய உற்சவங்களை ஏற்படுத்தி இனிது நடத்தி வந்தார். இவர் காலத்தின்பின் இவரின் மூத்த மகன் இரத்தினம் என்பார் இக்கோயிற் திருப்பணிகளைச் செவ்வனே நடத்தலானார்.

இதன்பின், 1935 ஆம் அண்டளவில் ஆலய நிருவாகத்தில் புதியதோர் அபிவிருத்தியுண்டாயிற்று. அப்போது ஏறாவூரிற் பிரபலம் பெற்றிருந்த கொஸ்தாப்பர் சு. ம. சிதம்பரப்பிள்ளை அவர்களின் மேற்பார்வையின் கீழ் மேசிலார் சரவணமுத்து என்பவரைக் கொண்டு ஆலயத்தின் முன் மண்டபங்கள் இரண்டையும் மடைப்பள்ளியையும் கட்டுவித்துத் திருப்பணியை நன்கு நிறைவேற்றி வைத்தார். மட்டுநகர் பிரமுகரும், அப்போது நீர்ப்பாசன அதிகாரியாகக் கடமையாற்றிய வரும் சிவதொண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டருமாகிய திரு. பெ. ஏரம்பமூர்த்தி என்பாரும் இத்திருப்பணியில் பன்குடாவெளி திரு. வ. வி. சீனித்தம்பி, செங்கலடி திரு. வ. வி. கதிர்காமத்தம்பி ஆகியோரும், இப்பகுதி விவசாயிகளும் காட்டிய ஒத்தாசை இங்கே குறிப்பிடத்தக்கதாகும். அன்றியும் இத்திருப்பணிக்கு வேண்டிய மரங்களைத் தந்துதவிய செங்கலடி திருமதி வல்லிபுரம் தங்கம்மையாரது தாராளத் தன்மை இப் பகுதித் தனவந்தர்களுக்கெல்லாம் ஒரு முன்மாதிரியாகக் கொள்ளுவதற்கு உரியது.

1939 ஆம் ஆண்டு கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றுப் பொதுமக்களாற் பரிபாலிக்கப்பட்டு வந்த இவ்வாலயத்தின் பூசகராக கொக்கட்டிச்சோலைப் பகுதியைச் சேர்ந்த திரு. கந்தையா என்பவர் அப்போது சேவை செய்து வந்தார்.

கற்பக விநாயகரின் திருவருள் போல இவ்வாலயமும் ஒரு பொதுச்சொத்தேயாம். 1945 ஆம் ஆண்டு தொடக்கம் 1949 ஆம் ஆண்டு முடியு மட்டும் இவ்வாலய நிருவாகம் பன்குடாவெளி, கொடுவாமடு, கொம்மாதுறை, வந்தாறுமூலை, செங்கலடி, ஏறாவூர் 4 ஆம், 5 ஆம் குறிச்சி, தளவாய், குடியிருப்பு, மயிலம்பாவெளி, புளியந்தீவு ஆகிய ஊர்ச் சைவப் பொதுமக்களாற் தெரிவு செய்யப்பட்ட ஒரு பரிபாலன சபையினாற் செவ்வனே நடைபெற்று வந்தது. 1950 ஆம் ஆண்டிலிருந்து உன்னிச்சை, கரடியனாறு, வேப்பவெட்டுவான் ஆகிய கிராமங்களும் நிருவாகத்திற் பங்கு கொண்டன. 1960 ஆம் ஆண்டு தை மாதம் 31 ஆம் திகதி வரையும் இந்த நடைமுறை பழைய வழக்கத்தை தொடர்ந்து நடைபெற்று வந்தது.

1960 ஆம் ஆண்டு தை மாதம் 31 ஆந் தேதியன்று மேற்குறித்த ஊர்ப் பொது மக்கள் கூடிய ஒரு மகாசபை ஆலய வீதியிற் கூடிச்செய்த தீர்மானத்துக்கமைய 06-06-1960 இல் ஆலய நிர்வாகம் பற்றி ஒரு உறுதி சாதனம் நிறைவேற்றப்பட்டது. பிரசித்த நொத்தாரிசு திரு. சா. கந்தப்பா அவர்களால் 3419 ஆம் இலக்கத்தில் அத்தாட்சிப்படுத்தப்பட்ட சாதனத்தின் பிரதிகள் தருமக் கமிஷனர் காரியாலயம் (Public Trust), மட்டுநகர்ப் பொதுநூல் நிலையம் (Public Library) ஆகிய தாபனங்களிலும் பாதுகாப்பில் வைக்கப் பட்டுள்ளன.

இத்திருப்பதியில் ஆண்டுதோறும் திருவிழா நடத்தும் ஒழுங்கினைப் பரிபாலன சபையார் தொடர்ச்சியாகச் செய்து வருகின்றார்கள். கதிர்காமத் தீர்த்தத்துக்கு நாலு நாள் முந்தி இங்குள்ள வைரவர் கோயிலிற் கொடியேற்றம் நடக்கும். அன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனைத் தொடர்ந்து கற்பகவிநாயகப் பெருமானுக்கு அபிஷேக நைவேத்திய ஆராதனை நிகழும். பின்னர் மூன்றாம் நாள் வந்தாறுமூலை விஷ்ணுவாலயத்தில் முன்னேற்பாட்டுடன் வைத்து எழுந்தருளப் பண்ணிய சக்திவேல் ஏறாவூர் வரையுள்ள எல்லா ஆலயங்களையும் தரிசித்து மக்கள் பக்தி பரவசமாகப் பணிந்து நிற்க ஊர்வலமாகக் காளிகாமடுப்பதியை வந்தடையும். வந்து எழுந்தருளியதும் விநாயகப் பெருமானுக்கு அபிஷேகபூசையும் திருவிழாவும் நடைபெறும்.

அடுத்த நாள் கதிர்காம தீர்த்த உற்சவத்துடன், தீர்த்த உற்சவம் நடந்தேறும். தீர்த்தம் முடிந்ததும் திருவூஞ்சலும், அன்னதானமும் சிறப்பாக நடைபெறும். இந்த உற்சவ முறை 1946 ஆம் ஆண்டு தொடக்கம் நடைமுறையிலிருந்து வருகின்றது. ஆண்டு தோறும் இத்திருவிழா, வைபவத்திற் பெருந்திரளான மக்கள் கலந்துகொண்டு சைவ மக்களின் கூட்டுறவும் நம்பிக்கையும் வளரத் திருவருள் பொலியச் சீரும் சிறப்புமாக வாழ்ந்து வருகின்றார்கள்.

மட்டக்களப்பு - வதுளை வீதியாகச் செல்லும் பிரயாணிகள் சாதி சமய வேறுபாடின்றி இவ்வாலய வீதியிலே தரித்து நின்று கற்பூரம் கொளுத்தித் தேங்காயுடைத்துக் கும்பிட்டு வணங்கிச் செல்லும் காட்சியினை எப்போதும் காணலாம். இவ்வாலயத்துக்குப் பொருள் வருவாய் சிறிது; அருள் வருவாய் பெரிது எதிர்காலத்தில் அருள் போற் பொருளும் பொலிந்து திருக்கோயில் நீடூழி வாழ்க வெனக் கற்பக விநாயகர் பெருமானை வாழ்த்தி வணங்குவோமாக.

''நங் கடம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென் கடம்பைத் திருக்கரக் கோயிலான்
தன் கடன் அடியேனையுந் தாங்குதல்
என் கடன் பணி செய்து கிடப்பதே''

## ஸ்ரீ காளிகாமடு கற்பக விநாயகர் பேரில் பாடிய வசந்தன் காவியம்

*தரு:-*

*தனதனதத்தத் தனதன தத்தத்*
*தனதன தத்தத் தனதான*
*தனதன தத்தத் தனதன தத்தத்*
*தனதன தத்தத் தனதான*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. அண்டர்கள் புகழத் தொண்டர்கள் மகிழ
அழகுடன் வாறவர் ஆர்மானே - நல்ல
கண்டவர் புகழும் காளிகா மடுவுறை
கணபதி யாமடி காரிகையே - தனதன

2. தனதன தன்னத் தவில் முரசதிர
தயவுடன் வாறவர் ஆர்மானே - நல்ல
கனதன மென்ற கரிமுகமுடைய
கணபதி யாமடி காரிகையே - தனதன

3. எலிதனில் ஏறி இசையவர் போற்ற
வழிதனில் வாறவர் ஆர்மானே - நல்ல
கதிரையில் முருகற் கருளது கொடுக்கும்
கணபதி யாமடி காரிகையே - தனதன

4. மோதக மதனைச் சோதனை பண்ணி
பாதையில் வாறவர் ஆர்மானே - நல்ல
பால்தயிர் வெண்ணெய் தேடி எடுப்போன்
மருமக னாமடி பைங்கிளியே - தனதன

5. வயிறு சரிய வடகிரி நெளிய
வழிதனில் வாறவர் ஆர்மானே - நல்ல
கனதன மென்ற கரிமுக முடைய
கணபதி யாமடி காரிகையே - தனதன

6. மாலை பதக்கம் பளபள வென்ன
வழிதனில் வாறவர் ஆர்மானே - நல்ல
கண்டவர் புகழும் காளிகா மடுவுறை
கணபதி யாமடி காரிகையே - தனதன

7. மடமடநடன மங்கையர் மகிழ
மகிழ்வுடன் வாறவர் ஆர்மானே - நல்ல
கதடதட விதடக்குட வயிறுடை
கணபதி யாமடி காரிகையே - தனதன

8. பரிபுர மசையப் பலர் தொனியார்ப்ப
பவனியில் வாறவர் ஆர்மானே - நல்ல
கதிரையில் முருகற் கருளது கொடுக்கும்
கணபதி யாமடி காரிகையே - தனதன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. மணிமுடி மின்ன மாலைகள் துன்ன
மகிழ்வுடன் வாறவர் ஆர்மானே - நல்ல
காசினி மீதில் பாவமத கற்றும்
கற்பகமாமடி காரிகையே - தனதன

10. தேவர்கள் மகிழ முனிவர்கள் புகழ
சிறப்புடன் வாறவர் ஆர்மானே - நல்ல
படிய தளக்கும் பரமனார் பெற்ற
பாலகனாமடி பைங்கிளியே - தனதன.

## ஸ்ரீ காளிகாமடு கற்பக விநாயகர் ஊஞ்சல்

(மட்டக்களப்பு புலவர்மணி. ஏ. பெரியதம்பிப்பிள்ளை
அவர்கள் இயற்றியது)

### கொச்சகக் கலிப்பா

1. உத்தமமாம் பக்தி விசுவாசம் காலாகச்
சித்தமெனும் விட்டம் சேர்த்தியனு தினமும்
புத்திகயிறாயுன் மெய்யடியார் நன்கமைக்கும்
சுத்தமன மாம்பலகை மீது மகிழ்ந் தேறிச்
சித்தி புத்தி தந்தருளுந் தேவே உலகுக்கோர்
கர்த்தனே சீர்காளி காமடுவிற் கற்பகமே
வித்தகஞ்சேர் வல்லபையோ டாடுக பொன்னூஞ்சல்
விக்கினங்கள் தீர்த்தருளி யாடுக பொன்னூஞ்சல்.

1. பக்தியும் விசுவாசமும் இரு கால்கள்
2. சித்தம் - விட்டம் 3. புத்தி - கயிறு
4. மனம் - பலகை. இது நித்திய வூஞ்சல்.

2. தந்தையார் கோயில் தருமகர்த்தா வானமுதல்
மைந்தனே மூஷிகத்தை வாகனமாகக் கொண்டெமது
சிந்தைசேர் தீயபுத்தி யெல்லாம் சிதைந் தொழிய
வந்தாயெம் வாழ்வில் வருமிடர்கள் தீர்ப்போனே
எந்தையே சாதிமத மெல்லாங் கடந்து வரும்
தந்தாய் திருக் காளி காமடுவிற் சார்கதியே
கொந்தார் குளிர் நிழற்கீழாடுக பொன்னூஞ்சல்
குறைநீக்கி யாண்டெம்மை யாடுக பொன்னூஞ்சல்

3. மூவுலகுந் தோன்றுதற்கு முன்னாகு (1) மோரெழுத்தே
பூவுலக வின்பப் பொருளருளும் (2) பொன்னெழுத்தே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவுலகுக் கப்பாத் சிறப்பருளும் (3) ஐந்தெழுத்தே
சிவசிவ ஐக்கியமாச் சேர்ந்தோர் சொல் (4) மூவெழுத்தே
பாவலர் தம் நாவிலின்பப் பாட்டருளும் பண்ணவனே
காவுலவு மலர் காளி காமடுவிற் கணைனுதலே
பூவலருந் தாரசைய ஆடுக பொன்னூஞ்சல்
பொலிகருணைத் தேன் சொரிந்தே ஆடுக பொன்னூஞ்சல்

(1) ஓம் (2) நமசிவாய (3) சிவாயநம (4) சிவயவசி

4. இனத்துடனே மந்திகளும் ஏறியிருந் தின்பமுடன்
தினப்பூசை கண்டுதிருப் பிரசாதமுண்டுலவும்
வனப்பமையும் ஆல்வேம்பு மாவரசு - மகிழ் மருதம்
மனக்கினிய நிழல் செய்ய மந்தமாருதம் வீசப்
புனற்கினிய நீரோடை புறஞ்சூழச் செந்தமிழின்
இனிப்பொலிசேர் எழிற்காளி காமடுவில் எம்பெருமான்
தினைப்பொழுதும் நீங்காமே யாடுக பொன்னூஞ்சல்
செல்வமெலாம் எமக்கருளி யாடுக பொன்னூஞ்சல்

5. உருப்பொலிந்த தம்பிசுரம் ஒருகுலகம் தான் கொடுத்தே
தெருக்கரையின் நின்றெவர்க்கும் செய்கருணையென நிறுத்தி
தருக்கன்ற மனத்துடனே தாழ்ந்து நிற்பார்க்கவர் வேண்டும்
பொருட்பேறும் கலைப்பேறும்புண்ணியஞ்செய் பெரும்பேறும்
அருட்பேறும் உவந்தளிக்கும் அறிவுருவே வளர்செந்நெல்
திருப்பொலிசூழ் வயற்காளி காமடுவில் எழுந்தருளும்
மருப்பேந்து மலர்க் கரத்தாய் ஆடுக பொன்னூஞ்சல்
மன்னவர் செங்கோல் புரந்தே ஆடுக பொன்னூஞ்சல்

6. தேடுகல்வி ஞானம் திடசித்தம் தேகசுகம்
பீடுபெறு நல்லோர் பெருநட்பும் செல்வாக்கும்
நாடியுனதடிக்கே பக்திசெயும் நன்மனமும்
கூடியுன்னோடொன்றாகும் கூட்டுறவும் ஈந்தருளி
வாடியலையாத மனநிறைவும் தந்தருளி
நீடுழி வாழ்காளி காமடுவில் நித்தியனே
நாடு வளம்பெறவே யாடுக பொன்னூஞ்சல்
நன் மாதவர்க்கருளி யாடுக பொன்னூஞ்சல்

7. அன்பும் பணிவும் அடக்க முடனருளி
மன்புவியல் தன்னுயிர்போல் மன்னுயிரும் யாம்பேணும்
இன்ப நிலையும் எமக்கருளி எம்பெருமான்
உன்புகழெம் பாட்டில் உரைக்கும் திறனருளி
என்புங் கனியத் திருக்காட்சி யீந்தருளும்
தென்பொலி செந்தமிழ்க்காளி காமடுவில் திருமூர்த்தி
பொன்பொலி செம்மேனியனே ஆடுக பொன்னூஞ்சல்
புலவோர்க் கருள்புரிந்தே யாடுக பொன்னூஞ்சல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. சக்தி பலவருளி வீரமொடு கருணை
வைத்தெம் மனத்திற் சுதந்திர நல்வாழ்வருளி
நித்தம் புரந்தின்ப துன்ப நிலைகளிலே
சித்தசமாதானம் சேர்த்துச் சிவகுமார
அத்தனையும் நின்னடிக்கே அர்ப்பணம் செய் புத்தி தந்து
புத்தொளிசேர் நற்காளி காமடுவிற் புண்ணியனே
சித்தாந்த மெய்ப்பொருளே யாடுக பொன்னூஞ்சல்
செய்பிழைகள் தீர்த்தெம்மை யாடுக பொன்னூஞ்சல்

9. சங்கத் தமிழும் சகல மொழிக்கலையும்
தங்குந் திருமுகத்து ஞானத்தனி வடிவே
எங்கும் நிறைந்தொளிரும் வேதாந்தப் பேரொளியே
எங்கள் வினை தீர்க்கும் மருந்தே மதந்தோறும்
பொங்குங் கருணை பொழியுந் திருமுகமா
தங்கமே தண்காளி காமடுவில் தற்பரனே
மங்கள மெங்கும் பொலிய ஆடுக பொன்னூஞ்சல்
வையமெலாம் வாழ்வுபெற ஆடுக பொன்னூஞ்சல்

## மங்களம்

கற்பக விநாயகர்க்குச் செய மங்களம்—ஸ்ரீ
காளிகா நாயகர்க்குச் சுபமங்களம்
வற்றா அருள் மழைக்குச் செயமங்களம்—சக்தி
வல்லபை சமேதருக்குச் சுபமங்களம்
சிற்குண சொரூபருக்குச் செயமங்களம்—நாளும்
சித்திபுத்தி சேர்ப்பவர்க்குச் சுபமங்களம்
வித்தை வடிவானவர்க்குச் செயமங்களம்—வரும்
விக்கினங்கள் தீர்ப்பவர்க்குச் சுபமங்களம்
சொற்பதம் கடந்தவர்க்குச் செயமங்களம்—பரஞ்
சோதி வடிவானவர்க்குச் சுபமங்களம்
அற்புத பரம்பொருட்குச் செயமங்களம்—நித்தி
யானந்த ரூபருக்குச் சுபமங்களம்
குற்றம் பொறுப்பவர்க்குச் செயமங்களம்—எங்கள்
குலதெய்வ மானவர்க்குச் சுபமங்களம்
உற்சவ கணேசருக்குச் செயமங்களம்—ஸ்ரீ
ஓங்கார ரூபருக்குச் சுபமங்களம்.

— சுபம் —



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சக்தி வழிபாடு

நாம் காணுகின்ற இவ்வுலகம் 'அம்மை அப்பர்' வடிவானது. எனினும், அம்மைக்கே முதலிடம் கொடுக்கின்றோம். அம்மையை நாம் இயல்பாகவே அறிந்து கொள்ளுகின்றோம். அம்மை காட்ட அப்பனைக் காண்கின்றோம். இந்த இரண்டு காட்சிகளிலும் அம்மையைக் காணும் காட்சி இயற்கை, அப்பனைக் காணும் காட்சி செயற்கை. இதனாலேதான் அனுபூதிமான்கள் பலர் இறைவனை அம்மை வடிவத்தில் கண்டு ஆனந்தமடைகிறார்கள். இந்த உலகினை மாத்திரமல்ல, அண்ட சராசரங்களையுமே அம்மை வடிவிற் கண்டு சாந்தியடைகின்றார்கள்.

இறைவனை ''அம்மையே அப்பா'' என்று அழைக்கின்றார். மணிவாசகப் பெருமான். ''தோடுடைய செவியன்'' என்று அம்மையை முன்வைத்துத் தமிழோடிசை பாடுகின்றார் சம்பந்தப்பிள்ளையார், ''மலர்ச் சிலம்படி' வாழ்த்தி வணங்குகின்றார். சேக்கிழார் சுவாமிகள். 'தேவிநின்னருள் பெறாத தேயமோர் தேயமாமோ' எனப்பாடி இறைவனை அம்மை வடிவிற் காண்கின்றார் பாரதியார்.

சர்வம் சக்திமயம், அண்ட சராசரம் கண்கண்ட தெய்வம், படைத்தல், காத்தல், அழித்தல் மூன்றும் சக்திமயமே. படைத்தல் மாத்திரம் நிகழ்ந்தால் உலகம் தாங்குமா? காத்தல் மாத்திரம் நிகழ்ந்தால் உலகம் தாங்குமா? காத்தல் மாத்திரம் நிகழ்ந்தால் உலகம் பழைமை நீங்குமா? அழித்தலும் நிகழ்ந்தால்தான் உலகம் புதுமை பெறும்; சுமை குறையும்; வாழ்க்கை இலேசாகப் போய்க்கொண்டிருக்கும். உலகில்படைத்தலும், காத்தலும், அழித்தலும் ஒன்றுக்கொன்று உதவியாக நிகழ்கின்றன. இந்த உண்மையினை மக்கள் உணர வேண்டும், உணர்ந்தால் மீட்சியுண்டாம்.

அழிவு ஆக்கம் தருகின்றது. ஒரு குடிசையை அழிக்கின்றோம். அந்த இடத்தில் ஓர் அழகான மாளிகையை ஆக்குகின்றோம். இங்கே அழிவு ஆக்கமாகின்றது. ஒரு நெல்மணி வயலிலே அழிகின்றது. இதனால் ஆயிரம் நெல்மணிகள் பிறக்கின்றன. இவ்வாறே அழிவும் ஆக்கமும். அழிவைக் கண்டு நாம் பயங் கொள்ளல் ஆகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயலிலே களை அழிகின்றது; நெற்பயிர் ஆக்கம் பெறு கின்றது. சமூகத்திலே கெட்டவன் அழிகின்றான். அவனோடு கேடும் அழிகின்றது.

இதனால் நல்லவன் ஆக்கம் பெறுகின்றான், நன்மையும் விருத் தியடைகின்றது. 'நூற்றிரண்டு மலைகளைச் சாடுவோம் துண் ணிடைப் பெண் ஒருத்தி பணியிலே' என்று பாரதியார் பாடு கின்றார். பெண்களில் அவ்வளவு நம்பிக்கை ஏன்? பெண் சக்திவடிவானவள்.

உலகம் சக்திமயம். இதனால் சக்தி வழிபாடு நிலை பெற்றுத் திகழ்கின்றது. நமது வாழ்விலே சக்தியிருந்தால்தான் நாம் உண்ணவும், உலாவவும், உறங்கவும் முடியும். நம்முள்ளே சீவன் இல்லாவிடில் நமது சடசக்தி இயங்குமா? சடசக்தியின் இயக்கத்துக்கு சிவசக்தியின் இயக்கம் அவசியம். சிவசக்தியின் இயக்கமின்றிச் சடசக்திக்கு இயக்கமில்லை. மனித சக்தியில் லாமல் அணுச்சக்தி இயங்குமா? இந்த உண்மையை உணர்ந் தால் விஞ்ஞானம் மெய்ஞ்ஞானத்துக்கு வழிவகுக்கும். இதனை நாம் உணரவேண்டும்.

சடசக்திகள் அனந்தம். சிவசக்திகள் அவற்றினும் அனந் தம், சடசக்தி, சீவசக்தி, சிவசக்தி எனச் சக்திகளை மூன்றா கக் காண்கின்றோம். சிவசக்தியையும் நாம் மூன்றாகக் கண்டு வணங்குகின்றோம்.

நமது உலக வாழ்க்கையையும் மூன்றாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. வீரம், செல்வம், கல்வி, இம்மூன்றும் ஒன்றானதே வாழ்க்கை. மூவரும் ஒருவரானவரே கடவுள்.

வீரம் ஆக்கத்துக்குக் காரணமான அழிவுச்சக்தி; இதனைத் துர்க்கை, காளி, மாரி முதலிய திருநாமங்களால் வழிபடு கிறோம். செல்வம் காத்தலுக்குக் காரணமான ஆக்கச் சக்தி. இதனை இலட்சுமி, திருமகள் முதலிய திருப்பெயர்களால் வழி படுகின்றோம். கல்வி அறிவுக்குக் காரணமான ஆக்கச் சக்தி, இதனை சரசுவதி, கலைமகள் முதலிய திருநாமங்களால் வழி படுகின்றோம்.

சக்தி வழிபாடு உருவும் உணர்ச்சியும் தந்து தன்னம் பிக்கையை வளர்ப்பது. சக்தி வழிபாடு பற்றிய பாடல்களும் உருவும் உணர்ச்சியும் ஊட்டும் பக்திவடிவானவை. மந்திர சக்தி பெற்றவை. இத்தகைய பக்தி பெற்ற பாடல்கள் ஈழநாடு முழுவதிலும் பல்லாயிரக் கணக்கில் பரந்து வழங்குகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கியமும் சமூக வாழ்வும்

"முடிபுனை கடிகை" வரப்போகின்றது. முடிசூட்டுக்குரிய மங்கல நிகழ்ச்சிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. கலைமகளை மணந்த காகுத்தன், திருமகளை மணந்த வில்லின் செல்வன், நிலமகளையும் மணக்கப் போகின்றான். மூவுலகுக்கும் பொதுவான முடிசூட்டு விழா. நீ, நான் என்று சொல்லிக்கொண்டு முடி மன்னரும், மண்டலாதிபதிகளும், பட்டவர்த்தனரும் முதலிய பிரபலவான்கள் விரைந்து புறப்பட்டுச் செல்கின்றார்கள். சனசமுத்திரம்போன்று பொதுமக்கள் மகிழ்ச்சியொலியுடன் திரண்டு வருகின்றார்கள். இத்தனையும் எதற்கு? தசரதன் வாயாலேயே கூறிவிட்ட முடிபுனை கடிகைக்கு. "நடையில் நின்றுயர், நாயகன்" முடி சூடுவதை நானிலம் முழுதுமே நயந்து நிற்கின்றது.

"மாதர்கள் கற்பின் மிக்கார் கோசலை மனத்தை யொத்தார்

வேதியர் வசிட்ட னொத்தார் வேறுள மகளிரெல்லாம்

சீதையை யொத்தார் அன்னாள் திருவினை யொத்தாள் அவ்வூர்ச்

சாதுகை மாந்த ரெல்லாம் தசரதன் தன்னை யொத்தார்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமபுத்தி படைத்த இராமபிரானின் முடிசூட்டுவிழா எல்லார்க்குஞ் சமமான மனமகிழ்ச்சியை யளிப்பது இயல்புதானே. இதில் வியப்பென்ன?

அரதன விளக்கங்களால் அலங்கரிக்கப்பெற்று அவிர்ந்து விளங்குகின்றது அயோத்தி மாநகரம். அங்கே இரவும் பகலாகிவிட்டது. விஞ்ஞான கலாநிதி சர். சந்திரசேகர வேங்கடராமன் என்பார் இரத்தினசோதியை எவ்வாறு பொதுசன உபயோகத்திற்கு உரியதாகச் செய்யலாம் என்று ஆராய்ந்து கொண்டிருக்கின்ற இரத்தினப் பரீட்சையின் முடிபினை 2000 ஆண்டுகளுக்கு முன்னேயே கண்டுபிடித்திருந்தது இந்திய நன்னாடு. இரத்தின தீபங்களால் எழில்பெற்று இலங்குகின்ற இல்லங்களையும், வீதிகளையுந் தன்னகத்தே கொண்ட இனிய அயோத்திமாநகரம் அமரர்க்கும் அருத்திபுரிகின்றது. இராவணன் காலத்து இலங்காபுரியும் இத்தகையதே. நவரத்தினங்களுள் முத்துப்போன்று உலகநாடுகளின் மத்தியிலே இசையொளிபரப்பி நிற்கின்ற நம்மிரு நாடுகளும் விஞ்ஞான உலகின் மத்தியிலே நாட்டிய புகழினும் பார்க்க, உலக சமுதாய வாழ்வின் மத்தியிலே ஈட்டித் தந்துள்ள இணையில்லாப் புகழானது அவற்றின் அழகாகிய சிகரத்தின் மணிமுடி போன்று திகழ்வதைக் கம்பராமாயண காவியம் கவின்பெறக் காட்டி நிற்கின்றது.

இயற்கை யழகுஞ் செயற்கையழகும் உலக சமுதாய அழகுடனே இரண்டறக் கலந்து உறவாடுகின்ற அயோத்திமாநகரம் இனியதோர் இன்ப நிலமாகக் காட்சியளிக்கின்றது. இந்த இன்ப நிலத்தின் மத்தியிலே எதிர்பாராததொரு சம்பவம், முன்பே முடிந்த சம்பவம், மறைந்துகிடந்த சம்பவம், சாதாரண மக்களின் அறிவுக்குப் புலப்படாததொரு சம்பவம் பயன்படும் செவ்வியை யடைந்து திடீரெனத் தோன்றுகின்றது. விளையாட்டால் விளைந்த வினையாகிய இச்சம்பவம், விதியென்னும் பெயர்கொண்டு விளையாடத் தொடங்கிவிட்டது.

''பண்டைநாள் இராகவன் பாணி வில்லுமிழ்
உண்டை''

யென்கின்ற அந்த வினைவிளைத்த விளையாட்டுக் கருவியை நமக்குக் கற்பித்துக் காட்டுகின்றார் கம்பர் பெருமான். இந்தக் கழிமண்ணுருண்டையைக் கூனியென்பாள் தன்னுள்ளத்தே தள்ளுகின்ற வினையால் விதியானது தனது விளையாட்டை ஆரம்பிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூனி இலேசானவள் அல்லள்; மிகப் பழையவள்! இராச குடும்பத்துப் பெண்களிடையே நல்ல செல்வாக்குப் பெற்றவள்; எங்கும் அடிபட்டவள்; கோள் சொல்வதில் அடிப்பட்டவள்; நரித் தந்திரி; சகுனியையுந் தன் கைப் பொம்மையாக்கத் தக்க சமயோசித சந்தர்ப்பவாதி. ஏக காலத்திலே மூன்று மனைவியர்களை வைத்துக்கொண்டிருந்த தசரச் சக்கரவர்த்தியின் குடும்பத்திலே உள்படு கருமத் தலைவியாக இருந்தமையால் கூனியின் கோளோடு கூடிய மனக்கோள், மூவுலகுக்கும் இடுக்கண் மூட்டக்கூடிய ஆற்றல் வாய்ந்தது. அவளது விளையாட்டு வினையாகி வினை விதியாகி, விதிதான் விளையாடுவதை இங்கே காண்போம்.

இராப்பகலற்ற நகரிலே, இரவு வேளையிலே கூனி கிளம்புகிறாள். எங்கும் மலர்ந்தன முகங்கள். கூனியின் முகம் மாத்திரம் ஒரு கூம்பு. இன்று வாடிக் கூம்பிவிட்டது. கூனியைக் கவனிக்க ஒருவருக்கும் நேரமில்லை. சாதாரண குறைபாடுகளைப் பெரிதாக்கிக்கொண்டு சமயம் வரும்போது பழிவாங்க விரைந்து செல்லுகின்ற கயமை உலகிற்குத் தன்னை ஓர் உதாரணமாகக் காட்டுகின்றவள் போன்று கூனி செல்கின்றாள். அவள் நடந்து செல்கின்றாள் என்று சொல்வதற்கில்லை; குடுகுடுத்து ஓடுகின்றாள். கைகேயி அன்னையின் மாளிகையுட் புகுகின்றாள்; கால்களை வருடுகின்றாள்; காதிலே ஏதோ குசுகுசுத்துப் பேசுகின்றாள். ஒரு கபடநாடக சூத்திரதாரியாகி விட்டாள் கூனி.

விதி விளையாடுகிறது. அது முதற் காரணம்; கூனி துணைக்காரணம்; கைகேயி நிமித்த காரணம். வினை விளைவு ஒரு நியமம்; ஆகம சாத்திரங்களாலே நிறுவப்பட்டதோர் உண்மை; அனுபவ சாதனம். சாத்திரக் கருத்தின் முடிபாக அமைந்துள்ள இவ்வினை விளைவினைச் சமூக வாழ்விலே மக்கள் நிறைவேற்றிவைக்கின்ற இந்த நியதியை இலக்கியங்கள் சிருட்டித்துக் காட்டுகின்றன. இதனால், சமூக வாழ்வின் நியதி நிகழ்ச்சிகள் நிறைந்த ஓவியச்சாலைகள் போன்று காட்சியளிக்கின்றன இலக்கியங்கள். இராமாயணமும், இவ்வண்ணம் நிகழ்வண்ணம் இனிது காட்டும் மெய்வண்ணக் கவின்வண்ணக் கருத்துவண்ணத்தின் செவ்வண்ணந் திகழுஞ் சீரியதோர் இலக்கியமாயமைகின்றது. இலக்கியங்களிலே கதாபாத்திரங்களின் அமைதி நியமம் உயிர் போன்றுள்ளது.

'முடிபுனை கடிகை'யை நிறைவேற்றத் துணை செய்கின்றாள் கூனி. கடிகையென்பதற்கு நேரம் என்னும் பொருளோடு நீக்குதல், தடைப்படுதல் என்னும் பொருளும் உண்டல்லவா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தசரத மன்னன் வாயில் இரட்டுற மொழிதலாக வந்து அப்போது குறிப்பால் அமங்கலம் பயந்து நின்ற கடிகை யென்னுஞ் சொல்லின் அமங்கலப் பொருளை வெளிப்படையாக உலகம் அறிவதற்குத் துணையாகின்றாள் கூனி. கடிகை யென்னுஞ் சொல்லைத் தசரதன் சொல்லவில்லை. விதி கூட்டிற்று.

சீதையின் கிளிப்பிள்ளைக்குங் கைகேயி என்பது பெயர். அவ்வளவு அன்பு. இராமன்மீது கைகேயிக்குள்ள பேரன்புபேராத நல்லன்பு, தாய்மையன்பு. இராமனுக்கும் இவ்வாறே; சீதைக்கும் இதுவே.

''என்னொ ரின்னுயிர் மென்கிளிக்
இயார் பெயரீகேன்
மன்ன வென்றலும் மாசறு
கேகயன் மாதென்
அன்னை தன்பெய ராகென
அன்பினொ டந்தாள்''

சொன்னவன் இராமன்; இட்டவள் சீதை. உண்மை அன்பிற்கு இது உதாரணம். தமது உண்ணீர்க் கலசத்துக்குச் 'சவுக்கத்தலி அண்ணா' என்று பெயரிட்டுச் சாதி, மத பேதங் கடந்த தனிப்பேரன்பிலே தலை நின்ற கவியரசி சரோசினி தேவியுஞ் சமூக வாழ்வுக்கும் இலக்கியத்துக்குமுள்ள தொடர்பினை நன்கு அணிசெய்துள்ள சம்பவத்தையுந் தொடர்புபற்றி இங்கே குறிப்பிடல் சால்புடைத்தாம். நமது காலத்து நிகழ்ச்சியல்லவா?

இராமன்மீது கைகேயிக்குள்ள தாய்மையன்பு - உள்ளன்பு. இயல்பானது; மாறுபடாதது.

''மாசறு கேகயன் மாது என் அன்னை''

ஆசறு இராமனே அதற்கு அகச் சான்றாக அமைகின்றான். அத்தகைய மாசற்ற பேரன்பு மாறுபடுவதாயின், அஃது ஏதோ ஓர் அந்தரங்கமான அபாரசக்தியாலேதான் ஆகமுடியும். வெறுங் களிமண் உருண்டைக்கு அதனைச் செய்யும் ஆற்றலேது? வில்லும் போய்ப், பொல்லில் வரும் வில்வடிவமான கூனியின் சொல்லம்புக்கு இந்த நல்லன்பு இலக்காவது எவ்வாறு; கைகேயிக்கும் இதைச் செய்வது நல்லதன்று, தசரதனுக்குஞ் சாத்தியமில்லை; இந்த நிலையான பேரன்பை நிலைகுலைத்தற்குரிய சத்தியுற்று முன்னரேயே அமைந்து கிடந்ததொரு நியதிதான் இங்கே பெரியதோர் சதி இயக்கமாகிய ''முடிபுனை கடிகை''யை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடித்து வைக்க உருத்தெழுந்தது என்கின்றார் நமது கவிச் சக்கரவர்த்தி.

> "அரக்கர் பாவமு மல்ல வரிபற்றிய அறமுந்
> துரக்க நல்லருள் துறந்தனள் தூமொழி மடமான்
> இரக்க மின்மையன் றோவின் றுலகங்க ளிராமன்
> பரக்குந் தொல்புக ழமுதினைப் பருகுகின்றதுவே"

என்கின்ற இராமாயணச் செய்யுள் நமது ஐயமாகிய நோய்க்கு அமுத சஞ்சீவியாக அமைந்து மன அமைதியை அளித்து நிற்கின்றது.

இராமனது முடிபுனைதல் கடியலாகிய இச்செயலே ஓர் அரசியற் புரட்சியுமன்று; சதித்திட்டமுமன்று. பழிச்செயலுமன்று; பாதகமுமன்று; விதியின் விளையாட்டு. இராமனது ஆகூழால் இது நிகழ்ந்தது இராமனது உடல் வலியும், மனோ சக்தியும் சமத்துவ புத்தியும், காரிய சித்தியும், அத்திர சத்திர யுத்த தந்திர முயற்சியும் முதலியயாவும் அனுபவ ஞானத்தால் ஆக்கம் பெறுதற்கு முன்னின்ற ஆகூழானது உலகினை ஏக்க முறச் செய்து, இராம சரித்திரத்தை உலகிலே அமரத்துவம் பெறச் செய்து விட்டது. "அரக்கர் பாவமும்" என்னும் இச் செய்யுள் இராமாயணத் திறவுகோல்; இராமாயண நடுநிலை வாக்கியம்; அதன் உயர்நிலைச் செய்யுள். இச் செய்யுளை யறிந்தால், தசரதனை மறியலாம்; கைகேயியையுங் காண லாம். இராமாயணமும் இனிது விளங்கும்.

> "மாதவி மடந்தை
> கானற் பாணி கனக விசயர்தம்
> முடித்தலை நெரித்தது"

என்னுஞ் சிலப்பதிகார அடிகளும் இங்கே நினைவுகூரத் தக்கனவாகும். சிலப்பதிகார நிகழ்ச்சிகளை விளங்க இவ்வடிகள் உறுதுணையாகின்றன

இவ்வாறே சமூக வாழ்வில் நிகழும் விளங்கா நிகழ்ச்சி களை விளங்கிக் கொள்ளற்குரிய உயர்நிலை வாக்கியங்களை இலக்கியங்களிலே கண்டு புலவர் உள்ளங்களாகிய தெப்பங் களின் மூலமாகச் சமூக வாழ்வாகிய கடலைத் தாண்டிச் சம நிலைபெறுவோமாக. நடுநிலையிலே நின்று இலக்கியம் படித் தல் எளிதன்று.

> "நத்தம்போற் கேடும் உளதாகுஞ் சாக்காடும்
> வித்தகர்க் கல்லா லரிது"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வாங்கு வாழ வழிகாட்டும் இலக்கியம்

பழந்தமிழ் இலக்கியங்கள் மக்கள் வாழ்வினை இருபகுதியாக வகுத்துக் கூறுகின்றன. ஒன்று அகவாழ்வு; மற்றது புறவாழ்வு. அகவாழ்வென்பது ஒரு தலைவன் இல்லின் கண் மனைவி மக்கள் சார்பாக வாழும் வாழ்க்கை. புறவாழ்வென்பது ஒரு தலைவன் தன்னாட்டு மக்களும் பிறநாட்டுத் தலைவரும் பிறரும் சார்பாக வாழும் வாழ்க்கை. ஒரு சார்புமின்றி ஒருவனுக்கு இவ்வுலக வாழ்வுமில்லை; அவ்வுலக வாழ்வுமில்லை. சார்பறிந்து ஒழுகவேண்டுமெனத் திருக்குறள் கூறுகின்றது.

அகவாழ்வும் புறவாழ்வும் அறம், பொருள், இன்பம், வடு என்னும் நான்கு பயனையும் ஒருவன் பெறுதற்குரிய ஒழுக்க நெறிகளாகும். இந்நான்கையும் மூன்றுள் அடக்கி அறம், பொருள். இன்பம் என்றே நூல்கள் கூறுகின்றன. இந்த ஒழுக்க நெறிகள் இரண்டும் ஒருவனது இல்வாழ்விலும் சமூக வாழ்விலும் தேசிய வாழ்விலும் மலர்ச்சி பெற்றுச் சர்வதேசிய வாழ்வில் நிறைவுற வேண்டுமென இலக்கியங்கள் கூறுகின்றன.

''பெற்ற தாயும் பிறந்தபொன்னாடும், நற்றவ வானின் நனி சிறந்தனவே'' என்கின்றார் பாரதியார். ''யாதும் ஊரே; யாவரும் கேளிர்'' என்கின்றது புறநானூறு. ''யாதானும் ஊராம்; யாதானும் நாடாம்'' என்கின்றார் வள்ளுவப் பெருந்தகையார்.

மக்கள் வாழ்வினை அகவாழ்வு. புறவாழ்வு எனப் பகுத்தமைத்த தமிழிலக்கியங்கள் இவ்விருவாழ்க்கை நெறிக்கும் அறமே ஆதாரமென்றும் அகத்தூய்மையே எல்லா அறங்களுக்கும் தாயறமென்றும் இவை அன்பினால் ஆக்கமடையுமென்றும் அழகாகக் கூறுகின்றன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்தறன்" என்பது திருக்குறள். "அன்பின் நின்றன அறங்கள்" என்பது கம்பராமாயணம்; "அன்பென்று கொட்டு முரசே; அதில் ஆக்கமுண்டாமென்று கொட்டு" என முழங்குகின்றது பாரதிபாடல்.

அகவாழ்விலும், புறவாழ்விலும் நாம் செய்கின்ற அறங்களும் தேடுகின்ற பொருள்களும் அனுபவிக்கின்ற இன்பங்களும் அறநெறி கடவாதிருக்க வேண்டும். அறத்தின் கண் அறமும் பொருளின்கண் அறமும் இன்பத்தின்கண் அறமும் இணைபிரியாது அமைந்திருக்க வேண்டும் என்பது கட்டாயம்.

அன்றியும், அறத்தின்கண் இன்பமும் பொருளின்கண் இன்பமும் இன்பத்தின்கண் இன்பமும் இணைபிரியாது உடன் நிகழ வேண்டும் என்பதும் நியதியாகும். இவ்வாறு அறம், பொருள், இன்பம் என்னும் மூன்று பயன்களையும் அகவாழ்விலும் புறவாழ்விலும் மக்கள் அடையும்போது அவர்கள் கண்ட அனுபவங்களே இலக்கியங்களாக நமக்குக் கிடைத்திருக்கின்றன. அக வாழ்விலும் புற வாழ்விலும் நாம் அடையும் பயன் இன்பமேயாயினும், துன்ப அனுபவங்கள் இடையே வந்து கலப்பதையும் நாம் விலக்க ஒண்ணாது; அனுபவித்தே தீர வேண்டும். இந்தச் சந்தர்ப்பத்திலேதான் இலக்கியங்கள் மக்கள் மத்தியிலே சிறந்த சேவையைச் செய்கின்றன. துன்ப அனுபவங்களை இன்பமாக்கிக் கொள்ளும் சிறந்த சேவையைச் செய்கின்றன. துன்ப அனுபவங்களை இன்பமாக்கிக் கொள்ளும் சிறந்த நெறிகளை நேராகவும் கதாபாத்திரங்கள் வாயிலாகவும் திறந்து வைக்கின்றன இலக்கியங்கள். இதனால் அகவாழ்வும் புறவாழ்வும் துன்பம் நீங்கி இன்பமயமாக மாறுகின்ற பல சம்பவங்களை இலக்கியங்களிலே நாம் காண்கின்றோம்.

"இடுக்கண் வருங்கால் நகுக" என்கின்றது திருக்குறள்; "இடுக்கண் வந்துற்றகாலை எரிகின்ற விளக்குப்போல - நடுக்கமொன்றானுமின்றி நகுக; அந்த நகை துன்பத்தை அரிகின்ற ஆயுதமாகும்" என்கின்றார் திருத்தக்க தேவர். "பெயக்கண்டும் நஞ்சுண்டமைவர் - நயத்தக்க நாகரிகம் வேண்டுபவர்" என்கின்றார் வள்ளுவனார். "முந்தை நின்று நட்டோர் கொடுப்பின் - நஞ்சும் உண்பர் நனிநாகரிகர்" என்கின்றது நற்றிணை; "நச்சை வாயிலே கொணர்ந்து - நண்பரூட்டு போழ்தினும் அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே" என நிமிர்ந்து நின்று பாடுகிறார் பாரதியார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆழிசூழ் உலக மெல்லாம் பரதனேயாள நீ போய்த் தாழிருஞ் சடைகள் தாங்கித் தாங்கரும் தவம்மேற் கொண்டு பூழிவெம் கானம் நண்ணி - ஏழிரண்டு ஆண்டில் வா" எனக் கைகேயி அன்னை கூறிய எதிர்பாராத துன்ப மொழிகளின் மத்தியிலே, இராமபிரானின் முகம், "அப்பொழு தலர்ந்த செந்தா மரையினை வென்றதம்மா" எனத் துன்பத்தை இன்ப மாக்கி விடுகின்றார் கம்பர். "நின் பிரிவினுஞ் சுடுமோ பெருங் காடு - பத்தும் நாலும் பகல் அல்லவோ" எனத் துன்பத்தில் வீரம் பேசுகின்றார் சீதா பிராட்டியார். இன்பத்தில் இறுமாப் பற்றது வாழ்வு; துன்பத்தில் துளங்காமலிருப்பது வாழ்வு.

அகவாழ்வும் புறவாழ்வும் நிறைவுபெற வேண்டுமா? நாடு சுபிட்சமாக வாழ வேண்டுமா? மனித சக்தியை நம்புங்கள்; மனித சக்தியாலேதான் நாடு நலம்பெறுமென்கிறது இலக்கியம்.

நிலமே நீ நாடாயிருந்தாலென்ன? காடாயிருந்தாலென்ன? பள்ளமாயிருந்தாலென்ன? மேடாயிருந்தாலென்ன? அதில் ஒரு சிறப்புமில்லை. உன்னிடத்து வாழ்கின்ற மக்கள் எவ்வாறு நல்லவர்களா யிருக்கின்றார்களோ அவ்வாறே நீயும் நலம்பெற்று வாழ்வாயாக என வாழ்த்துகின்றது புறநானூறு. "எவ்வழி நல்லவர் ஆடவர்; அவ்வழி நல்லை வாழிய நிலனே" என்பது செய்யுள். நல்லோர்கள் எங்கே பிறந்தாலும் அவர்களை உயர் வாக மதிப்பவன் தமிழன். "நல்லோர்கள் எங்கே பிறந்தாலும் என்?" "அறிவார்யார் நல்லான் பிறக்குங்குடி"; "எக்குடிப் பிறப்பினும், யாவரே யாயினும், அக்குடிக் கற்றோரை மேல்வரு கென்பர்" என்னும் இலக்கியங்கள் சமூக சமரசத்துக்குத் தமிழ கத்தில் நல்ல இடமிருந்ததைக் குறிப்பிடுகின்றன.

நல்லோர்கள் பலர் ஒருநாட்டில் இருந்தாலும் அந்நாட்டின் நல்வாழ்வு அவர்களின் அறிவாற்றல்களைக் கூட்டாகப் பயன் செய்வதிலேதான் தங்கியிருக்கிறதென இலக்கியங்கள் குறிப்பிடு வதையும் நாம் மறத்தலாகாது. இதனை மறந்தவினும் பார்க்கக் கேடில்லை. மலையிடைப் பிறந்த மணியும் பொன்னும்; - அலையிடைப் பிறந்த முத்தும் பவளமும்; வெவ்வேறு இடங்களிற் பிறந்தனவாயினும், அழகிய இரத்தினாபரணங்களை அணிவிக் கும்போது ஓரிடத்தில் சென்று கூடி அழகு தருகின்றன அவை கள்; இது போல எக்குடிப் பிறப்பினும், யாவரேயாயினும், நல்லோர்கள் கூட்டாகத் தங்கள் அறிவினை நாட்டுக்குப் பயன் செய்தால், நாட்டின் அகவாழ்வும், புறவாழ்வும் நிறைவுற்று நாடு செழிக்குமல்லவா? இலக்கியம் காட்டும் நெறியில் நாடு மலர்ச்சியடைக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது முன்னோர் மனிதசக்தியை நன்கு பயன் செய்திருப்பதையும், நாட்டின் இயற்கை வளத்தினை விருத்தி செய்யும் வழியில் அதைத் தொழிற்படுத்தியிருப்பதையும் இலக்கியங்கள் தெளிவாகக் கூறுகின்றன. இருவரின் அன்பு கலந்த மன ஒருமைப் பாட்டினை வருணிக்க வந்த புலவர் அதனைச் செம்புலப் பெயல்நீர் போலிருக்கிறது என உவமிக்கின்றார். பண்பட்ட நிலத்தில் இனிய நீர் பாய்ந்தால், நிலமும் நீரும் ஒன்றாகக் கலந்து விடுதல் போல இவர்களின் அன்பு கலந்த நெஞ்சம் ஒன்றாய்விட்டது என்று கூறிய புலவர் பெருமான் அந்நாட்டு மக்கள் நிலத்தையும் நீரையும் பயன் செய்த சீரிய வாழ்வினைச் சித்திரித்துக் காட்டிய அருமை நம்மால் உணரத்தக்கது. நமது நாட்டிலும், தென்தமிழ் நாட்டிலும் நிலத்தையும் நீரையும் இணைத்துவைத்த அரசர்கள் பலர் இலக்கியத்தில் பெருங்கீர்த்தி பெற்றுத் திகழ்கின்றார்கள். நிலத்தையும் நீரையும் இணைத்து வைத்தோர் உலகையும் உயிரையும் இணைத்து வைத்தோர். "உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" எனப் புறநானூறு கூறுகின்றது. இந்த வரிசையிலே காவிரிக்குக் கரைகட்டிய கரிகாற் பெருவளத்தான், பகீரதன், மகா பராக்கிரமவாகு, குளக்கோட்டன் முதலிய மன்னர்கள் குறிப்பிடத்தக்கவர்கள்.

இயற்கைவளஞ் சிறந்த நாடுகளிலே வேலையில்லை; வரும்படியில்லை; அது இல்லை: இது இல்லை என்று சொல்லிக்கொண்டு சோம்பேறிகளாகத் திரிவோரைக் கண்டால் பூமாதேவி இகழ்ந்து சிரிக்கிறாள் எனத்திருக்குறள் கூறுகின்றது. "இலமென்று அசைஇ இருப்பாரைக் காணின், நில மென்னும நல்லாள் நகும்."

நமது நாட்டில் நல்ல நிலமிருக்கிறது. இனிய நீர்ப் பெருக்குகள் உள்ளன. அரசாங்கம் நிலத்தையும் நீரையும் இணைத்து வைக்கும் திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது. நிலத்தையும் நீரையும் பயன் செய்து வாழ்ந்தவர்களின் சந்ததி இன்று உணவுக்குக் கையேந்தி நிற்பதேன்? நமது வயல்களைத் திரும்பிப் பார்ப்போம். ஈழநாடு பிறநாடுகளுக்கு உணவு ஏற்றுமதி செய்த பழைய பட்டியலப்பாலைச் செய்தியைப் புதுச் செய்தியாக்குவோம். காடு கெடுத்து நாடு புதுக்கிடுவோம். காணியிற் குடியேறி வசித்திடுவோம். பாடுபடுத்தும் சோற்றுப் பஞ்சமெல்லாம் பறந்ததென்றே வெற்றி பாடிடுவோம் - தூர்ந்த பலகுளங்கள் திருத்திடுவோம்; பாய்ந்து வரும் நதிநீர் மறித்திடுவோம். பாங்காய் நெல் இரு போகம் விளைத்திடுவோம் - இலங்கை முழுவதற்கும் உணவளிப்போம்; ஏற்றி அயல் நாட்டவர் பசிதணிப்போம்; இலங்கு தங்கக்குவியல் கொண்டுவருவோம்; எங்கள் பழைய நிலை இன்றுகாண்போம். இந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்குடன் இலக்கியங்களைப் படிப்போம். பரீட்சைக் காகப் படிப்பதுடன் பாடத்துக்காகவும் படிப்போம். நமது இலக்கியப் படிப்பு நமக்கு அனுபவசாதனமாக மாற்றமடைய வேண்டும்.

எத்தொழிலைச் செய்தாலும், ஏதவத்தைப் பட்டாலும் நமது முன்னோர் ஒன்றை மாத்திரம் மறக்கவில்லை. அது தான் அக வாழ்வுக்கும் புறவாழ்வுக்கு முள்ள இணைபிரியாத தொடர்பு. இதனால், வறுமையினும் சரி; செல்வத்திலும் சரி; அவர்கள் செம்மை வாழ்வு வாழ்ந்து மன அமைதியுடன் வாழ் வதற்கு அவர்கள் காட்டிய வழிவழியே செல்லவேண்டும். உலகிலே பெருஞ் செல்வம் படைத்த குபேர நாடுகள் பலவும் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளிற் பலவும் இன்று மன அமைதி பெற்று வாழ்வதாகக் காணவில்லை. காரணம் அக வாழ்வுக்கும் புறவாழ்வுக்கும் தொடர்பு காணாமல் வெறும் பொருள் படைப்பதிலேயே அவைகள் நாட்டங்கொண்டிருப்பது தான்.

பழைய இலக்கியங்களிலே திருந்திய கமத்தொழில் பற் றிய செய்திகள் அதிகம் வருகின்றன. அங்கெல்லாம் அக வாழ் வுடன் அவைகள் இணைந்தே வருவதை நாம் காணலாகும். நாற்று நடுதல், களைபிடுங்குதல், எருவிடல், நீர் பாய்ச்சுதல் முதலிய முறைகள் பெருவழக்காக நடைபெற்று வந்துள்ளன. இந்தப் புறத்தொழில்கள் யாவும் அகத்தொழில்களோடு இணைந்து நிகழ்வதை ஓர் உதாரணத்தாற் காண்போம். "இன் சொல் விளைநிலனா, ஈதலே வித்தாக, வன் சொற் களை கட்டு, வாய்மை எரு அட்டி, அன்புநீர் பாய்ச்சி, அறக்கதிர் ஈனவோர் - பைங்கூழ் சிறுகாலைச் செய்" என்பது செய்யுள்.

இன்சொல்லாகிய விளைநிலம் இனிய சொல்லிலிருந்து தான் எல்லா நல்வினைகளும் உண்டாகின்றன. "பல்லக் கேறு வதும் வாயால்; பல்லுடைபடுவதும் வாயால்" என்பது பழ மொழி. ஈகை அதாவது கொடை என்கின்ற விதை நெல். கொடுத்து வைத்தவன் என்பார்கள். இதனால் ஈகையை விதை நெல்லாக உருவகஞ் செய்தார். வன்சொற்களாகிய களைகள். பல்லுடை படுவதும் வாயால் என்றதனால் வன்சொற்களைக் களைகளாக உருவகஞ் செய்தார். வாய்மையாகிய எரு. அன் பாகிய நீர்; அறமாகிய கதிர்; வாழ்க்கையாகிய நெற்பயிர்; ஆயுள் ஆகிய காலம். இவை எல்லாம் பொருந்த இயைபாய உருவக அணியால் நடக்கின்ற இச்செய்யுள் அகவாழ்வு சிறக் காதாயின் புறவாழ்வு பயன்தராது என்னும் உண்மையினை ஆணித்தரமாகக் கூறுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னுமொரு நிகழ்ச்சி இங்கே நினைவுக்கு வருகின்றது. அகமும் புறமும் இணைந்த காட்சி, பண்பட்ட ஒரு வயலிலே பச்சைப் பசேலென்ற பருவப் பயிர்கள். களை பிடுங்கும் காலம். வயல் வேலையாட்கள் களைபிடுங்க வயலில் இறங்கிவிட்டார்கள். இவர்களுக்கு நல்ல தண்ணி. கள்ளு வெறியிலே களைகளை வெறிக்க வெறிக்கப் பார்க்கிறார்கள், மள்ளர்களுக்குக் கையும் வருகுதில்லை; காலும் வருகுதில்லை. மதுமயக்கம் அதிகமாய்விட்டது. களை பிடுங்காமல் சும்மா நிற்கிறார்கள். (வீண் சம்பளம். மள்ளர்களுக்கு ஏதோ நடந்துவிட்டது. அப்படி என்ன நடந்தது? ஒன்றுமில்லை. களைகளை மள்ளர் பார்த்த பார்வை இன்னுமொரு தரம் கள்ளுப் போட்டதுபோலாயிற்று.) இத்தனைக்கும் காரணமென்ன? காரணத்தைக் கம்பர் சொல்லுகிறார்; கேளுங்கள்.

''பண்கள் வாய் மிழற்றும் இன்சொற் கடைசியர் பரந்து நீண்ட கண் கை வாய் மூகம் காலொக்கும் களையலாற் களையிலாமை உண்கள்வார் கடைவாய் மள்ளர் களைகலாது உலோபிநிற்பார்.'' கருநீலம், செங்காந்தள், செவ்வாம்பல், செந்தாமரை முதலிய பூக்கள் மள்ளர்களுக்குக் கள்ளு வெறியிலே மருத நிலப் பெண்களின் கண், கை, வாய், முகம், கால் முதலிய அவயவங்களாகவே காட்சி யளிக்கின்றன. களைகளைப் பிடுங்குவது காதலியரின் கண், கை, வாய், முகம், கால் முதலிய உறுப்புகளைக் கொய்வதுபோல் மள்ளர்களுக்கு வருத்தம் தருகிறது. தயங்கி நிற்கின்றார்கள். இதைக் கண்ட கம்பர், ''பெண்கள்பால் வைத்த நேயம் பிழைப் பரோ சிறியோர் பெற்றால்'' என்று பாட்டை முடிக்கின்றார். (அறிவு குறைந்த மள்ளர்கள் கள்ளுக்கும் காமத்துக்கும் அடிமையாகி விட்டார்கள். இந்நிகழ்ச்சியை உலகின் மேல் வைத்து அறிவு குறைந்த மக்கள் பெண்கள் மீது கொண்ட காமத்தில் அமிழ்ந்திக்கடைத் தேற முடியாமல் கெட்டுப் போகின்றார்கள் என்று மள்ளர்கள் மூலமாக வாலிபர்களை எச்சரிக்கின்றார்.) இச் செய்யுளிலே திருந்திய கமச் செய்கையாகிய புற வாழ்வினையும், அகவாழ்வினைக் கெடுக்கின்ற அறியாமை, கள், காமம் என்பவற்றையும் இணைத்து உவமை நயம் தோன்ற உறுதிமொழி கூறுகின்றார் கம்பர்.

ஒருவன் தனது அகவாழ்வில் மன நிறைவு பெற்றால்தான் புறவாழ்வு அவனுக்கு இன்பமளிக்கும். கோடி சீமானாயினும் அகவாழ்வில் நிறைவு பெறாதவனுக்கு இன்பமில்லை;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனது அனுபவம் துன்பமாகவே முடியும். இதனை இலக்கியக் கண்கொண்டு நோக்குவோம்.

ஒரு நாள் சாயந்தரம்; சிறு மழைத்தூறலுங்கூட. மழை தூறி விட்டபின்பு வேடனொருவன் வேட்டைக்குப் புறப்பட்டான். காட்டினுள்ளே ஒரு புற்று; அதன் பக்கத்தே நின்று கொண்டு வேடன் கண்ணெடுத்துப் பார்க்கிறான்; காதுகொடுத்துக்கேட்கிறான். வேடனை நோக்கி வேகமாக வருகிறது ஒரு மதயானை. விடுகிறான் அம்பை. மதயானை வீழ்ந்துபட்டது. இதற்கிடையில் கறையானெடுத்த புற்றினுள்ளே அத்துமீறிக் குடியேறிய நாகபாம்பொன்று வெளியே வந்து வேடனின் காலைக் கடித்தது. பாம்புக்கும் அம்பு விடுகிறான். பாம்பும் இறக்கிறது. விஷத்தலைக்கேறி வேடனும் சாகிறான்.

இந்த அவதியில் அங்கே வருகிறது நரியொன்று. காட்டில் நரி; வீட்டில் எலி. நரியும் எலியும் பிறர் தேட்டத்தை அபகரித்து உயிர்வாழும் பிராணிகள். உலகிலே மனிதருள்ளும் பலர் எலியும் நரியுமாகி விடுகின்றனர். எலிப்புத்தியும், நரிப் புத்தியுமுள்ள மனிதர்களை இலக்கிய கர்த்தார்க்கள் நன்றாகச் சாடியிருக்கிறார்கள். அது கிடக்கட்டும்; வந்த நரியைப் பார்ப்போம்.

பேராசை கொண்ட நரி வட்டமிட்டுப் பார்க்கிறது. ''இனி எனக்குக் காலம் நல்லது. இருக்கு மிடத்திலே இனிய உணவு கிடைத்திருக்கிறது. இதோ எனது உணவுப் பட்டியல் யானை ஆறு மாதத்துக்கு; வேடன் ஒரு வாரத்துக்கு; பாம்பு ஒருநாளுக்கு உணவாகும்'' என்று சொல்லிக்கொண்டே இடப் பக்கமாகச் சுற்றி வருகிறது நரி. வேடனின் பக்கத்தில் நாணேற்றியபடியே கிடந்த வில்லைக் கண்டது. பேராசை விட்ட பாடில்லை. வில் நுனியிற் கட்டியிருந்த தோல் துண்டைக் கண்டு ''இதை விடக்கூடாது; முன்பு இதைத் தின்போம்'' என்றுவில் நுனியைக் கடித்ததும் நாணறுந்து வில் நிமிர்ந்து நரியின் குடலைப் பீறிவிட்டது. கொடுத்து வையாத நரி அனுபவிக்கக் கிடையாமல் இறந்துவிட்டது. இந்த நிகழ்ச்சியைக் கருவாகக் கொண்டு நரி விருத்தம் என ஓர் இலக்கியம் செய்து உலகுக்கு நல்லதோர் உபதேசஞ் செய்கின்றார். உலகத்தில் எத்தனையோ பேர் தமக்கென்று நல்ல அனுபவங்களிருக்க, உயர்ந்த பட்டம், பதவி, அதிகாரம், நிலையான வருமானம் எல்லாம் இருக்க, நரி தோல் துண்டை விரும்பியது போல அற்ப பொருளுக்கு ஆசைப்பட்டு எல்லா அனுபவங்களையும் இழந்து தமது உயிரையும் இழந்து விடுகிறார்கள் என நரி விருத்தம் கூறுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கம்பன் நாட்டிய தமிழ் நாகரிகம்

கலப்பற்ற இனிய பண்பாடுபெற்று வாழ்ந்துவந்த நம் பழந்தமிழ்ப் பெருமக்கள் வடமொழியாளரோடு கூட்டுறவு பெற நேர்ந்தமையால் அவர் தம் தனிப் பண்பாட்டிற் கலப்பு ஏற்படுவதாயிற்று. வடமொழி வாணரது இயல்புகள் பல நமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னோரது வாழ்க்கையிற் புகுவனவாயின. இத்தகைய கலப்புகள் தவிர்க்க முடியாதன என்பது உலகறிந்த உண்மையாகும். அன்றியும், ஒருமொழியைச் சுவைத்தற்கு இன்னொரு மொழியினது சுவையையும் அறிதல் நலமென்பதும், ஒரு வகுப்பினரின் பண்பாடுகள் இன்னொரு வகுப்பினரின் நற்சேர்க்கையால் வளர்ச்சியுறும் என்பதும் கற்றோர் கொண்ட கருத்துக்களாமாதலின், தமிழர்க்கோ அன்றேல் வடமொழியாளர்க்கோ மாத்திரமன்றிக் கலை நலம் வாய்ந்த பன்மொழி மாந்தர்க்கும் இக்கருத்து உடன்பாடேயாம். ஆதலின், கலைப்பண்பு சான்ற நம் தமிழ் வகுப்பினரிடையே கலப்பு ஏற்படுவதும் அது நிலைத்து வளர்வதும் வியப்பிற்குரிய நிகழ்ச்சிகளாகா. இத்தகைய கலப்பினால் தமிழ் வாணரிடத்தே வடமொழிப் பண்பாடுகளும் வடமொழி வாணரிடத்தே தமிழ்ப் பண்பாடுகளும், தம்முட் கலந்து இடம் பெறுதலும் இயல்பே; பல மாற்றங்கள் நிகழ்தலும் வழக்கே. தமிழ்மொழியும் வடமொழியும் தம்முட் கலந்துளவேனும், வடமொழி பேச்சு வழக்கற்றுப் போனமையானும், தமிழ்மொழி உலக வழக்கினுஞ் செய்யுள் வழக்கிலும் பரந்து வழங்கி வந்தமையாலும், நமது தாய் மொழியாகிய தமிழே பலவகை மாற்றங்களுக்கு இலக்காயிற்று. இத்தகைய நிலைமையால், தமிழ்ச் செய்யுள் நடையும், புனைந்துரை வகையும், உலகியற்றினும் தம்மியல்பிற் றிரிவுறலாயின. இதற்கேற்ப வடமொழிப் போக்கைத் தழுவிய செய்யுள் நூல்களும், வசன நூல்களும் பல தமிழ் நாட்டிற் றோன்றலாயின. சிறந்த தமிழ்ப் புலவரும், துறவியுமாகிய திருத்தக்கதேவர் இத்தகைய தோற்றத்துக்கும் மாற்றத்துக்கும் இலக்காகி ஒரு புதுவழி வகுப்பாராயினர். இவரது 'சீவகசிந்தாமணி' என்னும் பெருங் காப்பியம் வடமொழி மதம்பற்றி மோனை எதுகை முதலிய தொடைநயங்களமைந்து விருத்த யாப்பால் நடந்து, தமிழினிமை கனிந்து தமிழ் மக்களின் மனத்தைக் கொள்ளை கொள்வதாயிற்று. இப் புதுப் போக்கிற் கவர்ச்சியுற்ற பல தமிழ்ப் புலவோர் தேவரைத் தாமும் பின்பற்றி வடமொழிப் போக்கை யொட்டிக் கவிதை புனைவாராயினர். இவ்வாறான புதுமைப் போக்கில் கால் வைத்த தமிழ்ப் புலவோரது செய்கையால் புதுமையைப் பின்பற்றிய தமிழ் இலக்கியங்கள் பல தமிழில் இடம்பெறலாயின. புதுமை கண்ட இத் தமிழ்ப்புலவோரெல்லாம் இயற்கை நவிற்சியைப பெரிதாக மதித்தலினும் பல்வகைப் புனைந்துரைகளையே பெரிதும் போற்றலாயினர். வடமொழிப் போக்கை மதித்துப் பின்பற்றி நூலியற்றுவதும், வடமொழி நூல்களைத் தமிழிற் பெயர்த்து யாப்பதும் தமிழர்க்கு வழக்கமாயின. இற்றைநாளில் ஆங்கில மொழிக்கும் ஆங்கில நூல்களுக்கும் தமிழர் காட்டும் மதிப்புப்போன்றே இடைக்காலத் தமிழரும் வடமொழிக்கும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடமொழி நூல்களுக்கும் பெருமதிப்புக் கொடுத்தலைத் தமக்கோர் கௌரவமாகக் கொண்டனர். இம் மதிப்புக் காரணமாக எழுந்த மொழி பெயர்ப்பு நூல்கள் பலவற்றுள் கம்பராமாயணமும் ஒன்று என்பது யாமறிந்ததே.

### காலவெள்ளம்

இடைக்காலத்தே தமிழ்ப் புலவர்கள் சிலர் காலவெள்ளமாகிய யாற்றின் கடுஞ் சுழி வாய்ப்பட்டுத் தமிழ்மொழியும் வடமொழியும் ஒன்றென மயங்கினர். சிலர் தமிழினும் வடமொழியைப் பெரிதாக மதித்தனர். கம்பன் முதலிய புலவர்களோ அக் காலவெள்ளத்தை ஊடறுத்து எதிரேறிச் சென்று தமிழ்ப்பண்பிற் தலை நிற்பாராயினர். வடமொழிப் பண்பாடுகளில் மனங் கலந்த தமிழ்ப்புலவோர் பலர் தமிழர் நாகரிகம், கலைவளம், மனப் பண்பாடு, தமிழ்வழக்கு முதலியவற்றையும் தமது மொழிபெயர்ப்பு நூல்களில இடையிடையே அமைத்துத் தமிழ் நலம் நாட்டற்கு உணர்ச்சி கொண்டனர். வடமொழியின் செல்வாக்குத் தமிழ்நாட்டில் மிகப் பரந்து உச்சநிலையடைந்திருந்த காலத்தே எழுந்த இத் தமிழ் நூல்களிடையே வடமொழி வழக்குகள் மலிந்து காணப்படுதல் பற்றி இத்தமிழ் நூல்களைப் புறக்கணித்தற்கு அறிஞர் ஒருசிலர் துணிதல் அவர் தம் அறிவுடைமைக்கு அழகாகாது. அந் நூல்களையியற்றிய தமிழ்ப்புலவர்களது மன உணர்ச்சியினையும் பண்பாட்டினையும் அறிந்து பாராட்டுதல் வேண்டும். தமிழ் மரபுகளை வடமொழிக் கதைகளுட் புகுத்தி வடநாட்டு வாழ்க்கையிற் தென்னாட்டுப் பண்புகளை மலரச் செய்த அத்தமிழ்ப் புலவர் பெருமக்களின் அருஞ்செயலை அவர்களின் இலக்கியங்களில் இடையிடையே கண்டு இன்புற்று உள்ளமுருகி மெய்மறந்து நிற்றலே அழகாகும். இத்தகைய மனநிலை காரணமாகப் பிறந்து உணர்ச்சிவயப் பட்டே இங்கு யான் பேசுகின்றேன்.

வடமொழிக் காவியமாகிய வான்மீகி இராமாயணத்தைத் தமிழிற் பாடுதற்கு மனங்கொண்ட கம்பன் சமத்துவ புத்தியுடையோன்; பணிவுசால் உள்ளத்தன்! எளிமை மிககமைந்தோன்; உயர்வு தாழ்வு கருதாதவன். இத்தகைய கனிந்த பண்பாடுகள் உள்ள கம்பன் வடமொழியின் செல்வாக்கு தமிழ் நாட்டில் மிக்கோங்கிய காலத்தே வாழ்ந்தோனாயினும் தமிழைப் பற்றிய பெருமிதம் அவனது உள்ளத்தே குடிகொண்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உழக்குமறை நாலினு
முயர்ந்துலக மோதும்
வழக்கினு மதிக்கவியினு
மரபினாடி
நிழற்பொலி கணிச்சிமணி
நெற்றியுமிழ் செங்கட்
தழற்புரை சுடர்க் கடவுள்
தந்த தமிழ் தந்தான்"

என்னுஞ் செய்யுளால் தமிழ் மொழியானது ஒருவகையில் வட மொழி வேதங்களினும் உலக வழக்கினுஞ் செய்யுள் வழக்கினும் மரபு தவறாது பயின்று வருவதென்பதும், பிறவா யாக்கைப் பெரியோனாகிய இறைவனால் அருளப்பட்டதென்பதும் பிறவும் கம்பனது கருத்தாகக் காண்கின்றேமல்லேமோ? இன்னும்,

"தென்றமிழ் நாட்டகன் பொதியிற்
திருமுனிவன் தமிழ்ச்சங்கஞ்
சேர்கிற் பீரேல்
என்றுமவ னுறைவிடமா
மாதலினா லம்மலையை
யிறைஞ்சி யேகிப்
பொன்றிணிந்த புனல்பெருகு
பொருளையெனுந் திருநதிபின்
பொழிய நாகக்
கன்றுவளர் தடஞ்சாரல்
மகேந்திரமா நெடுவரையுங்
கடலுங் காண்டிர்"

என்னுஞ் செய்யுளால் தமிழ் மொழியானது கேட்போரைத் தன்னினிமையில் ஆழ்த்திப் பிற இனிமைகளையுஞ் செயல்களை யும் மறப்பிக்க வல்ல பேரின்பச் சுவையுடையதென்பது விளங்கு கின்றதன்றோ? வானர வீரர்களை நோக்கிச் சுக்கிரீவன் தன் வாயாலேயே தமிழினிமையைப் போற்றியதாகக் கவி செய்த கம்பனது தமிழார்வத்தை எவ்வளவு பாராட்டினும் தகும். அது நமது பாராட்டுதலுக்கு அடங்குவதன்று. "தமிழினுமினிய தீஞ்சொற்றையலார்" "தமிழ் தழீ இய சாயலார்" என்னுந் தொடர்களும் இங்கு நினைந்து நோக்கற்குரியன. அன்றியும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''சிறைவான் புனற்றில்லைச்
சிற்றம் பலத்துமென்
சிந்தை யுள்ளும்
உறைவா னுயர்மதிற்
கூடலி னாய்ந்தவொண்
டீந் தமிழின்
துறைவாய் நுழைந்தனை
யோவன்றி யேழிசைச்
சூழல் புக்கோ
இறைவா தடவரைத்
தோட்கென் கொலாம்புகுந்
தெய்தியதே''

என வரும் மணிவாசகனார் திருவாக்கில் நிகழ்ந்துள்ள தெவிட்டாத இனிமை, தெய்வத்தன்மை முதலிய தமிழியல்புகள் கம்பனது நலன்களோடு ஒப்ப வைத்துப் படித்துத் திளைத்து இன்புறற்பாலன.

தமிழ்க் கடல்

இன்னும் கம்பன் தமிழைக் கடலாக உருவகஞ் செய்கின்றான். வாமனன் தனது அடிகளால் உலகளந்த செய்தியை உவமையாக்கி அகத்தியன் தமிழால் உலகையளந்தான் என்றும் முக்காலத்தும் ஒப்ப வழங்குந் தமிழ்மொழியை இயம்பியமையாலே அகத்தியன் புகழ்கொண்டான் என்றும் கூறுகின்ற கம்பனது தமிழார்வமும், தமிழ்ப் பெரு மதிப்பும், தமிழ் வீறும் முதலிய இயல்புகளை நன்கு விளக்குஞ் செய்யுட் பகுதிகளைப் படிக்கும் தமிழுலகு கம்பனை மறந்து வாழ்தல் முடியுமோ?

''தமிழெனு மளப்பருஞ்
சலதி தந்தவன்''

''நீண்டதமி ழாலுலகை
நேமியி னளந்தான்''

''என்றுமுள தென்றமி
ழியம்பியிசை கொண்டான்''

என்னுந் தொடர்களை நோக்குக.

''வானமளந்த தனைத்துமளந்திடு
வண்மொழி வாழியவே''

என்னும் பாரதி வாக்கும் இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 11

கோசலா தேவிக்குப் பரதன் குகனை அறிமுகஞ் செய்து வைக்கும் சந்தர்ப்பத்தை இனி நோக்குவோம், இவர் எனது அண்ணனுக்குத் தம்பி; இலட்சுமணனுக்கும், சத்துருக்கனுக்கும் எனக்கும் அண்ணல்; இவரது பெயர் குகனாகும் என்று பரதன் காட்டிய உரிமை உணர்ச்சியைக் கோசலாதேவியின் மனப் பான்மை வென்றுவிட்டது. இவ்விடத்திற் கோசலாதேவி பாராட்டிய உரிமையும், தனது அன்பினால் அமைத்துக் காட் டிய பிரிப்பில்லாத ஒரே குடும்பத்தினராந் தன்மைசான்ற ஒரு மைப்பாடும், தேவி நல்கிய நிலவுரிமையும் ஆகிய எல்லாவற் றையும் கம்பனது சொல்லாலேயே சொல்லி மகிழ்வோம்.

''என்றலுமே யடியின்மிசை
நெடிது வீழ்ந் தழுவானை
யிவன்யா ரென்று
கன்றுபிரி காராவின்
துயருடைய கொடிவினவக்
கழற்கால் மைந்தன்
இன்றுணைவ னிராகவனுக்
கிலக்குவற்கு மிளையவற்கு
மெனக்கும் மூத்தான்
குன்றனைய திருநெடுந்தோட்
குகனென்பா னிந்நின்ற
குரிசி லென்றான்.''

''நைவீரல் லீர்மைந்தீ
ரினித்துயரால் நாடிறந்து
காடு நோக்கி
மெய்வீரர் பெயர்ந்ததுவும்
நலமாயிற் றாமென்றே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலங்கற் திண்டோள்
கைவீரக் களிறனைய
காளையிவன் தன்னோடு
கலந்து நீங்கள்
ஐவீரு மொருவீரா
யகலிடத்தை நெடுங்காலம்
அளித்தி ரென்றாள்''

இச் செய்யுள்கள் கம்பராமாயணமாகிய பொன்னுக்கு உரை கல் போன்றன. அரசிளங்குமாரனாகிய இராமனும், தாயாகிய கோசலாதேவியும், பரதனும் ஆகியோர் பிறப்பினால் உயர்வு தாழ்வு கருதாத பேரன்பு கெழுமிய தமிழ்ப் பண்பாடு சான்ற ஒரு தமிழ்க் குடும்பம்போல் கம்பன் அமைத்துக் காட்டியமை பழந் தமிழரின் வாழ்க்கை நிலையின் சித்திரமாகத் தோன்றுகின்றதன்றோ?

''குகனொடும் ஐவரானோம்'' என்று இராமன் வேறோரிடத்திற் கூறும் செய்யுளும் இங்கே நினைவுகூரத்தக்கது.

வீரச்செயல்

கௌசிக முனிவரது வேள்வி காத்தபின்னர் இராமன், முனிவர் முன்செல்லத் தம்பி பின்செல்ல மிதிலை நோக்கிச் செல்கின்றான். அங்கே வில்லேற்றுதலாகிய வீரச்செயலைச் செய்து மகட் கொடை பெற்று மங்கலமெய்திய வடமொழிக் கதை கூறும் செய்தியாகும். இச் செய்தியில் தமிழ்ப் புலவனாகிய கம்பனுக்கு, இராமன் சீதையாகிய இருவர்க்கும் நிகழ்ந்த மண நிகழ்ச்சி ஆசுரமணத்தின் பாற்பட்டதென்றும், பொருந்தாக் காமத்தின் வழி வந்ததென்றும் மனத்திற்பட்டது. தமிழனாகிய அவன் இம்மணத்தைப் பெருந்திணையின் பாற்படுத்தி நூல் செய்தற்கு ஒருப்பட்டிலன். ஒரு காப்பியத்தில் பிரதம பாத்திரங்களாயமைந்துள்ளோர்க்கு இத்தகைய மணச்சார்பு தகாதென்றெண்ணிக் கதைப் போக்கையே மாற்றியமைத்துவிட்டான். ''தாமே யவளே'' என்னும் ஒருமை நிலையமைந்த காதல் மணமே தமிழன் கண்ட உயர் தனித் திருமணம் என நினைக்கின்றான். இந் நினைவு காரணமாகப் புதியதோர் காதற் காட்சியைப் புனைந்து வடமொழிவாணர்தம் வாழ்க்கையிற் புகுத்தி விடுகின்றான். வில்லேற்றுதற்கு முன்னரேயே கன்னிகாமடத்தே இராமனும் சீதையும் ஒருவரையொருவர் கண்டதும், காதல் கொண்டதும் அக் காதலாகிய தொடர்பு பின்னர்க் கரவொடு கூடிவதுவையயர்ந்து கற்புநெறி நிகழ்த்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்குக் காலாயிற்றென்பதும், முழுதும் தமிழ் வழக்குப் பற்றிய செய்தியாகவே அமைந்துள்ளன. இவ்வமைதிபற்றிக் கம்பன் சொல்வனவற்றை யாம் கேட்போம்.

"பொன்னின் சோதி
பூவினில் நாற்றப்
பொலிவே போல்
தென்னுண் தேனித்
தீஞ்சுவை செஞ்சொற்
கவியின் பம்
கன்னிம் மாடத்
தும்பரின் மாடே
களிபே டோடு
அன்னம் மாடும்
முன்துறை கண்டாங்
கயல்நின் றான்"

என்னும் இச்செய்யுளில் கன்னிகாமடத்தில் ஐம்புலக் காட்சிக்கும் நல்விருந்தா யமைந்து நின்ற சீதாபிராட்டியின் வடிவத்தைப் பொது வகையாற் கண்டதாகக் கம்பன் வரைந்து காட்டும் கவியோவியத்தின் அழகு அறிந்து இன்புறற்பாலது. பொன்னின் சோதி என்றமையாற் கண்ணுக்கும், போதினின் நாற்றம் என்றமையால் மூக்கிற்கும், தேனிற் தீஞ்சுவை என்றதனால் நாவிற்கும், செஞ்சொற் கவியின்பம் என்றதனாற் செவிக்கும் இனிமை பயப்பது கூறிய அமைதி நுணுகி நோக்கற்குரியது.

"மாசறு பொன்னே
வலம்புரி முத்தே
காசறு விரையே
கரும்பே தேனே"

என்னும் சிலப்பதிகார அடிகளின் நலனை இச் செய்யுள் நினைவூட்டி நிற்கின்றது.

பிராட்டியின் உருவத்தைப் பொதுவகையாற் கண்ட பற்றுள்ளம் பின்னர்ச் சிறப்பு வகையால் அப் பொருள்மேற் செல்கின்றது. இதன் காரணமாக ஐயமுந் துணிவும் நிகழ்ந்து குறிப்பறிவு கைகூடியமையைக் கம்பர் வருணித்துக் கூறுவது அகக் சுவைச் செய்யுட்களுக்கே ஓர் அணிகலனாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''எண்ணரும் நலத்தினாள்
இளையள் நின்றுழிக்
கண்ணொடு கண்ணிணை
கௌவி யொன்றையொன்று
உண்ணவும் நிலைபெறா
துணர்வு மொன்றிட
அண்ணலும நோக்கினான்
அவளும் நோக்கினாள்''

''பருகிய நோக்கெனும்
பாசத்தாற் பிணிந்து
ஒருவரை யொருவர்தம்
உள்ளம் ஈர்த்தலால்
வரிசிலை யண்ணலும்
வாட்கண் நங்கையும்
இருவருமாறிப்புக்
கிதய மெய்தினார்.''

இச் செய்யுள்களில் உருவுந் திருவும் பருவமும் கல்வியும் முதலியன தம்முள் ஒத்தோர் இருவரும் ஒருதலைக் காமத்தில் நின்றும் நீங்கி அன்புடைக் காமத்தராகின்றனர். ஆண்மகனுக்குரிய அறிவு, பொறை, ஓர்ப்பு, கடைப்பிடி என்னும் நாற்பண்புகளும், பெண்மகளுக்குரிய நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்னும் நாற்குணங்களும் தமது இயல்பாக அமைந்துள்ள தடைகளைக் கடந்து புனலோடு வழிப்புற் சாய்ந்தாற்போலச் சாய்ந்து கிடப்ப ஒருவரையொருவர் கண்ட காட்சி அழகாக வருணிக்கப்பட்டுள்ளது. 'கண்ணொடு கண்ணிணை கௌவி' என்றதனால்,

''கண்ணொடு கண்ணிணை நோக்கு
ஒக்கின் வாய்ச்சொற்கள்
என்ன பயனு மில''

என்னுந் திருக்குறளிற் கண்ட காட்சி நுட்பம் இனிது கூறப்பட்டது. 'உண்ணவும் நிலை பெறாது' என்றதனால்

''நாற்றமுந் தோற்றமு
மொழுக்கமு முண்டியும்
செய்வினை மறைப்பும்
செலவும் பயில்வுமென்
றிவ்வகை யேழினும்
ஐயமுற் றோர்தலும்''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற சூத்திரத்துட் கண்ட 'உணவு வெறுத்தலாகிய நிலை வரைவு நீட்டத்தால் நிகழும் என்பதும், 'உணர்வும் ஒன்றிட' என்றதனால் இருவரும் ஒத்த உணர்ச்சியினர் ஆவார் என்பதும் 'அண்ணலும் நோக்கினான்' ஆண்மகனே முதற் காண்டற்குரிய வலிமையுடையோன் என்பதும், பெண்மகள் நாணங் காரண மாகத் தானே முதல் நோக்குதற்குரிய நிலையினள் ஆகாள் என்பதும், 'இருவரும் மாறிப்புக்கு இதய மெய்தினார்' என்றத னால் தானே அவள்; அவளே தான் என்னும் ஒருமைநிலை யெய்தினார் என்பதும் இனிதாகச் சுருக்கிக் கூறப்பட்டுள்ளன. இக் காதற் காட்சியைக் குறித்து வேறொரு புலவர் பாடிய தாக வழங்கும்

"அறிவுபொறை ஓர்ப்புக்கடைப்
பிடியென் றான்றோர்
அறைந்திடுநாற் குணமூநெறி
சிறிது நீங்க
நிறைநாண மடமச்சம்
பயிர்ப்பென் றோதும்
நீர்மைகளும் நிலைநடக்கச்
சிறிதே தம்முள்
உறுமாசி லாதஅன்பி
வீடு பட்டே
ஒருவர்மன மொருவர்வச
மாகி நிற்பப்
பெறுமாசி லாசமணப்
பேறு கண்டோர்
பெருமகிழ்ச்சி பொலிந்திடவே
யாடூ ரூஞ்சல்"

என்னும் செய்யுளும் இங்கு நோக்கத்தக்கது.

ஆரியர் நிகழ்த்திய ஆசுர மணத்தைத் தமிழன் கண்ட காதல் மணமாக்கி ஆர்ய வாழ்க்கையிற் களவின் வழிவந்த கற்புநெறியை நிலைநாட்டி வடவாரிய மணப்போக்கைச் சீரிய தமிழ் மயமாக்கித் திருத்தியமைத்த கம்பனது தமிழுணர்ச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும், கற்பனாசக்தியும் சிறந்து விளங்கும் காவியமானது இறவாது புகழ்படைத்து முக்காலத்திலும் ஒப்ப வழங்கும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

## தவச் செல்வன்

இனி, இராவணன் சீதா பிராட்டியைக் கவர்ந்து சென்ற செய்தியை நோக்குவோம். இராவணன் சிவ வழிபாட்டிற் சிறந்தவன்; இசைக் கலையில் வல்லவன்; வீணைக் கொடியினன்; வீரமும் வேகமும் உடையவன். பெருந் தவச் செல்வன்! தன் குடி விளக்கிய தகைசால் இயல்பினான்; பல்வகை வரிசைகளோடும் இலங்கையை அரசாண்டவன்; தேவாரத் திருப்பதிகத்திற் பாராட்டப் பெற்றவன்; தென்னவன் எனவும் பெயர் கொண்டவன். இவ்வியல்புகள் அமைந்த இராவணன் சீதா பிராட்டியைக் கவர்ந்து கொண்டு இலங்கைக்குச் செல்கையில் அச் செல்வியைக் கையால் தீண்டித் தூக்கிச் சென்றான் என வால்மீகி ராமாயணம் கூறுகின்றதென்பர். எனினும் கம்பனுடைய கதைப் போக்கு இதனிலும் மாறுபட்டதாகவுள்ளது. கம்பன் தமிழன். இராவணனும் தென்னவன். ஆதலின் இவ்விருவரும் பெண்களுக்குரிய பயிர்ப்பு என்னும் குணத்தைப் பாதுகாத்தலிற் கருத்துடையோராகின்றனர். பயிர்ப்பென்பது தமிழ் மகளிர் தமது நாயகரல்லாத பிறருடைய மேனி, ஆடை முதலியன தம்மீது படுவதை அருவருத்தலாகிய குணமாகும். கம்பன் இந்தக் காட்சியில் தமிழ் மகளிர்க்குரிய பண்பாட்டை நிலைபெறுத்திக் கூறுவது ஒரு தனிச் சிறப்பாகும். பிராட்டியின் திருமேனியை இராவணன் தீண்டாமல் அவள் இருந்த தழைக் குடிசையை மண்ணோடும் அகழ்ந்து தேரில் வைத்துச் சென்றான் என்கின்றான் கம்பன். இந் நிலைமையினைச் சூடாமணிப் படலத்திற் சீதை கூறுவதாக வருஞ் செய்யுளால் அறிதல் கூடும்.

''தீண்டு வானெனின்
இத்தனை நீண்பகல்
ஈண்டு மோவுயிர்
மெய்யி னிமைப்பினின்
மாண்டு தீர்வனென்
றேநிலம் வன்மையாற்
தீண்டு கொண்டெழுந்
தேகினன் கீழ்மையான்.''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுவன்றியும் சீதாபிராட்டியார் தம்மைச் சுமந்துகொண்டு சென்று இராமனிடத்து விடுவதற்கு மனமியையும்படி வேண்டிக் கொண்ட அனுமனைப் பார்த்து,

"வேறு முண்டுரை
கேளது மெய்ம்மையோய்
ஏறு சேவகன்
மேனியல் லாயிடை
ஆறு மைம்பொறி
நின்னையு மாவெனக்
கூறு மிவ்வுருத்
தீண்டுதல் கூடுமோ"

என்று அவனுக்கு விடை கூறுகின்ற செய்யுளில் இராமபிரானுடைய மேனியையன்றிப் பிறமேனியைத் தீண்டுதல் பயிர்ப்புக் குணத்திற்குக் குற்றமாமென்னும் கொள்கை அமைந்திருத்தலையும் நோக்குக. இப் பயிர்ப்புக் குணம் தமிழ்ப் பெண்களுக்கு உயிர் போன்றமைந்திருந்தது. பழங்காலத்துச் செய்தியாக இதனை மதியாமல் இன்றும் இனியும் இதைப் போற்றுதல் இருபாலார்க்கும் அவசியம் வேண்டியதோர் கடமையாகும்.

தமிழர் போர்முறை

இனி, தமிழரின் போர் முறையோடு இராம இராவண யுத்தத்தை ஒரு சிறிது ஒப்ப நோக்குவோம். போர்முனையில் இராவணன் தனது படை முதலிய எல்லாவற்றையும் இழந்து தன்னந் தனியனாய் இராமன் முன்னர் எதிர்ப்படுகின்றான். இஃது ஓர் உருக்கமும் உணர்ச்சியுமுள்ள காட்சி. இந்நிலைமையில் இராமனோ தனது எதிரியை இழிவாக நினைத்தானுமல்லன்; கொல்லற்கு மனங்கொண்டானுமல்லன்! நிபந்தனையற்ற சரணாகதியடையுமாறு கட்டளை இட்டானுமல்லன்.

"பேராண்மை என்ப
தறுகண்ஒன் றுற்றக்கால்
ஊராண்மை மற்றதன் எஃகு"

என்ற பழந்தமிழ் முறையிற் கண்ட ஊராண்மை என்னும் பகைவனுக் கருளலாகிய உபகாரியாந் தன்மை உடையனாகி இராவணனைப் பார்த்து,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆளையாவுனக் கமைந்தன
மாருத மறைந்த
பூளையாயின கண்டனை
யின்றுபோய்ப் போர்க்கு
நாளைவாவென நல்கினன்
நாகிளங் கமுகின்
வாளைதாவுறு கோசல
நாடுடை வள்ளல்"

என்று கூறி அவனைப் போக விடுத்துத் தனது வீரத்தைக் கூர்மை செய்து கொண்டான். இதனாற் கம்பர் இராமனை உயிர்ப் பரிசளித்த வள்ளல் என்று பாராட்டுகின்றார். இவ் வூராண்மை என்பது தமிழ் வீரனுக்குப் புதுவதன்று. வழி வழி வந்தமையால் அவனது வீரத்தில் இயல்பாகவமைந்துள்ளதோர் குணமாம். புறங் கொடுத் தோடுவோர் மீதும், கைப்படையிழந் தோர் மீதும், அம்பு தொடுத்தலை அவன் தன் வீரத்திற்கு ஒரு மாசாகக் கருதினான்.

"கைப்படை யொன்றுமின்றிக்
கைகொட்டிக் குமரனார்ப்ப
மெய்ப்படை வீழ்த்தல்காணி
வேழமு மெறிதல்செல் லான்
மைப்படை நெடுந்தண்மாலை
மகளிர்தம் வரையிற்சூழ்ந்து
கைப்படு பொருளிலாதான்
காமம்போற் காளை மீண்டான்"

என்னுஞ் சீவகசிந்தாமணிச் செய்யுள்களால் தமிழனது இம் மறப்பண்பு இனிது புலனாகின்றது. ஆரிய மன்னனாகிய இராமன் மீது தமிழ் வீரனது பண்பாடுகளை நன்கு கற்பித்து அவனைத் தமிழ் வீரனாக மாற்றிய கம்பனது அற்புதச்செயல் தமிழ் மக்களுக்கு ஓர் எழுச்சியும் புகழ்ச்சியுமான நிகழ்ச்சியாகும்.

## நாட்டு வருணனை

இனி நாட்டு வருணனையை நோக்குவோம். இராமன் வாழ்ந்த வடநாட்டைச் செந்தமிழ் நாடாகச் சித்திரித்துக் காட்டுகின்றான் கம்பன்.

கோசலநாடு கம்பராமாயணத்தில் "காவிரி நாடன்ன கழனிநாடு" என்று கூறப்படுகிறது. வடநாட்டுப் பெண்கள் எல் லாம் தமிழ் பெண்கள்போற் காட்சியளிக்கின்றார்கள். பாலுந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேனும் செந்நெலும் முதலிய தமிழ்நாட்டு விளைபொருள்களே அங்கு விளைகின்றன. சோழநாட்டார்க்கு இயற்கையான கல்வியல்பால் அமைந்துள்ள விருந்துபசாரம் கோசலநாட்டுப் பெண்களுக்கு உரிமை செய்யப்பட்டுள்ளது. உண்மையிலே வடக்கின் கண்ணுள்ள கோசல நாட்டைத் தென் தமிழ்நாடாக மாற்றியமைத்து மக்கட் கூட்டத்தினரையும் தமிழர் வடிவத்திற் காட்டி ஆரிய மன்னனாகிய இராமன்மீது தமிழ்ப் பண்புகளை ஏற்றி இராமாயணம் முழுவதையும் பெயரளவில் வடவாரிய நிகழ்ச்சியாகக் கொண்டு செயலளவில் செந்தமிழ் நாட்டு நிகழ்ச்சிபோற் சிருட்டித்துக் காட்டிய கம்பனது கவிதா சக்தியும் கனிந்த தமிழ்ப் பண்பும் எல்லாராலும் போற்றற்பாலன.

இவையெல்லாம் இங்ஙனமிருப்பவும் அதிகார வெறிபிடித்த ஆரியர் சிலரின் தீய மனப்பான்மை காரணமாக அமைதியிழந்த தமிழறிஞர் சிலர் அவ்வாரியர்மீது கொண்டுள்ள சீற்றத்திற்கு நமது தமிழ் இலக்கியங்களை இலக்காக்குவதா? ஒரு சிலர் செய்த குற்றத்திற்காக அவர்களைப் பழி வாங்கும் எதிர் மனப் பான்மைக்கு நமது இலக்கியங்களைப் பலியிடலாமா? வட புலவர் சரிதையில் தென்தமிழ்வாணரது இயல்புகளைப் புகுத்திய கம்பனது இராமாயணத்தைக் கொளுத்துவதற்கு அவ்வடவாரியரே வீறுகொண்டு எழுந்திருத்தல் வேண்டும். ஆயினும் சமஸ்கிருதம் பேசும் ஆரியர் அவ்வாறு செய்தற்கு மனங்கொள்ளார். புனிதமான மகா ரிஷிகளின் வழித்தோன்றல்கள் அவர்கள். உலகுக்கு அறிவொளி பரப்பியோர் தனிப்பட்ட குற்றத்திற்காகக் கலாசாரத்தை அழித்தற்கு அவர்கள் ஒருபோதும் மனம் சம்மதியார். உண்மைத் தமிழ் மகனும் அவ்வாறு செய்தலை மனத்தாலும் நினையான் சுத்த வீரன் ''தாம் வளர்த்ததோர் நச்சுமாமரமாயினுங் கொல்லார்'' என்பதற்கேற்ப வாழ்பவன் பழகிய அருமை பெருமைபற்றியே பொருள்களைப் பாதுகாப்பவன், குற்றத்திலும் குணம் பாராட்டுதலை மேலாகக் கொண்டவன். ஆதலின் பாலொடு தேன் கலந்தாற்போன்று ஒன்றாகக் கலந்து வழங்கும் ஆரிய நாகரிகத்தையும் தமிழ்ப் பண்பாட்டையும் வேறு பிரித்தல் அமையாது. இவ்விரு பண்பாடுகளும் ஒருங்கே அமைந்து விளங்கும் கம்பராமாயண காவியத்தில் வேற்றுமை காண்பதிலும் பார்க்க ஒற்றுமை நயங்கண்டு ஐக்கியம் பெற்று இன்புற்று வாழ்தலேநலமாம். இத்தமிழ்த் திருவிழா நாளில் கம்ப இராமாயண காவியம்பற்றி விரிவுரை நிகழ்த்தும் பேறு பெற்றமைக்கு மகிழ்கின்றேன். கம்ப ராமாயணம் என்றும் நின்று நிலவும், தமிழ் வாழ்க! தமிழ் மக்கள் வாழ்க!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகவாழ்வும் புறவாழ்வும்

பழந்தமிழ் இலக்கியங்கள் சமூகத்திலிருந்து பிறந்தவை; அவை சமூக வாழ்வைப் படியெடுத்துக் காட்டும் படைப்புகள். நமது இலக்கியங்களை நாம் படிக்கும்போது நமது முன்னோர் தம் கண்போன்று காத்துவந்த இரண்டு வாழ்க்கை முறைகளை அவற்றிலே காண்கின்றோம். ஒன்று அகவாழ்வு, மற்றது புற வாழ்வு அகவாழ்வும் புறவாழ்வும் இணைந்ததே மனித வாழ்க்கை.

அகவாழ்வென்பது ஒருவன் இல்லின்கண்ணே மனைவி மக்களும், சுற்றமும், துணையும் சார்பாக வாழும் வாழ்க்கை. புறவாழ்வென்பது, தன்னாட்டுத் தலைவரும் குடிகளும்; பிறநாட்டுத் தலைவரும் குடிகளும் சார்பாக ஒருவன் வாழும் வாழ்க்கை அகவாழ்வின் மூலமாக ஒருவன் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு பயனையும் பெறுகின்றான். புறவாழ்வும், இந் நான்கு பயனையும் ஒருவன் பெறுதற்குரிய ஒழுக்கமே.

இந்த ஒழுக்க நெறிகள் இரண்டும், ஒருவனது இல் வாழ்வில் அரும்பி சமூக வாழ்வில் மலர்ந்து; தேசிய வாழ்விற் காய்த்து; சர்வ தேசிய வாழ்விலே கனிந்து பயன் தருவதையே இலக்கியங்கள் பலபடப் புனைந்து பாங்காகப் பகிர்கின்றன.

## இரண்டு ஆதாரங்கள்

அகவாழ்வுக்கும், புறவாழ்வுக்கும் இரண்டு ஆதாரங்கள் உள்ளன. ஒன்று அன்பு; மற்றது. அறம் "அன்பில் நின்றன அறங்கள்" என்கின்றார் அழகு தமிழ்க் கம்பர். மனமாசற்ற ஒழுக்கமே எல்லா அறங்களுக்கும் தாயறம் என்கின்றார் வள்ளுவப் பெருந்தகையார்.

"மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்திறன்"
"மனத்தூய்மை செய்வினை தூய்மை"
என்பன திருக்குறள் கூறும் நிறைமொழிகள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது அகவாழ்விலும் புறவாழ்விலும் நாம் செய்கின்ற அறமும், தேடுகின்ற பொருளும் அனுபவிக்கின்ற இன்பமும் மூன்றும் அறத்தோடு இயைந்தனவாகவே நிகழ்தல் வேண்டும் எனவே அறத்தின்கண் அறம், பொருளின்கண் அறம் இன்பத்தின் கண் அறம் என்னும் நியமம் தவறாமல் நடந்தால், நாம் உலகில் நல்லவண்ணம் வாழலாம்.

அன்றியும் அறத்தின்கண் இன்பமும் பொருளின் கண் இன் பமும் இன்பத்தின் கண் இன்பமும் இணைபிரியாது நிகழ்வதையும் நாம் உணர்தல் வேண்டும் உலகிலே ஒரு காதலனும், காதலியும் கருத்தொருமித்துக் கலந்து அனுபவிக்கும் இன்பம் மாத்திரமே இன்ப மன்று. ஒவிலாது யான் செய் புண்ணியம் அனைத்தும் உதவினேன் கொள்கநீ'' எனக் கூறிக்கொண்டே மாண்ட கன் னன் அறத்திலே கொண்ட காதலும்; ''எம்பியை இங்குப் பெற்றேன் என்னெனக் கரியதென்றான்'' எனச் சூரபன்மன் தன் தம்பிமீது கொண்ட சகோதர பாசமும் ''இன்று போய்ப் போர்க்கு நாளைவா'' எனக் கூறிய இராமனது வீரக் காதலும்; தனக்கு ஒரு மகனல்லது பிறமகன் இல்லாத வீரத்தாய் தன் புதல்வனைச் செருமுனைக்கு அனுப்பிய தேசப்பற்றும் ''கண்டு கேட்டு, உண்டு உயிர்த்து, உற்று அறியும் ஐம்புலனும் ஒண்கவி கண்ணே உள'' என்று உணர்ச்சி ததும்பப் பாடுகின்ற கவிஞன் கண்ட கவிதைக் காதலும் எல்லாம் இன்பங் கலந்த அனுபவமே யாம்.

## இறுதி எல்லை இன்பமே

அகவாழ்விலும் புறவாழ்விலும் மக்கள் அடையும் அனுப வத்தின் இறுதி எல்லை இன்பமே என்னும் நுட்பத்தினைத் தமிழ் இலக்கியங்கள் இனிதாக வருணித்துக் கூறுவதை நாம் மறக்கவொண்ணாது. இது மாத்திரமா? துன்பத்தின் மத்தியி லும் இன்பங் காண்போர்; நரகத் துன்பத்தையும் மோட்ச இன்பமாக மாற்றியமைப்போர் பெறுகின்ற அனுபவத்துக்கு நிக ரான இன்பம் எங்கேனும் உண்டோ? ''யாதும் ஊரே; யாவ ரும் கேளிர்'' எனத் தமிழன் கண்ட சர்வதேசிய இனபத்திலும் சிறந்தவின்பம் இவ்வுலகில் வேறொன்று எங்கேனும் உளதோ? பார்க்கும் போது நல்லனவெல்லாம் இன்பமயமே அகவாழ்வி லும் நல்லனசெய்வோம்; புறவாழ்விலும் நல்லன செய்வோம்; இன்பம் காண்போம்.

இன்பம் அழகிலுள்ளது. அழகு அகத்திலுள்ளது அகத் தின் அழகு முகத்திற் பொலியும் மனமாசின்மையே அழகு. புனிதமான மனத்திலிருந்துதான் எல்லா இன்பங்களும் பிறக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றன. அகவாழ்வே புறவாழ்வு. அன்பு வடிவானது அழகு! இன்பம் அழகு வடிவானது. அகவாழ்வும் அழகுபெற்றால் புறவாழ்வும் அழகு பெறும். இருவாழ்வும் இன்பம் தரும்.

## பழந் தமிழகப் புலவர்

அகவாழ்வும் புறவாழ்வும் அழகாக இணைந்துள்ள ஒரு காட்சியை இங்கே நோக்குவோம். பழந்தமிழ் நாட்டிலே பழுத்த தமிழ்ப் புலவர் ஒருவர்; ஆயிரம் பிறை கண்டவர் அவர். அவர் தம் நண்பர் ஒருவர் நெடுநாளின்பின் அவரைச் சந்திக்கும் ஒரு சந்தர்ப்பம். நண்பர் வினாவுகின்றார்; நண்பரே இவ்வளவு வயது சென்றும் உங்களுக்கு நரையுமில்லை திரையுமில்லை பல் கழர(ல)வுமில்லை; சொல் தளரவுமில்லை; வச்சிரகாயமாயிருக்கின்றீர்கள் இதன் இரகசிய மென்ன?

புலவர் சொல்கின்றார் ஓர் இரகசியமுமில்லை. மனைவி என் இல்வாழ்க்கைக்கு உகந்த மாண்புமிக்கவள்; நிரம்பிய அறிவுள்ளவள் மக்களும் அறிவு நிறைந்தவர்கள். தொழில் செய்வோரும் குறிப்பறிந்து செய்கின்றார்கள். அரசாங்கத் தலைவரும் நல்லன புரிந்துநாட்டைக் காக்கின்றார்! எல்லாவற்றிலும் மேலாக, நான் வாழ்கின்ற ஊரிலே அறிவும், அமைதியும், அடக்கமும் உடைய நல்லோர் பலர் இருக்கின்றார்கள்; இதுதான் காரணம் என்று அப்புலவர் கூறிய செய்தி; உயிருள்ள செய்தி இச் செய்தியால் அவர் பாட்டும்உயிர் வாழுகின்றது. புறநானூற்றில் வருகின்ற அந்தப் பாட்டினைப் படித்துப் பார்ப்போம.

"யாண்டு பலவாக
  நரையில வாகுதல்
யாங்கா கியரென
  வினவுதி ராயின்
மாண்டவென் மனைவியொடு
  மக்களும் நிரம்பியர்
யான்கண் டனையரென்
  இளைஞரும் வேந்தனும்
அல்லவை செய்யான்
  காக்கும் அதன்மேல்
ஆன்றவிந் தடங்கிய
  கொள்கைச்
சான்றோர் பலர்யான்
  வாழு மூரே"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒருவருக்கொருவர்
# உதவி வாழுதல்

அகவாழ்வும் புறவாழ்வும் சார்பாக மக்கள் வாழும் உலக வாழ்க்கையே உண்மை வாழ்க்கை மக்கள் சமூகமாக வாழ்வதனால் ஒருவரோடொருவர் இயல்பாகவே இணைக்கப்பட்டுள்ளனர். இதனால் ஒருவொர்க்கொருவர் தருணமறிந்து கைம்மாறு கருதாது உதவி வாழ்கின்ற ஒழுக்கநெறியினை நாம் கைக்கொண்டு வருகின்றோம். இந்த ஒழுக்க நெறி சந்ததி சந்ததியாக வாழ்க்கையிலே ஊறித்திளைத்து விட்டது. இந்த நெறியின் மீதுதான் நமது கிராமங்கள் நன்றாக நிறுவப்பட்டுள்ளன.

## ஒப்புரவு எனும் நல்லறம்

'ஒப்புரவொழுகு' என ஔவையார் இதனைச் செவ்வையாக கூறியிருக்கின்றார். தெய்வலோகத்திலே ஒப்புரவு என்னும் அறத்தைக் காணமுடியாது; அங்கே கொள்வனவுமில்லை; கொடுப்பனவுமில்லை. மனித லோகத்திலேதான் ஒப்புரவு என்கின்ற நல்லறம் மக்களோடு உடன்பிறந்து வளர்ந்து வருகின்றது. ஒப்புரவும் மனிதனுக்கு ஓர் உடன்பிறப்புத்தான். 'புத்தேழ் உலகத்தும், ஈண்டும் பெறலரிதே ஒப்புரவின் நல்ல பிற'' என இதன் அருமையைத் திருக்குறள் தெளிவாகச் செப்புகின்றது.

ஒப்புரவு என்பது ஒரு சட்டமன்று; அது ஓர் ஒழுக்க நெறி; வாழ்க்கையில் இயல்பாகவே புரிந்து கொண்ட ஒரு நடைமுறை இதனை உலகநடை என்பர் அறிஞர். ஒருவர்க்கு ஒருவர் உதவி வாழ்வதே உலகம். உதவாத சீவகம் உண்மை உலகமன்று.

''ஒத்தது அறிவான் உயிர் வாழ்வான்; மற்றையான் செத்தாருள் வைக்கப்படும்'' என்று திருக்குறள் கூறுகின்றது ஒத்தது அறிந்து ஒருவர்க்கு ஒருவர் தருணமறிந்து உதவுதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உனக்கு வந்தது எனக்கு, எனக்கு வந்தது உனக்கு. இதுதான் உலக நடை. இது தெரியாதவன் செத்தவன் என்கின்ற திருவள்ளுவர் வாக்கு நமது சமுதாய சகவாழ்வுக்கு ஓர் அத்திவாரமாகின்றது. இந்த அத்திவாரத்தின்மீது நமது சமுதாயமாகிய மாளிகையைக் கட்டியெழுப்புவோம். நமது அரசாங்கக் கொள்கையும் இதுதான்.

## உடனிருந்து வாழும் நெறி

நமது சமுதாயம் என்னும் மாளிகைக்கு வானமே முகடு; மண்ணுலகமே அடித்தளம்; சாதி சமயங்களே தூண்கள்; திடபுத்தியே சுவர்; மனத்தூய்மையே வெண்சாந்து இவற்றால் சமைத்து சமுதாயம் என்னும் மாளிகையின் கண்ணே சமத்துவம் என்கின்ற பணிமேடை அமைப்போம்; அதன்மீது நிறுவும் சமசரமென்கின்ற தனிமயப் பொற்பீடத்தில் நமது இலங்கை அன்னையைக் கொலுவிருத்தி உலகமெலாம் விளங்கச் செய்வோம்: சகவாழ்வு வாழ்ந்து சமாதானம் அடைவோம். உடனிருந்து வாழும் கொள்கை நமது பிரதமருக்கு உயிர் போன்றது.

ஒருவர்க்கொருவர் தருணமறிந்து உதவி வாழ்கின்ற இந்த உலகநடை தனிமனித வாழ்வுக்கும், சமூக சகவாழ்வுக்கும் உயிர் போன்றது இதிலிருந்து தேசிய வாழ்வும் சர்வதேசிய வாழ்வும் படிப் படியாக உண்டாகி ஓர் இணைப்பு முறை ஏற்படுகின்றது. மனிதன் மனிதனுக்குத் தருணமறிந்து உதவுதல்; சமூகங்கள் சமூகங்களுக்கு உதவுதல்; சாதிகள் சாதிகளுக்கு உதவுதல்; நாடுகள் நாடுகளுக்கு உதவுதல்; இந்தப் பரஸ்பர உதவி மனப்பான்மையினால் சமுதாய அமைப்பு, உறுதி பெறுகின்றது.

சமயங்கள் சமயங்களுக்கு உதவுதல்; மொழிகள் மொழிகளுக்கு உதவுதல்; கலாசாரங்கள் கலாசாரங்களுக்கு உதவுதல்; இந்த உதவியினால் எல்லாச் சமயங்களும் எல்லா மொழிகளும், எல்லாக் கலாசாரங்களும் வளம்பெறும் அகவாழ்விலும் புறவாழ்விலும் அமைதியும், இன்பமும் பெற்று அகிலமெல்லாம் அமைதி பெறும்.

## பரஸ்பர உதவி முறை

இந்தப் பரஸ்பர உதவிமுறை அல்லது உலகநடை அல்லது ஒப்புரவொழுகுதல் என்கின்ற ஒழுக்கத்தினால் ஒருவர் பற்றிய நல்லெண்ணம் மற்றவர் மனத்திற் பதிகிறது. இனங்கள் மத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யில் நல்லெண்ணம் உண்டாகிறது? அரசியல் பொருளாதாரத் தொடர்புகளால் வரும் நன்மையிலும் பார்க்க இந்த மனத் தொடர்பால் வருகின்ற நன்மை மிகப் பெரிதாகும்.

''நிலத்தினும் பெரிதே;
வானினும் உயர்ந்தன்று;
நீரினும் ஆரள வின்றே;
சாரல்

கருங்கோற் குறிஞ்சிப்
பூக்கொண்டு
பெருந்தேன் இழைக்கும்
நாடனொடு நட்பே''

— சங்கச் செய்யுள்

இரத்தினச் சுருக்கமாக அமைந்துள்ள இப்பாடல் படிப் படியாக வளர்ந்து நிறைவுறுகின்ற மனத்தொடர்பின் பெருமையினை நம் மனத்திலே பதித்து நிற்கின்றது.

''இருவரும் மாறிப்புக்கு இதயமெய்தினார்'' எனக் கம்பர் கூறிய இம்மனத் தொடர்பின் இன்பத்தினைப் பகவத்கீதை சமய வாழ்வுடன் சார்த்திப் பாங்காகப் பகர்கின்றது.

''செய்வேள்வி யால்நீவிர்
தேவர்களைச் சிந்திப்பின்
செவ்வேயத் தேவர்களும்
சிந்திப்பார் - இவ்வாறு
ஒருவர் ஒருவர் மனத்
துள்ளமர்ந்தாற் பின்னர்
வருவபெரு நன்மை சுகவாழ்வு''

பொருட் பரிவர்த்தனை, பணப்பரிவர்த்தனை, ஆட்பரி வர்த்தனை வாயிலாக வரும் தொடர்புகளுடன் மனப் பரி வர்த்தனையால் வருகின்ற அசையாத தொடர்பினை இனங் களுக்கிடையிலும், சனங்களுக்கிடையிலும் நாடுகளுக்கிடையிலும் நிலைபெறச் செய்து எல்லோரும் இன்புற்று வாழ்வோமாக பரிவர்த்தனை கொண்டு கொடுத்தல். நாடெங்கும் வாழக் கேடொன்றுமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பில்
# சிதைந்து வழங்கும் தமிழ்ச்சொற்கள்

சிதைந்து வழங்கும் சொற்கள் எல்லா மொழிகளிலும் உண்டு. முழுவதும் சிதைந்த சொற்களாலாகிய மொழிகளும் உள்ளன. இவ்வாறு சிதைந்த சொற்களால் நடக்கும் மொழி வடமொழியிலே பாகத பாஷை என வழங்கப்படும். தமிழ் மொழியிலும் சிதைந்த சொற்கள் பல வழக்கில் உள்ளனவே னும் சிதைந்த சொற்களாலாகிய தமிழ் நடையொன்றில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமக்கென்ற தனிச்சொற்களில்லாமல் பிறமொழிகளில் சிதைந்த சொற்கள் கொண்டு நடக்கும் மொழிகளும் உள்ளன. இவைகளை மிசிர பாஷை என்பர் வடநூலார். கலப்பு மொழிகள் என்றும் இவற்றை வழங்குவர். இத்தகைய மிசிர பாஷை இலங்கையிலும் உண்டு.

உலக வழக்கில் உள்ள மொழிகளுள் சிதைந்த சொற்கள் பல புகுவது இயல்பேயாகும். ஆயினும் அச் சொற்கள் வரம்பு கடந்து ஒரு மொழியிற் புகுதல் அம்மொழியின் இயல்பான அழகைக் கெடுத்து விடுவதற்குக் காரணமாகும். இதனாற் காலந்தோறும் அறிஞர்கள் இச் சொற்களைக் கட்டுப்படுத்தி இருக்கிறார்கள். தொல்காப்பியர் காலந் தொடக்கம் சிதைந்த சொற்களைக் கட்டுப்படுத்தும் விதிகள் இயற்றப்பட்டுள்ளன. இனிமேலும் கட்டுப்பாடு அவசியமாகும். குடும்பக் கட்டுப்பாடு போல இந்தச் சிதைந்த சொற்களின் கட்டுப்பாடும் இக்காலத்துக்கு மிக மிக அவசியமாகின்றது.

சிதைந்த சொற்கள் மொழியில் இடம் பெறுவதற்குப் பல காரணங்கள் உள்ளன. நேரச் சுருக்கம், விரைவு, அச்சம், அவலம், மகிழ்ச்சி, சோம்பல், அறியாமை முதலிய் காரணங்களால் சொற்கள் சிதைவு படுகின்றன. சொற் சிதைவுகள் இடவேறுபாட்டால் மொழிகள் தோறும் வெவ்வேறு வகையாக வழங்கப்படுவதை நாம் காணலாம். தமிழ் வழங்கும் நாடுகளிலே தென்னாட்டில் ஒருவகைச் சிதைவும், யாழ்ப்பாணத்தில் பிறிதொருவகைச் சிதைவும், மட்டக்களப்பில் மற்றொருவகைச் சிதைவும் காணப்படுகின்றன. இச்சிதைவுகளுட் பல பழமையினை நினைவூட்டி நகைச்சுவையினையும் விளைவித்து நிற்கின்றன. இந்த நேரத்தில் மட்டக்களப்பில் சிதைந்து வழங்கும் தமிழ் வழக்குச் சொற்கள் சிலவற்றை அறிந்து பொழுது போக்கி இன்புறுவோமாக.

இங்கே பழைய சம்பவம் ஒன்று எனது நினைவுக்கு வருகின்றது. 1914ம் ஆண்டு நான் கல்முனையில் ஆங்கிலக் கலாசாலையிற் படித்துக்கொண்டிருக்கும் போது வாரத்துக்கு இருமுறை மட்டக்களப்பு வாவியைக் கடக்கும் வழக்கம் ஏற்பட்டது. ஒருநாள் மண்டூரில் இருந்து துறையைக் கடக்கும் பொழுது வலப்பக்கமாகத் திருப்பிப் பார்க்கையில் இதன் பக்கத்தே கிடக்கும் வாவியின் நீர்ப்பரப்பு எனது கண்ணுக்குப் புலப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படாமல் மறைந்து கிடப்பதை அவதானித்தேன் தென் பக்கத்தே கிடக்கும் மட்டக்களப்பு வாவியின் பகுதி அவ்வாறு மறைந்து கிடக்கும் நிலப்பரப்புக்குச் சுவடாதீவு என்னும் பெயர் வந்த காரணத்தை நான் அறிந்து கொள்ளவில்லை. நான் வளர்ந்த பின்பு ஊர்ப் பெயர்களின் காரணங்களை ஆராயும் முயற்சியில் ஈடுபட்ட பொழுது சுவடாதீவு என்னும் பெயர்க் காரணத்தை அறிந்ததில் எனக்கு மகிழ்ச்சி தரலாயிற்று. வாவியின் தென்பாகத்தை அதன் வடக்கே இருப்போர்க்குக் காணாது மறைத்தும் வடபாகத்தைத் தென் பாகத்தில் இருப்போர்க்குக் காணமல் மறைத்து வைத்தும் இடையே ஓர் கபாடம் இட்டது போல் கிடக்கின்ற விசாலமான நிலப்பரப்பு கபாடதீவு என்பதன் சிதைவு என உணர்ந்த போது தமிழ் வளர்த்த கபாடபுரம் இந்த இடத்தில் தான் அமைந்துள்ளதோ என கற்பனை செய்து பார்க்கும் நிலையும் எனக்கு உண்டாயிற்று. நான் ஆங்கிலக் கலாசாலையில் பயின்ற காலத்தில் இன்னுமோர் அனுபவம் உண்டாயிற்று ஒருநாள் சாயங்காலம் ஒரு நரை மூதாட்டி அங்கு வந்தார். வந்தவர் என்னை நோக்கி "மனே, எருமயனைப் பார்க்க வந்தனான் அவன் எங்க' என்று என்னைக் கேட்டார். நான் உடனே விளங்கிக் கொண்டேன். அங்கே படித்துக் கொண்டிருந்த அருமையன் என்ற மாணாக்கனைக் கூட்டிக்கொண்டு வந்த அந்த அம்மையாருக்குக் காட்டினேன். மகன் என்னும் சொல் எட்டாம் வேற்றுமையில் மனே என்று நின்றது. அருமையன் எருவையன் ஆகியதுபோல் அரிசி எரிசி எனவும் நல்லரிசி நெல்லரிசி எனவும் திரிந்து வழங்கும் சில வழக்குகள் கல்லாத மக்களிடையே வழங்கி இன்று பெரும்பாலும் வழக்கு வீழ்ந்துள்ளன. எனினும் இவ்வழக்குச் சொற்கள் இவ்வாறு திரிந்து வழங்குவதை வடமொழி முடிவோடு பொருத்திக் காட்டி இலக்கண அமைதி கூறுவர் இந்நாட்டின் நல்லறிஞர். ஜயம் ஜெயம் ஜன்மம், ஜென்மம், ஜகம், ஜெகம் என்னும் வடமொழி மரபும் அரிசி, எரிசி என்பன போன்ற தமிழ் மரபும் தம்முள் ஒற்றுமை உடையனவாகக் காணப்படினும் வடமொழி வழக்குப்போல இவ்வழக்குகள் நன்மக்களால் வழங்கப்படுவனவல்ல.

இன்னும் தம்பியை அம்பி என்னும் வழக்கமும் காணப்படுகின்றது. ஆண்டில் இளையான் ஒருவனை ஒருவர் காணும் போது என்னம்பி எப்படிச் சுகம் என்று வினவும் வழக்கம் இன்னாட்டிலே கற்றோர் இடத்திலும் உண்டு அன்றியும் முறைப் பெயர்களுள்ளே பாட்டன், பேரன் என்னும் சொல் பெத்தப்பன் எனவும், போத்தப்பாட்டி என்னும் சொல் பெத்தம்மை எனவும் மட்டக்களப்பில் வழங்கப்பெறும். பெற்றப்பன் பெற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றம்மை என்பவற்றின் திரிபாக உள்ள இச் சொற்கள் தந்தையை அல்லது தாயைப் பெற்ற அப்பன் அம்மை என்னும் பொருள் உடையனவாகும். வீட்டில் உள்ள கிளிகளும் பெத்தம்மை என்னும் சொல்லைத் தம் மழலை மொழியால் இசைப்பதை இன்னும் கேட்கலாம். மைத்துனியை மதனி என்றும் உனது அப்பன் என்பதைக் கொப்பன் என்றும், உனது அம்மை என்பதை கொம்மை என்றும் உனது அண்ணன் என்பதைக் கொண்ணன் என்றும், உனது அக்கையைக் கொக்கை என்றும் வழங்கும் வழகுகள் மட்டக்களப்புக்கே சிறப்பாக உரியனவாகும். கிராமிய வழக்கில் உள்ள இத் தொடர்கள் உனது தந்தை என்பதை உந்தை என்றும், உனது தம்பி என்பதை உம்பி என்றும், எனது தம்பி என்பதை எம்பி என்றும் கூறுகின்ற இலக்கண வரம்புக் குட்பட்டவையாகக் காணப்படுகின்றன.

வகர உயிர் மெய்வரிசையிலே வி. வீ. என்பவற்றை முதலாகவுடைய ஒரு சில சொற்கள் அவற்றுக்குப் பதிலாக உகர ஊகாரங்களை முதலாக வைத்து உச்சரிக்கப்படுவதையும் இங்கே காணலாம். விடு என்பதை உடு என்பர். விழுந்து என்பதை உழுந்து என்பர். வழிப்பாடு என்னும் சொல் அழிப்பாடு என வழங்குவதும் இது போன்றதே. வி. வீ. என்னும் எழுத்துக்களை டகர உகரங்களோடு சேர்த்து உச்சரிப்பது வசதிக்குறைவு ஏற்பட்டமையினால் இந்தச் சிதைந்த வழக்கு உண்டாயிற்றோ தெரியவில்லை. இன்னும் அந்தா பார் என்பதை அன்னாபார் என்றும், இந்தாபார் என்பதை இன்னாபார் என்றும் வழங்குவர். இவைகள் கிராமிய வழக்குகளாகும். மட்டக்களப்பிலே கிராம மக்களிடையே பழந்தமிழ் இலக்கியச் சொற்கள் சிதைந்து விளங்கும் வழக்கினை இனி நோக்குவோம்.

பிழைப்புக்காகவும் பொழுது போக்காகவும் மீன் பிடிக்க உபயோகிக்கப்படும் மீன் பிடிக்கும் கயிறு கட்டிய கம்பு 'கழை' என வழங்கப்படும். இந்தத் தூண்டிற் கழையின் கயிற்றில் உள்ள தூண்டில், நீரின் கீழே சென்று நில மட்டத்தை அடையாமல் நடுநீரில் நிற்குமாறு கயிற்றில் ஒரு மிதப்புக் கட்டப்பட்டிருக்கும். இந்த மிதப்புக்கு மப்புலி என்பது பெயர். இது மயில் இறகினால் ஆனது. அடிப்புறமாக வெட்டப்பட்டு இரண்டாக மடித்துக் கயிற்றுடன் சேர்த்து இருநுனியும் மேலே நேரே இருபிரிவாக நிற்குமாறு ஒரு மயில் இறகுத்துண்டு கட்டப்பட்டிருக்கும். மயிற்பீலி என்பது மப்புலி எனச் சிதைந்துவிட்டது 'நாய்க்குடலுக்கு நறணை தங்கா' என்று இங்கே ஒரு பழமொழி உண்டு. நறணை என்னும் சொல் நல்ல நெய்யைக் குறிக்கும். பசிநறணை என்பது பெருவழக்கு. நறுநெய் என்னும் இலக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிய செந்தமிழ் நறணை என்றாயிற்று, இந்நாட்டுத் தமிழரின் சொல்லாட்சிக்கு இது உதாரணமாகின்றது. எங்கேயும் தூரத்தில் அல்லது சமீபத்தில் யாதாயினும் எதிர்பாராத ஆரவாரம் கேட்கும்போது வீட்டில் உள்ள பெண்கள் மக்களைப் பார்த்து ஏதோ சத்தம் கேட்கிறது. பொருப்பத்திப் பாருங்கள் என்று சொல்லுவார்கள். பொருட்படுத்தல் என்பது பொருப்பத்தல் என்று சிதைந்து வழங்குவதை மட்டக்களப்புக் கிராமப்புறத்துப் பெண்கள் மத்தியில் இன்றும் கேட்கும் போது இந்த நாட்டின் சொல்வளம் தெளிவாகின்றது. இன்றியமையாத அருமையான பொருளை இழக்க நேர்ந்தால் மட்டக்களப்புக் கிராமத்துக் கல்லாத மகளிர் எங்கள் குடுநியம் பொருள் போயிற்றே என்று இரங்குவார்கள் இன்றியமையாத உயர்ந்த தத்துவப் பொருளைக் குறிக்குப் குடிலையம் பொருள் என்னும் தொடர் கிராம மகளிர் மத்தியில் குடுதியம் பொருள் எனச் சிதைந்து வழங்கும் நிலையினைக் காணும் பொழுது அங்கு வாழ்ந்த புராதன மகளிரின் பண்டைக்காலத் தத்துவ வாழ்க்கையை நாம் அனுமானித்தல் எளிதாகின்றது. இன்னும் கிராமியப் பெண்கள் ஏதும் திடுக்கிடும் சம்பவங்கள் நேரும் போது என் "சத்துரு சங்காரக் கடவுளே" என்று அபயம் இடுவர். ஒரு பெண் இன்னொரு பெண்ணின் மகனை வைதால் அல்லது அடித்தால் அப்பெண்ணை, இப்பெண் நோக்கி எனது மகனுக்கு ஏச உனக்கென்னடி தத்துவம் என்று வற்புறுத்திக் கேட்பாள்.

இத்தொடர்களும் இன்றைய சாதாரண மகளிரின் முன்னோர் சிறந்த சமயவாழ்வு வாழ்ந்தார்கள் என்பதை நமக்கு நினைவூட்டுகின்றன. குடுதியம் பொருள் என்பது குடிலையம் பொருள என்பதின் சிதைவேயாம்.

கோயிற்பூசகர் கப்புகனார் என அழைக்கப்படுகின்றார். கப்புகனார் என்பது கற்பகனார் என்பதின் சிதைவேயாம். கற்பகனார் என்பது கற்பகநயினார் என்னும் தொடரே மருவு மொழியாக அமைந்து காலப்போக்கில் கப்புகனார் எனச் சிதையலாயிற்று. சிங்கள மொழியில் உள்ள கப்புறாளை என்னும் சொல்லுக்கும் இதற்கும் தொடர்பில்லை. கற்பக விருட்சம் போன்று கேட்ட வரங்களைக் கொடுக்கின்ற இயல்புபற்றிக் கற்பகநயினார் என்னும் பெயர் கோயிற் குரவர்களுக்கு வழங்குகின்றது. 'கற்பகநயினார் காரணமிதுவென' என்னும் பிள்ளையார் கதைச் செய்யுளடியும் இதனை வலியுறுத்தி நிற்கின்றது. கருண பரம்பரையும் இதனை ஆதரிக்கின்றன. ஆலய பூசனையில் தீபாராதனை என்னும் சொல் தீபரெனவும் புனர்க்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரம் என்பது புனக்காரம் எனவும் அபிஷேகம் அவிள்சேகம் எனவும் வழங்கும். மட்டக்களப்பில் உள்ள ஆலயங்களின் பண்டகசாலைகளைக் கவடாவீடு என்றும் பண்டகசாலைக் காவலனைக் கவ்டாக்காரன் என்றும் வழங்கப்படும். கவடாக்காரனைச் சிலகோயில்களிற் திறப்புக்காரன் என்றும் கூறுவர். கவடா என்பது கபாடம் என்பதன் சிதைவாகும். கபாடம் கதவெனும் பொருளுடையதாய் கபாடக்காரன் என்னும் தொடர் கவாடக்காரன் என்று சிதைந்து வழங்கும் பிரயோகம் இந்நாட்டின் சொல்லாட்சிக்கு ஒரு எடுத்துக்காட்டாய் அமைந்துள்ளது. வீட்டுப் பாவிப்புக்குரிய சில பொருள்களின் பெயரைக் குறிப்பிடுவது பொருத்தமாகும். காய்கறி முதலியவற்றை வெட்டுவதற்குரிய அரிவாள் ஏற்றப்பட்ட பலகையை அருவாமனை என வழங்குவர் அரிவாமணை என்பது அருவாமனை எனச் சிதைந்து வழங்குகின்றது. மணை என்பது குறிப்பிடத்தக்க பழந்தமிழ்ச் சொல்லாகும். பலகை என்பது அதன் பொருள். அரிசரிக்கும் பாத்திரத்தை அரிக்கிமிலை என்பர். அரிக்கமலை என்பது அரிக்கிமிலையாகச் சிதைந்து விட்டது. அரி என்பது அரிசி. கமலை என்பது பாத்திரம். பெரிய வெட்டுக்கத்தியை அருவாக்கத்தி என்பர். அரிவாள் கத்தி அல்லது அரிவாட்கத்தி அருவாக்கத்தியெனத் திரிந்து வழங்குகின்றது. துப்புக்கட்டு தூப்பாங்கட்டு என வழங்கப்படுதலும் ஈண்டு குறிப்பிடத்தக்கது.

ஒருவரின் அவலட்சணத்தைப் பழிக்கும் போது அவரின் ஒசிலைப்பார் என்று கூறுவார்கள். ஒசில் என்பது ஒயில் என்பதன் சிதைந்த மொழியாகும். இங்கே குறிப்பாக அவலட்சணம் என்னும் பொருளைக் குறிக்கும் 'முருகர் ஒயிற் கும்மி' என ஒரு சிறுபிரபந்தமும் உள்ளது. ஒருவரின் நாகரீகப் போக்கு பார்வைக்கு வெறுப்புக்குரியதாய் இருந்தால் அவரைச் சுட்டிக் காட்டி இவரின் சீத்துவத்தைப் பார் என்று சொல்வார்கள். சீத்துவம் என்பது சீர்த்துவம் என்பதின் சிதைந்த வழக்காகின்றது. நாகரீகப் பண்பு என்பது இதன் பொருளாகும். குறிப்பாக நாகரீகம் இன்மையை விளக்கி நிற்கின்றது. ஒருவனது நடை அவனது உயர் குடிப் பிறப்புக்குப் பொருந்தா திருந்தால் அவனை நோக்கி உமது குடிவாக்கை கூடாதென்று கடிந்து கூறுவார்கள். குடுவாக்கை என்பது குடிவாழ்க்கை என்பதன் சிதைவாக வழங்கப்படுகின்றது. சந்ததி என்னும் சொல்லைக் குறிப்பதற்கு மட்டக்களப்பிலே வகுத்துவார் என்னும் சொல் வழங்கப்படுகின்றது. வயிற்றுவார் என்பது வகுத்துவார் எனத் திரிந்து நிற்கின்றது. இந்த வகுத்துவார் என்னும் சொற்பிரயோகத்தில் ஒரு நுட்பம் அமைந்துள்ளது. மட்டக்களப்பிலே சுரைப்பருப்பு நாட்ட பாகற்பருப்பு முளைக்கின்ற அற்புதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுதான். வகுத்துவார் என்பதன் உட்பொருள் ஒருவனின் தந்தை எக்குடிப்பிறந்தவனானாலும் யாரானாலும் அவன் தன் தாயின் குடிப்பிறப்புக்கே மதிக்கப்படுகின்றான் மட்டக்களப்பிலே தந்தையின் குடியுரிமை மைந்தனுக்கு இல்லை வேரோடி விளாத்தி மூளைத்தாலும் தாய்வழி தப்பாது' என்னும் பழமொழி இந்த வகுத்துவார் வரன் முறையை நன்கு விளக்குவதாகும்.

நாட் சம்பளத்தை அத்தைக் கூலி என வழங்குவர். அற்றைக் கூலி என்பது அத்தைக்கூலி என வழங்குகின்றது. ஆம் என்னும் சொல் ஓம் என்று கிராமங்களில் வழங்கப்பட்டு வருகின்றது. கிராமிய வாழ்க்கையில் நன்கு திளைத்தவர்கள் ஓங்கா எனக் கூறுவதையும் கேட்கலாம். மிகச் சிறிய அளவினைக் குறிக்க எள்ளுப் போல் என்னும் தொடர் மட்டக்களப்பில் ஒள்ளுப்பம் என வழங்கும். சிறிது தா என்பதற்கு ஒள்ளுப்பம் தா என்பர் ஒள்ளுப்பம் தாகா எனவும் பேசுவார். ஒள்ளுப்பம் என்னும் சொல் ஆட்களுக்கும் பெயராகக் காணப்படுகின்றது. ஒல்லாது என்னும் சொல் ஒண்ணாது எனவும், ஒல்லும் என்பது ஒண்ணும் என்று சிதைந்து வழங்குகின்றன. கத்தரிக்காய் என்பது சிறுபான்மை வழக்கு வழுதிலங்காய் என்பது பெரும்பான்மை. வழுதுணைக்காய் என்பது வழுதிலங்காய் என மருவிற்று.

நெல்வயல் சம்பந்தமான சில வழக்குகளையும் நோக்குவோம். பெரிய வயலில் பிரிவிட்ட ஒரு பகுதியைக் கீத்து என வழங்குவர். கீத்து என்பது கீறிப் பிரிவிடப்பட்டது என்னும் பொருளுடையது. கீற்று என்பது கீத்து எனச் சிதைந்து வழங்குகின்றது. வயலிலே விதைத்துப் பயிரேறிய பின்பு வரம்பின் அளவுக்கு வரவைகளில் தண்ணீரை நன்கு நிறைத்துக்கட்டி குறித்த நாள் எல்லைக்குள் அதனைத்திறந்து நில்லாது அளவிற் குறையுமானால் அத்தண்ணீர் வெயிலின் வெப்பத்தாற் கொதிக்கும். இதனால் இளம் பயிர் அழுகும். ஆதலினாலே நன்கு நிலம்குளிர, பயிர் குளிர வரம்பின் அளவாகக் கட்டிவைத்துக் கழற்றிவிடும் தண்ணீருக்குக் கங்களவு தண்ணீர் என்பது பெயராயிற்று. கங்கு என்னும் சொல் வரம்பின் பக்கத்தைக் குறிப்பதாகும். கங்களவு தண்ணீர் என்னும் தொடரை நன்கு அறிந்து அமைத்துக்கொண்ட தமிழரின் பரம்பரையை எண்ணும் பொழுது ஒரு புது உணர்ச்சி உண்டாகிறது. நமது பழைமையில் நமக்கும் பெருமிதமும் உண்டாகிறது. நெல்லரியும் அரிவாளை தாக்கத்தி என்பர். தாட்கத்தி என்பது தாக்கத்தி என்பதாயிற்று.

சாதாரணமான ஒரு பெண்ணை இன்னொரு கிராமப் பெண் அவளை முகங்கோடற்பொருட்டு இலக்கா என்று அழைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாள். இதுவும் ஒரு பழந்தமிழ் சொல்லின் சிதைவாக இந் நாட்டுக் கல்லாத மகளிரிடையே காணப்படுகிறது. எல்லா என்னும் சொல் தோழியைக்குறித்து பழங்காலத்தில் வழங்கி பிற்காலத்தில் சாதாரண மகளிரையும் குறிக்கும் சொல்லாக அமைந்துவிட்டது. மட்டக்களப்பிலே கட்டுரை சுவைப்படுதற் பொருட்டு 'கா; என்னும் இடைச்சொல்லைப் பெயர் வினை களின் இறுதியில் வைத்து வழங்குவர். 'கா, என்பது எல்லா விடத்திலும் வழங்கும் ஒரு இடைச்சொல்லாக இலக்கண நூல் களிற் கூறப்படுகின்றது. இச்சொல் மட்டக்களப்பில் இன்றும் வழக்கில் உள்ளது பழைமைக்கு எடுத்துக்காட்டாக உள்ள 'கா' என்னும் இடைச்சொல் எல்லா என்பதோடு சேர்ந்து எல்லாகா என வழங்கிக் காலப்போக்கில் மாறுபட்டு இன்று இலக்கா என வழங்குகின்றது. பெண்ணே என்பது இதன் இக் காலப் பொருளாகும்.

இந்தக்காவைப்பற்றி நகையாடுபவர்களும் உளர். 'ஆடவர் தோளிலும் கா அரிவையர் வாயிலுங்கா' என்றார் ஒரு இரசிகர் இன்னொருபெரியார் காவைப்பற்றி என்னோடு நிகழ்த்திய சம்பாஷணையையும் இயைபுபற்றி இங்கே கூற விரும்புகின்றேன். மட்டக்களப்பில் ஒரு காலாட்சேப நிகழ்ச்சியில் சமூகமாயிருந்த ஒரு நண்பர் என்னைப் பார்த்து ஐயா, இதென்ன கா? இந்தக்கா மட்டக்களப்புக்கு எவ்வாறு வந்ததென்பதை எனக்கு விளக்கத் தொடங்கினார். இங்கே தமிழரும் முஸ்லீம்களும் கலந்து வாழ நேர்ந்தமையால் இங்குள்ள தமிழர்கள் முஸ்லீம்களிடம் உள்ள காக்கா என்னும் இரண்டு காவில் ஒரு காவைதாங்கள் காவிக் கொண்டு தங்கள் நாட்டுப் பேச்சிலே புகுத்தியிருக்க வேண்டும் என நினைக்கிறேன் எனக் கூறிமுடித்தார். எனக்கு வந்த சிரிப் புக்கு அளவே இல்லை. காலாட்சேபத்தில் இது பெரிய காலாட் சேபமாயிற்று. நான் அவரை நோக்கி பக்கத்தில் வருமாறு கூறினேன். ஐயா, இந்தக்கா தமிழ்க்கா. இது தொல்காப்பியர் காலத்திலே எல்லா விடத்திலும் வரும் இடைச்சொல்லாக இலக்கணத்தில் இடம் பெற்றுள்ளது. பன்னிரண்டாம் நூற் றாண்டில் வாழ்ந்த நன்னூலாரும் இந்தக்காவை ஆதரித்து இலக்கணம் செய்திருக்கிறார். முஸ்லீம்கள் கி. பி. 16ம் நூற் றாண்டளவில்தான் இங்கு வந்து குடியேறியவர்கள். கி. மு. 4ம் நூற்றாண்டளவில் வழங்கிய தமிழ்க் காவுக்கும் முஸ்லீம் களின் காக்காவில் உள்ள இரு 'கா' வில் ஒரு காவுக்கும் ஒரு தொடர்பும் இல்லை. இது தமிழ் இலக்கணப் பழங்காவென்று நகையும் உவகையும் தோன்றக் கூறினேன். அவரும் மகிழ்ந்தார். எனக்கும் பெருமிதம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோணாமுகம்

மட்டக் களப்பென்னு மாநாடாந் நாட்டினிடைப்
பட்டினப் பாங்கர்ப் பரந்ததோ ணாமுகமாய்
ஐங்கரன் கோயில் அமிர்த கழிக்கணித்தாய்ப்
பொங்கு கடலுட் புகும்நீர் நிலையொன்று

என்றார் சுவாமி விபுலானந்தர். தோணாமுகம் என்ற சொற் பிரயோகம் இங்கு வந்ததுண்டு இதன் பொருள் யாது? சூழ் கழியிருக்கை என்பது பொருளாம். இதனைக் கோணாமுகம் என்பாருமுளர்.

மட்டக்களப்பு மக்கள் கடற்கரைகளிற் தோன்றிய சிறு உவர் நீர் நிலைகளைத் தோணா என்பர். தோணா என்பதனுடன் முகம் என்ற சொல் சேர்ந்ததும் அச்சொற்றொடர் கடற்கரைப் பட்டினத்தைக் குறிப்பதாயிற்று. பட்டினமுகம் உவர்நீர்க்களப்பாற் சூழப்பட்டுமிருத்தல் வேண்டும். அஃது அரங்கம் எனவும் பெயர்பெறும். நானூறு கிராமங்களைக் கொண்ட மாவட்டத்தின் தலைநகரமே கோணாமுகம் என்று கூறுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலட்சியமும் சமநோக்கும்

உலகம் இனிது நடைபெறுதற்கும், மக்கள் உயர்நலமுறுதற்கும் இலட்சியங்கள் கருவியாகின்றன. இலட்சியம் பழைமையிற் பழைமையும், புதுமையிற் புதுமையும் பெற்று நிலைபேறடைந்து திகழ்கின்றது. இலட்சியத்தினும் பழையது வேறொன்றில்லை; புதியதும் வேறொன்றில்லை. முன்னோரும் இலட்சியத்தால் ஈடேறினர்; நாமும் இலட்சியத்தால் ஈடேறுகின்றோம். இலட்சியமே நம் பின்னோரையும் ஈடேற்றும் வழியாயமையுமென்பதில் ஐயமில்லை; எட்டுணையுமில்லை.

இலட்சியங்கள் பல; பல்வேறு வகையின. பல்வேறு இயல்பமைந்த இலட்சியங்களைத் தத்தம் இயல்புக்கிணங்கக் கடைப்பிடித்தொழுகும், ஒழுகமுயலுந் தனிமனிதர் பலர் தம்முள் ஒன்றுகூடிய கூட்டமே சமூக அமைப்புக்கு அத்திவாரமாகின்றது. வள்ளுவப் பெருந்தகையாரும் தனிமனிதனை நிலைக்களனாகக் கொண்டே நல்லறங்களை வகுத்தோதிய மாண்பும் நாம் அறிந்துகொள்ளற் குரியதாகும். தனிமனிதனிடத்து இலட்சியம் அமையாதாயின், இலட்சியம் அமைந்ததொரு சமூகத்தை உலகில் உருவாக்குதல் சாலாது.

சமூகத்திலுள்ள பலர் தத்தம் இயல்புக்கேற்ற இலட்சியங்களைக் கடைப்பிடித் தொழுகுதலாலோ, கடைப்பிடித் தொழுக முயலுவதாலோதான் உலகம் இனிமை தருகின்றது. இலட்சியமில்லையேல், உலகு இனிமைதராது. பண்பில்லாதவனுக்கு அவன் பெற்ற அறிவும் துன்பமாம்; ஈகையில்லாதவனுக்கு அவன்பெற்ற செல்வமுந்துன்பமாம்! பிற நற்பேறுகளும் இவ்வாறே சமூகத்தை உருவாக்கி அதனை அழகுசெய்து இன்பப்பயன் காணச் செய்கின்ற இலட்சியம் சமூகமாகிய உடலுக்கு உயிராக அமைந்துள்ளது மனிதவர்க்கத்தின் தேம்பாவணியும் இலட்சியமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய இலட்சியங்களிலே நாம் சமநோக்கம் படைத்தவர்களாக வாழ்தல்வேண்டும். ஏனெனில், எல்லா இலட்சியங்களும் எல்லாரிடத்தும் ஒருங்கே அமைவனவல்ல. இலட்சியவாதிகள் தாமும் ஈடேறிப் பிறரையும் ஈடேற்றுந் தனித்தன்மை வாய்ந்தவர்கள். இலட்சியங்களுள்ளே நாம் ஒருமைப்பாட்டினைக் காணவேண்டும்; இலட்சியவாதிகளுள்ளும் நாம் ஒருமைப்பாட்டினைக் காணவேண்டும். இலட்சியங்கள் தம்முள் ஒருமைத் தன்மை வாய்ந்தன; இலட்சியவாதிகளும் தம்முள்ளே ஒருமைத் தன்மை வாய்ந்தவர்கள். ஆதலின், இலட்சியங்களுள்ளே இது நிறைந்தது, அது குறைந்தது என உயர்வு தாழ்வு கற்பித்தல் ஆகாது; இலட்சியவாதிகளுள்ளும் அவர் சிறந்தவர், இவர் குறைந்தவர் என உயர்வு தாழ்வு கற்பித்தலுந் தகாது. இவ்வாறு உயர்வுதாழ்வு கற்பிப்போர் சமூகத்தின் அடிப்படை அமைப்பினை நிலைகுலையச் செய்கின்றவராவார்.

நாம் இலக்கியங்களைப் படிக்கின்றோம். அங்கே என்ன காண்கின்றோம்? இலட்சியங்களைக் காண்கின்றோம். இலட்சியங்களைக் கடைப்பிடித்தொழுகிய இலட்சியவாதிகளைக் காண்கின்றோம். எதிர்மறை முகத்தால் இலட்சிய வாழ்வினை உயிர்பெறச்செய்த ஏனையோரையும் காண்கின்றோம். நிறைவுடைய கதாபாத்திரங்களும், குறைவுடைய கதாபாத்திரங்களும் நம்மை இலட்சியமென்கின்ற குறிக்கோளை நோக்கிச் செலுத்துவதை நாம் இலக்கியங்கள் வாயிலாக உணர்ந்து கொள்ளுகின்றோம். இந்த உணர்ச்சி நம்மிடையே பிறவாதபோது நாம் இலக்கியங் கொண்டு இடர்ப்படுவோமேயன்றி இன்பங்காண்பதில்லை. இலக்கியத் திறவுகோலை நாம் பெறுதல்வேண்டும். பெற்றால் இன்பங்காண்போம்.

இங்கே சிலப்பதிகாரத்தில் ஒரு சிறந்த காட்சி நமது அகக்கண்ணுக்குத் தோன்றுகின்றது. சேரநாட்டிலே பேரியாற்றங்கரையின் இனிய அடைமணற் பரப்பின்மீது சேரன்செங்குட்டுவன் தன் அன்புக்குரிய தேவி வேண்மாளுடன் வீற்றிருக்கின்றான். இளங்கோவடிகளும், சீத்தலைச் சாத்தனாரும் பக்கத்தே உடனிருக்கின்றார்கள். கண்ணகிதேவி விண்ணகம் புகுந்த செய்தியினையும், பாண்டிமாதேவி உயிர்துறந்த செய்தியினையும் செங்குட்டுவன் கேள்வியுற்றதுஞ் சிந்தனையில் ஆழ்கின்றான்; பின்னர்த் தன்றேவியை நோக்கி ஈதொன்றை வினாவுகிறான்.

''உயிருடன் சென்ற ஒருமகள் தன்னினுஞ்
செயிருடன் வந்தவிச் சேயிழை தன்னினும்
நன்னுதல்; வியக்கும் நலத்தோ ரியார்?''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது மன்னவன் வினாவாகும். பாண்டிமாதேவி, கண்ணகி தேவி ஆகிய இவ்விருவரினும் மிகச் சிறந்தவர் யார்? என்பது வினாவின் பொருள்.

இதற்குச் சேரமாதேவி கூறிய விடைத்திறன் இலக்கிய இரசிகர்களுக்குச் சிறந்ததோர் இலக்கியத் திறவுகோலாகத் திகழ்கின்றது.

''அத்திறம் நிற்க''

என்பது தேவிகூறிய விடையாகும். இரு பெருமகளிருள்ளும் மிகச் சிறந்தவர் யாரென்று கூறவேண்டா; பாண்டிமாதேவி பெருந்திருவுறுக; கண்ணகிதேவியைக் கொண்டாடவேண்டும் என்பது விடையின் பொருளாகும். சமூக வாழ்விலே பாண்டி மாதேவிபோன்ற மகளிரும் வேண்டும்; கண்ணகிதேவியன்ன பத்தினித்தெய்வமும் வேண்டும் என்பதை உணர்வது கூடு மானால், இவ்விரு பெருமாதரின் இலட்சியங்களை நாம் கண்டறிதல் கூடுமானால், இலக்கிய இன்பம் நமக்குச் சித்திக்கும்; இலட்சிய வாழ்வு நமக்குக்கைகூடும்; இலட்சியங்களிலும், இலட்சியவாதிகளிலும் நாம் சமநோக்கம் பெற்றுவாழலாம். இலக்கியரசிகர்களுக்கும், இலக்கிய விமரிசகர்களுக்கும் சேரமாதேவி கூறிய,

''அத்திறம் நிற்க''

என்னும் இலக்கிய மகாவாக்கியம் சாந்தி யளிப்பதாக, கண்ணகியா, சீதையா?; கம்பனா, பாரதியா?; வள்ளுவரா, கம்பரா? யார்சிறந்தவர்? என்பன போன்ற வினாக்களிலிருந்து நாம் விடுதலைபெறுவதற்கு இவ்வாக்கியம் வழிசெய்வதாக. இவ்வழியால் வாழ்வு சிறப்பதாக.

மக்கள் வாழ்வில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வோர் இலட்சியமேனும் இயைதல் வேண்டும். இலட்சியமில்லாத மனிதன் மனிதனல்லன்; இலட்சியமில்லாத வாழ்வும் ஒரு வாழ்வன்று; இலட்சியமில்லாததை இலக்கியமென வாதிப்பதும் மரபன்று. இலட்சியத்துக்காக உயிர் வாழவேண்டும். உயிர் வாழ்வதற்காக இலட்சியத்தைக் கைவிடுதல்.

''ஈமஞ்சேர் மாலை போல இழிந்திடப்பட்ட'' செயலாகும்.

இலட்சியம் அல்லது உயர்குறிக்கோள் என்பது ஒருவர் உண்ணும் உணவினும், பருகும் நீரினும் அவருக்கு இனியது, உயிரினும்பார்க்க அவருக்கு இனியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஊனமே யான ஊனிடை யிருக்கும்
உயிரினைத் துறந்துமொண் பூணாம்
மானமே புரப்பத் தவனிமே லெவர்க்கும்
வரிசையுந் தோற்றமும் மரபும்''

என அருச்சுனன் இதனை அறுதியிட்டுக் கூறுகின்றான். அவனது இலட்சியம் மானம்; அதுவும் மாண்பு கடவாத மானம். உயிரைத்துறந்தாவது மானத்தைக் காப்பதே மக்களுக்கு வரிசையும், குடிப்பிறப்பும், மரபுமாகுமென முழங்குகின்ற அருச்சுனனது வாழ்விலே இலட்சியம் முதலிடம் பெறுகின்றது; உயிருக்கு இரண்டாமிடமே கிடைக்கின்றது. இலட்சியவாதிகள் தமக்கோர் இன்னல் வந்தபோது. அவ்வின்னலைக் களைதற்காக இலட்சியத்தை விடுவதா, உயிரை விடுவதா? என்கின்ற சிக்கலான நிலையிலே உயிரைச் சமாதானமாக விட்டு இலட்சியத்தை நிலைநாட்டும் உறுதிபூண்டு நிற்பார்கள்.

இலட்சியவாதிகளின் மனப்பான்மை இலட்சியவாதிகளுக்கே விளங்கும், முல்லைக்கொடிக்குத் தேரைக்கொடுத்த பாரியும், மயிலுக்குப் போர்வையை வழங்கிய பேகனும் பெருஞ்சித்திரனாருக்குத் தனது தலையையே பரிசாக வழங்கிய குமணனும், கவசகுண்டலங்களை வழங்கிய கன்னனும் ஆகிய இவர்கள் தம்முள் ஒருவரை யொருவர் அறிவர். ஒருமை மனமில்லாத வேறு யாரறிவர்?

இலட்சியவாதிகளுக்கு இலட்சியத்திலும் பெரியது வேறொன்றில்லை.

''நிலத்தினும் பெரிதே; வானினு முயர்ந்தன்று;
நீரினு மாரள வின்றே; சாரற்
கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு
பெருந்தே னிழைக்கும் நாடனொடு நட்பே''

என்னும் அழகிய சங்கச்செய்யுள் இங்கே நினைவுக்கு வருகின்றது.

இலட்சிய வாழ்வு எத்துணை பெரியதென்பதை அரிச்சந்திர மன்னனின் தியாக வாழ்க்கை பசுமரத்தாணிபோல மக்களுள்ளத்திற் பதித்துவிடுகின்றது. சத்தியதேவி சந்திரமதியின் தியாகபுத்தி தவமுனிவனின் மதியையும், வாயையும் அடைத்துவிட்ட செய்தியும் உலகறிந்த உண்மையன்றோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பதியிழந்தனம் பாலனை யிழந்தனம் படைத்த
நிதியிழந்தனம் இனிநமக் குளதென நினைக்குங்
கதியிழக்கினுங் கட்டுரை யிழக்கிலோ மென்றான்
மதியிழந்துதன் வாயிழந் தருந்தவன் மறைந்தான்"

என்று வீரகவிராசர் விழுமிய சொற்களால் இழுமெனு மோசையுடன் அழகு தமிழிற் பாடிய செய்யுளை அறியாதார் யாருளர்? இன்னும் எம்கண்காணக்கலியுக அரிச்சந்திரனான மகாத்மா காந்தியடிகள் வாழ்க்கை நடத்திய செய்தியும் நாமறிவோமன்றோ? காந்தியடிகளுக்கு இந்தியாவும் பெரிதன்று; உடலும் பெரிதன்று: தம் உயிரும் பெரிதன்று; சத்தியமே பெரிதாயிற்றே. இஃதும் உலகறிந்த செய்தியாய் உயர்தனிச் சிறப்பினை நமக்கு நல்கி உலகசமூக நிலைமையிலே நமக்கு ஒளிதந்து நிற்கின்றதே.

ஐயாயிரம் ஆண்டுகளுக்குமேலாக உலகெங்கும் அறிவொளி பரப்பி இலட்சிய சமநோக்கிலே நிலைபெற்ற புத்தி படைத்த நாம், பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதிக்காலந் தொடக்கம் அடைந்துள்ள இழிநிலையிலிருந்து விடுதலைபெறவும், மீண்டும் அகில உலகுக்கு அறிவொளி பரப்பும் பண்டைய நிலையினை அடையவும் நமக்கு வழிகாட்டிகளாகத் தோன்றிய காந்தியடிகளையும், ஏனைய இலட்சிய சமத்துவ வாதிகளையும் வழுத்தி நின்று நாமும் இலட்சிய சமநோக்கத்திலே மறுமலர்ச்சியடைவோமாக.

இனி, இலட்சியவாதிகளிடத்துக் காணப்படும் மற்றொரு மாண்பினையும் நாம் உற்றுநோக்குதல் பலன்தருவதாகும். இலட்சியங்களுக்காகத் தம்மைத் தியாகஞ் செய்துயர்ந்த நல்லோரிடையே, தாம் பெற்ற இலட்சியப் பயன்களையே தியாகஞ் செய்து இறவாத புகழ்படைத்த பலரை நமது இலக்கியப் பாப்பு நமக்குக் காட்டுகின்றது.

இலட்சியங்களிற் சமநோக்கம்; இலட்சியவாதிகளித் சமநோக்கம் என்பன நமது இலட்சியம். இலட்சியப் பயனைத் தியாகஞ் செய்து சமபுத்தியின் சிகரத்திலே நின்ற நல்லோருள் ஒருசிலரை இங்கே உதாரணமாகக் காணலாகும். திருவருளே இலட்கியமாகக் கொண்டு பட்டம் பதவிகளையும், பணநிதிகளையுந் தியாகஞ்செய்த மாணிக்கவாசகப் பெருமானார்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நரகம் புகினும்
எள்ளேன் திருவருளாஈ யிருக்கப்
பெறினிறைவா''

என்று திருவருட்பயனை விடுத்துதருவருளையே வழுத்தி ஆனந்த மடைகின்றார். நரகத்தையும் மோட்சமாக மாற்றி யமைக்குஞ் சமநோக்கம் படைத்த அருட்செல்வர். அவர் அவரது சமத்துவ புத்தியினுள்ளே இலட்சியப் பயனும் மாண்டு போகின்றது.

தருமபுத்திரர் அறத்தையே இலட்சியமாகக் கொண்டவராய் அறத்தின் பயனாகக் கிடைத்த முத்தியின்பத்தையே தியாகஞ்செய்து சமநிலையிலே நின்றமையாற் சிறந்த அறநெறிச் செல்வர்களுக்கும் உயர்ந்த உதாரணமாகின்றார். அவர் முத்தியுலகிற்குச் செல்லும் வழியில் இலட்சிய சோதனை நடக்கின்றது. புழுத்த நாயொன்றை அங்கே காண்கின்றார். பிற உயிர்களைத் தம்முயிரிற் கண்ட சமநெறிச் செல்வராகிய அவர் தமக்கும் நாய்க்குமிடையே ஒருமை காண்கின்றார், அதன் துன்பத்தைத் தமக்கு வந்ததாகப் பாவிக்கின்றார். நாயைத் தோளிலே தூக்கி வைத்துக்கொண்டு முத்தியுலக வாயிலையடைகின்றார். நாயை வெளியேவிட்டு உள்ளே புகுமாறு முத்தியுலகம் உத்தரவிடுகின்றது. இந்தநாய்க்கு உரிமையில்லாத முத்தியுலகம் எனக்கு வேண்டாமென மறுத்துக் கூறுகின்றார். அறத்தின் பயனாகிய முத்தியையுந் தியாகஞ் செய்கின்ற வீரபுருடராக விளங்குகின்றார். ஈற்றிலே நாயையும் உடன்கொண்டு முத்தியுலகம் புகுகின்றார். இது நம்முன்னோரா கண்டனுபவித்து உலகுக்கு உபகரித்த சமநிலைக் கொள்கைக்கு ஓர் உரைகல்லாக விளங்குகின்றது.

இவ்வாறே இலட்சியப் பயனையுந் தியாகஞ்செய்து இலட்சிய சமபுத்தியிலே நிலைநின்ற இலட்சிய புருடர்கள் நம் நாட்டில் வாழ்ந்து வந்தார்கள்; வாழ்ந்து வருகின்றார்கள்; இனியும் வாழ்ந்து வருவார்கள். இது நியமம்.

இலட்சியவாதிகளின் தூலவடிவங்கள் மறைந்தாலும், இலட்சியங்கள் மறைந்துபோவதில்லை. அவை நம்முள்ளத்தே கலந்து நம்மை ஆட்கொண்டு நிற்கின்றன. அவை அழியா நிலை பெற்றவை.

தூலவடிவிலே நின்றும் மறைந்த இலட்சிய புருடர்களை இயற்கைப் புலமையும் அறிவுத் தெளிவுமுள்ள உண்மைக் கவிஞர்கள் காவியங்களிலே சூக்குமவடிவில் அமைத்துக் காட்டுகின்றார்கள். இவ்வற்புதக்காட்சியில் இலக்கிய புருடர்களைக் காணாமற்கண்டு பேரானந்தம் அடைகின்றோம். இலட்சியங்களும் இலட்சியவாதிகளும் அபின்னம். இதேபோன்று இலக்கியங்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபின்னம் இலக்கியங்களுடன் அபின்னமாய்நின்றுஉணர்வார்க்கு இவை புலனாகும். நூறாண்டு கழிந்தாலும் உண்மையிலக்கியங்கள் புதுமை பெற்று உள்ளங்களைத் தளிர்த்து மலரச் செய்கின்றன.

இலட்சிய வாழ்விலே நமக்கு ஏற்படுகின்ற இடையூறுகளை நாம் மேற்கொள்ளவேண்டும். இலட்சியங்களை இடையீடுபடாமற் காத்தலும் வேண்டும். இதற்கும் நமது இலக்கியங்களையே நாம் நாடுதல் தக்கதாம். ஓர் உதாரணத்தை இங்கே காண்போம்.

இராமாயணத்தில் ஒரு காட்சி. தசரதன் இரண்டு இலட்சியங்களிடையே ஊசலாடுகின்றான். ஒன்று அரசியல்; மற்றையது சத்தியம்; இவ்விரண்டில் ஒன்றைத் தெரிவுசெய்வதில் அவன் திண்டாடுகிறான். அரசியற் கொள்கையின்படி மூத்த புதல்வனுக்கு முடிசூட்டுவதா, அல்லது கைகேயிக்குக் கூறிய சத்திய வாக்கை நிலைநாட்டுவதா? இந்தத் தரும சங்கடத்தின் மத்தியிலே ஊசலாடுகின்ற அரசன் நினைக்கிறான்: அரசியல் நிலை மாறுவது; சத்தியம் நிலைமாறாதது. நிலைமாறுந் தன்மையுள்ள அரசியற் கொள்கையைக் கைவிடுவேன்; நிலைமாறாத இயல்புள்ள சத்தியவாக்கைக் கடைப்பிடிப்பேன். இதுதான் அரசனது முடிபு. நடுநிலையிலே நின்று வாக்குறுதியைக் காப்பாற்றிச் சத்தியத்திலே நிலைநின்று உயிரைத்தியாகஞ் செய்கின்றான். சத்தியத்தின் பொருட்டுத் தனது உயிரைத்தியாகஞ் செய்த தசரதனின் வாழ்க்கையிலே நிகழ்ந்த இந்தப் பெருநிகழ்ச்சியானது நடுநிலையிலே நின்று இலட்சியத்தை நிலைநாட்டுவோர்க்கு ஓர் உதாரணமாகின்றது.

ஐயாயிரம் ஆண்டுகளின் முன்பே கடைப்பிடித்து அனுபவித்த இலட்சிய சமநோக்கினை நாம் மீண்டும் பெறவேண்டும். இலக்கியங்களிலே பரந்துபட்டுக் கிடக்கின்ற இலட்சியங்களின் இயல்பினை நாம் கண்டறிதல் வேண்டும். இலட்சிய புருடர்களின் சமநோக்கினையும், சகிப்புத்தன்மையினையும் நாம் இலக்கியங்களாலே கற்றுக்கொள்ள வேண்டும். இலட்சிய சமநோக்குடன் நமது சமூகத்திலுள்ள உயர்வு தாழ்வுகளைச் சமன் செய்து சீர்ப்படுத்தவேண்டும். நமது இலக்கியப் பூங்காவின் நறுமணம் நமக்குப் புத்துயிரளிப்பதாக.

சொன்மலரை பண்பெண்ணும் நாரிற் றொடுத்தினிய
நன்மணமாம் பண்பு நனிகமழ - இன்முகமே
காட்டிப் புலவீர் கருத்திலொரு வர்க்கொருவர்
சூட்டிப் பொலிவீர் சுகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதனை மனிதன் உள்ளத்தால் அணுகுவதே மொழியின் பயன்

மொழி மனித இனத்தின் பிறப்புரிமை. மனித முயற்சியின் பயனாக அது வளம்பெற்று ஆக்கம் பெறுகின்றது. ஒரு மொழி ஓரினத்தின் பிறப்புரிமையாகினும், அது காலம், தேசம், இனம் என்பவற்றைக் கடந்த பொதுச் சொத்தாகவும் அமைந்துள்ளது. அதை அனுபவிக்கும் உரிமை எந்த இனத்துக்கும் உண்டு. விருத்தியடையாத செல்வத்தின் அனுபவம் சில காலத்தில் நின்றுவிடும். இதனாலேதான் மொழி, தொழில், செல்வம் முதலியவற்றை வளர்ப்பதில் உலகம் பேரார்வம் கொண்டுள்ளது. இந்த ஆர்வத்துக்கு அரசாங்கங்களும் ஆதரவளித்து வருகின்றன.

மொழி பொதுச் சொத்தாயினும். தேசம், சாதி, ஆசாரம் முதலிய சார்புகளால் ஒவ்வோர் மொழிக்கும் ஒவ்வொரு தனித்தன்மை அமைந்துள்ளது. இந்தத் தனித்தன்மை மொழிக்கு அத்திவாரமாகும். எம் மொழியின் வளர்ச்சியும் அம் மொழியின் இயற்கை அமைப்பினை ஒட்டியே செல்லுதல் வேண்டும். இயற்கை யமைப்புக்குப் புறம்பான வளர்ச்சி மொழியை உருவமாற்றம் செய்து விடும். மொழி வளர்ப்போரால் இது நன்றாகச் சிந்தித்தற்கு உரியது.

இந்த நெறிமுறை தவறாமல் நமது ஈழவள நாட்டிலே தமிழ் மொழியை வளர்த்து வருகின்ற ஆசிரிய சமூகத்துக்கும், மாணவர் குலத்துக்கும், பொது மக்களுக்கும் ஆதரவளித்து நிற்கின்ற கல்வி அமைச்சின் அளப்பரிய சேவை இந்நாட்டின் கல்வி வரலாற்றில் நல்லதோர் இடம் பெற்றுள்ளது. சிங்களம், ஆங்கிலம் என்னும் மொழிகளுக்கும் போலவே தமிழ் மொழிக்கும் ஒரு தனியிடம் கொடுத்து. தமிழ் மொழித் தினவிழாவென அதற்கோர் தனித்திருநாளும் நியமித்துத்தந்து, தமிழுக்கு ஒரு பெரும் வரிசை யளித்துள்ளது கல்வி அமைச்சு, விசால புத்தியும், திடசித்தமும் வாய்ந்த நமது கல்வி அமைச்சரின் திறமை ஒப்புயர்வற்றது.

இதனால், தமிழுக்கு ஒரு தனிமதிப்பு; தமிழ் பேசும் மக்களுக்கு ஒரு தனிப்பெரும் சிறப்பு; பிற மொழிகளின் மத்தியிலே தமிழுக்கு ஒரு சமாசனம் கிடைத்திருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏகாதிபத்தியமென்னும் பெருங்காயம் வைத்த தமிழ் உள்ளமாகிய பானையிலே பெருங்காயம் மூற்றாக எடுபட்ட பின்பும் ஏகாதிபத்திய மணம் இருந்து கொண்டேயிருக்கிறது. இந்த மணமும் மாறவேண்டும். நாட்டின் இரு கண்போன்ற சிங்களமும் தமிழும் ஏகாதிபத்திய நிறக் கண்ணாடியைப் போடாமல் பொருள்களை நோக்குதற்கு நாம் வழி செய்யவேண்டும்.

தமிழைப் பிறப்புரிமையாகப் பெற்ற தமிழினம் தமிழிலே நினைக்கவேண்டும்; தமிழிலே சிந்தனை செய்ய வேண்டும்; தமிழிலேகற்பனைபண்ண வேண்டும்; தமக்குள்ளே தமிழிலேயே பேச வேண்டும். இப்படிச் செய்வதனால்தான் தமிழ் உள்ளத்திலே படிந்துள்ள ஏகாதிபத்திய மணத்தை அறவே ஒழிக்கமுடியும். இதற்காகத்தான் தமிழ் மொழித் தினவிழா நடக்கிறது. இந்த விழா நிகழ்ச்சியின் போது தமிழ்பேசும் இனம், கலியாணச் சந்தடியிலே தாலிகட்ட மறந்ததுபோல் இவைகளை மறந்துவிடாமல் மிகவும் கூர்மையாய் இருத்தல் வேண்டும். தமிழன் தமிழனோடு ஆங்கிலத்திற் பேசுவது எவ்வளவு அவமானம்!

அகில இலங்கையிலுமுள்ள தமிழ்ப் பேசும் மக்கள் பலர் ஓரிடத்திலே ஒன்றுகூடுவது தமிழ் மொழித் தின விழாவின் முதற் பெறுபேறாகும். பிள்ளைகளின் அறிவும் ஆற்றலும் வெளிப்படுதற்குச் சந்தர்ப்பம் அளிக்கின்ற இவ்விழாவிலே அகில இலங்கையிலுமுள்ள திறமை வாய்ந்த பிள்ளைகள் பலர் ஒருவரை யொருவர் சந்தித்து அளவளாவும் வாய்ப்பினைப் பெறுவது அறிவு விருத்திக்கும் தேசீய ஒருமைப்பாட்டுக்கும் வழிசெய்வதாய் அமைகின்றது. இது இரண்டாவது பெரும்பேறாகும்.

இந்தப் பெறுபேறுகளின் பயனாகப் பிள்ளைகள் தம்மைத் தாமே உருவாக்கிக் கொண்டு; பிரிவினையாகிய ஒடுங்கிய சமூகச் சுவர்களைத் தகர்த்தெறிந்து: உயர்வு தாழ்வு என்கின்ற மேடு பள்ளங்களைச் சமன் செய்து கொண்டு தேசீயம் என்கின்ற சமவெளியிலே நின்று; சுதந்திர ஒளியால் புதுமை பெற்று; சமரசம் ஆகிய இளந்தென்றலைச் சுவாசிக்கும் இனிய நிலைக்குள் ஆகின்றார்கள்.

தமிழ்த்தின விழாக்களால் தமிழ்ப்பேசும் பிள்ளைகளின் அவதான சக்தி கூர்மையடைகின்றது; ஞாபகத் திறமை திடம் பெறுகின்றது. அட்சர புத்தி, உச்சரிப்பு, சிந்தனாசக்தி, சொல் வன்மை இசை நுட்பம் முதலியவற்றில் தேர்ச்சி பெறுதற்கு நல்லவாய்ப்பு கிடைக்கிறது. தமிழுக்கு இயல்பாக உரிய எழுத்துச் சிக்கனம், சொற்சிக்கனம், தெளிவு, இனிமை என்பவற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றின் மேலாக: 'யாதும் ஊரே; யாவரும் கேளிர்' என்னும் விசாலமான எண்ணம் நம்பிள்ளைகளின் உள்ளங்களில் ஏன் நம் வளர்ந்தோரின் உள்ளங்களிலும் உதிக்கின்றன. இந்த எண்ணம் நமது வாழ்விலே செயற்படவேண்டும்.

சர்வதேச ரீதியில் நமது நோக்கம் சென்றால் மாத்திரம் போதாது. சர்வதேச மொழிகளின் மத்தியில் நம் தமிழன்னையை உரிய இடத்தில் வைத்தற்கு நமது விழாக்கள் உதவவேண்டும். தமிழன்னைக்குச் சமயம், இலக்கியம், இசை, நடனம், சிற்பம், ஓவியம் முதலிய கலை ஆகியவைகளைப் புதுமுறையில் ஒப்பமிட்டு 'அணிந்து; பன் மொழிகளாகிய மணிகள் பதித்த விஞ் ஞானப் பொன்முடியினைச் சூட்டி: சர்வதேசக் கலையரங்கில அன்னையைக் கொலு வீற்றிருக்கச் செய்வோம். இந்த அற்புதக் காட்சியினை நாம் கண்டு களிக்க வேண்டும். இன்று வேண்டியது இதுதான்.

ஒரு மொழியைச் சுவைத்தற்கு இன்னொரு மொழியின் தொடர்பு அதிகம் உதவி செய்யும். இது புதியதன்று. நம் முன்னோர் கண்ட முடிபு. தமது நாட்டின் தேசிய மொழிகளை அறியாத ஒருவர் பூரண பிரசையாய் இருக்க முடியாது. நாட்டு மக்கள் இருவரை ஒருவர் அணுகவும், வாய்விட்டுப் பேசவும். கருத்துக்களைப் பரிமாறவும், அனுதாபம் பெறவும், பிரச்சினைகளைத் தீர்க்கவும் சிறந்த வழி இந்நாட்டு மொழிகளை எல்லாரும் பயில்வதேயாகும். இலங்கையை ஒரு கண்ணால் மாத்திரம் பாராமல் இரு கண்ணால் பார்ப்போம்.

மனிதனை மனிதன் உள்ளத்தால் அணுகுவதே மொழியின் பயனாகும். இதற்குமாறாக மனிதனும் சமூகமும் மொழி காரணமாகப் பிரிந்து தூரம் போவதாயின் மொழியால் மனிதனும் உருப்படான், சமூகமும் உருப்படாது, நாடும் நலம் பெறாது. இரு மொழி கற்று ஒருவரை ஒருவர் அணுகுவோம்.

நமது மொழிச் செல்வம் நகரங்களிலும், பட்டினங்களிலும் பார்க்க நாட்டிலுள்ள இருபத்திரண்டாயிரம் கிராமங்களிலே தான் பொதிந்து கிடக்கிறது. நமது பிள்ளையுள்ளங்களே மொழிச் செல்வத்தின் நிதிப் பேழைகள். இத்தகைய விழாக்களின் வாயிலாக எல்லாப் பிள்ளைகளுக்கும் சமசந்தர்ப்பம் கொடுத்து, தேசிய ஒருமைப் பாட்டின் மூலம் இரு மொழியும் வளம்பெற உழைப்போம். மும்மொழியும் வளம்பெற உழைப்போம். வாழ்க தமிழ்மொழித் தினவிழா, வாழ்க தமிழ் மொழி. வாழ்க தமிழ் பேசும் இளம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடறிந்தொழுகும் பண்பு

பயன் கருதாது செய்கின்ற நன்றியை ஈரமுடைமை என்கின்ற இன்தமிழ் வள்ளுவர் அதனைக் கடலினும் பெரிது என வருணிக்கின்றார். இந்த வருணனையின் அமைதியினைச் சற்றே நோக்குவோம். கடலானது உலகுக்கு உதவியாக மழையைத் தருகின்றது. ஆனால், தான் உலகுக்கு உதவும் மழையின் ஒரு பகுதியைத் தனது நன்மைக்காகத் தான் திரும்பப் பெற்று தன் வளத்தைப் பெருக்கிக் கொள்கின்றது.

''மாமுகிற் படுவவாரிப்
பவளமும்
வயங்கு முத்தும்''

என்பது கம்பராமாயணம், தான் உலகுக்கு உதவும் மழையின் ஒரு பகுதியைத் தனது சுயநலத்துக்காகத் திருப்பிப் பெற்றுக் கொள்ளுகின்ற கடலைச் சிறிதும் சுயநலம் கருதாத உதவிக்கு உவமையாக்க விரும்பாத உலக மகா கவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''பயன் தூக்கார் செய்த உதவி
நயன் தூக்கின்
நன்மை கடலிற் பெரிது''

என்று கவிசெய்த நுட்பம் நமது சிந்தைக்கு நல்விருந்தாகின்றது. உதவி வாழ்தல் சமூக அமைப்பின் உயிர் போன்றது.

நன்றி பாராட்டும் பண்பு

ஒப்புரவும், உதவியும் உலக வாழ்வை மலரச் செய்கின்றன. நன்றி பாராட்டுதல் மூலமாக உலகிலே ஒப்புரவும், உதவியும் நிலை பெறுகின்றன.

நன்றி செய்தல், நன்றி செலுத்துதல் இரண்டும் நானில வாழ்வுக்கு மாத்திரமன்று வானில வாழ்வுக்கும் வழித்துணையாகும். நன்றி செய்தல் ஒரு நாகரிகப் பண்பு; நன்றி செலுத்துதல் அப்பண்பின் மணிமுடி. மகசுவென்னும் பயிர் நன்றி செய்கின்ற பாத்தியில் வளர்கின்றது. நன்றி செலுத்துதல் அப்பயிருக்கு வார்க்கும் நீராகும்.

தினையளவு நன்றியையும் பனையளவாக மதிப்பர் நல்லோர். பனையை வளர்ப்போர் பனையின் வித்தை நிலத்திற் புதைத்துவிடுதலேயன்றி அதற்கு வேறொரு பரிசினையும் செய்வதில்லை. அது தானே வளர்ந்து தக்க பயனைத் தருகின்றது. நல்லார் ஒருவருக்குச் செய்த நன்றியும், ஒரு நினைவூட்டுதலுமின்றி மனத்திலே தானே வளர்ந்து பெரும், நன்மையைச் செய்கின்றது. இதை அவதானித்த வள்ளுவப் பெரியார்

''தினைத்துணை நன்றி செயினும்
பனைத்துணையாக்
கொள்வர் பயன்தெரி வார்''

எனப் பாடல் செய்த உணர்வு நமக்கும் உணர்வூட்டி நிற்கின்றது.

கம்பர் வருணிக்கும் காட்சி

நல்லோர்க்குச் செய்த நன்றியின் உயர்வினைக் கம்பர் வருணிக்கின்ற மற்றொரு காட்சியையும் இங்கே காண்போம். மகாவலி என்னுமொரு மன்னன். அவனது மண்ணாசை அளவு கடந்து போகிறது. இதனால், அவனது ஆட்சி ஏகாதிபத்திய ஆட்சியாக மாறிவிடுகிறது. ஏகாதிபத்திய வாதிகளை மக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைவர்களாக மாற்றும் வித்தையிலே கைதேர்ந்தவர் கண்ண பிரான். பெரிய அரச குடும்பத்திலே தோன்றிய கண்ணபிரான் பிரபுத்துவ முறையை ஒழிப்பதற்காக அரச குடும்பத்தை விட்டு வெளியேறி ஆயர் பாடியில் வளர்ந்த செய்தி சாதாரணமான தல்ல. மக்களோடு மக்களாக இறங்கி வாழ்ந்து மக்களை உயர்த்தும் பணியிலே தலைவர்கள் பயில வேண்டும்; ஏகாதிபத்திய முறையை ஒழிக்கப் பாடுபடவேண்டும்; மக்களாட்சியை நிறுவ வேண்டும். இந்த உயர்ந்த நோக்கத்தின் பிரதிபலிப்பே கண்ணன் வாழ்க்கை.

மாவலியின் ஏகாதிபத்திய ஆட்சியில் மக்களடைந்த துன்பத்தைத் துடைப்பதற்காகக் கண்ணபிரான் ஓர் ஏழைப் பிராமணனாக வடிவெடுக்கின்றார். அதுவும் ஒரு சிறிய குறள் வடிவம். மாவலியிடம் வந்து மூன்றடி மண்வேண்டி இரக்கின்றார் மகாத்துமா. குறள் பிராமணனுக்கு மூன்றடி மண் கொடுப்பதனால் தனது ஏகாதிபத்தியம் மண்ணாகப்போகிறது என்னும் இரகசியம் அவனுக்குத் தெரியாது.

மூன்றடி மண் அளந்து கொள்ளுமாறு ஆணையிடுகின்றான் மாவலி. ஆணைபிறந்தது தான் தாமதம், ''ஆலமர் வித்தின் அருங்குறளாக'' அரசன் முன்னின்ற அந்தணன் வானம் பூமிதட்ட மாபெரும் விசுவ ரூபமெடுத்து நிற்கின்றான். மாவலி மண்ணும் பரப்பும் விண்வெளிப்பிரதேசமும் அடங்கிய ஏகாதிபத்தியம் இரண்டடிக்கும் போதவில்லை, மாவலியின் ஏகாதிபத்தியம் ஒழிந்தது. ஏகாதிபத்திய வரலாறெல்லாம் இதுதான்.

சின்னஞ்சிறிய குறள் வடிவம் பென்னம்பெரிய விசுவரூபமாக உயர்ந்த காட்சியினை வருணிக்கின்ற கம்பர் நல்லோர்க்குச் செய்த உபகாரத்தை அதற்கு உவமை கூறுகின்றார்.

''வியந்தவர் வெருக்கொள
விசும்பின் ஓங்கினான்
உயர்ந்தவர்க்குதவிய
உதவி யொப்பவே''

என்பது கம்பராமாயணம்.

இவ்வாறு ஒருவர்க்கொருவர் உதவுதல்; ஒருவர் மற்றவர்க்கு உதவுதல்; நன்றி பாராட்டுதல் என்னும் மூன்றும் மக்கள் வாழ்வின் ஆரம்பப் படிகள் என்பதை நமது இலக்கியங்கள் வாயிலாக நமது இளஞ் சந்ததி உணர்ந்தால் நிகழ்காலமும் எதிர்காலமும் அமைதிபெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தியாக சேவை வேண்டும்

அடிமைகளாய் வாழ்ந்து மாளாமல் செத்து நாம், நம் தேசிய வீரர்களின் தியாக சேவையால் இன்று மறுபிறப்பு எடுத்திருக்கிறோம். இனி நமக்கு அடிமை வேலை இல்லை; சுதந்திரசேவை நிறைய இருக்கிறது. நமது சுதந்திர இலங்கையின் புனர் நிர்மாணப் பொறுப்பை நாம் கையேற்கவேண்டும். வாருங்கள்: நமது சூழ்நிலையைத் திரும்பிப் பாருங்கள். ஈழவள நாட்டின் இயற்கை வளங்களைப் பயன் செய்வோம். அவற்றை துணையாகக் கொண்டு முன்னேறுவோம்; தன்னிறைவு பெறுவோம்.

வானோங்கி உயர்ந்த வனப்புமிகும் மாமலைகள் எத்தனை, எத்தனை. சிவனொளிபாதம், பேதுருதாலகாலை, கிரிகாலப் பொத்தை றோட்டப்பாலை, போலப்பொத்தனகலை, மேற்குத் தொடர்மலை, குடவலை, பிளவமலை, முதலிய மலைகள்; ஏழாயிரம், எண்ணாயிரம் அடிக்குமேல் உயர்ந்து வானையும் முட்டுகின்ற அவற்றின் மாண்புமிக்க தோற்றங்கள்; இவற்றின் இடையேயுள்ள பள்ளத்தாக்குகள்; பச்சைப் பசேலென்ற சமவெளிகள்.

சிவபிரானின் திருவருள் போலவும், புத்த தேவரின் அருள் போலவும், நபிகள் நாயகத்தின் கருணை போலவும், கிறிஸ்து நாதரின் அன்பு போலவும் அம்மலைகளில் நின்றும் பொங்கிப் பெருகிப் பாய்ந்து வருகின்ற நன்னீர் நதிகள் எத்தனை எத்தனை.

மகாவலிகங்கை, களனிகங்கை, மாணிக்ககங்கை, வளவ கங்கை, மகாஓயா, மதுரை ஓயா, தெதுறு ஓயா, காலுகங்கை, ஜின்கங்கை, குமுக்கனாறு, பட்டிப் பளையாறு, அருவியாறு முதலிய அமுதம் போன்ற இனிய ஜீவநதிப் பெருக்குகள், அறுபது 'மைல்' தொடக்கம் இருநூறு மைல்களுக்கும் அப்பால் நின்றும் புறப்பட்டு எத்தனையோ தடைகளைத் தகர்த்தெறிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு தாய்த்திருநாட்டின் சேவைக்காக விரைந்து வருகின்ற அந்நதிகள் தாயின் திருமேனியைச் செழிக்கச் செய்கின்ற. அற்புதக் காட்சியினை இளஞ்சந்ததியே திரும்பிப்பார்.

பராக்கிரம சமுத்திரம், மின்னேரி, கந்தளாய், கிரித்தலை, இரணைமடு, சேனநாயக சமுத்திரம், மகாவலி அபிவிருத்தித் திட்டம், உடவளவைத் திட்டம் போன்ற நீர்த்தேக்கங்களையும் நீர்ப்பாசனத் திட்டங்களையும் பார். நிலத்தையும் நீரையும் இணைத்து வைத்து, சூழ்நிலையைப் பயன் செய்த சிங்கள தமிழ் மன்னர்களின், தேசியத் தலைவர்களின் கரும வீரர் களின் நினைவுச் சின்னங்கள் போல இவைகள நாடு முழுதும் திகழ்கின்றன. இவையெல்லாம் நமது தேசியச் செல்வங்கள். இவற்றினும் மேலான தேசியச் செல்வம் நமது இளஞ்சமுதாய மாகும். இளஞ் சமுதாயம் நன்றாக விருத்தியடைந்தால்தான் நமது தேசியச் செல்வங்கள் விருத்தியடையும். நாடு தன்னிறைவு பெறும்.

முன்பெல்லாம் பிற நாடுகளின் பாரத்தைத் தாங்கிய நாடு நம்நாடு. உணவு முதலிய பல பண்டங்களை ஏற்றுமதி செய்து உணவூட்டியும், பணமீட்டியும் வாழ்ந்த நாடு நம் நாடு; மனிதன் முதல் மிருகம் ஈறாக எல்லா உயிர்களுக்கும் சம நீதி வழங்கி நீதி நியாயத்தை நிலை நாட்டிய நாடு நம் நாடு.

நீரும் நீரும் சேர்ந்தாற் போலவும் பாலும் தேனும் கலந்தாற் போலவும் நிலமும நீரும் இணைந்தாற் போலவும், தனது தேசிய இனங்கள் ஒன்றுகூடி இனிய சமரச அனுபவத் திலே திளைத்த நாடு நம்நாடு. சிங்களவர் தமிழுக்கும், தமிழர் சிங்களத்துக்கும் ஆக்கமளித்த வரலாற்றுச் செய்தியினைக் கொண்ட மனவளம் செழித்த நாடு நம் நாடு. முப்பது லட்சம் ஏக்கரின் மேற்பட்ட விளை நிலன்களைக் கொண்ட விழுமிய நாடு நம் நாடு.

தென்னை, பனை, கமுகு, தேமா, வாழை, பலா, செந்நெல், கன்னல் (கரும்பு), தேயிலை, றப்பர் கொக்கோ; ஏலம் கராம்பு கறுவா, சாதிக்காய்; புகையிலை புல்லெண்ணெய்; யானைத்தந்தம், முத்து மணி, பவளம், காரீயம் முதலிய எத் தனை எத்தனை விளை பொருள்கள், இயற்கை அன்னையின் பூரண ஆசியைப் பெற்ற நமது தாய்நாட்டின்; இலங்கை மணித் திருநாட்டின் சூழ்நிலை எங்கே? நாம் எங்கே? நமது வாழ்க்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறை எங்கே? நாட்டின் சூழ்நிலையை நாம் மறந்தோம். நாமாக மறக்கவில்லை. அன்னியர் தந்த உதவாத பழைய கல்வித்திட்டம் செய்த வேலை இது,

"செஞ்சாலி விளைவேலி ஆயிரமூர் புரக்கும் திருவோங்கி நிறைவுடைய செல்வமெலாம் சுரக்கும்" சிறப்புடைய திருநாடு செழுமையும், கொழுமையும் வளமையும் பொலிந்த ஈழவள நாடு தனது சூழ்நிலையை விட்டுத்தூரம் போனது மாத்திரமல்ல; அதைக் கௌரவக் குறைவாக மதித்து மறந்தும் போயிற்று. 'செய்' என்னும் பெயர் கொண்ட தனது வயலை மறந்து அயலையே நோக்கிக் கையாலாகாத சந்ததி வாழும் ஒரு நாடாக மாறிவிட்டது. களனி நாடு 'கொலனி' நாடான செய்தியானது ஏகாதிபத்தியம் ஈந்த அடிமைக் கல்வியால் ஏற்பட்ட பரிதாபச் செய்தியாகும். நானூற்று ஐம்பது வருட காலமாக நம்முன்னோரும் நாமும் பேடிக் கல்வி பயின்று உழன்ற பித்தர்களானோம்

இயற்கை அழகு தாண்டவமாடுகின்ற இனிய நாட்டிலே சந்ததி சந்ததியாகப் பிறந்தும் ஏழைகளாகி, இரும்பும் கரியுமுள்ள ஏகாதிபத்திய நாடுகளின் முன்னே கையேந்தி நின்றோம். அந்நாடுகளிடம் உணவும், உடையும் வாழ்க்கைப் பொருள்களும், அலங்கார வஸ்துகளும் பெற்று, உண்டு, உடுத்து, அணிந்து, பூசிப் புனைந்து, வாழ்த்தி வணங்கிப் பொய்வாழ்க்கை நடத்திய மயக்கம் இன்று நீங்கிவிட்டது.

நாமிருக்கும் நாடு நமதென்பதறிந்தோம் - அது நமக்கே உரிமையாம் என்பதறிந்தோம்''

உரிமைக் குரலெடுத்தோம். உரிமை கிடைத்தது இனிக் கடமைக் குரல் எடுப்போம். கடமை செய்து உரிமையைக் காப்போம். உரிமை, உரிமை. என்றால் போதாது அது சம உரிமையாகப் பரிணமிக்க வேண்டும்; எல்லார்க்கும் பயன்தர வேண்டும். இந்த இலக்கின் வழியே சென்று கடமை நிறைவு பெற வேண்டும். கடமை புரிவோர் இலக்குத் தவறினால் சமரசம், சமமான ரசம் நமக்குக் கிட்டாது.

கடமையென்பது சேவை அது தியாகத்தின் வடிவானது. இன்று தியாகம் தியாகம் என்கின்றார்கள். ஒன்றுமில்லாத இடத்திலிருந்து தியாகம் வராது. எல்லா வசதிகளும் உள்ள இடத்திலிருந்துதான் தியாகம் வரவேண்டும் இதுதான் முன்மாதிரியாகும். தலையிலுள்ள நோய்க்கு வாலிலே சத்திர சிகிச்சை செய்தால் நோய்தீருமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கே இராமாயணத்தில் ஒரு செய்தி நினைவுக்கு வருகிறது. தசரதச்சக்கரவர்த்தியின் தியாக சிந்தை நாட்டைத் தன்னிறைவு பெறச் செய்வதில் சுய தாபரிப்புள்ள நாடாக்குவதில் அவர் காட்டிய தியாக புத்தி தமது தலைவர்களின் சேவைப் பாதையிலே ஒரு புதிய திருப்பத்தை உண்டாக்கும் ஒரு பெரிய சக்தி வாய்ததாகும் இச் செய்தி.

''வையகம் யாவையும் வறிஞன் ஓம்புமோர் செய்யெனக் காத்தினி தரசு செய்கின்றான்.''

தனது அரசின் ஆக்கத்துக்காகத் தசரத மன்னன் கைக் கொண்ட சிக்கனம், கோசல நாடு தன்னிறைவு பெறுவதற்கு அத்திவாரமாயிற்று. தசரதன் பேரரசன். அவனது நாடும் பெரிய நாடு.

வறியவனொருவன் தனது சிறிய வயலை எவ்வாறு கண்ணும் கருத்துமாகக் காப்பாற்றுவானோ, அவ்வளவு கவனமாக, சிக்கனமாக, அந்தப் பேரரசன், அந்தப் பெரிய நாட்டைப் பாதுகாத்து வந்தான் எனக் கம்பர் கூறுகின்ற உவமை நமது உரிமைக்கும் கடமைக்குமிடையில் உள்ள உத்தரவாதத்தையும் சிக்கனத்தையும் உணர்ச்சியுண்டாகக் கூறுகின்றது. நமது தலைவர்கள், நாட்டின் செல்வர்கள் இதைப் பின்பற்ற வேண்டும். முன்மாதிரி காட்ட வேண்டும். தியாகமும் சேவையும் இங்கேதான் ஆரம்பிக்கவேண்டும்.

ஏகாதிபத்தியம் போய்விட்டது, தியாகாதிபத்தியம் வந்திருக்கிறது என்று பெருமை பாராட்டுகிறார் ஓர் ஏழை நாட்டின் தலைவர். அவரைப் பார்த்து வேறொருவர் வினவுகிறார், ஐயா இந்த ஏழை நாட்டில் எழுபதினாயிரம் ரூபா பெறுமதியான ஆடம்பரக் 'கார்' வைத்திருக்கலாமா நீங்கள்? தலைவருக்கு ஆத்திரம் வந்து விடுகிறது. வெள்ளைக்காரர்க் கவர்னர்' இப்படிக் 'கார்' வைத்திருக்கலாம்! நான் வைத்திருந்தால் உங்களுக்கும் பொறாமை வந்துவிடுகிறது. என்கிறார். என்கிறார் தலைவர். அவர் வித்தியாசம் தெரியாமல் பேசுகிறார் இதுதானா தியாகம்? இதுதானா சிக்கனம்? இதுதானா சேவை? ஏழை நாடு உருப்படுமா? தலைக்குத்தான் சத்திர சிகிச்சை செய்யவேண்டும். இது ஒரு கற்பனை உதாரணம்.

உண்மையான தியாக சேவை வேண்டும். அது தேசீய அடிப்படையில் நிகழவேண்டும். சூழ்நிலையை அது பயன் செய்ய வேண்டும் புதுப் புதுக் கண்டுபிடிப்புக்களைச் சொந்த நிலை துணையாகக் காண வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூழ்ந்த பார்வையுள்ள நல்லாசிரியர் வாழ்க! நாடு வாழ்க!

இந்துமா சமுத்திரத்தின் நடுவி லிங்கோர்
இங்கிலாந் தமைந்துகிடந் ததுவோ வென்ன
முந்துசீர் நாகரிகம் பழக்கம் வாழ்வு
மொழிப்பயிற்சி கலையுணர்ச்சி முழுதும் மாறிப்
பந்தமுறு வெறும்போலிப் பகட்டில் மோகப்
பட்டுமேற் பார்வையிலே மனம் பதிந்து
சிந்தனையற் றிடுலங்கா தேவி யுள்ளம்
தேசீய மயமாகத் திகழ்ந்த தின்றே. (ஏ. பெ.)

ஆசிரியர் என்னுஞ் சொல் சூழ்ந்த பார்வையுடையோர் எனப் பொருள்படும். பண்டைக்காலத்தே தமிழாசிரியர் பார்ப்பார் எனப் பெயர்பெற்றிருந்ததாகத் தெரிகின்றது. பார்ப்பார் என்பது சுத்தமான செந்தமிழ்ச் சொல். குரவர் என்னுஞ் சொல்லைக் குறிக்கப் பார்ப்பார் என்னுஞ் சொல் வழக்கிலிருந் ததைப் பழந்தமிழ் நூல்களால் நாம் அறிகின்றோம்.

''பார்ப்பார்த் தப்பிய கொடுமையோர்க்கும்''

என்பது புறநானூறு.

நிரம்பிய கல்வி, ஆழமான அறிவு, விசாலமான ஆராய்ச்சி, பரந்த மனப்பான்மை, உயர்ந்த கொள்கை, சூழலைப் பயன்செய்தல், தேசீய நோக்கம் முதலியபல கருத்துக்களுக்கு இடந்தந்து விரிந்து நிற்கின்றது சூழ்ந்த பார்வை என்கின்ற தொடர்மொழி. இது ஆசிரியரின் தனிப் பெருஞ் சிறப்பாகும்.

நாலும் அறிந்து செய்கின்ற நன்னோக்கம் படைத்த நல்லாசிரியரின் சேவையால் நாடு நலம் பெறுகின்றது. தமிழ் கூறும் நல்லுலகம் என்னும் நற்பெயர் நாட்டிற்கு நல்லாசிரியர் தேடித்தந்த தேசீயச் செல்வமாகும். இது பழைய செய்தி.

கடந்த நானூற்றைம்பது வருடகால அன்னியராட்சி நமது வரலாற்றை மாற்றி விட்டது. நம்நாட்டு ஆசிரியரின் சூழ்ந்த பார்வை படிப்படியாகச் சுருங்கி மேற் பார்வையாக மாறிவிட்டது; நான்கு திசையிலுமிருந்தும் வருவதே அறிவாயி ருக்க; எல்லாம் மேற்கிலிருந்துதான் இறக்குமதியாக வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னும் விபரீத மனப்பான்மை மக்கள் மத்தியில் வேரூன்றி விட்டது. மேற்றிசை மோகமும், தாகமும் நம்நாட்டு அறிஞர் களுக்கும தலைக்கேறி விட்டன.

ஏகாதிபத்திய வாதிகளால் இடப்பட்ட மயக்க மருந்து நமது ஆசிரிய சமூகத்தின் சூழ்ந்த பார்வையைத் திசைதிருப்பி விட்டது. மங்கல திசைகளாகிய வடக்கையும் கிழக்கையும் நோக்காமல் நமது ஆசிரியர்கள் அத்தமன திசைகளாகிய மேற் கையே நோக்கலாயினர். இதனால் நமது தேசிய மன்னப்பான்மை மாறிச் சுதந்திரபுத்தி கெட்டுச் சூத்திரபுத்தி நம்மை ஆட் கொண்டுவிட்டது. நாம் சிந்தனை யிழந்து, செயலிழந்து, சூத் திரப்பாவைகளைப்போல் பிறர் ஆட்ட ஆடிவந்தோம்.

ஏகாதிபத்திய வாதிகளின் ஆங்கிலம் ஆளும் மொழியாக அரசபீடத்தில் ஏற நமது நாட்டின் தேசிய மொழிகள் அடிமை களின் மொழிகளாகிக் கீழ்நிலை யடைந்தன. புதிய சாதிப் பிரிவினை நாட்டில் உண்டாயிற்று.

> முன்னை வடக்கால் முளைத்தநாற் சாதிபோய்ப்
> பின்னையிரு சாதிபிறந்துளகாண் - அன்னியர்தம்
> ஆங்கிலத்தால் மேல்சாதியாயிற்றே தாய்மொழிகற்
> றோங்கிநிற்கும் கீழ்சாதி யே. (ஏ. பெ.)

ஆங்கிலம் படித்தவன் மேல் சாதி; தமிழ் சிங்களம் படித் தவன் கீழ்சாதி என்னும நிலைமை ஏற்பட்டது. நாம் கைகட்டி வாய்பொத்தி நின்றோம்! ஏகாதிபத்திய வாதிகள் ஒருபுறம்; உள்ளூர் ஏகாதிபத்திய தாசர்கள் மறுபுறம், நம்மை நெருக்க நாம் கையாலாகாத உதவாத கல்விகற்று நமது வாழ்நிலை யைத் தாழ்வாக மதிக்கின்ற போலிக் கௌரவத்தில் மூழ்கிக் கிடந்தோம்.

தேவை தேவை என்கின்ற யானைத் தீ நமது சமூகத் தின் வயிற்றைப் பற்றிக்கொண்டது. மேல்நாட்டு ஆடம்பரப் பொருள்கள் நம்மை வசியம் செய்துவிட்டன. நாம் நம்மையும், நமது நாட்டையும், நமது இளஞ் சந்ததியையும் மறந்து சிந்த னையற்று மடிதுயிலில் வீழ்ந்து கிடந்தோம். நமக்கு விடிவில் லையா? ஏகாதிபத்தியம் பகற்கனவாயிற்று.

நமது முன்னோர் வளர்த்த சிந்தனைத்தரு நிலையானது. அதன் ஆணிவேரை ஏகாதிபத்தியமும் காண முடியாது; சர்வாதி காரமும் காணமுடியாது. மிக ஆழமான ஊன்றிய ஆணிவேர் ஏகாதிபத்தியத்தின் சுயநலம் என்கின்ற கோடரி நமது சிந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னைத்தருவை வெட்டி வீழ்த்தியபோதும், அதன் ஆணிவேரை அறுத்தொதுக்கும் சக்தி அந்தக் கோடரிக்கு இருக்கவில்லை. அது நாலுபக்கமும் சென்று நன்றாக ஊன்றிய வேர். ''யாதும் ஊரே யாவரும் கேளிர்''; ''யாதானும் நாடாம்; யாதானும் ஊராம்'' என்னும் நட்பும் உரிமையும் பெற்ற வேர்.

மூலவேர் பசுமை மாறாதிருந்தமையால், வெட்டுண்ட சிந்தனைத்தருவின் அடியிலிருந்து சிந்தனைக் கொழுந்துகள் முளைத்தன; நம் நல்லாசிரியர்கள் கற்பனை நீரூற்றிமரபு என்னும் வரம்பினுள் வைத்துச் சிந்தனைக் கொழுந்துகளை வளர்த்தனர். அவை தளிர்த்து செழித்துக் கிளைத்து வளர்ந்தன 'மரதின்கீழ் ஆகா மரம்' என்பது போல் ஏகாதிபத்தியம் என்கின்ற மரத்தை மூடி மறைத்து எழுந்த நமது சிந்தனைத் தருவின் நிழலில் அகப்பட்டு அது வளர்ச்சிகுன்றி வெளிறிப் பட்டுப் போயிற்று. நமது உள்ளத்தே குத்திர புத்திநீங்கிச் சுயபுத்தி உதிக்கப் பரதத்திரம் மறைந்தது. சுவதத்திரம் பிறந்தது. மயக்க மருந்து முறிந்தது.

நமது ஆசிரிய சமூகம் மேற்கை மட்டுமல்ல. இன்று நாலு பக்கமும் பார்க்கின்றது. இந்து சமுத்திரத்தின் மத்தியில் தோன்றிய புதிய இலங்கிலாந்து மறைகிறது நமது நாகரிகம், நமது பழக்க வழக்கம், நமது வாழ்க்கைமுறை, நமது மொழிப் பயிற்சி, நமது கலாசாரம் எல்லாம் புத்துயிர் பெறுகின்றன; பந்தம் அறுகின்றது; போலிக் கௌரவம் அகல்கின்றது; ஏகாதிபத்திய மோகம் ஒழிகின்றது; இலங்கை மணித்திருநாடு தேசியமயம் ஆகின்றது.

''பொருந்து சூழ்நிலைக் கேற்ற கலைத்திறம்
புகட்டல் மாணவர்க்கின்பம்; பொருள் நிலை
திருந்தி வாழ்விற் செழித்தல் சுதந்திர
தேச மக்களுக் கின்பம் தொழிலுக்காய்
வருந்தி நாளும் பிறரைப்பின் சென்றேங்கி
வாழ்ந்தி டாமைநம் வாலிபர்க் கின்பமாம்
அருந்து தன்னுண வுக்குந்தன் கையேயா
தார மாக்கொளல் தேசத்துக் கின்பமே'' (ஏ பெ.)

என்னும் சூழ்ந்த பார்வையுடன் ஆசிரியர்கள் புதுக் கல்வித் திட்டத்தைக் கையாளப் போகின்றார்கள். நமது இளஞ் சந்ததி நாட்டுக் கல்வி நிலையைப் படரச் செய்து துன்பம் நீங்கி இன்பம் காணப் போகின்றது. நமது புதிய கல்வித்திட்டம் என்னும் கைவிளக்கைப் பிடித்து ஒளிமயமான எதிர்காலத்தை ஆசிரியர்கள் நமது மாணாக்கர்க்குக் காட்டுவார்களாக. புதிய கல்வித்திட்டம் காட்டும் பாதையில் நாடு மறுமலர்ச்சியடைக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேராசை
# ஒரு பலதலைப் பேய்!

ஒருவன் தனது அகவாழ்வின் தன்னிறைவு பெற்றால்தான் அவனுடைய புறவாழ்வு மலர்ச்சியடையும். தனி மனிதன் தன்னிறைவு பெற்றால் தன்னிறைவு பெற்ற ஒரு சமூகத்தை உருவாக்குதல் முடியும். அன்பொடு கலந்த அகவாழ்வில் நின்று புறவாழ்வையும் இன்பம் பொலியச் செய்வோம்:

புறவாழ்விலே இடம், பொருள், ஏவல் முதலிய எல்லாம் பொருந்தியிருந்தாலும்; அகவாழ்வு சீர் பெறாததாயின் பய னில்லை; புறவாழ்வு சீர்குலையும். மனநிறைவு பெறாதவன் இலட்சப் பிரபு ஆயினும், கோடி சீமானாயினும் அவன் இன்பங் காண முடியாது. ''மனம் போல வாழ்வு'' அமையும்.

இன்றைய உலகச் சூழ்நிலை

இன்றைய உலகச் சூழ்நிலையை நோக்குவோம். குபேரச் செல்வம் படைத்த பெரிய நாடுகளிலும் நிம்மதியில்லை. பிற நாடுகளின் நிம்மதியையும் அவை குலைக்கின்றன. அகவாழ்வை மறந்த புறவாழ்வு ஒருபோதும் நிம்மதி தராது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"போர்படைத்த ஊதியத்தால்,
போர்க்கருவி வல்லமையால்
போரே காணா ஊர்படைத்த
மக்கள் சிந்தும் உதிரத்தால்
உண்டாய அரசை ஓம்பிப்
பார்படைத்த செல்வமெல்லாம்
படைத்துவிட்டோம்;
பாரின் முதல் தலைவ னென்னும்
பேர்படைப்போம் இனியென்றும்
பேராசை நாடுகளைப்
பின்செல்வேம் யாம்"

பேராசையாற் புத்தி பேதம்; குலநாசம்; நண்பர்க்குச் சதி செய்தல் முதலிய தீமைகளும் பாதகங்களும் உண்டாகும். பேராசைக்காரர் இவற்றை நினைக்க மாட்டார். பேராசையால் தமக்கு வருகின்ற அழிவையுமே இவர்கள் சிந்திப்பதில்லை நிலத்தின் மீது ஆதிக்கம்; நீரின் கீழும் ஆதிக்கம்; ஆகாயத்திலும்; ஆதிக்கம்; ஆதிக்க வெறியன்றி அடைந்த பயன் ஒன்றுமில்லை.

தலைவிரித்தாடும் பேய்!

பேராசை பலதலையுடைய ஒரு பேய். இன்று உலகிலே பேராசைப் பேய் தலைவிரித்தாடுகிறது. வெண்தலைப் பேய்; செந்தலைப் பேய்? கருந்தலைப் பேய்; பலதலைப் பேய்! இவ்வாறு பலதலை விரித்துப் பாரெங்கும் ஆவேசம் ஆடுகிறது பேராசைப் பேய். 'பேராசை பெருந் தரித்திரம்' என்பதை நமது இலக்கியங்கள் நன்றாக வருணித்துக் கூறுகின்றன, இதை மறந்து ஆடுகிறது பேராசைப் பேய்.

ஓர் உதாரணத்தை இங்கே காண்போம். ஒருநாள் சாயந்தரம்; சிறு மழைத்தூறல்; மழை தூறிவிட்ட பின்பு வேடன் ஒருவன் வேட்டைக்குப் புறப்பட்டான். காட்டினுள்ளே சென்ற ஒரு புற்றின் பக்கத்திலே நின்றுகொண்டு ஏதும் அரவம் கேட்கிறதா என்று காதின் பக்கத்தே கையை வைத்து அவதானிக்கின்றான். அரவம் தூரத்திலில்லை; காலடியிலேதான்.

கறையான் கட்டியெழுப்பியபுற்று. ஆனால், அதனுள்ளே ஓர் அரவம் (பாம்பு) அத்துமீறிக் குடிகொண்டுவிட்டது. மக்கள் மத்தியிலும் இச்செயல் இன்று தாராளமாக நடந்துகொண்டேயிருக்கிறது. இதனால் நன்மையில்லை; தீமைதான். ஊர்க்குழப்பம். நாட்டுக் குழப்பம்; உலகமே குழம்புகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேடனுடைய செவியில் ஒரு மதயானை வரும் சத்தம் கேட்கிறது; வந்தேவிட்டது; அது வேடனையே நோக்கி வேகமாக வருகின்றது. தொடுத்தான் அம்பை; முழங்கால்களை மடித்துக் கொண்டு யானை மலைசாய்ந்தாற்போல் விழுகிறது. நாகம் (யானை) விழுந்துவிட வருகிறது மற்றொரு நாகம். கறையான் புற்றினுள்ளே அத்துமீறிக் குடியேறிய நாகம் அது. அந்த அரவம் அரவமிட்டுக்கொண்டே வேடனின் காலிற் சீறியடிக்கிறது; வேடன் பாம்புக்கும் விடுகிறான் அம்பை விடம் தலைக்கேறி வேடனும் விழுந்தான். அம்பு தலைக்கேறி அரவமும் மாண்டது. ஓரிடத்தில் மூன்று சவம். மரண விசாரணை அதிகாரி வரப்போகிறார்.

மரண விசாரணை அதிகாரி

உணவு விசாரணை செய்து கொண்டு அங்கே வந்த நரியொன்று திடீர் மரண விசாரணை அதிகாரியாக; மரண விசாரணை ஆரம்பமாகிறது. இது முக்கொலை; தற்கொலையல்ல, கொலைக்கு கொலை என்பர். ஆனால் கொலையாளிகளும் இறந்துவிட்டார்கள்; வழக்கில்லை; மரண விசாரணை இவ்வளவு போதும். நமது உணவு விசாரணையை நடத்துவோம்.

நரி சுற்றி வளைத்துப் பார்த்து விட்டுச் செல்கிறது. யானை ஆறு மாதத்துக்கு; வேடன் ஒரு வாரத்துக்கு; பாம்பு ஒரு நாளுக்கு நமக்கு உணவாகக் கிடைத்திருக்கிறது. ஆறு மாதம், ஒரு வாரம், ஒரு நாள்; இந்தக் கால எல்லையில் நமக்கு அலைச்சலில்லை; இருக்குமிடத்திலேயே உணவு கிடைக்கிறது. நடக்குக் காலம் நல்லது; ஒன்றை மறந்து விட்டேன்; உணவுப் பட்டியலில் ஓர் அனுபந்தம் சேர்க்க வேண்டியிருக்கிறது.

இதோ வேடனுடைய வில் கிடக்கிறது. மறந்துவிட்டோம், வில்லின் நுனிகளிலே இரண்டு தோல் துண்டுகள் கட்டியிருக்கின்றன. உணவுப் பட்டியலில் ஒரு திருத்தம்; ஆறு மாதம், ஒரு வாரம், ஒருநாள் உணவோடு இராப் போசனமும் ஒன்று சேர்க்கவேண்டும். தோல் துண்டுகள் அன்றைய இராப் போசனம். உண்மையில் இராத போசனந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தனை கொலைக்கும் காரணம் வேடனே; ஆனால் உயிருடன் இல்லை. வேடனுக்கு உடந்தையாயிருந்தது இந்த வில்லே. கொலைக் குற்றத்தின் பேரில் இந்த வில்லுக்கே தண்டனை வழங்கவேண்டும் எனத் தீர்மானித்தது போல நரி தோல் துண்டைக் கடிக்க; நாணறுந்து, வில் நிமிர்ந்து நரியின் வயிற்றைக் கிழிக்க! குடல் சரிந்து நரி இறந்தது. கொடுத்து வையாத நரி நல்ல உணவுகளிருக்க அற்பமான தோல் துண்டுக்கு ஆசைப்பட்டு எல்லா அனுபவங்களையும் இழந்து உயிரிழந்த நிகழ்ச்சி நல்லதோர் இலக்கியத்துக்கு உள்ளுறையாயிற்று

எலிப்புத்தி, நரிப்புத்தி

வீட்டில் எலி, காட்டில் நரி. எலியும் நரியும் இலக்கியத்தில் நல்ல இடம் பெற்றுவிட்டன. மனிதருள்ளும் எலியும் நரியும் போன்றவர்கள் - இருக்கிறார்கள். பட்டம், பதவி, பவிசு, நிரந்தர வருமானம் எல்லாம் இருந்தும்; நரி தோல்துண்டுக்கு ஆசைப்பட்டதுபோல இலஞ்சம், மறைமுக மோசடி முதலிய அற்ப அனுபவங்களில் மனம் வைத்து, பதவியிழந்து, வருமானமிழந்து மானமிழந்து, உயிருமிழந்து, இருந்த இடமும் தெரியாமல் மறைந்து போகிறார்கள். தப்பிப் பிழைத்தாலும் பொதுசனத் தொடர்பில்லாத ஒரு மூலையிலே ஒதுங்கிக் கிடக்கும் நிலைமைக்கு உள்ளாகின்றார்கள்.

எலிப்புத்தியும், நரிப்புத்தியும் சமூகத்தில் இல்லாமல் ஒழிய வேண்டும்; மனிதன் மனித புத்தியுடன் வாழ வேண்டும்; பேராசைகொண்டு அற்ப அனுபவத்திற்காகப் பெரிய அனுபவங்களை இழந்து போதல் கூடாது. தானும் மதிப்பிழந்து தான் வாழும் சமூகத்துக்கும் அவமதிப்பைத் தேடிக் கொடாமல் நல்லவண்ணம் வாழவேண்டும். என நரியின் மேலும், எலியின் மேலும் வைத்து நல்லிசைப் புலவர்கள் செய்த இலக்கியங்கள் தமிழ்மொழியில் உள்ளன. எளிமையும் இனிமையும் வாய்ந்த நரிவிருத்தம், புறநானூறு முதலிய நூல்கள் நமது குறைகளை நீக்கி மன நிறைவினைத் தரவல்ல படைப்புகளாகும். அக வாழ்வு அழகாக அமைந்தால், புறவாழ்வும் அழகு பெற்று அமைதியும் இன்பமும் தரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடகம் ஆடுவானேன்? நாமதை நாடுவானேன்?

மனிதன் மண்ணுலகிலே நல்ல வண்ணம் வாழ்வதற்காக; மனிதன் மனிதனாக வாழ்வதற்காக; மனிதனுக்காக நல்லறிஞர்கள் சட்ட திட்டங்களை வகுத்துத் தருகின்றார்கள். சட்டம் நிரந்தர விதி; திட்டம் நிரந்தர விதிக்கு அடக்கமாகச் செய்யப்படும் நடைமுறை. விதி சட்டத்துள் திட்டம் அடக்கம்; திட்டத்துள் சட்டம் அடங்காது. திட்டம் சட்டத்தை மீறுதல் கூடாது; மீறினாலும் அத்திட்டம் பெறாது. நிரந்தர விதியாகிய சட்டத்துக்கு அடக்கமாகக் காலத்துக்கு ஏற்றபடி புதிய திட்டங்களை வகுத்துக்கொள்ளும் உரிமை அதிகாரிகளுக்கு உண்டு. காலத்துக்கு ஏற்றபடி சட்டத்துக்கு அமைவாகத திட்டங்களை ஆக்கிச் செயற்படுத்தாவிடில், சட்டம் பாசிபடர்ந்த குட்டை போலாகி விடும்.

வேதாகமும் மிருதியும்

சமயத் துறையிலும் இதுவே நியதி. வேதாகமங்கள் சட்டம்; மிருதி முதலிய நடைமுறைக் கோட்பாடுகள் திட்டம். வேதாகமங்களை மாற்ற முடியாது. மிருதி முதலிய நடைமுறைத் திட்டங்களை வேதாகமச்சட்டங்களுக்கு அடக்கமாக மாற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியும். அனுட்டானம் என்கின்ற நாளாந்தக் கடமைகளைக் காலச் சூழ்நிலைக்கு ஏற்ப, சமயங்கள் பரந்து சென்று வழங்கும் தேசங்களுக்கு ஏற்ப; அத்தேசங்களின் ஆசாரங்களுக்கேற்ப மாற்றி அமைத்துக்கொள்ளாவிடின் சமயச் சட்டமும் பாசி படர்ந்த குட்டையே,

சமூகத்திலும் சரி; சமயத்திலும் சரி; மொழியிலும் சரி; இட்டங்களைக் கழுதை போலாக்கி விடக் கூடாது. கழுதையின் முதுகில் எவ்வளவு பாரமேற்றினாலும் அது பொறுமையிழக்காது. வேண்டிய வேண்டியபடி அதைத் திசை திருப்பலாம். இந்தமாதிரி எல்லாம் சட்டதிட்டங்களுடன் விளையாடக் கூடாது. ஒரு நியதி, ஒரு வரம்பு. இவைகளை நாம மீறும் போது மனிதனுக்காக உண்டாக்கப்பட்ட சட்டமோ, இட்டமோ மக்களை அதிகம் பாதிக்கும். சட்டட்திடங்கள் கழுதை போலாகிவிடும்.

சமூக வாழ்விலும், சமய வாழ்விலும் நாம் தேங்கிக் கிடக்கும் குட்டை போலாகி விடாமல், புது நீரோடு பாய்ந்து வருகின்ற நதிபோல் எங்கும் செல்ல வேண்டும். மலை நிலத்தில் ஊற்றெடுத்த நதியானது, பாலை, முல்லை, மருதம், நெய்தல் ஆகிய ஏனைய நிலங்களையும் தழுவிச் செல்கின்றது. அங்குள்ள இயல்புகளை மாற்றியமைக்கின்றது. அவற்றை வளம் படுத்துகின்றது. இதனால், நதியின் தனித் தன்மை மாறுபடுவது இல்லை.

தழுவி வாழ்வதில் வளம்

நமது சமூகம், சமயம், மொழி என்பன, பிற சமூகங்களோடும், பிற சமயங்களோடும் பிற மொழிகளோடும் தழுவாமல் தனித்து நிற்க முடியாது. அவற்றோடு தழுவி வாழ்ந்து தம்மை வளம்படுத்திக்கொள்ள வேண்டும். பிற சமூகத்தையும், பிற சமயத்தையும் பிற மொழியையும் நாம் வளம்படுத்தவும் வேண்டும். ஆனால் நமது சமூகம் தனது தனித்தன்மையை இழத்தல் கூடாது. நமது சமயம் தனது தனித்தன்மையை இழத்தல் கூடாது; நமது மொழி தனது தனித்தன்மையை இழத்தல் கூடாது. வடமொழிச் சங்கீதத்துடன் தோழமை கொண்ட நமது தமிழிசை; வடமொழியுடன் தொடர்பு கொண்ட நமது தமிழ்ப் பிள்ளையாகிய கன்னடம், தெலுங்கு என்னும் மொழிகள் தமது தனித்தன்மைகளை இழந்து உருவ மாற்றம் பெற்ற உதாரணங்களையும் நாம் மறப்பதற்கில்லை. நாம் ஒதுங்கி நிற்பதும் சரியல்ல; உருவ மாற்றம் அடைவதும் சரியல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று நமது நாட்டிலே நாடகக் கலை வளர்ச்சியடைந்து வருவதை நாம் காண்கின்றோம். 'நமது நாடு தமிழ் நாடு. கிராமச் சூழல்களிலும், நகரச் சூழல்களிலும் திகழ்கின்ற வாழ்க் கையின் பிரதிபலிப்பைக் காட்டுவது மாத்திரம் நாடகமன்று.

இவற்றின் நல்ல அம்சங்களிலே கவர்ச்சி ஊட்டுவதும், தீய அம்சங்களிலிருந்து சமூகத்தை மீட்பதும் நாடகக்கலையை வளர் ச்சியடையச் செய்வதுமே நாடகத்தின் நோக்கமாய் அமைந் தாலும் எல்லாவற்றினும் மேலாக நமது தனித்தன்மை நாடகத் தின் வாயிலாகப் பாதுகாக்கப் படாவிடின் நாடகம் தனது இலக்கிய பிரதான பகுதியில் தவறிவிட்டது என்றே சொல்ல வேண்டும்.

நாடக பாத்திரங்கள் தப்பாத உத்தரவாதம் பூண்டவர் கள். அவர்கள் பூணுகின்ற வேடங்களே அந்த உத்தரவாதம். நாய் வேடம் பூண்டால் குலைத்தே தீரவேண்டும். பூணும் வேடத்துக்கு எற்ப நடிக்க வேண்டும். நமது நாட்டிலே வடக் கிலும், கிழக்கிலுமுள்ள தமிழ் மக்களின் நடை உடை பாவனை களையும், பேச்சையும் நடிகர்கள் நினைவில் வைத்துக் கொள்வது அவசியம்.

தென்னிந்திய மோகம் !

யாழ்ப்பாணத்துக் கிராமவாசி இந்தியக் கிராம மொழி யிற் பேசுகின்றான்; கிழக்கிலங்கைக் கிராமவாசியும் இந்திய உச்சரிப்பையே உச்சரிக்கின்றான். நாடகத்திலே கிராமம் என் னும் போது நம் நாட்டுக் கிராமங்களை மறந்து விடுகின்றனர். நமது தமிழ்க் கிராமத்து ஆண் அல்லது பெண் இந்தியத் தமிழ் மக்கள் போல் உச்சரித்து நடிப்பது செவிக்கும் மனத்துக்கும் வருத்தம் தருகின்றது. இந்தியத் தமிழ்க் கிராமவாசி யாழ்ப் பாணத் தமிழ்க் கிராமவாசி போலவோ, மட்டக்களப்புத் தமிழ்க் கிராமவாசி போலவோ நடிப்பதில்லை. நம் நடிகர் களுக்கு மாத்திரம் ஏன் இந்தத் தென்னிந்திய மோகம்? நமது உச்சரிப்பின் தனித் தன்மை, தமது கிராமப் பேச்சின், வாழ்க் கையின் உண்மையான பிரதிபலிப்புப் பெரும்பாலும் நமது நாடகங்கள் மூலம் வெளிப்படுவதைக் கேட்கவோ பார்க்க வோ கிடைப்பதில்லை. நாடகம் என்னும் போது நம்மைப் பிடித்துக்கொள்ளும் தென்னிந்திய மோகம் நம்மைவிட்டு ஒழிய வேண்டும். நமது தனித்தன்மை வாழவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விபுலானந்த அடிகளார்

முத்தமிழின் வடிவமெனத் தோன்றி மேற்கு
மொழிக்கடலும் வடகடலும் முறையினாடித்
தத்துவநன் னெறியுணர்ந்து சாந்திகண்ட
தவமுனியை யிசைத்தமிழின் தந்தையென்ன
வித்தகயாழ் நூலருளும் விபுலானந்த
வியன்மணியை யீழமணி விளக்கை நாளும்
சித்தமதில் மகிழ்ந்தேற்றிப் பத்திசெய்து
புத்திதெளிந் துண்மைவழிச் செல்வோம் யாமே.

ஈழ நன்னாட்டிலே கிழக்கு மாகாணத்தின் தலைமை நிலையமாயமைந்துள்ள மட்டக்களப்புப் பட்டினத்தின் தென் திசையிலே இருபத்தெட்டுக் கல்தொலையிலே காரைதீவு என்னு மோர் பேரூர் உள்ளது. கீழ்பாலில் தெங்கும் புங்குந் தாழை யுந் தழைத்த நெய்தல்ங்கானலும், மேல்பாலிற் பொங்குநீர்ப் பொய்கையும் செங்கதிர்க் கழனியும் பொலிந்த தண்பணை மருதமுஞ் சூழ்ந்து இயற்கையன்னையின் இருப்பிடம்போலிலங் கும் இப்பேரூரைக் காரேறு மூதூர் என வழங்குவர் நம் அடி களார்.

பதியெழுவறியாப் பழங்குடி கெழுமிய இம்மூதூரானது பண்டு தொட்டே தமிழும் தமிழ்ப் பண்பாடும் நிலைபெற்றுள்ள ஒரு செழும்பதியாகும். இந்நல்லூரின் கண்ணே 1892 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 27 ஆந் தேதிக்குச் சரியான கர வருடம் பங்குனித் திங்கள் பதினாறாந் தேதி ஞாயிற்றுக் கிழமை செங்கதிரியத்துச் சீர்சாலடிகளார் மங்கள நிகழ்ச்சிகள் வயங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கித்தோன்ற மண்மிசைப் பிறந்தார். இவரது தந்தையார் பெயர் சாமித்தம்பி; தாயார் கண்ணம்மையார்; பிள்ளைத் திருநாமம் மயில்வாகனம்.

தமது ஐந்தாவது வயதிலே மையோலை பிடித்த மயில் வாகனத்துக்குக் காரைதீவிலுள்ள திரு. நல்லரத்தினம் ஆசிரியர் எழுத்தறிவித்த இறைவனானார். எதிர்காலத்தில் உயர்ந்த அறிவு படைத்தவராவதற்குரிய மயில்வாகனத்தின் உருவுந் திருவுங் கண்ட இரு முதுகுரவரும் நல்லோரும் இவரைப்பத் தாவது வயதிலே காரைதீவுக்கு வடபால் மூன்று 'மைல், தொலையிலுள்ள கல்முனைப் பட்டினத்துக்கு ஆங்கிலமுந் தமிழுங் கற்றற் பொருட்டு அனுப்பினார்கள். அக்காலத்தில், கல்முனை மெதடிஸ்த சங்க ஆங்கில கலாசாலையிலே ஆங்கிலமுந் தமிழு மாகிய இரு மொழியும் வல்ல நல்லாசிரியரொருவரிருந்தார். அவர் பெயர் திரு. க. குஞ்சித்தம்பியென்பது. நமது மயில் வானம் இவ்வாசிரியரின் அன்பும் ஆதரவும் பெற்றுக் குருகுல வாழ்க்கைக்கும் உரியவரானார். அங்கு தமிழிலும் ஆங்கிலத் திலும் தக்க பயிற்சி பெற்று நுண்மதியும் நுழைபுலமுடைய உத்தம மாணாக்கரெனப் பாராட்டப்பெற்ற மயில்வாகனம், பின்னர் மட்டக்களப்புப் பட்டினத்திலுள்ள அர்ச். மைக்கேல் கல்லூரியில் ஒரு மாணாக்கரானார். அங்குள்ள பேராசிரியர் களுள்ளே உயர்திரு. வொனல் சுவாமியார் குறிப்பிடத்தக்க வர். இவர் கூரிய அறிவும், நேரிய போக்கும், சீரிய குணமும் வாய்ந்த ஒரு கத்தோலிக்க குரவர்; கணித நூல் விற்பன்னர்; அளவுகடந்து எவரையும் புகழாதவர். இத்தகைய பேராசிரியர் நமது மயில்வாகனத்தின் கணிதத் திறமையைப் புகழ்ந்து பேசும் போது தமது நெடுங்கால ஆசிரிய அனுபவத்தில் மயில்வாகனத் தைப்போன்ற அதி தீவிர மதிபடைத்த ஒருமாணவனைக் கண்ட தேயில்லையெனக் கூறுவார். தம்மினுஞ் சிறந்த கணித மேதை யாக மயில்வாகனம் விளங்குவதை எதிர்காலத்திற் காண்பீர் கள் எனவும் உரைப்பார். இத்தகைய சற்குரவரிடம் கல்வி கற்கும் வாய்ப்பினைப் பெற்ற நமது மயில்வாகனம் 1908 ஆம் ஆண்டிலே தமது பதினாறாவது வயதிலே கேம்பிறிஜ் சீனியர் பரீட்சையில் முதல் வரிசையிற் சித்தியெய்தினார்.

இங்கே கலைபயில்கையில் மயில்வாகனம் தமது விடுமுறை காலங்களைத் தமிழும் வடமொழியும் கற்பதிலே கழித்துவரலா னார். அக்காலத்துக் காரைதீவில் வாழ்ந்துவந்த சைவக் குரவ ராகிய வித்துவான் பு. பொ. வைத்தியலிங்க தேசிகர் இவருக்குத் தமிழ்மொழியும் வடமொழியும் அறிவுறுத்தி மேற் படிப்புக்கு வழிவகுக்கலானார். இதனால் மயில்வாகனத்தின் உள்ளத்தே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயல்பாக அமைந்துகிடந்த கவிப்புலமையும் கல்வியறிவுடன் மிளிர்வதாயிற்று.

பின்பு மயில்வாகனம் 1911 ஆம் ஆண்டு கொழும்புமாநகர் ஆங்கில ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியிற் புகுந்து 1912 ஆம் ஆண்டு முடிவில் நல்லாசிரியராக வெளிவந்தார். பயிற்சிக் கல்லூரியிற் கற்ற பாடங்கள் இவருக்குக் கிடைச்சியைச் சுமப்பதுபோல் எளிதாயிருந்தமையால் உயர்தரத் தமிழ் கற்பதில் இவர் நாட்டங்கொண்டார். கொழும்பிலே தமிழ்ப் பேரறிஞர்களாக அக்காலத்துத் திகழ்ந்த தென்கோவைக் கந்தையபிள்ளை, முதலியவர் சிற். கைலாசபிள்ளை, சி. தாமோதரம்பிள்ளை ஆகியோரிடத்துச் சங்க இலக்கியங்களையும், தொல்காப்பிய மீறாகவுள்ள இலக்கணங்களையும் பாடங்கேட்டுவரலானார். இக்காலத்து இவரைச் சாமிதாச மயில்வாகனனென வழங்குவர்.

பின்னர் மட்டுமாநகருக்குத் திரும்பி ஓரிரண்டாண்டு ஆசிரியத் தொழில் புரிந்தார். மாணாக்கர் மனப்பான்மை இவரை ஆட்கொண்டுவிட்டது. மீண்டும் கொழும்புமாநகர் சென்று பொறியியற் கல்லூரி (Technical College) யையடைந்து 1916 ஆம் ஆண்டில் விஞ்ஞானக் கலையில் 'டிப்ளோமா' ப் பட்டமும் பெற்றார். இவ்வாண்டிலேயே மதுரைத் தமிழ்ச் சங்கத்துப் பண்டிதப் பரீட்சையிலும் சித்திபெய்திப் பண்டித மயில்வாகனனாரெனப் பாராட்டப் பெற்றார்.

1917 ஆம் ஆண்டிலே பண்டித மயில்வாகனனாருக்கு யாழ்ப்பாணத் தொடர்பு வாய்ப்பதாயிற்று. அங்குள்ள சம். பத்திரிசியார் கல்லூரியில் விஞ்ஞான போதகாசிரியாகப் பதவியேற்கலானார். தமது சொந்த முயற்சியின் பெறுபேறாக அகேயாண்டில் இலண்டன்மாநகர்ப் பல்கலைக் கழகத்து 'விஞ்ஞான கலாகுமாரன்' என்னும் பீ. எஸ். சீ. பட்டமும் பெற்றார். 1920 ஆம் ஆண்டிலே யாழ்ப்பாணத்து மானிப்பாய் இந்துக் கல்லூரியின் அதிபருமானார். விஞ்ஞானத்துறையிலும், இலக்கியத்துறையிலும், சமயத்துறையிலும அரப்பரிய சேவை செய்து அறிவொளியாகவும், தியாகத்தின சின்னமாகவும விளங்கிய பண்டித மயில்வாகனனாரின் துறவுள்ளம் யோகர் சுவாமிகளின் கூட்டுறவு காரணமாக வளர்ச்சியுற்றுப் பக்குவநிலை யடைவதாயிற்று.

இந்நிலையிலே 1922 ஆம் ஆண்டு பண்டிதரின் வாழ்க்கையிலே பெரியதோர் நிறைவுண்டாயிற்று. பொறிகள் மனத்தின் வழி நிற்க; மனம் புத்தியின் வழி நிற்க; புத்தி ஆன்மாவுக்கு அரண்செய்து நிற்க; காலமும் இடமும் வாய்க்கப்பெற்றமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யால், பண்டித மயில்வாகனனார் சென்னை ஸ்ரீராமகிருஷ்ண சங்கத்தின் தலைவர் உயர்திரு. சர்வானந்த சுவாமிகளின் அருள்நோக்கத்தால் உலக இன்பங்களில் உவர்ப்புற்றுத் துறவற நெறியிற் புகுந்தார். சென்னை ஸ்ரீராமகிருஷ்ண மடத்துத் திருக்கூட்டத்திற் சேர்ந்து பிரபோத சைதன்னியர் என்னும் பிரமசரியத் திருநாமமும் பெற்றார். இவரது துறவின் அதி தீவிர பக்குவத்தையறிந்த ஸ்ரீராமகிருஷ்ண சங்கத்தின் தலைமைப்பீடாதிபதியும் அருள் வள்ளலுமாகிய உயர்திரு. சிவானந்த சுவாமிகள் 1924 ஆம் சித்திரை மாதத்துப் பூரணைத் திருநாளில் இவருக்குக் காவியுடை வழங்கி ஞானோபதேசஞ் செய்து, சுவாமி விபுலானந்தர் என்னுந் தூய நாமமுஞ் சூட்டிச் சங்கத் துறவிகளுள் ஒருவராக்கி அருள் செய்தார்.

இருபதாம் நூற்றாண்டின் ஈழநாட்டுச் சோதியாகிய சுவாமி விபுலானந்தர் 1925 ஆம் ஆண்டு பாரத நாட்டிலிருந்து மீண்டு தமது தாய்நாட்டையடைந்து தன்னலமற்ற சேவையை ஆரம்பிக்கலானார். ஸ்ரீராமகிருஷ்ண சங்கத்தின் கிளைத் தாபனமொன்றை ஈழநாட்டிலே நிறுவி அதன் ஆதரவிலே பல கல்விச் சாலைகளை அமைத்தும், மாணவரில்லங்களை நிலைநாட்டியும், திருமடங்களைக் கட்டியும் தருமபரிபாலனஞ் செய்து வந்தார். அடிகளார் கிழக்கிலங்கையில் நிறுவிய கல்வி நிலையங்களுள்ளே கல்லடி - உப்போடையிலுள்ள சிவானந்த வித்தியாலயம் முதன்மை வாய்ந்தது. இதன் பக்கத்தே மாணவரில்லமும், துறவாச்சிரமமுஞ் சேர்ந்து ஈழநாட்டின் தபோவனம் போற்காட்சியளிக்கின்றது:

திருக்கோணமலை இந்துக் கல்லூரியும், வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயமும், புளியன்தீவு விவேகானந்த வித்தியாலயம் என்னும் மகளிர் கல்லூரியும் குறிப்பிடத்தக்க உயர்தர ஆங்கில கலாசாலைகளாகும். பல்வேறு தமிழ்க் கல்லூரிகளும் ஆங்காங்கே அடிகளாரின் நன்முயற்சியால் தாபிக்கப்பட்டுள்ளன. பழைமையில் முளைத்துப் புதுமையில் வளர்ந்து, பழைமை கலந்த புதுமை மலர்ந்து அறிவுக் கனிகளைத் தருகின்ற இத்தாபனங்களெல்லாம் அடிகளாரின் திருவுருவம்போற் காட்சியளித்து விளங்குகின்றன.

அதன் பின்னர் 1931 ஆம் ஆண்டு தொடக்கம் அடிகளார் சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் முதற்றமிழ்ப் பெரும் பேராசானாக மூன்று நல் யாண்டுகள் தொண்டுபுரிந்தார். 1937 ஆம் ஆண்டு திருக்கைலாச யாத்திரை செய்து திரும்பினார். 1939 ஆம் ஆண்டில் இமயமலையடிவாரத்திலுள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாயாவதி ஆச்சிரமத்திலே 'பிரபுத்த பாரத' என்னும் உயர்தர வேதாந்த சஞ்சிகையின் ஆசிரியராயிருந்து அறிவொளி பரப்பினார் 1943இல் ஈழநாட்டுப்பல்கலைக் கழகத்தின் முதற்றமிழ்ப் பெரும் பேராசிரியராயமர்ந்து தமது உடற்பொறை நீங்கும்வரையும் உயர்கலைத் தொண்டு பூண்டார்.

1947 ஆம் ஆண்டு தமிழ்நாடு சென்று, திருக்கொள்ளம் பூதூர் ஆளுடைய பிள்ளையார் சந்நிதியிலே சைவத்திருவும், தமிழ்த்திருவுமுடைய நல்லோரது அவைக்குழாத்தில் தமது ஒப்பு யர்வற்ற யாழ்நூலை அரங்கேற்றிய உயர் திருப்பணியினை வைகாசித் திங்கள் 6 ஆம் 7 ஆந் தேதிகளில் நிறைவேற்றிய துடன், ஈழநாடு திரும்பித் தமது அவதார நோக்கம் முற்றுப் பெற்றமையாற் போலும் 1947 ஆம் ஆண்டு ஆடி (July) மாதம் 19 ஆந் தேதி அமைதியோடு கூடிய நள்ளிரவில் அருட் சோதியுட் கலந்தார். சுவாமிகளின் புனித சமாதி சிவானந்த வித்தியாலயத்தின் பக்கத்தே அழகாக அமைந்திருக்கின்றது.

## அடிகளார் இயற்றிய நூல்கள்

1. யாழ்நூல்: இது பழந்தமிழ் இசைக்கலை நுட்பங்களை ஆராய்ச்சி முறையாக விரித்து விளக்கும் ஒரு பெருநூல் சிலப் பதிகாரத்திலே தலை மயங்கிச் சிதறிப் பரந்துகிடந்த பழந்தமிழ் இசை மரபுகளையெல்லாம் ஒருவழிப்படுத்தி, நிரல்பட நிறுத்தி விளக்குகின்ற இந்நூல், பண்டைத் தமிழரின் இசைக் கருவி களாகிய வில்யாழ், பேரியாழ், மகரயாழ், செங்கோட்டியாழ், சகோடயாழ் என்பவற்றுள் முன்னைய நான்கினையும் பொது வாகவும், சகோடயாழைச் சிறப்பாகவும் விரித்துக் கூறுவதால் யாழ்நூல் என்னும் பெயர்பெற்றது. சகோடயாழ் என்பது, ச+கோஷ+யாழ்; நல்ல ஓசையையுடைய யாழ் எனப் பொருள் படும் ஒரு தொடர்மொழி. இது செம்முறைக் கேள்வி யென்னும் பழந்தமிழ்ப் பெயரின் மொழிபெயர்ப்பாக வடமொழியில் வழங் கப்பெறுவது. ஆயிரம் ஆண்டுகளாக மறந்துபோன இதன் வடி வத்தினையும், இயல்பினையும், இயக்கத்தினையும், மற்றைய யாழ்களின் வடிவங்களையும், கணித நுட்பத்தை ஆதாரமாகக் கொண்டு தமிழ்மொழி. வடமொழி இசைநூல் முடிபுகளை யெல்லாம் ஒழுங்குகண்டு, ஒப்பநோக்கித்தமது அறிவாராய்ச்சித் திறமையும், ஞாபகசக்தியும் துணையாக அடிகளார் இனிது வெளிப்படுத்தித் தமிழுலகுக்கு உபகரித்திருக்கின்றார்கள். தமிழி சையாகக் கடலைக் கடப்போர்க்கு இந்நூல் ஒரு தெப்பமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. மதங்க சூளாமணி (1): இது நாடக இலக்கண அமைதிகூறும் ஒரு நூல். மதங்கர் என்பது நாடக ஆசிரியர் எனவும், சூளாமணி என்பது சிரோரத்தினம் எனவும் பொருள்தரும். இத்தொடர் ஆங்கில நாடக ஆசிரியராகிய ஷேக்ஸ்பியரைக் குறிக்கும். இந்த உலகத்தையே ஒரு நாடக மேடையாகச் செதுக்கிக் காட்டிய ஷேக்ஸ்பியரின அற்புதச் சிற்பக் காட்சியில் ஈடுபட்ட அடிகளார் அவரது பெயரைச் செகசிற்பியார் எனத் தமிழ் வடிவத்தில் அமைத்துத் தந்த நுட்பமும் இங்கே நினைந்து மகிழ்தற்குரியது. இந்நூலில், தமிழ்மொழி, வடமொழி நாடக அமைப்பையும், ஆங்கில நாடக அமைப்பையும் ஒப்பநோக்கிக் கண்ட முடிபுகளை அடிகளார் ஒருங்கே அமைத்துக் காட்டுகின்றார். அடிகளாரின் மொழிபெயர்ப்புத் திறமைக்கும், செய்யுள் நடையின் செம்மைக்கும் இந்நூல் ஓர் உரைகல் போன்றது. மதுரைத் தமிழ்ச் சங்கம் இதைப் பதித்து வெளியிட்டுள்ளது. அச்சங்கப் பண்டித பரீட்சைக்கும் இஃதோர் பாடமாகும்.

3 நடராஜ வடிவம்: இது திருவருள் வடிவாகிய ஐந்தொழில் களையும் சுருக்கமாக விளக்கும் ஒரு சிறுநூல்.

4. உமாகேசுவரம் : இறைவன் மாதொருபாகனாயமைந்துள்ள நுட்பத்தினை விளக்கும் ஒரு சிறு நூல்.

5. கலைச்சொல்லகராதியின் ஒரு பகுதி: விஞ்ஞானப் பகுதியின் பௌதிகப் பொருள் சம்பந்தமான மேல்நாட்டுப் பதங்களுக கேற்ற தமிழ்ச் சொற்களைக் கொண்டது; சொல்லாக்கக் குழுவுக்குச் சுவாமிகளே பொதுத் தலைவராய்ச் செயலாற்றினார். சென்னைப் பல்கலைக் கழகத்தால் இவ்வகராதி வெளியிடப் பட்டுள்ளது.

6. மொழிபெயர்ப்பு நூல்கள்: கருமயோகம், ஞானயோகம், விவேகானந்த ஞானதீபம், நம்மவர் நாட்டு ஞானவாழ்க்கை, விவேகானந்த சம்பாஷணை முதலாகப் பலவுள்ளன.

7. கட்டுரைகள்: ஆங்கிலவாணி, மேற்றிசைச் செல்வம், ஆங்கில இலக்கிய அமைப்பும் ஆக்கமும் (தமிழ்), தமிழ் இலக்கிய அமைப்பும் ஆக்கமும் (ஆங்கிலம்) முதலிய இன்னும் நூற்றுக்கணக்கானவை உள்ளன.

8. செய்யுள்கள்: குருதேவர் வாக்கியம் முதலிய பிரபந்தங்கள் பலவும், ஆயிரக்கணக்கான தமிழ்ப் பாடல்களும்.

---

(1) மறு வெளியீடு: பிரதேச அபிவிருத்தி அமைச்சு - 19-7-1987.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விபுலாநந்த அடிகளாரின் கல்வித் தொண்டு

இருபதாம் நூற்றாண்டின் ஈழநாட்டுச் சோதியாகிய விபுலானந்த அடிகளார் ஈழ நாட்டிற்கும், தென்தமிழ் நாட்டிற்கும் பொதுவாகவும் தாம் பிறந்த மட்டக்களப்பு மா நாட்டிற்குச் சிறப்பாகவும் ஆற்றியுள்ள கல்வித் தொண்டு பற்றி எழுதுவதென்றால் அது ஒரு கட்டுரையில் அடங்காது. பல நூல்கள் எழுதி விமரிசனம் பண்ணுதற்கு ஏற்றதாக அது விரிவு பெற்றுள்ளது.

1892ம் ஆண்டு பிறந்தது, 1911ம் ஆண்டு வரை மாணாக்கராயிருந்து, 1912 தொடக்கம் 1947 முடியவுள்ள காலப்பகுதியில் தமிழ், ஆங்கிலம், வடமொழி முதலிய பன்மொழிப் புலமையால் அறிவொளி பரப்பிய ஈழநாட்டுச் சோதியின் கல்வித் தொண்டு பழமையிற் புதுமையும் புதுமையிற் பழமையும் காட்டிய அதியற்புத சாதனையை நிலைநாட்டியுள்ளது.

மயில்வாகனம் என்னும் பிள்ளைப் பெயர் பெற்ற அடிகளார் 1912ம் ஆண்டுக்கும் 15ம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் சாமிதாச மயில்வாகனனார் என அழைக்கப்பெற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றார். 1916ம் ஆண்டு தொடக்கம் 22ம் ஆண்டு வரையுள்ள காலப் பகுதியில் பண்டித மயில்வாகனனார் எனப் பெயர் பெற்று விளங்கினார். 1922ம் ஆண்டு தொடக்கம் 24ம் ஆண்டு வரையும் ஸ்ரீ ராம கிருஷ்ண சங்கத்துப் பிரமச்சாரியாகவிருந்து பிரபோத சைதன்னியர் எனும் புனித நாமத்தால் வழங்கப் பெற்றார். 1925 தொடக்கம் விபுலாநந்த அடிகள் என்னும் துறவுப் பெயரால் தமக்கென வாழாப் பிறர்க்குரியாளராய்த் தம்மை மக்களுக்காக அர்ப்பணம் செய்து, யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்னும் தியாக சிந்தை பூண்டவராக, 1947ம் ஆண்டு வரை தன்னலங் கருதாத சேவைபுரிந்து, இறந்தும் இறவாதவராக உலக மக்களின் உள்ளங் கலந்து வாழ்கின்றார்.

நீடுவாழ் விபுலாநந்த அடிகளாரின் கல்வித் தொண்டு 35 ஆண்டுகள் கொண்ட காலப்பகுதிக்கு உட்பட்டதாயினும், அது ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளையும் கடந்து அப்பாற் சென்று நிலைநாட்டிய சாதனைகளைக் கொண்டது. மிகுந்த சக்திவாய்ந்த இதனைச் சுருக்கமாக இங்கே எடுத்துக் கூறுதற்கு ஒருவாறு முயல்கின்றேன்.

அடிகளார் பயிற்றப்பட்ட ஓர் ஆங்கில ஆசிரியர், பொறியியற் கலையில் 'டிப்ளோமா' பெற்றவர். இலண்டன் பல்கலைக் கழகத்து விஞ்ஞானப் பட்டதாரி, மதுரைத் தமிழ்ச் சங்கத்துப் பண்டிதர். இத்தனை வாய்ப்புகளையும் பெற்றிருந்த அடிகளார் அவற்றைத் துணையாகக் கொண்டு இல்லற வாழ்க்கையிற் பிரபலம் பெற விரும்பாது. துறவு நெறியிற் புகுந்தமையால் தேசிய சமுதாயத்தை நமது கல்விமான்கள் உருவாக்கித்தர வேண்டும் என்பதில் மிகவும் ஆர்வங்கொண்டு உழைத்தவர். நமது மயில்வாசனனார். அன்றியும் தேசீய தாகத்துடன். கல்விக் கொள்கையிலே புரட்சிகரமான மாற்றம் செய்வதற்காகப் பாடுபட்டவர். உதவாத கல்வியில் நின்று விடுதலை பெற்று உதவும் கல்வியை நாட்டு இளைஞர்களுக்கு ஊட்டிவைத்தல் என்பது அவரின் புதிய திட்டமாகும் எல்லா அறிவும் மேற்கிலிருந்து தான் இறக்குமதியாக வேண்டும் என்கின்ற கொள்கையை அவர் அடியோடு வெறுத்தார். உதவாத கல்வியை நாம் சந்ததி சந்ததியாகப் பெற்று அன்னியர்க்கு உழைத்தது இனிப் போதும். நமக்கு வேண்டியது கையாலாகுங் கல்வியே. கல்வி, தேடு கல்வியாய் அமைய வேண்டும். பொருளைத் தேடுங் கல்வி, கடவுளைத் தேடுங் கல்வியென அது அமைய வேண்டுமென அவர் கொண்டிருந்த எண்ணம் இன்று செயல்முறைக்கு வந்திருப்பதைக் கண்டு மகிழ்வு கொள்வதற்கு அவர் இங்கில்லை, எனி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னும் ஆவி வடிவிலேனும் நிச்சயமாக அவர் இதைக் கண்டு மன நிறைவு கொள்ளாமலிரார்.

1922ம் ஆண்டு வரை பண்டித மயில்வாகனனார் என வழங்கிவந்த நிலைமாறி, உலகியல் நெறிவழியே நின்று நேர்மையாகவும், கூர்மையாகவும், சீர்மையாகவும் கலைத் தொண்டு செய்துவந்த நிலைமாறி, துறவு நெறி பூண்டு 1925ம் ஆண்டு தொடக்கம் அருள்நெறியை நோக்கி விபுலானந்தரின் கல்வித் தொண்டு விரிவடையலாயிற்று. அவரது கல்வி, செல்வம், அறிவு ஆற்றல் எல்லாம் உலகுக்கு உரிமையாகிவிட்டன.

1922 தொடக்கம் 25 வரையுள்ளகாலப் பகுதியில் அடிகளாரின் அறிவாற்றல், சிந்தனா சக்தி முதலிய உள்ளமைப் புகழும், உடல் நிலையும் புதிய சக்தியும் வளர்ச்சியும் பெற்று ஆராய்ச்சித்துறையில் ஆழ்ந்து, அகன்று, நுண்ணிதாகச் சென்று புதிய சாதனைகளை நிலைநாட்டும் திண்மைபெற்றுத் திகழ்ந்தன.

1925 ஆண்டு தொடக்கம் 1947 வரை அடிகளார் செய்து நிலைநாட்டிச் சென்ற கல்வித் தொண்டுகள் குறிப்பிடத்தக்க சிறந்த அம்சங்கள் உடையனவாகும். யாழ்ப்பாணத்தில் ஆறுமுகநாவலர் காலத்தில் சமூகம் அடைந்திருந்த இரண்டும் கெட்ட நிலை விபுலாநந்தர் ஈழம் திரும்பிவந்த காலச் சூழ்நிலையிலே மட்டக்களப்புத் தமிழ்ச் சமுகத்திலும் நன்றாக வேரூன்றிக்கிடந்தது. யார் உண்மைச் சைவர்? யார் உண்மைக் கிறிஸ்தவர் என்பது அறியமுடியாதபடி சமயவாதிகளிடையே அரசியற் செல்வாக்கே தலைவிரித்தாடிய காலத்தில் விபுலாநந்த சுவாமிகள் தமது கல்விப்பணியை ஆரம்பிக்கலானார்.

சுவாமிகள் சமூகத்தைப் பிடித்திருந்ததொரு பெரிய நோயை முன்பு களைந்தெறிந்தார். அதுதான் அச்சம் என்கின்ற நோய். மேல் நாட்டு மிஷனரிகளையும், அவர்களுக்குப் பக்கபலமாக ஆதரவளித்து நின்ற வெள்ளை அதிகாரிகளையும் கண்டு தமிழ்ச் சமூகம் அஞ்சிக்கிடந்த அவலப் பிணியினை மாற்றி, மக்களிடையே அன்புப் பிணைப்பினை உண்டாக்கி வைத்து, மனித உரிமைகளைப் பாதுகாத்த ஆரம்பப் பணியானது அடிகளாரின் கல்வித் தொண்டுக்கு அத்திவாரமாக அமைந்தது. அதிகாரத் திமிர்பிடித்திருந்த அதிகாரிகளின் உள்ளம் உணர்ச்சி பெற்று அன்பில் நெகிழ்ந்தது. பரஸ்பர நல்லெண்ணத்தை வளர்ப்பதிலே அடிகளார் வெற்றி பெற்றார். அடிகளாரின் சேவை அப்பழுக்கில்லாத புனித சேவையாய் திகழ்ந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமையால் எல்லா மதத்தினரும் இனத்தவரும் தம்முள்ளே பேத உணர்ச்சி நீங்கப் பெற்று ஒருமுகமாக வாழும் சமூக நிலைமை நாட்டில் ஏற்படலாயிற்று. இதனால், அடிகளாரின் கல்வித் தொண்டு தமிழர், கிறிஸ்தவர், முஸ்லிம், பௌத்தர் முதலிய எல்லோரையும் இணைத்து வைத்த ஒருமைப்பாட்டுக்கு ஒரு வித்தாக வேரூன்றியதை இந்த நாடு மறக்க முடியாது. மறக்கவும்படாது.

1925ல் நாட்டில் இருள் நீங்கி, ஒளி பரந்து மக்களிடையே கல்வித் துறையில் ஒரு உத்வேகம் உண்டாயிற்று. சைவப்பள்ளி களைத் தாபிப்பதும், அவற்றுக்கு அரசினர் நன்கொடை வழங்கு வதும் மறைமுகமாகப் பாதிக்கப்பட்டு வந்த நிலை மறைந்து போயிற்று.

1925ம் ஆண்டிலே மட்டக்களப்பு காரைதீவு, ஆனைப் பந்தி, மண்டூர், ஆரையம்பதி என்னும் ஊர்களிலுள்ளசைவப் பாடசாலைகளை நடத்தும் பொறுப்பு விவேகானந்த சபையி னரால் அடிகளாரிடம் வழங்கப்பட்டது. மட்டக்களப்பு கல்லடி உப்போடையிலே தாபிக்கப் பெற்றுள்ள சிவானந்த வித்தியா லயமே கிழக்கிலங்கையில் அடிகளாரின் திருவுருவம் போன்ற தோற்றமுடையது. அக்கலாசாலை அமைந்துள்ள நிலப்பகுதி யானது ஸ்ரீ ராமகிருஷ்ண ஆச்சிரமத்தையும், மாணவர் குருகுலத் தையும் கொண்டுள்ளதாய் ஈழநாட்டின் தபோவனம் போன்று காட்சியளிக்கின்றது. இந்துக்கள், முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள், பௌத்தர்கள் ஆகிய எல்லோரையும் கவர்ந்து நிற்கின்ற சிவா னந்த வித்தியாலயம் அடிகளாரின் விசாலமான நோக்கத்தைப் பிரதிபலித்து விளங்கும் காட்சியானது வெளியுலகினைப் பெரிதும் கவர்ந்து நிற்பது குறிப்பிடத்தக்கதொரு செய்தியாகும்.

திருகோணமலை இந்துக் கல்லூரியும், யாழ்ப்பாணம் வைத்தீசுவர வித்தியாலயமும் அடிகளாரின் தன்னலமற்ற கல்வித் தொண்டினால் மிகவும் உயர் நிலையடைந்து விளங்குகின்றன. இவற்றைத் தொடர்ந்து மட்டக்களப்பின் பல பாகங்களிலும் தோன்றிய பல கல்விச் சாலைகளால் நாடு மறுமலர்ச்சியடைந் துள்ளதைப் பிரத்தியட்சமாகக் காணமுடிகின்றது.

ஈழநாட்டில் அடிகளார் இட்ட கல்வி வித்தானது ஆரம் பக் கல்வியையும், உயர்தரக் கல்வியையும் விருத்தி செய்து ஈழ நாட்டில் பல்கலைக்கழகம் என்னும் கலா விருட்சத்தைத் தோற்று வித்தற் கேற்ற அங்குரார்ப்பணமாயிற்று. தென்னிந்தியாவிலும் ஈழநாட்டிலும் பல்கலைக் கல்வியை உச்சநிலையில் வைப்பதற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரிய மார்க்கங்களை ஆராய்ந்த அறிவாளிகளுக்கு அடிகளாரின் நல்லாலோசனைகள் மிகவும் பயன்பட்டன 1927ல் சென்னையில் நிகழ்ந்த ஆராய்ச்சி மகாநாட்டில் பேரறிஞர்களின் ஆக்கபூர்வமான ஆலோசனைகளை உருப்படுத்தும் வகையில் அடிகளார் கூறிய ஆலோசனையின் பயனாகவே சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் தோன்றியதென்று கூறினும் அது புனைந்துரையாகாது. 1631 - 33 வரை அடிகளார் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் முதலாவது தமிழ்ப் பெரும் பேராசிரியராக அப்பீடத்தினை அணி செய்த நிகழ்ச்சியும் இதனை அரண் நிற்கின்றது. அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் அடிகளார் தொண்டு செய்த காலப் பகுதியிலேதான் அடிகளாரின் யாழ் நூல் கருக்கொண்ட தெனக் கூறுவது பொருத்தமாயிருக்கும்.

1943 தொடக்கம் 1947ல் தமது உடற்பொறை நீங்கும் வரை இலங்கைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறைப் பீடத்தின் பெரும் பேராசிரியராயமர்ந்து அளப்பரிய பணிபுரிந்து தமது இறுதி மூச்சினை அடிகளார் அங்கேயேவிடும் பேற்றுக்கு உரியவரானார். ஆசிரிய பயிற்சிக்கல்லூரிகளில் விரிவுரை நிகழ்த்துவோரைப் போதனாசிரியர்கள் என்றும், பல்கலைக்கழகங்களில் விரிவுரை நிகழ்த்துவோரைப் பேராசிரியர்களென்றும், அவ்வத் துறைப் பீடங்களின் தலைவர்களைப் பெரும் பேராசிரியர்களெனவும் வழங்கவேண்டுமென்பது அடிகளாரின் அபிப்பிராயமாகும்.

அடிகளார் கலாசாலைகள், பல்கலைக்கழகங்கள் என்னும் எல்லைகளையும் கடந்து அப்பால் நின்று செய்த கலைத் தொண்டு சாசுவதமானது. அவரது மரணத்தின்பின்பு உலகம் அறிந்துகொள்ளும் வண்ணம் அது எஞ்சி நிற்கின்றது.

''தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தாற் காணப்படும்''

என்னும் திருக்குறளுக்கு உதாரணமாக விளங்குகின்ற இருவருள்ளே முதற்பெருந்தகையார் ஆறுமுகநாவலர். அடுத்தவர் நமது விபுலானந்த அடிகளார். இருவரும் துறவிகளாயிருந்தும் 'எச்சம்' உடையவர்களாயிருப்பதை நாம் காண்கின்றோம். எச்சம் என்பது பிள்ளைகளை மாத்திரம் குறிக்கும் சொல்லன்று. அடிகளார் நமது நாட்டுச் சிறுவர் சிறுமியரை நோக்கி உள்ளமுருகினார். மட்டக்களப்பிலும் யாழ்ப்பாணத்திலும் குருகுல வாசங்களை அமைத்து ஆசிரியர்களோடு உடனிருந்து, உடனுண்டு, உடன் பழகி, உயர்கலை பயின்று, நாட்டின் நவசிற்பிகளாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவாகும் வாய்ப்பினை உண்டாக்கிவைத்தார். அடிகளாரின் உள்ளக் கருணையை நமது இளஞ்சந்ததி இன்று அனுபவிக்கின்றது. மட்டக்களப்பு கல்லடி உப்போடையில் அமைந்துள்ள குருகுல வாசம் சாதி, சமய பேதமின்றி 'எல்லோராலும் பாராட்டப்படும் ஒரு சிறந்த முன்மாதிரியான தாபனமாகும்.

இக்குருகுலத்தின்மூலம் நம் நாட்டுச் சிறுவர்கள் தன்னம்பிக்கையும், சுய தேவைக்கு உழைக்கும் ஈடுபாடும், தியாக சேவை செய்யும் உளப்பண்பும் உள்ளவர்களாக நாடு முழுவதிலும் பரந்துவாழும் தகுதியுடையபோதனை, சாதனைகளில் சித்திபெற்றவர்களாகத். தம்மை உருவாக்கிக்கொள்ளும் சந்தர்ப்பம், சமசந்தர்ப்பம் உள்ளவர்களாக, உதவும் கல்வியினை, தேடு கல்வியினைப் பயின்று வருகின்ற தேசியத் திறனை வேறெங்கும் காணமுடியாது.

ஸ்ரீ ராமகிருஷ்ண சங்கத்தின் இலங்கைக் கிளையினை அரசாங்க சபையில் நிறைவேற்றிய சட்டத்தின்மூலமாக நிலையும் மதிப்பும் பெறச் செய்த பெருமை குருதேவரின் அருள் நோக்கம் பெற்ற விபுலாநந்தருக்கு எளிதாகக் கைகூடியது ஒரு வியப்பன்று. ஸ்ரீ ராமகிருஷ்ண சங்கத்தினரின் சமய கலாச்சாரத் தொண்டுகள் விபுலாநந்த அடிகளை நமக்கு என்றும் நினைவூட்டிக்கொண்டிருக்கின்றன.

உயர்தர வேதாந்த சஞ்சிகைகளாகிய 'பிரபுத்த பாரத', 'வேதாந்த கேசரி', 'இராமகிருஷ்ண விஜயம்' என்னும் வெளியீடுகளின் ஆசிரியராகவும், கொழும்பு 'விவேகாநந்தன்' என்னும் சஞ்சிகையின் ஆசிரியராகவும் அடிகளார் புரிந்த சமய கலாசாரத் தொண்டுகள் இன்னும் பயன்படும் ஆக்கபூர்வமான சாதனங்களாகத் திகழ்கின்றன. 1939 - 41ம் ஆண்டுப் பகுதி பத்திரிகையாசிரியராகத் தொண்டு பூண்ட காலமாகும்.

இலங்கைக் கல்விச் சீர்திருத்த சபையிலும். சென்னைப் பல்கலைக் கழகம் முதலியவற்றின் ஆலோசனைச் சபைகளிலும், யாழ் ஆரிய திராவிட பாஷா விருத்திச் சங்க ஆலோசனைச் சபையிலும், பிற கல்வி ஆலோசனைச் சபைகளிலும் அங்கம் வகித்து நமது அடிகளார் கூறிய ஆலோசனைகளால் கலாபீடங்கள் அடைந்த புதுமை கலந்த உயர்ச்சி அளப்பரியதாகும்.

பன்மொழிப் பண்டிதராய் விளங்கிய அடிகளார்க்கு மொழி பெயர்ப்புக்கலை கைவந்ததொரு பொருளாயிற்று. இதனால் மேல்நாட்டு இலக்கியங்கள், சேக்ஸ்பியர் நாடகங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள், மகாகவி தாகூர் போன்ற கவிஞர்களின் புதுமைக் கவிகள் பல அடிகளாரின் நாநலங்கனிந்த தமிழ்ப் பாடல்களாலும், உரைநடைகளாலும் உலகுக்கு உபசரிக்கப்பட்டுள்ளன. மதங்க சூளாமணி என்னும் நாடகக் கலைநூல் செகசிற்பியாரின் கவிதைச் செல்வத்தைத் தமிழ் மக்களுக்குத் தொகுத்து உபசரிக்கின்ற விழுமிய நிதிப் பேழையாகும். பண்டிதமணி கதிரேசன் செட்டியார் இயற்றிய 'மண்ணியற் சிறுதேர்' என்னும் நாடகத்துக்கு அடிகளார் எழுதியுள்ள அணிந்துரையில் அன்னாரின் வடமொழி நாடக இலக்கணத்தின் நுண்ணிய அறிவினைப் பரக்கக் காணலாகும். பூஞ்சோலைக் காவலன் என்னும் பாடற் பகுதியில் மகாகவி தாகூரின் பாடல்களை மொழி பெயர்த்து இனிமை ததும்ப உபகரித்துள்ள அடிகளார் மூல நூலையும் பார்க்கத் தமிழ்மொழி பெயர்ப்பினை இனிதாகச் சுவைக்கும் வண்ணம் தந்திருக்கும் நாவன்மை எல்லார்க்கும் அமைவதில்லை.

சொல்லாக்கத் துறையில் அடிகளார்க்கு நிகரான திறமையுடையோரைக் காண்பது அரிதாகும். சொல்லாக்கம் செய்யும் போது முதலிலே தமிழ் நூல்களிற் பரந்து கிடக்கும் சொற்களைக் கண்டு எடுத்தாண்டு பயன்கொள்ளவேண்டும். தமிழில் பெறமுடியாத சொற்களை வடமொழியிலிருந்து பெறவேண்டும். இரு மொழியிலும் பெறமுடியாதபோது தான் வேற்றுமொழிச் சொற்களைப் பயன்படுத்தவேண்டும்: சொற்கள் எழுத்துச் சிக்கனமும், நாவுக்கு உச்சரிக்க எளிதாயும் இனிதாயும் அமையும், அமைதியும் கொண்டு வழங்கவேண்டும் எனக்கூறி உதாரணங்களும் காட்டிச் செல்லும் அடிகளாரின் சொல்லாக்கத் திறமை போற்றுதற்கு உரியதாகும். 1936ம் ஆண்டு சென்னை பச்சையப்பன் கல்லூரியில் நடந்த சொல்லாக்க மகாநாட்டுக்கு அடிகளார் தலைமைதாங்கிய செய்தியும் இங்கே குறிப்பிடத் தக்கதாகும்.

இனி நூலாசிரியரான அடிகளார் செய்த ஆக்கபூர்வமான தொண்டுகள் பலவற்றுள்ளே சிலவற்றைக் கூறி இக்கட்டுரையை நிறைவு செய்கின்றேன். செய்யுள் நடையிலும், உரை நடையிலும், அடிகளார் இயற்றித்தந்துள்ள நூல் மிகப் பலவாகும். அவற்றுள்ளே யாழ்நூல் என்னும் பெயர்கொண்ட ஆராய்ச்சிப் பெருநூலானது இசைத் தமிழ்பற்றியதொரு மூல நூலாகும்.

இது ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக மறைந்து கிடந்த தமிழ் இசைக் கலையின் நுட்பங்களை ஆராய்ச்சி முறையாக விரித்து விளக்கி வெளிப்படுத்துகின்றதொரு பெரு நூலாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைந்து ஒழிந்துபோன இசை நுணுக்கங்களையும், சிலப்பதிகாரத்து அரங்கேற்றுகாதையிலும் சங்க நூல்களுள்ளும் தலை மயங்கிச் சிதறுண்டுகிடந்த இசை மரபுகளையும் ஆராய்ந்து விஞ்ஞான ரீதியாகவும், இசையிலக்கண வரம்பு காட்டி, இது தான் சங்ககாலத்துத் தமிழர் கையாண்ட இசை மரபு இவைகள்தான் பழந்தமிழ் மக்கள் வாசித்த யாழ்க் கருவிகள் என வரையறுத்துக் கூறுகின்ற இந்நூல் தமிழ் இசை ஆராய்ச்சியாளர்களுக்கு இசைக் கடலைக் கடப்பதற்கேற்ற கலங்கரை விளக்கமாகத் திகழ்கின்றது.

அடுத்துக் குறிப்பிடுதற்குரியது மதங்கசூளாமணியென்னும் நாடகக்கலை பற்றிய நூலாகும். மதங்கர் என்பது நாடக ஆசிரியர்கள். சூளாமணியென்பது சிரோரத்தினம். நாடக ஆசிரியர்களுக்கெல்லாம் சிரோமணிபோல விளங்குகின்ற ஆசிரியர் செகசிற்பியரின் பெயரைத் தாங்கி வெளிவந்துள்ளது. இந்நூல் இந்நூலின் கண்ணே தமிழ்மொழி, வடமொழி நாடக இலக்கண அமைதிகளையும், ஆங்கில நாடக இலக்கண அமைதிகளையும் எடுத்துக்காட்டி ஒப்புநோக்கிக் கண்ட முடிவுகளை உலகுக்கு உபகரிக்கின்ற இந்நூல் அடிகளாரின் மொழி பெயர்ப்புத் திறமைக்கும் ஓர் உரை கல்போன்றதாகும். உலகம் முழுவதையும் ஓர் நாடக மேடையாகவும், ஆண், பெண் இருபாலாரையும் நடிகர்களாகவும் உருவகஞ் செய்து காட்டிய செகசிற்பியாரின் கற்பனை வனப்பிலும், கவிதாசா சாமர்த்தியத்திலும் அறிவாற்றலிலும் ஈடுபட்டு இயற்றிய இந்நூல் அடிகளாரின் மனப் பண்பும் கனிவு பெற்ற நாநலமும், ஆழ்ந்த புலமையும் விளங்கித் தோன்றுவதை நாம் காணலாம்.

இன்னும் விவேகானந்த ஞானதீபம், கருமயோகம், ஞானயோகம், நம்மவர் நாட்டு ஞானவாழ்க்கை, விவேகானந்த சம்பாஷணைகள் முதலிய நூல்களும் குறிப்பிடத்தக்க சிறந்த பயன்தரும் நூல்களாகும். விபுலாநந்தர் பிரபந்தத்திரட்டு என்னும் பெயருடன் ஒரு தொகை நூல் வெளியிடப்படுமேல் அடிகளார் இயற்றிய நூல்கள் பலவற்றை உலகம் அனுபவித்தற்கு வசதி ஏற்படும்.

அடிகளார் பல்வேறு சந்தர்ப்பங்களில் எழுதி உபகரித்துள்ள கட்டுரைகளோ மிகமிகப் பலவாகும். அவற்றுள்ளே வண்ணமும் வடிவும், நிலவும் பொழிலும், மலையும் கடலும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவியும் சால்பும், நாடும் நகரமும். ஆங்கில வாணி முதலிய கட்டுரைகள் நம்மிடையே வாழ்ந்து மறைந்துபோன இளம் எழுத்தாளர் அருள் செல்வநாயகம் அவர்களால் 1963ல் வெளியிடப்பட்டுள்ளன. அன்னார்க்குத் தமிழுலகம் கடமைப்பட்டுள்ளது.

குருதேவர் வாக்கியம், கங்கையில் விடுத்த ஓலை, செகசிற்பியார் நாடகக் கவிதைகளின் மொழி பெயர்ப்புகள் இறைவனுக்கும் மூன்று மலர்கள், மகாலக்குமி தோத்திரம், மகாகவி தாகூரின் கவிதைகள் சிலவற்றின் மொழி பெயர்ப்புகள் முதலாக ஆயிரக்கணக்கான கவிதைகள் மூலம் அடிகளார் செய்துள்ள கல்வித் தொண்டுகள் அளவில் அடங்காதன. அடிகளாரின் கவிதைகள் தனித்தன்மை வாய்ந்தன. நெகிழ்ச்சியும், தெளிவும் எளிமையும், இனிமையும் வாய்ந்தன.

உண்மையும், அழகும், செம்மையுமாகிய வனப்புகள் ஒருங்கேயமைந்த இக் கவிதைகள் அறிவும், உணர்ச்சியும்தந்து செவிக்கும் மனத்துக்கும் இனிமையூட்டி உயிர்த்தளிக்கச் செய்யும் அமைதியுடையனவாகும். அடிகளாரின் கவிதைகளுட் சில அன்பர் அருள் செல்வநாயகத்தின் முயற்சியால் வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

அடிகளாரின் கல்வியறிவு பல ஆக்க வேலைகளிற் பயன் பட்டுள்ளது. அடிகளார் மேல்நாட்டுக் கல்வி முறைகளிலே நன்கு திளைத்தவர். எனினும், மேல் நாட்டிலுள்ள உதவாத போக்குகளில் அவர் மோகங் கொள்ளவில்லை மேல் நாட்டு நாகரீகப் பண்புகளை அவர் நன்கு கடைப்பிடித்து நமது நாட்டுக் கல்வி முறையிலே பயன்படுத்தியமை ஒரு முன்மாதிரியாகக் கொள்ளத் தக்கது.

ஒருவர் உண்மையான நிபுணரானால் அவரது நிபுணத்துவம் ஆக்கவேலைகளில் பிரதிபலிக்க வேண்டும். ஒரு கணித மேதை மற்றவர்களுக்கு மேலால் கணக்கு விடாமல் தமது நிபுணத்துவத்தை ஆக்க வேலையில் பயன்படுத்தி உலகம் நன்மையடையச் செய்யவேண்டும் என்பார். அடிகளாரின் இந்த விசாலமான கல்விக் கொள்கைக்கு அவர்கள் இயற்றித் தந்துள்ள யாழ் நூலே சான்றாக அமைந்துள்ளது. கணிதத்தை அடிப்படையாகக் கொண்டு தோன்றியது யாழ்நூல்.

கற்ற கல்வியினால் பிறரை வெருட்டக்கூடாது. தன்னையும் பிறரையும் ஆளாக்கிக்கொள்ள வேண்டும் என்று அடிகளார் அடிக்கடி சொல்வார். ஒருவர் மற்றவரின் அறிவைத் தம்மு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டைய அறிவால் கூர்மை பார்ப்பதைவிட இருவரின் அறிவை யும் கூட்டாகப் பயன்செய்தல் நாட்டை உருவாக்குவதற்கு ஏற்ற வழியாகும் எனக் கூறுவார்.

நம் நாட்டுக் கல்விமான்களும், நிபுணர்களும் நாட்டின் இயற்கையைத் துணையாகக்கொண்டு செயல் புரிந்து, புதுப்புது முறைகளைக் கண்டு, அவற்றைக் கையாண்டு நாட்டை முன் னேற்றப் பாதையிலே செலுத்தப் பழகவேண்டும் என ஆலோ சனை கூறுவார். அடிகளார் சர்வதேசிய நோக்கும் உடையவ ராயினும், தேசிய நோக்கத்தில் நிலைத்து நின்று தனித்தன் மையைப் பேணிக்கொண்டு அகில உலக நாடுகளுடன் தோழமை பூணவேண்டும், தனது தேசிய நோக்கை மறந்து அயல் நாடு களுடன் தோழமை கொள்ளப்போவது அவமானம் ஆகும் என உணர்ச்சி ததும்பக் கூறுவார். இந்த எண்ணங்களை எல்லாம் அடித்தளமாகக்கொண்டு பல்கிப் பெருகியதே அடிகளாரின் கல் வித் தொண்டு என்பது நினைவில் வைத்தற்கு உரியதாகும்.

அடிகளார் ஒரு தீவிர விஞ்ஞானி. அதே நேரத்தில் தெய்வ நம்பிக்கையில் உறுதிபூண்ட துறவியாய் மெய்ஞ்ஞானத் தில் நிலை நின்றார். நாட்டு மக்களை விஞ்ஞானத்தின் துணை கொண்டு மெய்ஞ்ஞான வழிக்குத் திசை திருப்பிய ஒளி படைத் தவர் நம் அடிகளார்.

அவர் ஒரு கவிப்புலவர். அதே நேரத்தில் இனிய உரை நடை கைவந்த பேராசானாய் விளங்கினார். அவர் ஒரு இலக் கிய விற்பன்னர். அதே நேரத்தில் ஒரு கணித மேதையாக விளங்கி அழகுக் கலைகளையும், நூல்களையும் இணைத்து வைத்து அருஞ்செயல் புரிந்தவர்.

இத்தகைய அதி அற்புத சாதுரியமும் மாதுரியமும் ஒருங் கிணைந்த அடிகளாரின் கல்வித் தொண்டு, வெறும் வறண்ட அறிவை மாத்திரம் துணையாகக் கொண்டதல்ல. அது உயிர்ப் பூட்டுவது. உண்மை காட்டுவது. தன்னம்பிக்கை தருவது சுய தாபரிப்புக்கு வழி செய்வது. மனிதனையும் மனத்தால்இணைத்து வைப்பது. அக நிறைவும் புற நிறைவும் அளிப்பது. மனிதனை மனிதனாக வாழச் செய்வது. மனிதனுக்காக வாழப் பண்ணு வது.

அடிகளாரின் இந்தக் கல்விக் கொள்கையின் ஒளிவழியே நமது இளம் சந்ததி செல்வதாக. அடிகளார் காட்டிய இந்தக் கல்விப் பாதையிலே சென்று நாடு மறுமலர்ச்சி பெறுவதாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வித்தக விபுலானந்தரின் நினைவு

யாழ்ப்பாணவாசத்தாற் பண்டித மயில்வாகனனாருக்குக் கிடைத்த நற்பேறுகள் பல. அவற்றுள்ளே யோகர் சுவாமிகளின் குணத்தோடு பழகி அவர் தம் குறிப்பின் வழி ஒழுகுதற் குரித்தாய நற்பெறு ஒப்புயர்வற்ற தனிச்சிறப்புடையதாகும். சுவாமிகளின் தரிசனத்தால் மயில்வாகனனாரது உள்ளத்து இயல்பாகவே அமைந்து கிடந்த துறவு உணர்ச்சியானது படிப்படியாக வளர்ச்சியுற்றுப் பக்குவ நிலையடைவதாயிற்று.

1992 ஆண்டு பண்டிதரின் வாழ்க்கையிலே பெரியதோர் நிறைவு உண்டாயிற்று. பொறிகள் மனத்தின் வழி நிற்க; மனம் புத்தியின் வழி நிற்க; புத்தி ஆன்மாவுக்கு அரண்செய்து நிற்க; காலமும் இடமும் வாய்க்கப் பெற்றமையால், பண்டிதர் மயில்வாகனனார், சென்னை ஸ்ரீராமகிருஷ்ண சங்கத்தின் தலைவர் உயர்திரு. சர்வானந்த சுவாமிகளின் அருள்நோக்கத்தால் உலக இன்பங்களில் உவர்ப்புற்றுத் துறவற நெறியிற் புகுந்தார். சென்னை இராமகிருஷ்ண மடத்துக் திருக்கூடத்திற் சேர்ந்து பிரபோதசைதன்னியர் என்னும் பிரமசரியத் திருநாமமும் பெற்றார். இவரது துறவின் அதிதீவிர பக்குவத்தையறிந்த ஸ்ரீராமகிருஷ்ண சங்கத்தின் தலைமைப் பீடாதிபதியும் பூஜ்ய பாதருமாகிய ஸ்ரீமத் சிவானந்த சுவாமிகள் 1924ம் ஆண்டு சித்திரை மாதத்துப் பூரணைத் திருநாளில் இவருக்குக் காவியுடை வழங்கி ஞானோபதேசஞ் செய்து சுவாமி விபுலானந்தர் என்னும் தூய நாமமுஞ் சூட்டிச் சங்கத் துறவிகளுள் ஒருவராக்கி அருள் செய்தார்!

ஈழநாட்டுச்சோதி

இருபதாம் நூற்றாண்டின் ஈழநாட்டுச் சோதியான சுவாமி விபுலானந்தர் அவர்கள் 1925ம் ஆண்டு பாரத நாட்டிலிருந்து மீண்டு தமது தாய் நாட்டையடைந்து தன்னலமற்ற தமது சேவையை ஆரம்பிக்கலானார். ஸ்ரீராம கிருஷ்ண சங்கத்தின் கிளைத்தாபனமொன்றை ஈழநாட்டிலே நிறுவி அதன் ஆதரவிற் பல கல்விச்சாலைகளை அமைத்தும் மாணவர் இல்லங்களை நிலைநாட்டியும், திருமடங்களைக் கட்டியும் தருமபரிபாலனஞ் செய்து வந்தார். தமது நன்முயற்சிகளுக்கு இடை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யூறாக நிறை புறப்பகைவர்களையும், உட்பகைவர்களையும் அன்பாலும் அறிவாலும் வென்று குருதேவரின் அருளையே துணையாகக் கொண்டு திருப்பணி தொடங்கிய சுவாமிகள் கிழக்கிலங்கையில் நிறுவிய கல்வி நிலையங்களுள்ளே கல்லடி - உப்போடையிலுள்ள சிவானந்தா வித்தியாலயம் முதன்மை வாய்ந்தது. இதனோடு சேர்ந்துள்ள அனாதை மாணவரில்லமும் துறவாச்சிரமும் ஒன்று சேர்ந்து தோன்றுங் காட்சி குருதேவரின் திருவருள்மலர்ந்து தோன்றுவது போன்ற மாட்சியுடையது. ஈழநாட்டின் தபோவனம் என்று சொல்லத்தக்க புனிதம் பொருந்தியது. இத்தகைய புனிதமமைந்த காட்சியைக் காணும் போது

காலையும் நண்பக
லன்ன கடுமைத்தாய்ப்
'புள்ளும் வழங்காப்
புலம்புகொள் ஆரிடை'ப்
பள்ளியு மின்சுவைப்
பழமரச் சோலையுந்
தெள்ளுநீர் நிலையுந்
திகழ்ந்திடவமைத்துக்
கழுமிய நெஞ்சக்
காரிருள் சீத்தெம்
விழுமந் துடைத்த
விளக்கு''

நமது உள்ளத்தே சுடர்விட்டு ஒளிவிரிக்கின்றது.

திருக்கோணமலை இந்துக்கல்லூரி, வண்ணை வைத்தீசுவர வித்தியாலயம், புளியந்தீவு விவேகானந்தா வித்தியாலயம் என்பன இராமகிருஷ்ண சங்க ஆங்கில கலாசாலைகளாகும். பதினைந்தின் மேற்பட்ட தமிழ்ப்பாடசாலைகளும் சங்க ஆதரவில் நடைபெறுகின்றன பழமையில் முளைத்துப் புதுமையில் வளர்ந்து பழமையிற் புதுமை மலர்ந்து நிலையான அறிவுக் கனிகளைத் தருகின்ற இந்தத் தாபனங்களெல்லாம் அடிகளாரின் திருவுருவம் போன்று திகழ்கின்றன.

அளப்பரிய சேவை

அடிகளார் 1931ம் ஆண்டு சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் முதற் தமிழ்ப் பெரும்பேராசிரியராகி மூன்று நல்லாண்டுகள்தொண்டு பூண்டார் 1937 ஆம் திருக்கைலாயத்திரை செய்து திரும்பினார். 1939ம் ஆண்டில் இமயமலையடிவாரத்திலுள்ள மாயாவதி ஆச்சிரமத்திலிருந்து ''பிரபுத்த பாரதா'' என்னும் உயர்தர வேதாந்த சஞ்சிகையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியராகிய அளப்பரிய சேவை செய்தார். 1913ல் ஈழநாட்டுப் பல்கலைக்கழகத்தின் முதற் தமிழ்ப் பெரும்பேராசிரியராயமர்ந்து தமது உடற்பொறை நீங்கும் வரையும் உயர்கலைத் தொண்டுபுரிந்தார்.

1947ம் ஆண்டு தமிழ்நாடு சென்று, திருக்கொழும்பூதூர் ஆளுடைய பிள்ளையார் சந்நிதியிலே சைவந் திருவுந் தமிழ்த் திருவுமுடைய நல்லோர் குழாத்தின் நாளிலே தமது ஒப்புயர்வில்லாத யாழ் நூலை அரங்கேற்றிய உயர்தனிப்பணியினை வைகாசித் திங்கள் 6ம் 7ம் தேதிகளில் நிறைவேற்றியதுடன், ஈழநாடு திரும்பித் தமது அவதார நோக்கம் முற்றுப் பெற்றமையாற் போலும் 1947ம் ஆண்டு ஆடி மாதம் (July) 19ந் தேதி அமைதியோடு கூடிய நள்ளிரவில் தமது பூதவுடம்பை விடுத்துப் புகழுடம்பைப் பெற்றார்.

அடிகளார் இயற்றிய நூல்கள்:

(1) யாழ்நூல்: இது பழந்தமிழரின் இசை நுட்பங்களை ஆராச்சிமுறையாக விரித்து விளக்கும் ஒரு பெருநூல். சிலப்பதிகாரத்திலே தலைமயங்கிச் சிதறிப் பரந்து கிடந்த பழந்தமிழிசை மரபுகளையெல்லாம் ஒருவழிப்படுத்தி நிரல்பட நிறுத்தி விளக்குகின்ற இந்நூல், பண்டைத் தமிழரின் இசைக்கருவிகளாகிய வில்யாழ், பேரியாழ், மகரயாழ், செங்கோட்டியாழ், சகோடயாழ் என்பவற்றுள் முன்னைய நான்கினையும் பொதுவாகவும் சகோடயாழைச் சிறப்பாகவும் விரித்துக் கூறுவதால் யாழ்நூல் என்னும் பெயர் பெற்றது "சகோடயாழ்" என்பது ச × கோஷ × யாழ்; நல்ல ஓசையையுடைய யாழ் எனப்பொருள்படும் ஒரு தொடர்மொழி இது "செம்முறைக்கேள்வி" என்னுந் தமிழ்த் தொடரினை மொழிபெயர்ப்பாக வடமொழியில் வழங்கப்பெறுவது. ஆயிரம் ஆண்டுகளாக மறைந்துபோன இதன் வடிவத்தினையும், இயல்பினையும், இயக்கத்தினையும்; பிறயாழ்களின் வடிவங்கயையும் கணித நுட்பத்தை ஆதாரமாகக் கொண்டு தமிழ்மொழி வடமொழியிசை நூல் முடிவுகளையெல்லாம் ஒருங்கு கண்டு, ஒப்ப நோக்கித் தமது அறிவாராய்ச்சித் திறத்தினால் அடிகளார் இனிது வெளிப்படுத்தித் தமிழுலகுக்கு உபகரித்திருக்கின்றார்கள். தமிழிசையாகிய கடலைக் கடப்போர்க்கு இந்நூல் ஒரு தெப்பாகும்.

2. மதங்க சூளாமணி: இது நாடக இலக்கண அமைதி கூறும் ஒருநூல் மதங்கர் என்பது நாடக ஆசிரியர்கள் எனவும் சூளாமணி என்பது சிரோரத்தினம் எனவும் பொருள்தரும் இத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர் ஆங்கில நாடகவாசிரியராகிய செகசிற்பியராரைக் குறிக்கும். தமிழ் வடமொழி நாடகங்களையும் ஆங்கில நாடகங் களையும் ஒப்பநோக்கிக்கண்ட முடிவுகளை ஒருங்கே அமைத் துக் கூறுகின்ற இருநூலானது அடிகளாரின் மொழி பெயர்ப்புத் திறமைக்கும் பல நடைக்கும், செய்யுள் நடைக்கும் ஓர் உரை கல் போன்று திகழ்கின்றது. மதுரைச் சங்கப் பிரசுரமாக இது வெளிவந்துள்ளது.

(3). நடராஜ வடிவம்: இது திருவருள் வடிவாகிய ஐந்தொழில் களையும் சுருக்கமாக விளக்கும் ஒரு சிறு நூல்.

(4) உமாமகேசுவரம்: இது இறைவன் மாதொரு பாகனாயமைந் துள்ள நுட்பத்தினை விளக்குவது. இதுவும் ஒரு சிறுநூல்.

(5) கலைச்சொல் அகராதியின் ஒரு பகுதி: விஞ்ஞானப் பகுதியின் பௌதிகப் பொருள் சம்பந்தமான மேல்நாட்டுப்பதங்களுக் கிசைந்த தமிழ்ச் சொற்களைத் தொகுத்துக் கூறுவது இந்நூற் பகுதி. சென்னைமாநகர்ப் பல்கலைக்கழகத்தால் இஃது அச் சிடப்பட்டுள்ளது.

(6) மொழிப்பெயர்ப்பு நூல்கள்: கருமயோகம், ஞானயோகம், விவேகானந்த ஞானதீபம்; நம்மவர் நாட்டு ஞானவாழ்க்கை, விவேகானந்த சம்பாஷணை முதலியன.

(7) கட்டுரைகள்: ஆங்கிலவாணி, மேற்றிசைச் செல்வம் முதலிய நூற்றுகணக்கானவை.

(8) செய்யுள்கள்: குருதேவர் வாக்கியம் முதலிய நூல்களும், மகாலட்சுமி தோத்திரம், ஈசனுவக்கும் மூன்றுமலர் என்பன போன்ற ஆயிரக்கணக்கான தனிப்பாடல்களும். இக்கட்டுரை களும், செய்யுள்களும் அருள் செல்வநாயகம் அவர்களின் பெரு முயற்சியால் சித்திரையில் வெளிவந்து தமிழ்பேசும் நல்லுல குக்கு இன்விருந்தாகுமென அறிகின்றோம்.

''முத்தமிழின் வடிவமெனத் தோன்றி மேற்கு
மொழிக்கடலும் வடகடலும் முறையினாடித்
தத்துவ நன்னெறியுணர்ந்து சாந்தி கண்ட
தவமுனிவ யிசைத்தமிழின் தந்தையாகி
வித்தகயாழ் நூலருளும் விபுலானந்த
வியன்மணியை யிழமணி விளக்கை நாளும்
சித்தமதில் மகிழ்ந் தேற்றிப் பத்தி செய்து
புத்திதெளிந் துண்மை வழிச் செல்வோம் யாமே''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைத்தியலிங்கதேசிகர்

நீர்வளமும் நிலவளமும் நிறைந்த மட்டக்களப்பு நன்னாட்டு மக்கள் மனவளமும் உடையராதல் இயல்பு தானே.

பண்பட்ட மனமுடைய இவர்கள் யாரையும் இனிதாயழைத்து நல்லுபசாரம் செய்யும் நிறைநெஞ்சு படைத்தோர் ஆவர்.

தாமும் வாழ்ந்து வந்தாரையும் வாழ்விக்கும் தன்மை வாய்ந்த இம்மக்களுக்கு யாழ்ப்பாணத்துப் பெருமக்கள் பலரின் கூட்டுறவு எளிதாகக் கிடைத்தமையால் பொன்னும் மணியும் சேர்ந்தாற்போன்ற பொற்புடையராய்த் திகழ்ந்தனர்; இன்றும் திகழ்கின்றனர்; இனியும் திகழ்வர்; இது நியமம்.

எனது பிள்ளைப் பருவத்தில் யான் கண்ட காட்சிகள் சில இன்று நினைவுக்கு வருகின்றன. ஒரு நாள் சில இளைஞர்கள் நல்ல ஆசார முடையவர்களாய் மண்டூரில் எனது மாதுலரின் இல்லத்தில் ஆசிரியர் ஒருவரிடம் படித்துக் கொண்டிருந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தார்கள். என்ன படிக்கிறார்கள் என்பதை விளங்கிக் கொள்ளும் அறிவு அப்போது எனக்கில்லை. பாரதம், கந்தபுராணம், திருச்செந்தூர்ப்புராணம், நிகண்டு முதலியவற்றை அவர்கள் பாடங்கேட்டதாகப் பின்பு அறிந்து கொண்டேன். அவ்வாசிரியர் புலோலியைச் சேர்ந்தவரென்றும், அவர் பண்டிதர் தா. முருகேசபிள்ளையென்றும் சொல்வார்கள், மட்டக்களப்புப் பெரியோர்கள் பலரின் பாராட்டுக்கு அவர் உரிய வரானதும், எனக்கு நல்லதோர் நண்பரானதும் பின்பு நிகழ்ந்த நிகழ்ச்சி களாகும், ஆழ்ந்த அறிவாற்றல் உடைய அவர் மதுரைத்தமிழ்ச் சங்கக் கலாசாலையிலும் ஆசிரியராயமர்ந்து கடமைபுரிந்து மறைந்து சென்றார். சிறப்பாக மட்டக்களப்பிலும், பொதுவாக ஈழநாடு முழுவதிலும், தென்னிந்தியாவிலும் அறிவொளி பரப் பிய இம்முதுபெரும் புலவர்க்கு மட்டக்களப்பு நன்றி பாராட்டக் கடமைப்பட்டுள்ளது. இவரது சரித்திரத்தைப் பின்னர் ஒரு கட்டுரையாக எழுதுகின்றேன்.

புலோலியூர் முதுபேராசான்

எனக்குப் பத்துவயதிருக்கும்; தமிழ்ப் பள்ளிக்கூடத்தில் ஐந்தாம் வகுப்பிற் சித்தியடைந்து விட்டேன்; ஓர் ஆங்கில பாடசாலையின் சேர்ந்துபடிக்க வேண்டிய ஏற்பாடுகளும் நடை பெற்றுக்கொண்டிருக்கும் சமயம்; ஒரு நாள் நடுவயது கழிந்த தோற்ற முடைய ஒரு பெரியார் மண்டூரில் எங்கள் வீட்டுக்கு வந்தார். தந்தை தாயரும், சுற்றத்தாரும் என்னைச் சூழ்ந்து கொண்டு "நீ கல்முனைக்கு இங்கிலிசு படிக்கப் போகவேண் டாம்; வீட்டிலேயிருந்து கொண்டு இந்த உபாத்தியாரிடம் தமிழ்ப்படி; இதுதான் நல்லது" என்று பிடித்துக்கொண்டார் கள். நானோ ஒன்று மறியேன்; சொன்னசொல்லுக்கு இணங்கிக் கொண்டு படிக்கத்தொடங்கினேன். இந்த முதுபேராசானும் புலோலியூர் தான்; பாரதம், கந்தபுராணம், முதலிய இலக்கியங் களும், சூடாமணி நிகண்டும் பிறவும் இவருக்கு வாய்ப்பாடம். இந்த வித்துவான் சந்திரசேகரம்பிள்ளையவர்கள் தான் எனது முதற்குரு. பாரதம், கந்தபுராணம், திருச்செந்தூர்ப் புராணம், சூடாமணி நிகண்டு முதலியவைகளை மூலபடமாக மனனம் பண்ணுவதே எனது முதல் வேலை; எங்கள் வீட்டில் ஆசிரிய ருக்கு எல்லாச்செலவும் நடக்கும். உண்டி, உடை, உறையுள் உபகாரம் எல்லாம் அங்கேயே; பல மாணவர் இலவசமாகப் பாடங்கேட்பதை எனது அன்னையார் மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொண்டார். நான்கு வருடங்கள் வரை படித்தோம். எனது அன்னையாரின் பெரும்பிரிவானது எங்கள் ஆசிரியரையும் எங் களிலிருந்து பிரித்து விட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''யானமென்பது என்ன
யானைபோற் பெருமையோ
மண்முட்டிபோல்
மொட்டையா''

என்றசெய்யுள் அடி ஆசிரியரின் கவித்துவத்தை இன்றும் நினைவூட்டுகின்றது. இவரது வரலாற்றையும் பின்னர் விரித்தெழுதுவேன்.

1912ம் ஆண்டு வரையில் மட்டக்களப்பிற் புதியோர் கிளர்ச்சியுண்டாயிற்று எல்லாரும் மன எழுச்சிகொண்ட காலம் அது; அது அரசியற் கிளர்ச்சியுமன்று; வகுப்புப் பூசலுமன்று; சமயப் போராட்டமாகும். இந்தப் போராட்டத்தை யாழ்ப்பாணத்துத்தளபதிகள் பலர் தலைமை தாங்கி நடத்திவந்தார்கள். பிரதம தளபதியாக நின்று வழிகாட்டி வெற்றயீட்டிய பெருமை அஞ்சாநெஞ்சு படைந்த மட்டக்களப்புக் குருநாத பிள்ளை கனகசபையையே சாருவதாகும்.

பதிவுக்கந்தோர்த்தலைவர் அருளம்பல சுவாமியார், வண்ணை தம்பி பஞ்சாட்சரம், தெல்லிப்பளை பொ. அம்பலவாணர், ஐக்கியச் செல்லப்பா, மல்லாகம் மாணிக்கம் முதலியோர் குறிப்பிடத்தக்க யாழ்ப்பாணத்துத் தளபதிகளாவர். மட்டக்களப்புச் சமயசரித்திரத்தில் இவர்கள் பெயர் என்றும் நின்று நிலவும்.

இந்த யுத்த முனையிலே சிறந்த சேவை செய்த சுத்த வீரர் மூவர் உளர்; ஒருவர் சைவப்புலவர் அருணாசல தேசிக மணி; மற்றவர் வித்துவான்சரவணமுத்தன்; அடுத்தவர் இந்தக் கட்டுரையின் தலைவர் புலோலி பொ. வைத்தியலிங்க தேசிகராவர்.

இற்றைக்கு ஏறக்குறைய 40 ஆண்டுகளின்முன் 30 வயது நிரம்பிய ஓர் இளைஞர் தமது இளம் மனைவியோடு மட்டக்களப்புக் காரைதீவுக்கு வந்து சேர்ந்தார். அவர் நல்ல சிவப்பு நிறம்; நடுத்தரமான உயரம்; முடித்த குடுமி வட்டவடிவமான முகம் தெற்றி; மேற்கூறிய சைவக்கோலத்துக்கு ஒரு நிறைவையுண்டாக்குகின்ற ஒற்றை உருத்திராக்க மணியணிந்த கழுத்து ஆகியன அமைந்த தோற்றமுடையவர், வைத்தியலிக்க தேசிகரின் உருவெளித் தோற்றம் இதுவே இவரது மனைவியார் சைவ ஆசாரத்திற் சிறந்து இவரிலும் ஒருபடி உயர்ந்தவர்போற் காணப்பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது பதினான்கு வயதிற் கண்ட காட்சி இது; பின்னர் ஐந்தாறுவயது கழிந்த பின்னர் எனக்கும் யாழ்ப்பாணத்துத் தொடர்பு கிட்டியது. மகாவலிகங்கை போன்ற மகாலிங்க சிவனாற் பெற்ற இத்தொடர்பினால் விளைந்த ஆக்கங்கள் பலவுள.

யான் தமிழிற் பழகாத காலத்தும் தமிழறிஞர்களை கண்டு பழகும் வாய்ப்புக் கிடைத்தது பெரியதோர் பேறாயிற்று. ஒரு முறை யாழ்ப்பாணம் சென்று திரும்பினேன். திரும்பிய பின்னர் மட்டக்களப்பிலிருக்கும் யாழ்ப்பாணத் தமிழறிஞர்களைக் கண்டு அளவளாவுதல்வேண்டு மெனவிரும்பினேன். காரைதீவுக்குச் சென்றுதேசிகரைக் கண்டு அவரால் உபசரிக்கப்பெற்றுப் பின்னர் வரலாறு கேட்கலானேன்.

தேசிகரவர்கள் தம்மால் ஆராய்ந்து 1916ம் ஆண்டிற் பதிப்பிக்கப்பெற்ற தக்ஷிணகைலாசபுராணப் பதிப்புப் பிரதியொன்றைத் தமது வரலாறு கூறுவார்போல எனக்கு உபகரித்தார்கள். புராணச் செய்யுள்களுக்கெழுதிய அடிக்குறிப்புகளும், முன்னுரையும், பதிப்பாசிரியரின் அறிவாகிய பொன்னுக்கு உரைகல் போன்று விளங்குகின்றன. இந்த ஆராய்ச்சிக் குறிப்புகளில் எடுத்தாண்ட மேற்கோள்களால் தேசிகரின் தமிழ்மொழி, வடமொழிப் புலமையும், முறையான இலக்கண அறிவும் நமக்குப் புலப்படுகின்றன. அன்றியும் சைவசித்தாந்த சாத்திரத்திற் தேசிகர் வரைத்துள்ள நுண்ணறிவும் நம்மால் அறிந்து போற்றுதற்குரியதாம், புராணத்தில் இடைச்செருகல்களாயுள்ள செய்யுள்களையும் நியாயங்காட்டிக்களைந்து விட்ட துணிவையும் நாம் பாராட்டவேண்டும். ''தமது முன்னுரையிலே ''லக'' என்னும் (தாது) வினையடியாற் பிறந்த லங்கா என்னும் பதம் இனிமையுடையது. அடைந்தது என்னும் பொருளுடைத்தாய்த் தமிழிலக்கண நயம் பற்றிகொண்டு இறுதி ஆகாரம் ஐகாரமாய் இலங்கையென்றாயிற்று'' எனவும்; ''கைலாச மென்பது கிலாச முனிவர் சிவபெருமானை நோக்கித் தவங்கிடந்து அவரைத் தாங்குமாற்றலுற்று மலை வடிவானமையின் இப்பெயர்த்தாயிற்று. பிரகிருதி தத்துவத்தின் மேலே அடபிரகிருத கைலாசமுள்ளது; இது சிறந்த தீட்சாவான்களால் அடையத் தக்கது; இதுவே சிவலோகம்'' எனவுங்காணப்படும் பகுதிகள் தேசிகரது தமிழறிவுக்கும், வடமொழிப் பயிற்சிக்கும், இலக்கண அமைதிக்கும், சமய சாத்திர புராண ஆராய்ச்சிக்கும் எடுத்துக்காட்டாக இலங்குகின்றன.

தென்னிந்தியா பிரயாணம்

அன்றியும் உயர்திரு. ம. முத்துக்குமாரசுவாமிக் குருக்கள் உயர்திரு. ச. சுப்பிரமணிய சாத்திரிகள் வித்துவசிரோமணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சி. கணேசையர், உயர் திரு. வ. குமாரசுவாமிப் புலவர் உயர் திரு. சாமிதாச மயில்வாகனனார் முதலியோர் இவரது புலமை யையும், ஆராய்ச்சித் திறனையும் பாராட்டிக் கூறுவதால் இவர் புலவர்களின் மத்தியில் அடைந்திருந்த பெருமதிப்பினையும் நாம் ஒருவாறு தெரிந்து கொள்ளுதல் முடியும்.

கோணேசர் கல்வெட்டுகளை வாசித்துப் பார்த்த போது தான் அதனைச் சரியான உருவத்தில் கண்டு அச்சிட்டுப் பதிப் பது எத்தகைய நுட்பமான தொண்டு என்பதை அறிந்து கொண்டேன். பண்டிதர் முருகேசப்பிள்ளை வித்துவான் சந்திர சேகரம்பிள்ளை ஆகிய இருபெரும் புலவருள்ளும் இவர் முதன்மை வாய்ந்த முதுபெரும் புலவராவர் என்னும் துணிபு எனக்குண்டாயிற்று.

தேசிகரவர்கள் யாழ்ப்பாணத்துப் புலோலியில் வாழ்ந்த பொன்னையா என்பவரின் புதல்வராவர். நாவலர் பெருமா னது மாணாக்க பரம்பரையைச் சேர்ந்த வேல்மயில்வாகனப் புலவரிடத்தே முறையாகப் பாடங்கேட்டவர்களுள் இவரும் ஒருவர்; பண்டிதர் முருகேசபிள்ளையும் இவரது உடன் மாண வராவர்.

''தான் பிறந்த புலோலியினில் தந்தை பொன்னையப் பெயரோன்
வேன்மயில் வாகனப் புலவரீடம் விடுப்புக்கற்பதற்குப்பான்
மதிய மெனக் கலைகள் பல தெரிந்து பல்லோரும் மேன்
மையினா லனுசரிக்க மிகவொழுக்கஞ் சிறந்து டையோன்'

சைவ பரம்பரையினராகிய வைத்தியலிங்க தேசிகரவர் கள் கருவி நூல், அறிவு நூல் ஆகிய இவைகளில் ஒருவாறு தேர்ச்சி பெற்ற பின்னர் விஷேட தீட்சை, ஆசாரிய அபிடேகம் என்பன பெற்றுச் சைவ குரவரானார். தேசிகர் என்னும் சொல் விஷேட தீட்சையும் ஆசாரிய அபிஷேகமும் பெற்ற சைவக் குருவைக் குறிக்கும் ஒரு சொல்லாகும் என்பது குறிப்பிடத் தக்கது. தேசிகர் மதுரைத் தமிழ்ச்சங்க அங்கத்தவருமாவர்.

தேசிகர் அவர்கள் தாம் பிறந்த யாழ்ப்பாணத்துப் புலோலி யிலே தமது படிப்பை முடித்துக் கொண்டு தென்னிந்தியா வுக்குப் பிரயாணமானார்கள். அங்கே திருவாவடுதுறையாதீனத் தில் இரண்டு, மூன்று ஆண்டுகள் தங்கியிருந்தார். மதுரையில் சில வருடமும், சிதம்பரத்தில் சில வருடமும் தங்கியிருந்தார். தமிழ், சமஸ்கிருதம், சைவசமய சாஸ்திரங்கள் ஆகிய இவைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லறிஞர்களிடம் படித்தும் உசாவியும் தமது ஐயம் திரிபு என்பவற்றை ஒருவாறு களைந்து தெளிவு பெற்றுக்கொண்டு சிதம்பரத்திற் தங்கியிருந்த காலத்தில் அங்கேயே தமது இல்வாழ்க்கைக்குரிய ஒரு நல்லாளை விதிப்படி மணம் முடித்துக் கொண்டு ஈழநாடு திரும்பினார்.

## மட்டக்களப்பில் தமிழ்த்தொண்டு

*1910ம்* ஆண்டில் மட்டக்களப்புக்கு வந்த இவர் மட்டக்களப்பின் தமிழ் வளர்ச்சிக்கும், சைவசமய வளர்ச்சிக்கும் செய்த தொண்டு அளவிடற்கரியது. தமது உடல், பொருள், ஆவி மூன்றையும் மட்டக்களப்பு மாதாவுக்கு அடியுறை செய்த இந் நல்லறிஞர், யாழ்ப்பாணத்தவர் இந் நாட்டுக்குச் செய்துவரும் சேவைகளுக்கும் எடுத்துக்காட்டாக விளங்குகின்றார். கிழக்கையும், வடக்கையும் புலமையால் இணைத்தவர் வித்துவான் ச. பூபாலபிள்ளை அவர்கள்; வடக்கையும், கிழக்கையும் இணைத்தவர் வித்துவான் வைத்தியலிங்க தேசிகர். வித்துவான் சரவணமுத்தன் விபுலானந்தரின் இலக்கண வித்து. விபுலாநந்தரோ வித்துவான் வைத்தியலிங்க தேசிகரின் உயர்தர இலக்கிய இலக்கண வித்து. ஆங்கில ஆசிரியராகிய மயில்வாகனனார் விடுமுறை காலங்களில் மட்டக்களப்புக்கு வரும் போதெல்லாம் தேசிகரின் இல்லத்திலேயே நெடுநேரம் பொழுது போக்குவார். பாரதம் கந்தபுராணம் முதலிய இலக்கியங்களையும், நன்னூல் முதலிய இலக்கணங்களையும், சைவ சாத்திரங்களையும் மயில்வாகனனார்க்கு அறிவுறுத்திய முதற் பேருரிமை வயித்தியலிங்க தேசிகரையே சார்வதாகும். வயித்திலிங்க தேசிகரின் கூட்டுறவால் மயில்வாகனனார் பண்டிதர் மயில்வாகனனார் என்னும் நிலையினையடைவராயினார்.

> ''தெங்கு கன்னல் மாவருக்கை செந்நெல் சொன்ன லாது
> வளம்
> தங்கு மட்டக்களப்பினிலேர் தருகாரை தீவிருக்கும்
> தங்கவினா யகர் காயிற் பூசனையுந் துய்ய தமிழ்
> பாகமுறா துவந்தவர்க்குப் படிப்பிற்குந் தொழிலு
> முளோன்''

தேசிகரின் மாணவர்கள் இன்றும் பலர் காரைதீவில் இருக்கின்றார்கள். இவரது தலைசிறந்த மாணாக்கரும் சித்திர கவியுமாகிய வசந்தராசபிள்ளை தமது 18ம் வயதில் இவ்வுலக வாழ்வை விட்டு நீங்கியமை இந்நாடு செய்த தவக்குறைவே போலும், கல்வியிலும், ஒழுக்கத்திலும் சிறந்து விளங்கும் திரு. ச. வேலுப்பிள்ளை ஆசிரியர் அவர்கள் தேசிகரின் நினைவின் அறிகுறியாகக் காரைதீவில் வாழ்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவக் குருவும் சமயப் பிரசங்கியுமாகத் திகழ்ந்த தேசிகர் அவர்கள் தமது இல்லத்தையே ஒரு கலாசாலையாக அமைத்து விட்டார். பல மாணவர்களை உருவாக்கினார். தமிழ்த்தொண்டினைத் தமிழுக்காகவே புரியலாயினர்.

உயர்ந்த எழுத்தாளர்

இவர் நிறைந்த அறிவாளர்; சிறந்த தர்க்கரீதியான பேச்சாளர் உயர்தர எழுத்தாளர்; தெளிந்த கவிப் புலவருமாவார் பாலோடி வினாயகர் ஊஞ்சல் என ஒரு நூல் இவராற் பாடி அச்சிடப்பெற்றுள்ளது. அதனைப் பெறுதற்கு முடியவில்லை. அவ்வப்போது பாடிய தனிச் செய்யுள்களும் பல. சிறந்த சைவ சித்தாந்தியாக விளங்கிய இவர், வேதாந்தக் கொள்கையிலும் பெருமதிப்புடையவர். வேதாந்த ஆசிரியர்களையும் நன்றாகப் பாராட்டுவார். சுவாமி விவேகானந்தரின் பிறந்ததினக் கொண்டாட்டமொன்றில் 1926ம் ஆண்டு மாசி மாதம் 13ம் தேதி இவர் பாடிய பாடல்களுள் இரண்டை இங்கே தருகின்றேன் படித்துப் பாருங்கள்.

''அம்புவி யென்னு மலைகடல் மீதே ஆதியாம் உபநிடத்
துவாம்
பம்புறு மரிமாண் கொடியொடு ரீலாவப் பழைய வேதாந்
தமாங் கப்பல்
இம்பரில் முத்திச் சேகுநர் தம்மை ஏற்றியே வழிக்கொண்ட
தம்ம
நம்பிய விவேக வானொந்த வென்னும் நல்லமா லுமி
துணையாலே''

★

''மேன்மைசால் சிகாகோ நகரிடை யமைத்த வித்தியா
கோட்டி மண்டபத்திற்
பான்மையி னுற்ற பிரசங்க மேடை பாற்பட வெழுமரக்
கலந்தான்
நான் முகனமைத்த சிங்யுவை சுரோத்ர நல்லகாற் றடித்தா
லுந்திக்கோன்முறை இலண்டன் இலங்கை யெங்கனும்
போய்க் குறுகுதல் மோட்சமா நகரே''

பிறக்கும் போது யாழ்ப்பாணத்தவராகப் பிறந்த தேசிகரவர்கள் 1941ம் ஆண்டு இறக்கும்போது உண்மையான மட்டக்களப்பு மகனாகவே இறந்தார். என்பது குறிப்பிடத்தக்கது யாழ்ப்பாணத்தார் மட்டக்களப்பாராகவும்; மட்டக்களப்பார் யாழ்ப்பாணத்தாராகவும் இறக்கும் பேறு பெறவேண்டும் இந்த மனப்பான்மைதான் நம்மை வாழ்விக்க வல்லது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவத்தைக் கைதூக்கிவிடுவதற்கு அவதரித்த நாவலர் பெருமான்

நமது நாயன்மார்களும், உண்மைத் தலைவர்களும் நாம் நாள்தோறும் உண்ணும் உணவினும், பருகும் நீரினும், நமது உயிரினும் நமக்கு இனியவராவர். அவர்களை நாம் நினைவு கூருவதால் நமக்கு உடலுறுதியும், மனத்துணிவும், உணர்ச்சியும் உண்டாகி உண்மையான சேவையிலே நாம் நிறைவடைதலும் சித்தியாகும்.

வெவ்வேறு சமயங்கள் பல்வேறு நாடுகளிலே தோன்றி வளர்ந்து பின்னர் அந்நாடுகளிலே அவை வீழ்ந்துபட்ட வரலாறுகளை நாம் சரித்திரங்களிலே படிக்கும்போது, மிகவும் வருந்துதற்குரியதோர் நிகழ்ச்சியினைக் காண்கின்றோம். சமய வளர்ச்சிக்கும் அது நிலை பெறுதற்கும் சிறந்த கருவிகள் கல்வியறிவு ஒழுக்கம் முதலிய அடிப்படை அமைப்புகளாகும் இவை சமய வாழ்வுக்கு உயிர் போன்று ஆக்கமளிப்பனவாம். இது இவ்வாறு அமைய வேண்டியிருக்க, தென்தமிழ் நாட்டிலே இதற்குமாறான தோர் முறையிலே சமயங்கள் சில மக்களிடையே வலிந்து புகுத்தப்படலாயின. சமயத் தலைவர்களும், பிரசாரகர்களும் தத்தம் சமயங்களைத் தமிழ் நாட்டிலே பரப்புதற்கு, அவ்வச் சமயக் கொள்கைகளை முதன்மையாகக் கொள்ளாமல் அரசியற் செல்வாக்கையே முதன்மையான கருவியாகக் கொண்டனர். இதனால் 'அரசனெவ்வழி; குடிகளுமவ்வழி' என்னும் முதுமொழிக்கேற்ப மக்கள்தம் சமயவாழ்வும் மாறுபடலாயிற்று. கொள்கைகளையும் நடைமுறைகளையும் நன்கு தெரிந்து கொள்வதை விடுத்துப் பெரும்பாலான மக்கள் கண்மூடித்தனமாகச் சமயங்களைப் பின்பற்றி வருவாராயினர். இதனாலே நாட்டில் அமைதியின்மை ஒழுக்கக்கேடு முதலியன தாண்டவமாடத் தொடங்கின.

தூய சைவ நெறி

பௌத்தம், சமணமாகிய இரு சமயங்களும் இவ்வாறு தென்னாட்டிலே அரசியற் செல்வாக்கினாலே மக்களிடையே பரப்பப்பட்டமையால் தூய சைவசன்மார்க்கமானது குன்றப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதற்குரிய நிலையினையடைந்த அல்லற் காலையிலே சிவபெருமானின் திருவருள் நோக்கமானது தென்தமிழ் நாட்டின் மீது செல்லலாயிற்று. கி. பி. 8ம் நூற்றாண்டு தொடக்கம் 13ம் நூற்றாண்டுவரை தென்தமிழ் நாட்டிலே சமயங்களின் பேரால் நிகழ்ந்து வந்த கொடுமைகள் நீங்கி உண்மை வழியிலே மக்கள் வாழ்தற்கு வழிகாட்டும் சமய குரவர்கள் தோன்றலாயினர், மாணிக்கவாசகரவர்களின் அவதாரத்தினாலே பௌத்த மதமும், திருநாவுக்கரசு நாயனார், திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார், ஆகிய இருவரது அவதாரங்களினாலே சமண மதமும் பொய் வழியைவிட்டு உண்மை வழியைப்பின்பற்றும் முறையிலே நிலை நிற்பனவாயின. சைவ சமயமும் சமயக் கொள்கைகளையும் ஒழுக்க நெறியையும் பின்பற்றுவதால் மாத்திரம் வளர்ச்சி பெற்று வந்த தனது தனிப்பெரும் சிறப்பு நிலையிலே மீண்டும் நன்கு உறுதியடைந்து திகழ்வதாயிற்று.

ஈழநாட்டிலும் ஐரோப்பியர் காலத்திலே கிறிஸ்துமார்க்கம் வளர்ந்த வரலாறும் இதுபோன்றதே. மேல்நாடடுக் குருமார் தங்கள் சமயக் கொள்கைகளின் உயர் தனிச் சிறப்பியல்புகளை மக்களிடையே பரப்பி அன்பு நெறியிலே அவர்களை நிலைபெறுத்தும் வழியினைக் கைக்கொள்ளாமல், உலக ஆசைகளாலும் அரசியற் செல்வாக்கினாலும் தமது மத சேவைகளை நிறைவுறச் செய்தற்கு முயல்வராயினர். இதனாலே நாட்டில் இருவேறு கிறிஸ்தவர்கள் உண்டாதற்குரிய நிலைமை ஏற்படலாயிற்று. உண்மைக் கிறிஸ்தவர்கள் ஒருசிலரும், இரண்டுங் கெட்ட கிறிஸ்தவர்கள் ஆயிரக்கணக்கானோரும் நாட்டிலே தோன்றலாயினர். பாதிரிமார் முதலிய சமய குரவர்களுக்கு முன்னே உத்தம கிறிஸ்தவராக நடித்துத் தமது வீடுகளிலே குளித்து முழுகித் திருநீறுபூசி விரதம்பிடித்துச் சைவர்களாக மறைந்து வாழ்கின்ற கூட்டத்தினர் தொகை நாட்டிலதிகரிக்கலாயிற்று இதனாலே நாட்டில் உண்மைச் சைவம் குன்றுவதாயிற்று போலிக் கிறிஸ்தவமும் வளர்வதாயிற்று,

நாவலர் அவதாரம்

தமிழும் சைவமும் தலைகீழாகித் தமிழும் சைவமும் அஞ்சி வாழ்க்கை நடத்திய இந்த அவலற்காலையிலே: கிறிஸ்து நாதரின் உண்மை பண்பினை புணராது போலிக் கிறிஸ்தவர்களாக இரண்டுங் கெட்ட வாழ்வு நடத்திய ஆயிரக்கணக்கான மக்கள் இவ்வுலக சுகங்களை மாத்திரம் அனுபவித்தற்காக உள்ளொன்றும் புறம்பொன்றுமாக நடந்து பொய்மையேபெருக்கிய இருட்காலையிலேதான் ஆறுமுகநாவலர் அவதாரஞ் செய்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமயகுரவர் நால்வரையும் ஆறுமுக நாவலரையும் காலம் நமக்களித்தது. அவர்களின் அரிய பெரிய சேவைகளைக் காலமானது வேண்டி நின்றது. அவர்களின் திருத்தொண்டுகளின் பெறுபேறுகள் நிலையானவை. என்றும் நிலைத்து நின்று மக்கட் கூட்டத்துக்கு உறுதியளிக்கும் ஆற்றல்வாய்ந்தவை. திருவருள் வடிவமானவை.

கி. பி. 1822ம் ஆண்டு யாழ்ப்பாணத்து நல்லூரிலே திருவருட் குறிப்பினாலே அவதரித்த ஆறுமுகநாவலர் அவர்கள் ஐம்பத்தேழு ஆண்டுகள் இவ்வுலகிலே வாழ்ந்திருந்தார். தமிழ் மொழி, வடமொழி, ஆங்கிலமொழி முதலியவற்றிலே நல்லறிவு படைத்த பெருந்தகையாளர் அவர். தமது வாழ்நாளின் முதற் பகுதியிலே அவர் கிறிஸ்தவ குருமாருடன் மிகவும் அன்போடு பழகிவந்தார். கிறிஸ்தவர்களின் வேதாகம நூலாகிய பைபிளைத் தமிழிலே மொழிபெயர்த்து என்றும் நின்று நிலவும் நிலைமையைத் தந்த பெருந்தகையாளரும் அவரேயாவர். கிறிஸ்தவ உலகம் அவருக்குக் கடமைப்பட்டுள்ளது. இங்கே ஒன்று சொல்ல வேண்டியிருக்கிறது. சென்னையில் ஒரு மொழி பெயர்ப்பும் யாழ்ப்பாணத்தில் ஒரு மொழிபெயர்ப்புமாகப் பைபிளுக்கு இரண்டு தமிழ் மொழிபெயர்ப்புகள் செய்யப்பட்டன. இரு பகுதியினரும் தத்தம் மொழிபெயர்ப்பே சிறந்ததென வாதாடினர். இரண்டு மொழிபெயர்ப்புகளும் நடுத் தீர்ப்புக்கு விடப்பட்டன அக்காலத்திலே மிகுந்த மதிப்புப்பெற்றிருந்த பேரறிஞராகிய மழவை மகாலிங்க ஐயரவர்கள் மத்தியஸ்தராயிருந்து நாவலரின் மொழிபெயர்ப்பே சிறந்ததென்று தீர்ப்பளித்தார். நாவலரின் பன்மொழிப் புலமைக்குப் பைபிள் மொழிபெயர்ப்பு ஓர் உரை கல்லாகும்,

துறவு வாழ்க்கை

கிறிஸ்தவ குருமாருடன் நெருங்கிப் பழகிய நாவலர் அக்குருமாரின் போக்கிலே வெறுப்புக்கொள்ளுதற்குரிய நிகழ்ச்சிகள் பல காலந்தோறும் உண்டாயின. இதனால், நாவலரது மனம் வேறுபட்டது. அவர்களை விட்டு நீங்கினார், சைவப் பாடசாலைகளைத் தொடங்க வேண்டுமென்றும், சமயப் பிரசாரம் செய்ய வேண்டுமென்றும் துணிவு கொண்டார். உயர்தரக் கல்வி கற்று ஆங்கிலப் பட்டதாரியாக வரக்கூடிய வசதி அவருக்கு இருந்தது. அதையும் வெறுத்தார். நல்ல உத்தியோகம் கிடைக்கக் கூடிய நிலையும் இருந்தது. அதையும் வெறுத்தார். நல்ல சீதனம் பெற்றுக் கலியாணம் பண்ணக் கூடிய தகுதியிருந்தது; அதையும் வெறுத்தார். சைவத்துக்கும் தமிழுக்கும் தொண்டு செய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்காக இளமையிலேயே துறவு வாழ்க்கையை மேற்கொள்ள லானார். இத்தகைய துறவு அரிதினும் அரிதாகும்.

தமது அறிவாற்றல்களையெல்லாம் சமயத் தொண்டிலும் தமிழ்த் தொண்டிலும் பயன்படுத்திய நாவலர் பெருமான் சிவபெருமானுடைய திருவடிகளின்மீது வைத்த தளராத நம்பிக்கையில் நிலைத்து நின்றார். தமது தரும கைங்கரியங்களுக்கு இடையூறோ பணமுடையோ ஏற்படும் போதெல்லாம் தமது உடையவராகிய சிவபெருமானிடம் முறையிட்டுத் தமது குறைகளை நிறைவாக்கிக் கொள்ளும் அன்பு நெறியிலே அவர் சித்தி பெற்றமைக்குப் பல உதாரணங்களை அவரது வாழ்க்கை அனுபவத்திலிருந்து நாம் காணுதல் கூடும்,

சீர்திருத்தங்கள்

தாம் பிறந்த நன்னாட்டிலே தமது தொண்டுகளைத் தொடங்கினார். பல சீர்த்திருத்தங்களைச் செய்தற்கு முன் வந்தார். கோயில்களிலே தாசியர் நடனமும், மிருக பலியும் நிகழ்வதைக்கண்டு அவர் மனம் வருந்தினார், சைவமும் தமிழும் வளர்வதற்கு இவையிரண்டும் பெரிய தடைகளாயிருப்பதை உணர்ந்த அவர் மிகவும் வன்மையாகக் கண்டித்து இவற்றை நீக்குதற்கு அரும்பாடுபட்டார். இதுவரையிலே கிறிஸ்தவர்களால் வந்த எதிர்ப்பைப் பார்க்கிலும் சைவர்களால் வந்த எதிர்ப்புகளோ மிகவும் அதிகமாயின. தன்னலத்தை அடிப்படையாகக் கொண்டு வாழ்க்கை நடத்துவோருக்கு நாவலர் மீது கோபமுண்டாயிற்று. தாசியர் நடனத்தாலும் மிருக பலியாலும் பொருளீட்டும் புன்மைவாய்ந்த மக்கள் பல நேர்மையற்ற வழிகளிலே நாவலரை எதிர்க்கலானார்கள் நாவலரோ அஞ்சா நெஞ்சம்; பொதுநலத்தின் பொருட்டுத் துறவு பூண்ட உண்மைத் தியாகி; திருவருளை நம்பித் தொண்டுசெய்பவர். நண்பர், பகைவர், உற்றார் உறவினர் என்பதற்காக நீதியைக் கைவிடாத நேர்மையாளர். எதிர்ப்புகளையெல்லாம் இறைவன் ஏற்றுக் கொள்ள நாவலர் தமது திருத்தொண்டுகளை முன்னிலும் வேகமாகச் செய்துவரலானார்.

நேர்மை தவறாதவர்; உற்றார், உறவினர் பொருட்டும்; நண்பர் பகைவர் பொருட்டும்; நேர்மை தவறாதவர் என்றேன். ஒரு முறை ஒரு வழக்கு வந்தது. அவ்வழக்கிலே நாவலரின் மருகர் வித்துவ சிரோமணி பொன்னம்பல பிள்ளையவர்கள் எதிரியாவார். அவர் குற்றவாளியல்லர் என்று நாவலர் நீதிமன்றத்தில் ஒரு சொற் சொன்னாலே பிள்ளையவர்கள் விடுதலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாகி விடுவார். நாவலரைப் பலரும் பலவாறு வேண்டியும் அவர் இணங்கவில்லை. மருமகனைப் பார்க்கினும் உண்மையும் நேர்மையுமே தமக்குச் சிறந்த உறவுடையவை என்று கூறி முற்றாக மறுத்துவிட்டார். இதுவன்றோ தலைவர்களுக்கு அழகாவது?

அஞ்சா நெஞ்சம்

நாவலர் அஞ்சா நெஞ்சு படைத்தவர்; பிறரிடத்திலிருந்து தமக்கெனச் சன்மானங்கள் பெறுவதை அடியோடு வெறுத்தவர். ஈழநாட்டிலிருந்து தென் தமிழ் நாட்டுக்குச் செல்லுவோர் இராமநாதபுர வழியாகக் போகவேண்டும். தமிழறிஞர்கள் அவ்வழியாகப்போக நேர்ந்தால் இராமநாதபுரத்து மன்னரைத் தரிசித்து அவர் புகழ்பாடிப் பரிசில் பெற்றுச் செல்லுதல் வழக்கம். அவ்வாறு செய்ய வேண்டுமென்பதும் சமஸ்தானத்தின் கட்டளையாகும். நாவலர் பெருமானும் ஒருக்கால் அவ்வழியாகச் செல்ல நேர்ந்தது. அங்குள்ளோர் நாவலரைக் கண்டு இவ்வழியாகச் செல்வோர் மன்னரைத் தரிசித்து வாழ்த்துக்கூறிப் பரிசில்கள் பெற்றுச் செல்வது வழக்கம். அவ்வாறு செய்யாமற் செல்வது அரச தண்டனைக்குரிய குற்றமாகக் கருதப்படும். என்று கூறி நாவலரை வழிமறித்தார்கள். அஞ்சாநெஞ்சம் படைத்த நாவலர், இறைவனுக்குக் குடிமை செய்வதற்குத் தம்மை உரிமையாக்கிய துறவி சுயநலத்தையும் மதிப்பாரோ? சமண மன்னன் அனுப்பிய தூதுவரைப்பார்த்து ''நாமார்க்குங் குடியல்லேம்'' என்று கூறித் தலை நிமிர்ந்து நின்ற நாவுக்கரசர் பரம்பரையில் வந்த நாவலரல்லரோ அவர்? ''இது உங்களரசன் நடை முறையானால் இந்த நடைமுறையையும், பிற ஒழுங்கீனங்களையும் சென்னை அரசாங்கத்துக்குத் தெரிவித்த பின்புதான் நாவலன் மறவன் கையாலிறப்பது என்று நான் கூறுவதாக உங்களரசனுக்குப் போய்ச் சொல்லுங்கள்'' என்று தலை நிமிர்ந்து நின்று கூறிய நாவலர் பெருமானை நமது தமிழர்கள் பின்பற்றி நிற்றல் வேண்டும். நமது தமிழ்த் தலைவர்களும் இவ்வாறு நாவலரை முன்மாதிரியாகக் கொண்டு நிற்றல் வேண்டும். நாவலர் பெருமான் இராமநாதபுர மன்னருக்கு இனிய நண்பரானதும், அம்மன்னரின் சீரிய நண்பினாலே தமிழ்த் தொண்டு செய்து சைவம் வளர்த்ததற்குப் பேராதரவு பெற்றதும் நமது தலைவர்களுக்கும் ஒரு முன்மாதிரியாயமைதல் வேண்டும். எதிர்க்கும் ஆற்றலும் நண்பு பூணும் தகுதியுமில்லாமல் அடித்த காற்றுக்கெல்லாம் சாயும் ஏழமை படைத்த தலைவர்கள் நாவலர் பெருமானின் அடிச்சுவட்டைப் பின்பற்றித் தமிழையும் தமிழரையும் நாட்டையும் பாதுகாத்ததற்குப் புதுப்பெலன் பெறுவார்களாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலர் பெருமான் தனது தாய் நாட்டிலே தமது சொந்தச் சகோதரர்களால், சைவ சமயிகளால் பெரிதும் இடர்களுக்குள்ளானார். மத சேவைகளை நன்கு திட்டமிட்டுச் செய்வதற்கும், அச்சேவைகளின் அருமை பெருமைகளைத் தமது சொந்த நாட்டினர் அறிந்து தமக்குத் துணையாக நிற்றற்கும் வேண்டிய நிலைமையை அடைதற்காக நாவலர் தென்னாடு புகுந்தமை மிகவும் மனம் வருந்தத்தக்க செய்தியாகும். இதனைப்பற்றிக் கூறும்போது நாவலர் பெருமான் வெளியிட்ட கருத்துகள் நமது உள்ளங்களைப் பிளந்து விடுகின்றன. அப் பெருந்தகையாரை நாடு கடத்தியது போன்ற பெருங்குற்றத்துக்கு மக்கள் ஆளாகின்றனர்.

''யாழ்ப்பாணத்தால் உவாத்திக்கப்பட்ட அகதிப்பிராணியாகிய நான்'' என்று கூறும்போது நாவலரின் உள்ளம் என்ன நிலையிலிருந்திருக்கும்? என்பதை நினைக்க நினைக்க நமது மனம் எவ்வளவு வேதனையடைகின்றது? தாம் கூறும் உண்மைகளை மக்கள் அலட்சியஞ் செய்வதை நினைத்து மனம் நொந்து அவர் வேறொரு சந்தர்ப்பத்திற் கூறிய சொற்களும் நம்மை மிகவும் வாட்டுகின்றன. ''சக்கரவர்த்தியின் வாயிலிருந்து வெளிவரும் உண்மைகள் புலையனுடைய வாயிலிருந்து வெளிவருதற்காக அவைகளைத் தள்ளிவிடலாமா?'' என்று கூறுவதை நோக்கிப் பாருங்கள். இது நம்மிடத்திலுள்ள பெருங்குறை. நாம் நம் நாட்டுப் பெரியார்களை வேண்டிய அளவு மதிப்பதில்லை. அவர்களுடைய நன் முயற்சிகளை ஆதரிப்பதில்லை. இனி மேலும் நாம் இவ்வாறு வாழ்தல் நமக்கு அழிவைத் தேடுவதாகும்.

பாராட்டுகள்

நாவலர் பெருமானைத் திருவாவடுதுறை ஆதீனம் அவரது இருபத்தேழாவது வயதிலே பாராட்டி மதிப்புச் செய்த பின்புதான் நமது நாட்டினர் விழித்தெழுந்தார்கள். மதுரைத் திருஞானசம்பந்த மடத்தின் ஆதீனகர்த்தர் நாவலர்பெருமானை நோக்கித் ''தாங்களே உண்மைக் குரவர்; நானல்லேன்; தங்களுக்கே இந்தச் சிவ சின்னங்கள் தகும், எனக்கில்லை'' என்று கூறித் தமது கழுத்திலணிந்திருந்த உருத்திராட்ச மாலையைக் கழற்றி நாவலர் பெருமானுக்கு அணிந்து பெருமைப்படுத்திய பின்புதான் நமது மக்களுக்குக் கண்கள் திறபட்டன. நமது நாட்டுப் பெரியார்களை நாம் நன்கு மதித்தலிலேதான் நமது வாழ்க்கையின் சிறப்பு அடங்கியிருக்கிறது என்பதை நாம் உண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருதல் வேண்டும். இதனாலே தான் நமது நாட்டில் காலந் தோறும் பெரியார்களைத் தோற்றுவிக்கின்ற சூழ்நிலையுண்டா கும். பெரியார்கள் அவதாரஞ் செய்கின்ற பெரும் பேறும் நமது நாட்டுக்கு வந்து வாய்க்கும்.

நாவலர் பெருமான் சைவசித்தாந்தக் கொள்கைக்காக வாழ்ந்தவர். கல்வியைப் பார்க்கினும் அறிவும் அறிவைப் பார்க் கினும் ஒழுக்கமும் சிறந்தனவாகும். நமது சமய குரவர்களும் சந்தான குரவர்களும், தமது புனிதமான சைவ ஒழுக்கத்தினாலே தமது கல்வியையும் அறிவையும் பயன்படச் செய்தோராவர். அறிவை மாத்திரம் மதிக்கும் பரம்பரையை நாம் சேர்ந்தவர் களல்லோம்; ஒழுக்கத்தினாலே புனிதம் பெற்ற அறிவை மதிக் கும் பரம்பரையிலே நாம் பிறந்திருப்பதை உணர்தல் வேண்டும் இன்று நாட்டிலே பல வேறுபட்ட கொள்கைகளைப்பற்றிப் பேசுவோர் இருக்கின்றார்கள். நான் பொதுவுடைமைவாதி; நான் சனநாயகவாதி; நான் சைவ சித்தாந்தி; நான் வேதாந்தி நான் வகுப்பு வாதி; நான் சமத்துவ வாதி; என்றெல்லாம் பேசுவோரைக் காண்கின்றோம். இவர்களுட் பலர் ஒரு கொள் கையையும் பற்றி வாழ்பவர்களல்லர்; ஒரு கொள்கையைச் சொல்வதில் அவர்களுக்கு ஒருவித திருப்தி; அல்லது மதிப்பு: இவர்களுட் பலருக்கு இன்னொரு கொள்கை: நாளை வேறொரு கொள்கை, பெயரளவில் மாத்திரம்: வாழ்க்கையிலே கடைப் பிடித்து ஒழுகும் வகையிலன்று. கொள்கைக்காக உயிர்வாழாது வாழ்க்கைக்காகக் கொள்கைகளை மாற்றிக் கொள்கின்ற மக்க ளால் இன்று உலகம் சீர்கேட்டுக்குள்ளாகின்றது. இந்தப் போலித் தலைவர்கள் நாவலர் பெருமானை நோக்கிப் பார்ப்பார்களாக சந்தர்ப்ப வாதத்தைக் கைவிடுவார்களாக.

இனிய வசனநடை

வசன நடையின் தந்தை என்று நாவலர் பெருமானைக் கூறுதல் தகும். அவரது தமிழ் நடை ஆற்றொழுக்குப் போன் றது. தமிழ் மரபு கடவாதது; தெளிவும் இனிமையும் பொருட் செறிவும் உடையது. குறியிடுகளை முதன் முதல் வசனநடை யிற் புகுத்திய முதலுரிமையும் நாவலர் பெருமானுக்கே உரிய தாகும். நாவலர் பெருமானுக்குப் பெரிய புராணத்திலே பெரிய தோர் பற்றுதலுண்டு. அதிலே பரிபூரண நம்பிக்கையுமுண்டு. பெரிய புராணம் வசனமான செய்தியைக் கேளுங்கள் பெரிய புராணச் செய்யுட் பிரதியையுங் கொண்டு நாவலர் அச்சுக் கூடத்துக்குப் போவார். அங்கே அச்சுக் கோப்பவர் முன்னின்று செய்யுள்களை வசனமாக்கி நேருக்கு நேரே வாயாற் சொல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வார். அச்சுக் கோப்பவரும் காதாற் கேட்டு அச்சுக்கோப்பார் பின்னர் நாவலர் பிழைதிருத்தஞ் செய்து கொடுப்பார் இவ்வாறு உருவாகியதுதான் பெரிய புராண வசனம். பலமுறை எழுதித் திருத்தித் கடதாசிகளை வெட்டிக் கீறிக் கிழித்துப் பிரதி பண்ணிய தொல்லைகள் பெரிய புராண வசனத்துக்கு ஏற்படவில்லையென்பதை நாமறியும்போது நாவலரின் நுண் மதியும், தெளிந்த அறிவும், திடநெஞ்சம், ஞாபக சக்தியும் எவ்வளவு அதி தீவிரமானவைகள் என்பது நமக்குப் புலனாகின்றது.

நாவலர் பதிப்புகளில் ஒரு தனிச்சிறப்பைக் காணலாம். அங்கே பாடபேதங்கள் கிடையா; பிழைதிருத்த அனுபந்தங்களைக் காணமுடியாது இந்தகைய பதிப்புத்திறமை நாவலருக்கு அமைந்ததுபோல் வேறொருவருக்கும் வாய்த்ததில்லை.

கலைத்தொண்டு

12ம் வயதிலே ஆங்கிலம் பயிலத்தொடங்கி, 19ம் வயதிலே இருமொழித் திறமைபெற்று, வடமொழிப் பயிற்சியும் ஆகம நூலுணர்ச்சியும் நிரம்பி, 24-ம் வயதிலே பாடசாலைகள் தாபிக்கும் கலைத்தொண்டில் ஈடுபட்டு, 25-ம் வயதிலே சமயப் பிரசங்கங்கள் செய்வதிலே வீறுகொண்டெழுந்து வெற்றியும் பெற்று 26-ம் வயதிலே வண்ணைச் சைவ பிரகாச வித்தியா சாலையை நிறுவித் தமது மாணவர்களை ஆசிரியர்களாக நியமித்து, 27-ம் வயதிலே திருவாவடுதுறை ஆதீனத்தால் நாவலர் என்னும் சிறப்புப்பட்டமும் வழங்கிக் கௌரவிக்கப் பெற்று அருளொளிக்குள்ளான நாவலர் பெருமான் (57 ஆண்டுகள் இவ்வுலகிலே வாழ்ந்தார்). ஈழநாட்டுக்குச் சிறப்பாகவும் தென் தமிழ் நாட்டுக்குப் பொதுவாகவும் தொண்டு பூண்டு சிறப்படைந்தார். நாவலர் பெருமான் காலத்தாற்பெற்ற கற்பகம் போன்று வேண்டியவற்றை யெல்லாம் நமக்கு உபகரித்துத் தமது உடற்பொறையை விட்டு உண்மை ஒளியிற் புகுந்தார். அவர் மறைந்து 76 ஆண்டுகள் கழிந்தன. ஆயினும் அவரது நிலைபெற்ற திருத்தொண்டின் பெறுபேறாக நமக்குக் கிடைத்துள்ள நூல்களும், கல்விச் சாலைகளும், பிற தருமத் தாபனங்களும் சைவமும் தமிழுங்கலந்து கமழும் வாசத்தால் நாடு முழுவதையும் புனிதமாக்கி விளங்குகின்றன.

நாவலர் போன்ற ஒரு மகானை நாம் உண்டாக்குதல் முடியாது. உருவாக்குதலும் முடியாது; ஆயினும் நாவலரைப் பின்பற்றி வாழ நம்மால் முடியும். அது நமது கடமையுமாகும். நாவலரது சைவசித்தாந்த ஒளியிலே நமது நாடு மறுமலர்ச்சியடைவதாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனகசுந்தரம் பிள்ளை தமிழுக்கு ஆற்றிய அருந்தொண்டு

கல்வி கேள்விகளும் மனிதப் பண்புங் கனிந்து, உணர்ச்சியும் உள்ள நெகிழ்ச்சியும் சிறந்து வாழும் மக்கள் இறந்தும் இறவாதவரே அன்னார்தம் வரலாறுகளும் இறவாத புகழுடையனவே - அவ்வரலாறுகளைப் படித்தலும் படிப்பதும் படிக்க கேட்பதும் பெரிதும் இன்பம் பயப்பனவே பண்பாடும் இரக்கமும் ஒருங்கே அமைந்துள்ள நன்மக்களின் அருமை பெருமைகளைப் பாராட்டுகின்ற நாட்டிலே தான் பண்பாடு வளர்ச்சியடையும்; பண்புடையார் பலர் தோன்றுவர். பேணாத செல்வம் அழிந்தொழியு மன்றோ ஆதலின். நம்நாட்டுப் பெருந்தகையோரை நாமும் பாராட்டி, அன்னார் சென்ற வழிவழியே நாமுஞ் சென்று வாழ்தல் நமக்குக் கடமையாகின்றது.

செழுங்கலை விளக்கம்

கி. பி. 15ம் நூற்றாண்டின் பிற் பகுதியிலே, சென்னை மாநகர்ப் பல்கலைக் கழகத்திலே, செழுங்கலை விளக்கம் போன்று திகழ்ந்த பேராசிரியரொருவர் இன்றும் எமது மனத்தகத்தே இனிது காட்சியளிக்கின்றார். திறந்த மனம்; நிறைந்தகுணம்; தெளிந்த மொழி; சிறந்த நடை முதலிய நல்லியல்புகளெல்லாம் ஒன்று சேர்ந்து உருவெடுத்தாற்போன்று தோன்றிய அப்பெருமகனார் தென்னிந்தியத் தமிழரோ என்று நான் ஒருகால் எண்ணியதுண்டு அவ்வாறு எண்ணும் வண்ணம் அவர் வாழ்ந்து வந்தார். நல்ல நிலத்திலே பாய்ச்சிய நன்னீர் அந்நிலத்தோடு நன்கு கலந்து பயன்படுதல்போல், அன்பு கலந்த தூய நெஞ்சுடைய அன்னார் தென்னிந்தியப் போறிஞர்களோடும், மாணவர்களோடும் பிரித்தற்கரிய அன்பின் தொடர்பிலே ஒன்றுபட்டு நிலைத்துநின்றார் பாலொடு பால்கலத்தாற் போலவும், நீரொடு நீர் சேர்ந்தாற் போலவும் தென் தமிழ் நன்னாடும் ஈழப் பொன்னாடும் ஒன்றுபட்டு வாழ்தற்கு உறுதுணை புரிந்த அப்பெருந் தகையார், அறிவும் ஆற்றலும் அன்பும் வாய்த்து கற்றோர் உள்ளங்களைக் கொள்ளை கொண்ட பண்புடையாளர். சென்னை மாநகர்ப் பல்கலைக் கழகத்துப் 'பரீட்சகர்களுள் ஒருவராகவும், பரீட்சைச் சங்கத்தின் தலைவராகவும் கலைத்தொண்டு புரிந்து புகழொளி பரப்பிய இந்தத் தமிழர் திலகம், ஈழநன்னாட்டிலே திருக்கோணமலைத் திருப்பதியிலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோன்றியவர்; நம்குடிப் பிறந்த நம்பி என்பதை நாமறியும் போது நமக்குப் பெருமிதமும் பெருமகிழ்ச்சியும் உண்டாகின்றன; உயர்ந்த எண்ணங்களும் உதிக்கின்றன. நமது வாழ்க்கையைத் திருத்தியமைக்கும் புதியதோர் மனவெழுச்சியும் நமக்குப் பிறக்கின்றது.

தமிழ்ப் பெருங்குடி

தமிழர்தம் பிறப்புரிமைக்கு நிலைக்களனாயமைந்துள்ளது தேவாரத்திருமணங் கமழுந்திருக்கோணமலை. இங்கே வாழையடி வாழையாக வாழ்ந்து நிலைபெற்ற தமிழ்ப் பெருங்குடியொன்று உண்டு. அச்செழுங்குடி புண்ணியத்திற் புண்ணியமாகிய விருந்தோம்பலிற் பெயர் பெற்றது: தமிழ்ப் புலவர்களின் புகலிடமாயமைந்துள்ளது; சைவ மணமும் தமிழ் மணமும் கலந்து வீசும் வாசத்தாற்புனிதம் வாய்ந்தது. இத்தகைய சீரிய குடியிலே கல்வி அறிவு ஒழுக்கங்களிற் சிறந்த தம்பிமுத்துப்பிள்ளையென்பவர் பல நலன்களும் பெற்று இல்வாழ்க்கை நடத்தி வந்தார். இலங்கைப் பகிரங்க வேலைப் பகுதியிலே பிரதம லிகிதராயிருந்து சேவை செய்த இவருக்குக் கி. பி. 1863ம் ஆண்டு ஆவணி (August) மாதம் 24-ந் தேதியன்று நாளுங்கோளும் நலனுற நிற்ப நல்லதோர் ஆண்பிள்ளை பிறக்கலாயிற்று. உருவுந் திருவுமுடைய பாலகனுக்குக் கனக கந்தரம்பிள்ளையெனப் பெயரிட்டு வளர்த்து வருவாராயினர். பிள்ளையும் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வரலாயிற்று.

கனககந்தரம்பிள்ளை உடன் பிறப்பாளர் மூவர்; அவருள் இருவர் தம்பியர்; ஒருவர் தங்கையார். இவர்களுள் இவருக்கு நேரே இளைய தம்பியும், பல்கலைக் கழகத்துக் கலாகுமார (பீ. ஏ.)ப் பட்டதாரியும் தமிழ்ப்புலவரும், தத்தை விடு தூது, மோகனாங்கி, தமிழ் வரலாறு முதலிய நூல்களின் ஆக்கியோனும் நல்லாசிரியருமாகிய சரவணமுத்துப்பிள்ளை தமது வாலிப வயதிலேயே இவ்வுலக வாழ்வை விட்டகன்றது தமிழ்த்தாயின் தவக்குறைவே போலும்! தத்தை விடு தூதில் ஒரு செய்யுளைக் கீழே தருகின்றேன்.

''தீம்பலவின் நீழலின் கீழ்த்
தெரிவையவட் கியானறியேன்
ஆம்பல் மலர்மாலை
அணிந்தேன் மகிழ்ந்தனனால்;
சாம்பொழுதும் யான்மறவேன்;
தையலவ ளிக்காலம்
வீம்பாய் மறந்தனனோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளம்பாய் பசுங்கிளியே!
வீணே புலம்புவதென்
விதியோ? பசுங்கிளியே;

சரவணமுத்துப்பிள்ளை இருந்திருந்தால்!

கனகசுந்தரம்பிள்ளையின் தங்கையார் தையல் நாயகி. அம்மையார். திருக்கோணமலைக் கச்சேரிச் சிறாப்பராயிருந்த சுப்பிரமணியமென்பார் இவரது நாயகராவார். ''திருகோணமலை மாதர் சங்கம்'' என்னும் ஒரு தாபனத்தை நிறுவிப் பெண்களின் முன்னேற்றத்துக்கு அருந்தொண்டு புரிந்த அம்மையார் தமிழறிஞர்களோடு நெருங்கிய தொடர்பு பூண்டு அவர்களை மதித்து உபசரிப்பதில் மனநிறைவு கொள்பவர். திருக்கோணமலை இந்துக் கல்லூரியின் ஒரு பகுதியைப் பெரும் பொருள் நன்கொடை வழங்கிக் கட்டுவித்து உதவிய பேருபகாரி. இவ்வம்மையாரும் இப்போதில்லை.

பிள்ளையவர்களின் இளையதம்பியார் முகாந்திரம் பால சுப்பிரமணியமென்பவர். இவர் பொதுசன சேவையிற் புகழ் பெற்றவர்; திருக்கோணமலை நகர சங்கத்தின் அங்கத்தவராக வம் தலைவராகவும் நன்கு பிரபலம் பெற்றவர். பல பொதுத் தாபனங்களில் அங்கத்தவராயிருந்து இன்றும் புகழ் படைத்து வாழும் இவர் விருந்தோம்பலில் மனஞ்சலியாதவர்.

கல்வியில் ஆர்வம்

இது இவ்வளவில் நிற்க; கனகசுந்தரம்பிள்ளைக்கு ஐந்து வயதாயிற்று. மையோலை பிடித்தற்குரிய இப்பருவம் வந்தெய்தியதும் ஒரு மங்கள நன்னாளிலே பிள்ளையவர்கள் ஏடு தொடக்கி எழுத்தறிவிக்கப் பெற்றார். அந்நாளிலே திருக்கோணமலையிலிருந்த நல்லாசிரியர்களாகிய கணேச பண்டிதர், கதிரைவேற்பிள்ளை என்போரிடம் தமிழும் ஆங்கிலமுங் கற்றார். பதினான்கு வயது மட்டும் இது நிகழ்ந்தது. நுண்மதியும், கட்டுப்பாடும், கல்வியிலே பேரார்வமுள்ள பிள்ளையவர்கள் தமது பதினான்கு வயதிலேயே மறைசையந்தாதி, திருவாதவூரடிகள் புராணம் போன்ற நூல்களுக்குப் பொருள் கூறும் அறிவுடையவரானார். நிகண்டு, நன்னூல் முதலிய ஆரம்ப நூல்களைக் கற்றற்குரிய தகுதியும் இவருக்கு உண்டாயிற்று. தமிழிலும் ஆங்கிலத்திலும் படிமுறையான நல்ல அடிப்படைக் கல்வி பெற்ற பிள்ளையவர்களுக்கு உயர்தரக் கல்விகற்பது மிகவும் இலேசாயிற்று. இந்த அடிப்படைக் கல்வியே இன்று மிகவும் கவனித்தற்குரியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்நாளில் இந்நாட்டில் உயர் தரக்கல்வி கற்கும் வசதிகள் அமைந்திருக்கவில்லை. அதன் பொருட்டு இந்திய நாட்டையே நாடவேண்டியிருந்தது. பிள்ளையவர்கள் 1880ம் ஆண்டு சென்னைமாநகரையடைந்து செங்கல்வராய நாயகர் கல்லூரியிற் சேர்ந்தார். அங்கு பயின்று பல்கலைக்கழகப் புகுமுகப் பரீட்சையிற் சித்திபெற்றுப் பச்சையப்ப வள்ளலார் கலாசாலையிற் புகுந்தார்; எவ். ஏ. வகுப்பிற் பயின்றார் பரீட்சையிற் சிறந்த பேறும் பெற்றார். பின்னர், சென்னை - மாகாணக் கல்லூரியில் (பீ. ஏ.) கலாகுமார வகுப்பிற் சேர்ந்து கற்கும் வாய்ப்பு இவருக்குக் கிடைக்கலாயிற்று. பீ. ஏப் பரீட்சையில் விசேட சித்தியும் பெற்றார்; தத்துவ சாத்திரத்திலும், தமிழிலும் சிறந்த திறமை காட்டியமைக்காகப் பரிசும் பதக்கமும் பெற்றுப் பலரின் பாராட்டுக்கும் உரியவரானார். தன் பிள்ளையைச் சான்றோனெனக் கேட்ட தாயும் பிள்ளையைப் பெற்ற அன்றடைந்த மகிழ்ச்சியினும் பெருமகிழ்ச்சி படைந்தாள்; சான்றோனாக்கிய தந்தையும் கழிபேருவகை கொண்டார்.

உயர்ந்த பதவி

கலாகுமாரனான கனகசுந்தரம் பிள்ளைக்குக் கல்வியோடு தொடர்பு பெற்ற நல்லதோர் பதவியும் காலத்தாழ்வின்றிக் கிடைத்தது. சென்னை மாகாண வித்தியாவிருத்தி நிலையத்தில் ஓர் உயர்தர அதிகாரியானார். செயலாற்றுத் திறமையால் உடனேயே உத்தியோக உயர்வும் பெற்றார். வித்தியா விருத்தி நிலையத்தின் மேலதிகாரியாக உயர்வுபெற்ற பிள்ளையவர்கள் தம்மை ஒரு மாணவனாகவே கருதிவந்தார். ''யாதும் ஊரே யாவருங் கேளிர்'' என்னும் உரிமைப்பாட்டுக்குத் தம்மைத் தகுதிசெய்து கொண்டார்.

''யாதானும் நாடாமால்
ஊராமால்; என்னொருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு''

என்னுந் திருக்குறளை மறவாது வாழ்க்கை நடத்தலானார். இது யாவர்க்கும் இனியதோர் நல் முன்மாதிரியாகும்.

தமது உத்தியோகக் கடமைகள் ஒழிந்த மற்றைய நேரங்களை யெல்லாம் பழந்தமிழ் நூல்களையும், வடமொழி நூல்களையும் தேடித் தேடிப் படிப்பதிலே பயன்படுத்தி வரலானார்;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கில நூல் நுட்பங்களையும் பாங்குறப் பயின்று சுவைத்துச் சுவைத்து இன்புறுவார். செந்தேனை நாடும் தேன்வண்டுகளைப் போல மாணவர் கூட்டம் இவரை நாடலாயிற்று. சென்னையிலிருந்த அறிஞர் பலரின் கூட்டுறவும், ஈழநாட்டறிஞர் பலரின் நண்புரிமையும் இவர்க்குக் கிடைக்கலாயின. இதற்குள்ளே இரண்டு இடையூறுகள் வந்தெய்தின.

கல்வி யுலகின் கற்பகம் போன்று திகழ்ந்த பிள்ளையவர்களுக்குத் தமது அருமைத் தம்பி சரவண மூத்துப்பிள்ளையை இழந்த துயரம் ஒன்று போதாமல் தமது அன்பின் வடிவான இல்லக்கிழத்தியாரைத் தமது இருபத்தெட்டாவது வயதிலே இழந்து துக்க சாகரத்தில் மூழ்க நேர்ந்ததும் மன மடிவுக்குக் காரணமான பெரியதோர் அதிர்ச்சியாயிற்று.

''கந்தைத் துணியைக் கழற்றி
யெறிந்திங்கோர்
மைந்தன்புத் தாடை
வனை தல்போல் - இந்தவுயிர்
நைந்தவுடல் நீத்தருளால்
நண்ணும் புதுவுடல்கள்
முந்தவடைந் தெய்தும்
முனைந்து''

என்னும் உண்மையினை நன்கு தெளிந்த பிள்ளையவர்கள் கலக்கத்தில் நின்றும் நீங்கித் தெளிவு பெற்று வாழ்ந்து வரலாயினர். தமிழின்பம் ஒரு தனியின்பம். அதற்குத்தொண்டு செய்தலும் ஒரு தனியின்பமாகும். பிள்ளையவர்கள் தமிழ்த் தொண்டு, மனைவியையிழந்த துன்பநோய்க்கு மருந்தாயிற்று.

## தமிழ்த் தொண்டு

தமிழ்த் தொண்டு செய்தற்காகத் வித்தியாவிருத்தி தொழிலிலிருந்து விடுதலை பெற்ற பிள்ளையவர்கள் ஏகமாக மேவியிருந்து தனித்து வசமாகப் மௌனத்தை அடக்கித் தமிழினிமையிலே ஈடுபட்டு இன்புறுவாராயினர் அக்காலத்தில் இராமாயணப் பொருளுணர்ச்சியில் இணையற்று விளங்கியோர் இருவர் உளர். ஒருவர் யாழ்ப்பாணம் நாவலரின்மருகர்வித்துவசிரோமணிபொன்னம் பல பிள்ளை யென்பார்; மற்றவர் தென்னிந்திய வித்துவான் இராசகோபாாலபிள்ளையாவார். இராசகோபால பிள்ளையிடம் இராமாயணத்தை இனிது கற்றார்; நுண்பொருளுணர்ந்தார்; இன்சுவை சேர்த்தார்; இன்பமுமடைந்தார். இராமாயணத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவருக்குப் பெரியதோர் பற்றுதலும் உண்டாயிற்று. இக்காலத்திலும் தென்னாட்டில் ஒரு சிலரிடம் இராமாயண(த்தீ)ப் பற்றுதல் உண்டாயிருப்பதையும் காணுதல் கூடும்.

பாரதம், கந்தபுராணம், இராமாயணம் முதலியவற்றைப் படித்த பின்னர் சங்க நூலாராய்ச்சியிற் பொழுது போக்கலானார். தொல்காப்பியம் முதலிய இலக்கண நூலகளையும் ஐயம் திரிபறக் கற்றுத் தெளிந்தார். பெயரளவில் முன் அறிந்துள்ள நூல்களையும் உரையினையும் தேடித் தேடிப் படித்து மகிழ்ந்தார். ஒப்பு நோக்கி ஆராய்ந்தார். பாடபேதங்களையும், இடைச்செருகல்களையும் கண்டு இது சரி; இதுபிழை என வரையறை செய்யும் முயற்சியில் ஈடுபட்டார்; வெற்றியும் கண்டார். ஆராய்ச்சியாகிய பொன்னுக்கு ஓர் உரைகல்லாய் விளங்கினார் இவரது கூரிய மதியினையும், சீரிய ஆராய்ச்சியினையும், தேசிய போக்கினையும் அறிந்த அறிஞர் பலர் இவர்க்கு நண்பராயினர். தாம் இயற்றிய நூல்களையும், உரைகளையும் ஆராய்ச்சிப் பிரதிகளையும் இவரிடம் காட்டி ஐயப்பாடுகளை அவ்வப் போது தீர்த்துக்கொள்வாராயினர். தமிழிலும், வடமொழியிலும் ஆங்கிலத்திலும் நிரம்பியபுலமை படைத்த பிள்ளையவர்கள் தமது அறிவைக் கொண்டு மற்றவர்களை வெருட்டி விடுவதில்லை; நயப்பும் வியப்பும் அடையச் செய்து தமக்கு இனிய நண்பராக்கிவிடுவார்: இஃது இவரிடத்தமைந்துள்ள குறிப்பிடத்தக்க நல்லியல்பாகும். இது வன்றோ அறிவுடையவனுக்கு அழகாவது!

அரிய நண்பர்கள்

ஆறுமுக நாவலரை யாவரு மறிவர். அவர் சென்னை மாநகரிலே நிறுவிய அச்சகத்தையும் மறிவர். அவரது வித்தியாநுபாலன அச்சியந்திரசாலையிலிருந்து வெளிவரும் பதிப்புகள் சுத்தமான பதிப்புகளாகும். பிள்ளையவர்கள் காலத்திலே அப் பதிப்புகள் மிகவும் மதிப்புப் பெறலாயின. அவற்றை வழுவறப் பரிசோதித்து வெளியிடுவதில் அவர் அவ்வளவு புலன் செலுத்தி வந்தார்.

பிள்ளையவர்களின் காலத்தில் வாழ்ந்திருந்த நல்லிசைப் புலவர்களுள்ளே குறிப்பிடத்தக்க தொடர்புடைய சிலரை இங்கே நினைவூட்டுதல் பொருத்தமாகும். கண்ணீர் சொரிந்து தமிழ்ப் பயிர் வளர்த்த கருணையாளர் சி. வை. தாமோதரம் பிள்ளை பேராசிரியர் சுந்தரம் பிள்ளை, பின்னத்தூர் நாராயணசாமி ஐயர், டக்டர் உ. வே. சாமிநாதையர், சுன்னாகம் குமார



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமிப்புலவர் ஆகியோரைத் தமிழ் கூறும் நல்லுலகம் நன்கறியும். இவர்களெல்லாரும் பிள்ளையவர்களின் அன்பு கெழுமிய நண்பர்களாவார். இவர்களுள்ளும் குமாரசுவாமிப்புலவர் பிள்ளையவர்களின் உயிர்த்தோழரும், உசாத்துணைவருமானவர். பிள்ளையவர்கள் தமது ஆருயிர் போன்ற மனைவியாரைப் பிரிந்த துயரம் புலவரின் இனிய கூட்டுறவால் மறைந்து விட்டதை இருவரு மறிவர்; யாமுமறிவோம்.

''நவில்தொறும் நூல்நயம்
போலும் பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு''

என்னும் அருமைத் திருக்குறளுக்கு பிள்ளையும் புலவரும் ஓர் உதாரணமா யமைவர். இது யாம் மெய்யாகக் கண்டது. இதுவன்றோ புலவரியல்பு!

கவிபாடும் ஆற்றல்

பிள்ளையவர்கள் இயல்பாகவே கவிபாடும் ஆற்றலுடையவர். தமது கலாசாலைத் தலைவர் ஒருகால் நோய்வாய்ப் பட்டுப் படுக்கையிற் கிடந்தபோது இவர் மனமுருகிப் பாடிய குயிற்பத்து என்னும் பாடல்கள் உணர்ச்சியும், தெளிவும், இனிமையும், பொருளாழமும் உடையன வாகும். ஆயினும், இவரது உள்ளம் கவிபாடும் வழியிற் செல்லவில்லை. காலத்துக் கேற்ப நூல்கள் அமைதல் வேண்டுமென்பது அவரது கொள்கை. அன்றியும் வசன நூல்கள் பல வெளிவருதல் வேண்டும் என்பதும் அவரது எண்ணமாகும். பிறமொழி நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்தலும், தமிழிலுள்ள பழைய நூல்களை இக்காலத்துக்குரிய முறையில் உரைவகுத்து வெளியிடுதலும் வேண்டும் என்பதும் அவரது நோக்கமாகும். கூட்டாக நூல் வெளியிடுதலிலும் இவர் பேரார்வமுள்ளவர். குமாரசுவாமிப் புலவர் இதற்கு ஆதரவளிக்கலானார். பல நூல்களை இருவரும் சேர்ந்து வெளியிட்டார்கள். அவற்றுள் அகப்பொருள் விளக்கமென்னும் நம்பியகப்பொருளுரையும், கம்பராமாயணப் பாலகாண்ட அரும்பத விளக்கவுரையும் இங்கே குறிப்பிடுதற்குரியன. பாலகாண்ட அரும்பத விளக்கம் சுத்தமான பாடமுடையது; வேண்டிய வேண்டிய இடங்கள்தோறும் உண்மைக் கருத்துகளைத் தெளிவுபெற உரைப்பது; ஐயமறுப்பது. இராமாயணம் முழுவதையும் இவ்வாறே பதித்து வெளியிட வேண்டுமென்று இவர்களிருவரும் கொண்டிருந்த பேரவா நிறைவேறவில்லை. ஒருவர்பின் ஒருவராய் இருவரும் போயினர். இது தமிழன்பர்களின் தவக் குறைவே போலும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னத்தூர் நாராயணசாமி ஐயரும் பிள்ளையவர்களும் நெருங்கிய நண்பர்களென்பது நமக்குத்தெரியும். சங்கச் சான்றோர் செய்யுள்களுக்கு உரை சொல்வதில் ஐயர் பேர்பெற்றவர். நற்றிணை என்னும் சங்க நூலுக்கு உரைசெய்த பெருமை அவருக்குரியது. ஐயருக்கு அவ்வப்போது ஐயந் தெளிவித்து அவ்வுரையைத் திருத்திப்பதிப்பித்து வெளியிட்ட உபகாரம் நமது கனகசுந்தரம் பிள்ளையவர்களுக்கே உரியது.

சென்னைமா நகரிலே பேரும் புகழும் பெற்று விளங்கிய பண்டித நடேச சாத்திரியாரை வடமொழியுலகம் நன்கறியும். வடமொழி வால்மீகி ராமாயணத்தைத் தமிழில் மொழி பெயர்த்து வெளியிட்ட நல்லுபகாரி அவர், சாத்திரியாருக்கு மொழிபெயர்ப்பில் உறுதுணையாயிருந்தவர் நமது பிள்ளையவர்களே. எனினும், கிஷ்கிந்தா காண்டம், சுந்தரகாண்டம் என்னும் இருபகுதிகளையும் சாத்திரியார் மொழிபெயர்க்கவில்லை. அதற்கிடையில் அவர் போய்விட்டார். அவ்விரண்டு பகுதிகளையும் தெளிவும் இனிமையும் வாய்ப்பத்தமிழில் மொழி பெயர்த்து வெளியிட்டு நிறைவு செய்த பிள்ளையவர்களின் வடமொழியாற்றல் பெரிதென்போமோ? தமிழ் மொழி யுணர்ச்சி பெரிதென்போமோ? யாது சொல்கேம்!

வெளியிட்ட நூல்கள்

இனி, பிள்ளையவர்கள் தாமே தனித்து வெளியிட்ட நூல்களை நோக்குவோம். தமிழ் நாவலர் சரிதை, ஈழ மண்டலத் தேவாரம், திருப்புகழ், சிவஞான மாபாடியம், திருமந்திரம் என்பன குறிப்பிடத்தக்க வெளியீடுகளாம். இவற்றுள்ளே சிவஞா னமாபாடிய வெளியீடும் திருமந்திர வெளியீடும் பிள்ளையவர்களின் சைவசமய உணர்ச்சிக்கு உதாரணமாக, திகழ்வனவாகும். ஈழமண்டலத் தேவாரத் திருப்புகழ் வெளியீடு சமயப்பற்றுக்கும் நாட்டுப்பற்றுக்கும் சான்றாகின்றது. இங்கே ஒரு சம்பவத்தை நினைவு கூருதல் நலமளிக்கும். பிள்ளையவர்கள் பீ. ஏ. பரீட்சையிலே தத்துவ சாத்திரத் திறமைக்குப் பரிசு பெற்றவரல்லவா? பலபேர் தமது பாடத் திறமையை வாழ்க்கையிலே ஒழுக்கத்திற் பயன்படுத்துவதில்லை; பிழைப்புக் கேற்றவற்றைக் கைக்கொண்டு மற்றவைகளைக் கைவிட்டுவிடுவது பெருவழக்காகும். கருவிநூல் கற்பது அறிவுநூல் கற்பதற்கே என்னும் உண்மையை நன்குணர்ந்த பிள்ளையவர்கள் சமயப் பற்றிலே நிலைத்து நின்று, சமயநூலாராய்ச்சியிலே திளைத்துக் கிடந்து இம்மைக்கும் மறுமைக்குமுரிய முறையிலே தாம் கற்ற கல்வியைப் பயன்படுத்தி வாழ்ந்த உத்தம வாழ்க்கை எல்லாராலும் நினைவில் வைத்துக்கொள்ளத் தக்கதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1922ம் ஆண்டு ஆனி (June) மாதம் 14-ந் தேதியன்று தனது பூதவுடம்பை விடுத்துப் புகழுடம்பை நிலைநாட்டிய இப் பேரறிஞரது வரலாறு பலவழிகளிற் சிறப்புடையதாகும். அச் சிறப்புகளெல்லாம் மக்களுக்கு நல்ல முன்மாதிரியாயமைந்து உணர்ச்சியி னூற்றாகவிளங்குவன. ஈழநாட்டிலும், பிறநாடு களிலும் தமிழ் பேசும் மக்கள் எங்கெங்கு வாழ்கின்றனரோ அவர் களுக்கெல்லாம் இனியதோர் நல்விருந்தா யமையுமாறு அவர் தம் வரலாற்றினைக் கூறுகின்ற இக்கட்டுரையினைப் பின்வருஞ் சுருக்கவுரையினைச் சார்த்தி நிறைவாக்கிக் கொள் கின்றேன்.

தவப்புதல்வர்.

தமிழிலும், வடமொழியிலும், ஆங்கிலத்திலும் தெளிந்த புலமை படைத்த பிள்ளையவர்கள் சென்னைப் பல்கலைக் கழகத்துப் பரீட்சகர்களுள் ஒருவராய்ப் பல்லாண்டு தொண்டு பூண்டவர். பரீட்சைச் சங்கத்தின் தலைவராக நான்கு நல் லாண்டுகள் கடமை புரிந்தவர்; மதுரைத் தமிழ்ச் சங்கத்துப் பரீட்சகர்களுள் இவரும் ஒருவர்; சென்னைக் கிறிஸ்தவ கல்லூரி யிலும். பச்சையப்பன் கலாசாலையிலும் தலைமைத் தமிழ்ப் புலமை நடாத்தியவர், சென்னைப் பல்கலைக் கழகத்தாரால் பல லட்ச ரூபா செலவில் வெளிடப்பட்ட மிகப்பெரிய தமிழ் அகராதியின் உதவிப் பதிப்பாசிரியராய் உழைத்தவர்; இத்தகைய சிறந்த சேவைகளால் ஈழநாட்டுக்குச் சிறப்பாகவும் இந்திய நாட்டுக்குப் பொதுவாகவும் நற்பெயரை ஈட்டித்தந்த தமது பிறந்த குடியையும் விளக்கிய பேராண்மையாளர்.

''செய்வன திருந்தச் செய்'' என்னும் வாக்குக்கு இலக் கியமாகத் திகழ்ந்த இவர் மனநிறைவும், அடக்கமும், தெளிவும் உடையவர்; பணிவுடைமையும் இன்சொல்லும் வாய்ந்தவர்; ஆடம்பர வாழ்வை வெறுத்தவர்; தமது பெயரை விளம்பரப் படுத்திக்கொள்ள விரும்பாதவர் தன்னலங் கருதாதவர்; கல்விச் செருக்கு இல்லாதவர்; தெளிவுபெற உணர்ந்து, தெளிவுபெற மொழிந்து, தெளிவு கண்டு மகிழும் செம்மையாளர்.

இத்தகைய புதல்வனைப் பெற்ற இலங்கை மாதா எல் லாரது மதிப்பிற்கும் உரியவளாகின்றாள். இதனால், இலங்கை மக்கள் யாவரும் பெரு மதிப்பைப் பெறுதற்கு அருகராகின்றனர். கனகசுந்தரம்பிள்ளையவர்களின் வாழ்க்கை வரலாற்றினைத் தமிழர் ஒவ்வொருவரும் அறிந்திருப்பது அவசியம். நம் நாட் டுப் புலவர் பெருமக்களின் வாலாறுகளைத் தேடித் தேடிப் படித்து நாம் பழைமையிற் றழைத்துப் புதுமையில் மலருதல் வேண்டும். நீடுவாழ் கனகசுந்தரம்பிள்ளையை நினைவுகூர்வோ மாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வித்துவான் ச. பூபாலபிள்ளை

யாழ்ப்பாணத்துக்கும் மட்டக்களப்புக்குமிடையே நெடுங் காலம் தொடக்கமாகச் சமயசமூக கலாச்சாரத் தொடர்பு இருந்து கொண்டே வருகின்றது.

காலந்தோறும் யாழ்ப்பாணத்து ஆடவர்களுக்கும் மட்டக் களப்புப் பெண்களுக்கும் விவாக சம்பந்தமும் நடந்து கொண் டேயிருக்கிறது.

மட்டக்களப்பு ஆடவர்கள் யாழ்ப்பாணத்திற் பெண் கொள்ளும் வழக்கம் சற்றே குறைவு; இது இப்போது நிகழ் வதைப் பார்க்கினும் சற்றே விருத்தியடைதல் அவசியமாகும்.

பண்டு தொட்டுள்ள சமய சமூக கலாசாரத் தொடர்பில் இவ்விரு தமிழ்ப்பிரிவுகளும் ஒன்றுபட்டுச் சாதிக்க வேண்டிய பல காரியங்கள் நம்மை எதிர்நோக்கி நிற்கின்றன.

எனது தாயாரின் முன்னோரும் யாழ்ப்பாணத்திலிருந்து வந்து மட்டக்களப்பிற் குடியேறியவர்களே. இதனால், எங்கள் குடும்பத்தினரைப் ''பனங்கொட்டை உபாத்தியாயரின் வழித் தோன்றல்கள்'' என்று இன்றும் அழைப்பதுண்டு. இதுபோலவே மட்டக்களப்புப் புளியந்தீவில் பலவித மதிப்புகளோடும் வாழ்ந் திருந்த வித்துவான் பூபாலபிள்ளையவர்களும் யாழ்ப்பாணத் தொடர்பு உடையவராகவே காணப்படுகின்றார். வட்டுக்கோட் டையைச் சேர்ந்த பிரபலம் பெற்ற வயிரவநாதர் குடும்பத் தைச் சேர்ந்த சதாசிவப்பிள்ளை யென்பவர் இவரது தந்தை யாராவர். இவரது தாயார் வள்ளிப்பிள்ளை யென்பார். வள்ளிப் பிள்ளை யென்னும் பெயர் மட்டக்களப்பிற் சர்வசாதாரண மாகப்பெண்களுக்கு இட்டு வழங்கும் பெயராகும். ஒரே கிராமத் தில் எத்தனையோ வள்ளிப்பிள்ளைகளைக் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இற்றைக்கு ஏறக்குறையத் தொண்ணூற்றேழு ஆண்டு களின் முன்பு வித்துவான் பூபாலபிள்ளையவர்கள் மேற்கூறிய பெற்றோருக்கு புதல்வராகப் பிறந்தார். "விளையும் பயிரை முளையிலே தெரியும்" என்பது போல நமது பூபாலபிள்ளையும் நல்ல அங்கலட்சணமுடைய பாலகனாய் அகத்தின் அழகை முகத்திலே தோற்றுவித்து நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வரலானார். ஐந்து வயதில் மை யோலை பிடித்து ஆரம்பக் கல்வியைத் தொடங்கிய பிள்ளை பின்னர் ஆங்கிலக் கல்விக்காக மட்டுநகர் மத்திய கல்லூரிக்கு அனுப்பப்பட்டார். தமிழிலும் ஆங்கிலத்திலும் மிகவும் உயர்ந்த திறமை காட்டியதைக் கண்ட இவரது தந்தையாருக்கு மைந் தன்மீது பெருமகிழ்ச்சி யுண்டாயிற்று. "சான்றோனாக்குதல், தந்தையாருக்குக் கடனே" என்றதின்படி மகனது உயர்வை விரும்பினாலும் தந்தையாருக்கு இவரைப் படிப்பிகக முடியாத வறுமை காரணமாக அக்காலத்திற் சிறந்ததென மதிக்கப்பட்ட "அரசினர் கிளறிக்கல்" சேவையில் மகனைப் புகுத்திவிட்டார். "கோறணமேந்து கோழிமுட்டை கருங்கல்லையும் உடைக்கும்" என்று பெருமை பாராட்டிய காலமல்லவா அது?

பிறந்த ஊரை விடுத்துப் பிழைப்பின் பொருட்டுப் பிற ஊர் வாசியானார் பிள்ளையவர்கள். அது மட்டக்களப்பில் தமி ழறிஞர் என்போர் மருந்துக்குங் கிடையாத காலம்; கிராமங் களில் அங்கங்கே பாரதம் மாத்திரம் படிக்கும் வழக்கம் இருந் தது. வில்லிப்புத்தூர் பாரதம் முழுவதையும் வாய்ப்பாடமாகச் சொல்ல வல்ல பலர் கிராமங்களிற் காணப்பட்டனர். இலக்கண அறிவுமில்லை; பிறவூர்த் தொடர்புமில்லை, இதனால், இவர் களைப் புலவர் வரிசையிற் சேர்ப்பாருமில்லை; நாட்டின் இருள் சூழ்ந்த இந்நிலைமையை நமது இளைஞர் பூபாலபிள்ளை உணர்ச்சிக் கண் கொண்டு நோக்குகிறார். தமிழை முறையாகக் கற்றுத் தமது தாயகத்திற் தமிழொளி பரப்ப வேண்டுமென்று எண்ணினார். வாலிபர்களுக்கு ஊக்கமளிக்க நினைத்தார். தமது உத்தியோகக் கடமைகளை நேர்மையாகப் புரிந்து கொண்டு ஓய்வு நேரம் முழுவதையும் தமிழ் படிப்பதிற் கழிக்கலானார்.

நிகண்டு முதலிய சொல்லாட்சி நூல்களையும், நன்னூல் தொல்காப்பியம் முதலிய இலக்கணங்களையும், புராண இதி காசங்களையும், சங்க நூல்களையும் முறையாகப் படித்துத் தேறினார். மேற்கூறிய கருவி நூல் உணர்ச்சியோடு மாத்திரம் நில்லாமல் அவைகளின் உதவியோடு தருக்கமும் துணையாகக் கொண்டு சைவ சித்தாந்த நூல்களையும் படித்துத் தெளிந்தார். அவருக்கு அக்காலத்திற் பிரபலம் பெற்று விளங்கிய இயற்றமிழ்ப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதகாசிரியர் வல்வை. ச. வயித்திலிங்கம்பிள்ளை, சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர், திருக்கோணமலைக் கனகசுந்தரம் பிள்ளை அட்டாவதானம் பூவை கலியாணசுந்தர முதலியார் முதலியோருடைய நட்பும் கிடைத்தது. கல்வி கேள்விகளினாலாகிய தமது தமிழறிவைப் பேரறிஞர்களோடு தாம் பூண்ட செயலரும் நட்பினால் தூய்மை செய்து கொண்டார்.

இதற்கிடையில், அரசாங்க சேவையில் ஒரு கிளாக்காகச் சேர்ந்த இவர் தமது நேர்மையாலும், திறமையாலும் பகிரங்க வேலைப் பகுதியில் விசேட பதவிக்கு உயர்த்தப்பட்டார். முப்பது வருடங்கள் வரை அரசாங்கசேவையிலிருந்து 1915ம் ஆண்டளவில் ஓய்வு பெற்றார். அரசாங்க சேவையிலிருக்குங் காலத்தில் இலக்கிய இலக்கண சம்பந்தமான பல கட்டுரைகளை ஆராய்ச்சி முறையாக மதுரைத் தமிழ்ச் சங்கத்துச் செந்தமிழ்ப் பத்திரிகையில் வெளியிடலானார். இலை மறைகாய் போன்றிருந்த பிள்ளையவர்கள், இக்காலத்தில் மலை விளக்குப்போல எல்லாராலுமறியப்பட்டுத் தமிழுலகின் மதிப்புக்குள்ளானார். இவரது அறிவு ஆற்றல் முதலியவைகளை அறிந்த மதுரைத் தமிழ்ச் சங்கத்தார் இவரைத் தமிழ்ச்சங்க அங்கத்தவராகச் சேர்த்துக் கொண்டது மன்றிச் சங்கப் பரீட்சகர்களுள் ஒருவராகவும் நியமனம் செய்தார்கள். பண்டித பரீட்சைக்கே பெரும்பாலும் பரீட்சகராக இருந்தமை இவரது பேரறிவுக்கு ஓர் உதாரணமாகும்.

கட்டுரைகள் மூலமாகத் தமது கருத்துகளை வெளியிட்ட பிள்ளையவர்கள் செய்யுள்களிலும் தமது எண்ணங்களை வெளிப்படுத்தலானார். இதனாலும் இவரது புகழ் எங்கும் பரவுவதாயிற்று. பின்னர் இவரது கருத்துகள் வெவ்வேறு நூல் வடிவங்களாக வெளிவரலாயின. 1882-ம் ஆண்டில் திருமுருகாபதிகம் என்னும் தோத்திர நூல் முதல் முதல் இவராற் பாடப்பட்டது. இது மட்டக்களப்புப் பட்டினத்துக்குச் சமீபத்திலுள்ள பெரியதுறை என்னும் தலத்திற் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் முருகப் பெருமான் மீது பாடப்பட்டு அச்சுவாகனமேறியது. 1894-ம் ஆண்டில் சீமந்தனி புராணம் என்னுமோர் நூல் இவரால் இயற்றப்பெற்றது. இது 800 விருத்தப்பாடல்களையுடையது; இனிய எளிய நடையிலமைந்துள்ளது. அக்காலத்து வல்வை இயற்றமிழ்ப் போதகாசிரியராய்ப் பெயர் பெற்று விளங்கிய ச. வயித்திலிங்கம்பிள்ளை அவர்களாற் பரிசோதித்து இது அச்சிடப்பெற்றுள்ளது, பதிப்பாசிரியர், சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர், பூவை அட்டாவதானம் கலியாணசுந்தரமுதலியார் முதலியோராற் சாற்றுகவிகளும் பாடப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றுள்ளது. இந்நூலை ஆசிரியர் இயற்றிய பிரதானநோக்கம் சோமவார விரதத்தின் மகிமையை மக்களுக்கு விளக்கமாக எடுத்துக் கூறுவதேயாகும்.

1905ம் ஆண்டில் விநாயக மான்மியம் என ஒரு நூல் ஆசிரியரால் பாடப்பெற்றது. இது பார்க்கவ புராணத்தின் ஒரு பகுதியாயமைந்துள்ளது. விநாயக மான்மியத்தைப் பல்வேறு விதமாக மாறுபட்ட கதைகளுடன் மக்கள் படிப்பதையறிந்த ஆசிரியர் சரியான முறையில் மக்கள் பயில வேண்டுமென்னும் நோக்கம்பற்றி இதனை இயற்றித்தந்தார். இது அகவற்பாவால் ஆகியது அகவற்பா ஆசிரியப்பா எனவும் கூறப்படும். ஆசிரியன் மாணாக்கருக்கு விடயங்களை விளக்கமாக எடுத்துச் சொல்வது போல இச்செய்யுள் அமைந்துள்ளதால் இப்பெயர் பெற்றது. நமது வித்துவானவர்களும் பொதுமக்களுக்கு விளக்கமாக எடுத்துக் கூறுவதற்காகவே விநாயக மான்மியத்தை ஆசிரியப்பாவாற் பாடினார். இது அச்சாகியுள்ளது.

1905ம் ஆண்டில் கொழும்பு மாநகரில் இருக்கும்போது அங்குள்ள நண்பர்களின் வேண்டுகோளுக்கிணங்கப் புவியழகர் ஆனைப்பந்தி சித்தி விக்கினேஸ்வரர் பதிகம் என ஒரு நூல் ஆசிரியராற் பாடப்பட்டுள்ளது. 1906ம் ஆண்டில் ஆசிரியர் கண்டியில் இருக்கும்போது அங்குள்ள சைவ நன்மக்களின் வேண்டுகோளின்படி 'சிவதோத்திரம்' என ஒரு நூலை இயற்றினார். இது சிவதொண்டர் சரிதப்பொழிப்பாக அமைந்துள்ளது. 1919ம் ஆண்டு ''முப்பொருளாராய்ச்சி'' என்றும் ஒரு வசனநூல் வித்துவான் அவர்களால் இயற்றப்பெற்றது. 1918ம் ஆண்டுப் பிற்பகுதியில் யாழ்ப்பாணத்திலிருந்து வந்த போலிப் பண்டிதரொருவர் திரி பதார்த்தம் என்னும் பதி, பசு, பாசம் ஆகிய முப்பொருளையும்பற்றிப் பிரமாதமாகப் பிரசங்கம் செய்வது போல் ஆடம்பரமாக நடித்துத் திரிபாக அதாவது மாறுபாடாகப் பேசிக்கொண்டு திரிந்தார். இதையறிந்த நமது வித்துவான் மக்கள் மனம் தெளிவடையுமாறு இம் முப்பொருளாராய்ச்சியைக் கட்டுரைவடிவாக எழுதி மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடாகிய செந்தமிழ்ப் பத்திரிகையில் வெளியிட்டார்கள். பின்னர் இது நூல்வடிவமாக அச்சிடப்பெற்றுள்ளது. முப்பொருள்களையும் அவற்றின் இலட்சணங்களையும் அழகாகக் கூறி அவற்றைப்படித்துத் தெளியும் வழிகளையும் ஆசிரியர் தர்க்க ரீதியாக எழுதி மக்களுக்கு உதவியிருப்பதைச் சைவ உலகு பயன்படுத்திக் கொள்வதாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1920ம் ஆண்டில் யாழ்ப்பாணத்து அரசடி விநாயகரகவல் என ஒரு நூல் ஆசிரியரால் இயற்றப்பெற்றுள்ளது. 1922ல் கணேசர் கலிவெண்பா என ஒரு நூலை ஆசிரியர் இயற்றினார். இது பார்க்கவ புராணச்சரிதப் பொழிப்பாக அமைந்துள்ளது.

தென்னாட்டு அறிஞர் சே. வெ. ஜம்புலிங்கம்பிள்ளையவர்களின் சமயநூல்களுள் இருபது நூல்களைத் தோத்திரக் கோவை 1ம், 2ம் பாகமென வகைப்படுத்தி 1ம் பாகத்தை 1923ம் ஆண்டில் அச்சிட்டு வெளிப்படுத்தித் தமிழுலகுக்கு உபகரித்துள்ள நன்றியை நாம் பாராட்டக் கடமைப்பட்டுள்ளோம். இந்த 1ம் பாகத்துள் (1) கணேசர் கலிவெண்பா (2) சிவ தோத்திரம் (3) யாழ்ப்பாணத்து அரசடி விநாயகரகவல் (4) சிவமாலை (5) பெரியதுறைத் திருமுருகா பதிகம் (6) மட்டக்களப்புப் புளியநகர் சித்திவிக்கினேசுவரர் பதிகம் (7) கண்டிநகர் செல்வ விநாயகர் பதிகம் (8) கண்டிநகர் கதிரேசர் பதிகம் (9) மட்டக்களப்பு கொத்துக்குளம் மகாமாரியம்மன் அந்தாதி (10) நல்லிசை நாற்பது என்னும் பத்து நூல்கள் அடங்கியிருக்கின்றன. இவற்றுள் நல்லிசை நாற்பது என்பது நாற்பது நேரிசை வெண்பாக்களால் ஆகிய ஒருநூல்; நிந்தாஸ் துதியாக அமைந்துள்ளது. சிவபெருமானது நற்புகழை இகழ்வது போலப் புகழ்ந்துபாடுவது. காளமேகப்புலவர், குமரகுருபரசுவாமிகள் போன்ற புலவர்களின் பாடல்களிலும் இகழ்வதுபோலப் புகழ்தலாகிய வஞ்சப் புகழ்ச்சியென்னும் அணி அமைந்துள்ள பாடல்களைக் காணலாம். இங்கே பிள்ளையவர்களின் நல்லிசை நாற்பதிலிருந்து ஒரு வெண்பாவினை உதாரணமாகத் தருகின்றேன்

''ஒருமான் முடிமேல் ஒருமான் கரத்தில்
அரைமா னுஞ்பாகத்தமர்ந்தால் - பெருமான்
வருமானங் காணுமோ மற்றவரைக்காக்க
இரவாதென் செய்வானிருந்து''

இச்செய்யுளில் சொல்லணியோடு கூடிய வஞ்சப்புகழ்ச்சி வந்துள்ளது காணப்படுகிறது. ஒரு மானைக் தமது முடியிலும் ஒருமானைக் கரத்திலும், அரைமானை இடப்பாகத்திலும் வைத்து அமர்ந்திருந்தால் இந்த இரண்டரைப் பெண்களையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாபரிப்பதற்கும் பெருமானுடைய வருமானம் போதுமோ? பெண்ணையே வைத்துக் கொண்டு தாபரிப்பது அருமை, இங்கு இரண்டரைப் பெண்களை வைத்திருக்கும் பெருமான் பிச்சை யெடுக்காமல் வேறென்ன தான் செய்வார்? சும்மா இருந்தால் குடும்பம் நடக்குமா? என்று பாடுகின்றார். இந்தப்பாடல் சிவபெருமான் பிச்சாடன மூர்த்தியாக வடிவங்கொண்டு சென்ற திருவிளையாடலைப் புகழ்ந்து கூறுகின்றது. ஒருமான், ஒருமான் அரைமான் பெருமான் என்னுஞ் சொற்கள் சொல்லணியாக அமைந்து நிற்கின்றன. முதல மூன்றுமானும் கங்காதேவியை யும், மான்கன்றையும், உமாதேவியாரையும் முறையே வெளிப் படையாக விளங்குவனவாயினும், மான் கன்றுக்குரிய சொல் பெண் என்னும் பொருளையும் குறிப்பாகச் சுட்டி நிற்கின்றது. பிள்ளையவர்களின் நல்லிசை வெண்பா நாற்பதும் இவ்வாறே சிலேடையோடு கூடிய சொல்லணி வாய்ந்து சமயாசார்புள்ள கருத்துக்களை விளங்குவனவாய் அமைந்துள்ளன.

அறிஞர் ஐம்புலிங்கம் பிள்ளையவர்கள், வித்துவானின் சமயச்சார்புள்ள ஏனைய நூல்களைத் தோத்திரக்கோவை 2ம் பாகமாக வெளியிடப் போவதாக 1923ம் ஆண்டிற் கூறியிருந் தார். அந்நூல்கள் வெளிவந்ததமை தெரியவில்லை. இரண்டாம் பாகமாக வெளியிடக் கோரும் நூல்களையும்பற்றி ஐம்புலிங்கம் பிள்ளையவர்கள் கூறும்போது அந்தப் பத்து நூல்களும் யமகம், திரிபு, சிலேடை மடக்கு முதலிய சொல்லணிகளமைந்த நூல்களும் உள்ளனவென்றும் அவை உயர்ந்த கருத்துக்களை யுடைய செய்யுள் நூல்களென்றும் குறிப்பிட்டிருக்கிறார். அந் நூல்களை வெளியுலகுக்குக் கொண்டுவந்து பயன்பெறச் செய் தல் தமிழர் கடமையாகும்.

இனி ஆசிரியர் இயற்றிய வசன நூல்களை நோக்குவோம் ''தமிழ் வரலாறு'' என்பது ஆசிரியரின் ஒருசிறந்த ஆராய்ச்சி நூலாகும். தமிழ்மொழியின் வரலாறும், தமிழ்நூல்களின் வர லாறும், தமிழ்ப்புலவர்களின் வரலாறும், இந் நூலகத்தே இயன்றவரை தெளிவாக விளக்கிக் கூறப்பட்டுள்ளன. சரித்திர ஆராய்ச்சியும், விஞ்ஞான ஆராய்ச்சியும் நிறைவில்லாத முடிபு களைக் கொண்டிருப்பதால் காலத்துக்குக்காலம் உண்மை காணுந் தோறும் வேறுபட்டுத்தோன்று மென்னும் உண்மையை நமது ஆசிரியர் நன்றாக உணர்ந்தே தமது நூலை அமைத்துத் தந்தி ருக்கிறார். இந்நூல் பல நல்லறிஞர்களின் மதிப்பைப் பெற்று விளங்குகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''மாணாக்கர்க் கருந்தீபம்: தமிழ்வாரி கடப்பதற்கு வாய்ந்த தெப்பம்;
கோணாத நூல்மருவித் தமிழ் மதிக்க வருதுலைக்கோல்: குன்றாவின்பம்
காணார்க்கு வழிகாட்டி! கலைப் பொன்னுக்குரைகல்! தமிழ்க் கலைச் சுகத்தைப்
பேணார்க்குத் தனிமருந்தென் றிந்நூலை யொருவாறு பேசலாகும்''

என்று விபுலானந்த அடிகளாகிய பண்டித மயில்வாகனனார் புகழ்ந்து கூறிய செய்யுள் இங்கே நமது நினைவிற்கு வருகின்றது.

வித்துவான் பூபாலபிள்ளையவர்கள் பெரிய எழுத்தாளர்; சிறந்த கவிப்புலவர்; ஆழ்ந்த ஆராய்ச்சியாளர்; உயர்ந்த நூலாசிரியர்; அன்றியும் தெளிந்த உரை யாசிரியருமாவார். யாழ்ப்பாணத்து மா. வை. வெண்ணெய்க் கண்ணனார் என்னும் புலவர்மணி நவநீத கிருஷ்ண பாரதியார் இயற்றிய 'உலகியல் விளக்கம்' என்னும் உயர்ந்த நூலுக்கு உரைகண்ட பெருமையும் நமது வித்துவானவர்களுக்கே உரியதாகும். உலகியல் விளக்கத்துக்கு இவர் செய்துள்ள விரிவுரையானது இவருடைய இலக்கிய இலக்கணத் தெளிவினையும், பேராசிரியர் சேனாவரையர், நச்சினார்க்கினியர், பரிமேலழகர், அடியார்க்கு நல்லார், முதலிய நல்லுரையாசிரியர்களின் உரை நுட்பங்களிற் பயின்று இவர் பெற்ற திறமைகளையும் காட்டி விளங்குகின்றது. ஈழநாட்டிற் கிழக்கையும் வடக்கையும், புலமையாலிணைத்து வைத்து ஒருரும் ஒருகுலமும் போல வாழச் செய்த முதலுரிமை வித்துவான் பூபாலபிள்ளையவர்களையே சார்ந்ததாகும். அன்றியும், மட்டக்களப்பு என ஈழநாட்டில் ஒரு பகுதியுள்ளது; அதுவும் தமிழ்நாட்டில் ஒரு பகுதியாகும்! அங்கேயும் தமிழுண்டு. தமிழ்ப் பண்பாடுமுண்டு என்பதை முதல் முதல் தென்னிந்தியத் தமிழறிஞர்களுக்கு எடுத்துக்காட்டி மட்டக்களப்பை வெளியுலகத்தின் முன்பு உயர்த்தி வைத்த முதலாவது மட்டக்களப்புத் தமிழ் மகனும் வித்துவான் பூபாலபிள்ளை அவர்களே என்பதையும் மிகுந்த பெருமிதத்துடன் கூறுகின்றேன். மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் அங்கத்துவம் பெற்ற முதலாவது மட்டக்களப்பு மகனும் இவரே. மதுரைத் தமிழ்ச் சங்கப் பரீட்சகர்களுள் ஒருவராக இடம் பெற்ற முதலாவது மட்டக்களப்புப் பேரறிஞரும் இவரே யாவர். 'திறமான புலமையெனில் வெளிநாட்டோர் அதை வணக்கஞ் செய்தல் வேண்டும்.' என்னும் செய்யுட் பகுதிக்கும் இவர் ஓர் உதாரணமாக விளங்குகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடியார்க் கடியவன் சரவணமுத்தன்

இற்றைக்கு ஏறக்குறைய நாற்பது ஆண்டுகளின் முன்பு உணர்ச்சி நிரம்பிய இரண்டு இளைஞர்கள் மட்டக்களப்பிலுள்ள கிராமங்கள் தோறும் கால் நடையாகப் பிரயாணஞ் செய்து சைவப் பிரசங்கங்கள் செய்து கொண்டு திரிந்ததை நான் பார்த்ததுண்டு.

அப்போது. எனக்கு பத்துப் பன்னிரண்டு வயதிருக்கும்.

அவர்கள் இருவரும் நல்ல தேகக்கட்டு உடையவர்கள். ஒருவர் கறுப்பு; மற்றவர் சிவப்பு; நல்ல சைவாசாரமுள்ள இளைஞர்கள்; கழுத்தில் ஒற்றை உருத்திராட்ச மணியும் அணிந்திருந்த ஞாபகம் எனக்குண்டு.

அவ்விருவருடைய புனிதமான ஒழுக்கத்தைக் கண்ட பொது மக்கள் அவர்களைச் சரவணமுத்துச் சாமி, அருணாசலச்சாமி, என்றழைப்பது வழக்கம்.

ஆனால் அவர்கள் பிற்காலத்தில் இல் வாழ்க்கையிற் புகுந்து விட்டனர். முன்மாதிரியான பிரமசக்திகளாயிருந்தே இல் வாழ்க்கையைத் தழுவினர். குறித்த இருவருள்ளும் சிவப்பு நிறமுடைய இளைஞராகயிருந்தவர் இப்பொழுது அறுபது வயது நிரம்பியவராய்ச் சைவப்புலவர் அருணாசல தேசிகமணி என்னும் பெய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரோடு சைவத் தொண்டும் தமிழ்த் தொண்டும் புரிந்து பண்பட்ட வாழ்வுடையவராகத் திகழ்கின்றார். கறுப்பு நிறமுடைய சரவணமுத்துச்சாமி 1929-ம் ஆண்டு தமது முப்பத்தேழாவது வயதில் பூதவுடம்பை விடுத்து புகழுடம்பை நிறுத்தி விட்டு மறைந்து சென்றார். பொது மக்கள் சாமி, சாமி யென்று அழைத்தமையாற்போலும் இவர்கள் இருவரும் இல்வாழ்க்கை புகுந்தும் மக்கட் செல்வத்தைப் பெறவில்லை.

அடியார்க் கடியான்

காலஞ்சென்ற சரவணமுத்துச் சாமிதான் வித்துவான் சரவணமுத்து எனப்பின்னர் அழைக்கப்பட்டவர். இவர் தமது பெயரை எழுதும்போதெல்லாம் அடியார்க்கடியன் அ. சரவணமுத்தன் என்றே எழுதுவார். இதிலிருந்து அவர் சிவனடியார் மீது கொண்டிருந்த பேரன்பு தெளிவாக விளங்குகின்றது. சிவனடியார் மீது இவர் பேரன்பு கொண்டிருந்தது போலவே தமிழிலும் பேரன்பு உடையவர். அதிலும் தனித்தமிழ் என்றால் இவருக்குப் பெரியதோர் ஆவேசம். தமது பெயரை எழுதும் போது ஈழத்து நூரணலம் நித்திலக்கிழார் எனவும் பெரு வழக்காக எழுதுவார். அவர் தம்மைப் பார்க்கிலும் தமிழிற் பற்று உடையவர்; தமது புத்தகங்களைப் பார்க்கிலும் தமது மாணவர்கள் மீது பற்றுள்ளவர். (நூரணல்- சரவணம்; நித்திலம்-முத்து; கிழார்-பிள்ளை)

வித்துவான் சரவணமுத்துவின் தந்தையார் அருணகிரியார் என்பவர். இவரது பெயரைக் கேட்டாலே நாடு கெடிகலங்கும்; பெயர் பெற்ற சண்டியர்; தம்மை எதிர்ப்போரையும் தமது நண்பர்களை எதிர்ப்போரையும் அடக்கி ஒடுக்கித் தலை காட்டாமற் பண்ணி விடுவதில் மிகு சமர்த்தர். இந்தப் பழக்கம் மகன் வித்துவான் சரவணமுத்துவிடமும் இருந்தது; வேறொரு கையில் தமது தந்தையார் கண்முன்னே அகப்பட்டவர்களைக் கையாலும் காலாலும் அடக்குவார். நமது வித்துவானோ மட்டக்களப்பில், ஒருகுட்டி வில்லிபுத்தூரர். தமது எழுதுகோலால் தூரத்திலுள்ள எதிரிகளையும் அடிபணியச் செய்வார்; தமக்கு நண்பராக்கியும் விடுவார். பெரிய கண்டனப் புலியாகிய வயாவிளான் க. வேலுப்பிள்ளையவர்களும் சரவணமுத்துவும் காற்றும் நெருப்பும் போன்ற நண்பர்கள்.

அருணகிரியாருக்கு இப்படிப்பட்ட கல்வியொழுக்கமுள்ள ஒரு மகன் கிடைத்தது எவ்வாறு? எனப்பலரும் ஆச்சரியப்படுவர். ஆனால், நன்றாக நெருங்கி அவரது குடும்பத்தின் வரலாற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றை அறிந்தோர் அவ்வாறு ஆச்சரியப்பட மாட்டார். அருண கிரியார் வீரபத்திர வணக்கமுள்ளவர். ஆண்டு தோறும் ஆலய மொன்றில் வீரபத்திர சுவாமி வேள்வி நடக்கும்போது தாமும் ஒரு நாளை வேள்வியைத் தமது செலவிற் செய்வார். ஆலய வேள்வி முடிந்ததும் தமது வீட்டிலும் அத்தகைய ஒரு வேள்வி யை அதாவது வீரபத்திரர் சடங்கை நடத்தித் தாமும் ஒரு வீரபத்திரராகி விடுவார். இந்த வீரபத்திர வணக்கத்தின் பேறே வித்துவான் சரவணமுத்துவின் வடிவமாகும்.

வாசிகசாலைத் தொடர்பு

அருணகிரியார் மகன் சரவணமுத்து பிற்காலத்தில் ஒரு வித்துவானாக வரக்கூடு மென்பதை யாரறிவார்? அதற்குரிய அறி குறியுமில்லை; பள்ளிக்கூடப் படிப்பிலும் திறமை காட்டவில்லை; ஆங்கிலம் ஏழாம் வகுப்பு வரை படித்தபின் பாடசாலையை விட்டு விலகிவிட்டார். அக்காலத்தில், மட்டக்களப்பின் இந்து வாலிபர் சங்கம் என்னும் ஒரு மத ஸ்தாபனத்தின் வாசிகசாலையில் இவ ருக்கு வாசிகசாலைக்காவலன் என்னும் வேலை கிடைத்தது; பாட சாலையிற் படிக்க முடியாத நமது சரவணமுத்துவுக்கு வாசிக சாலைத்தொடர்பு இயற்கையான மன அமைப்பினை விருத்தி பெறச்செய்தற்கு வழியாயிற்று. வாசிகசாலையிலே பத்திரிகை களை வாசிப்பதில் சரவணமுத்துவுக்கு ஏற்பட்ட பழக்கமானது நாளடைவில் புத்தகங்களைப் படிக்கும் நிலைமையை அடையச் செய்தது. அங்கே அகப்பட்ட சில தமிழ் நூல்களை அரைகுறை யாக வாசித்து வந்தார். இக்காலத்தில் இவரது வீட்டுக்கு அய லில் உள்ளதோர் வீட்டில் ஓர் ஆங்கில ஆசிரியர் வந்து வசிக் கலானார். அவரும் ஒரு மட்டக்களப்புக் கிராமவாசி; கறுப்பு நிறம்; கூரிய கண்கள்; விசாலமான நெற்றி; பின்புறம் திரண்டு பருத்துக் கலைக்களஞ்சியம் போன்று காட்சியளிக்கும் தலை; இடுப்பின் கீழ்ப்புறம் சற்றே மெலிவு; ஆறுமுகநாவலர் தான் மட்டக்களப்பில் வந்து பிறந்திருக்கிறாரோ என்று இவரைப் பார்க்கும்போது நான் நினைப்பதுண்டு. இந்தப் பண்டித மயில் வாகனனாரின் கூட்டுறவு வாசிகசாலைச் சரவணமுத்துவுக்குக் கிடைத்தபோதுதான் சரவணமுத்துவின் சக்தி விருத்தியடையத் தொடங்கியது; இலக்கிய இலக்கணங்களை முறையாகப் படிக்துப் பயிற்சி பெறத் தொடங்கினார். இயல்பாகவே அமைந்துள்ள கவிதா சக்தி வெளிப் படலாயிற்று. 1915-ம் ஆண்டு மட்டக் களப்பு அமிர்த நதி மாமாங்கப்பிள்ளையார் மீது ஒரு பதிகம் பாடினார். அப்பதிகமானது வேதாந்த சித்தாந்தக் கருத்துக் களையுடையதாய்க் கற்றவர்களுக்கு மாத்திரமே விளங்கக் கூடிய இயல்பு வாய்ந்தது. இக்காலத்தில் நமது சரவணமுத்துவுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயது இருபத்துமூன்று இருக்கும். இவரது திறமையையும் தமிழார்வத்தையும் அறிந்த மட்டக்களப்புத் தமிழ்ப்பேரறிஞராகிய வித்துவான் ச. பூபாலபிள்ளையவர்கள் இவரைப் பாராட்டி மதுரைத் தமிழ்ச் சங்கத்திலும் அங்கத்தவராகச் செய்தார்.

## இயற்றமிழ்ச் செய்யுள்கள்

மதுரைத் தமிழ்ச் சங்கத்து அங்கத்தவராகிய சரவணமுத்து தென்னாட்டு அறிஞர்களோடும் தொடர்பு கொண்டு தமது அறிவை வளர்க்கலானார். இயற்றமிழ்ச் செய்யுள்கள் பாடுவதில் திறமைபெற்ற இவர் பண்ணார் இசைத்தமிழ்ப் பாட்டுகள் பாடவும், நாடக நூல்கள் எழுதவும் தலைப்பட்டார்; வெற்றியும் பெற்றார். சந்தப்பாவும் எந்தப்பாவும் எளிதிற் பாடவல்ல சரவணமுத்தன் என்று சாமிதாச மயில்வாகனனாராகிய விபுலானந்த அடிகளார் இவரைப் புகழ்ந்து கூறுவர்; பண்டித மயில்வாகனனாரின் திறமையைக் காட்டும் இலக்கணவித்து என்று பாராட்டினார் பண்டிதர், கே. சிதம்பரநாதன் அவர்கள்: பல வாறும் அருமை பெறப்பாடும் அருணகிரி மைந்தன் என்றார். சைவப்புலவர் அருணாசல தேசிகமணி.

## முத்தமிழ் வல்லார்

1923ம் ஆண்டில் கதிர்காம வேலர் தோத்திர மஞ்சரி என இயலிசைப் பாக்களாலாகிய ஒரு நூல் இவரால் இயற்றப்பட்டுள்ளது. அது அறுபது பாட்டுகளையுடையது. இசைப்பாக்களுக்கெல்லாம் இராக தாளம் அமைத்துள்ளார். தமிழ் மரபு கடவாத அமைப்புள்ள பாட்டுகள். இந்நூல் பல அறிஞர்களின் பாராட்டைப் பெற்றுள்ளது இதனையடுத்து "இலங்காதகனம்," "பாதுகா பட்டாபிஷேகம்" "வனவாசம்" முதலிய பல நாடகங்கள் எழுதியிருக்கின்றார். தாம் எழுதிய நாடகங்களை நடிக்கும்போது தாமும் பிரதம பாத்திரங்களுள் ஒன்றாக நின்று அதிக உணர்ச்சியோடு நடிப்பார். சுகிர்தவிலாச சபையென ஒரு நாடக சபையை நிறுவி அதனைத் திறமையுடன் நடத்தி வந்த பெருமையும் இவருக்கேயுரியதாகும். இப்போது வின்சர் கோமகன் என வழங்கப்படுபவர், அப்போது உவேல்ஸ் இராசகுமாரர் என்னும் நிலையில் இலங்கைக்கு விஜயஞ் செய்த போது சுகிர்த விலாச சபையார் இராமாயணத்தின் ஒரு பகுதியைக் கொழும்பில் நாடகமாக நடித்து மிகுபுகழ் பெற்றது இவர் இராவணனாகக் கோலம்பூண்டு அரங்கில் தோன்றியமையாலன்றோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் மூன்றிலும் வல்ல வித்துவான் சரவணமுத்து செய்யுள் செய்வதில் மாத்திரம் தேர்ந்தவரல்லர். வசன நடையில் அவர்அடைந் துள்ள சாமர்த்தியமும் நம்மாலறிந்து பாராட்டத்தக்கதே. நகைச்சுவையும், சிலேடையும் கலந்து கண்டன மெழுதுவதில் இவரது நண்பர் கல்லடி வேற்பிள்ளையும் இவருமே, ஒருவர்க் கொருவர் நிகராவர். இதனாற்றான் சுதேச நாட்டியம் அக் காலத்தில் சரவணமுத்துவுக்கு மூதலிடம் கொடுத்து வந்திருக் கிறது. வகைகளிலே சிலேடை வழங்குவதற்கு ஒரு உதாரணங் காட்டுகின்றேன். இவரோடு ஒருகால் ஒரு புலவர் வாதிடலா னார். சரவணமுத்து எதிர்வாதஞ் செய்தார். புலவர் இவரது எதிர்வாதத்தின் நுட்பத்தைக் கவனியாமல் விதண்டாவாதம் குதர்க்கம் செய்தார். இப்புலவர் மீனுணவு உட்கொள்பவர் என்பதைச் சிலேடையாகக் குறிப்பிட்டு நமது வித்துவான். "ஒட்டி யோரா திருக்கைதான் உமக்கு நன்றா?" என்று எழுதினார். இங்கே, நான் கூறியவற்றை ஒட்டி ஓராது இருக்கை உமக்கு நன்றா! என்று கூற வந்தவர், ஒட்டி, ஓரா, திருக்கை யாகிய மீன்கள் தான் உமக்கு நன்று; எமது எதிர்வாதம் நன்றா காது எனவும் குறிப்புத் தோன்றுமாறு எழுதினார். வித்து வானை ஒருநாள் சுவாமி விபுலானந்தர் அவர்கள் பார்த்து என்ன வித்துவான்! நீங்கள் மதுபானம் அருந்துவதாகக் கேள் விப்படுகிறேன்; மெய்தானா? என்று கேட்டார். அதற்கு வித்து வான், இல்லை; சுவாமி! நான் பழங்கள் தான் சாப்பிடுவது எனக்கூறினார். சுவாமிகள் குலுங்கச் சிரித்தார்கள். இங்கே வித்துவான் உண்மை கூறினார்; அதாவது பழம்கள், பழைய கள்ளுச்சாப்பிடுவது என்று; அதே நேரத்தில் மதுபானம் உண்ப தில்லை; சுவாமிகள் உண்ணுகின்ற பழவகைகள் நான் சாப் பிடுவது உண்டென்னும் குறிப்பும் சிலேடையாகத் தோன்று மாறு அமைத்துக் கூறினார். இவ்வாறு இவரது பேச்சிலும், எழுத்திலும் சிலேடைகளை அதிகமாகக் காணலாம். பேச்சு மிகவும் கவர்ச்சியுள்ளது.

அரசாங்க உத்திபோகம்

இவ்வளவெல்லாம் வித்துவானைப் பற்றிக் கூறும்போது அவர் எங்கேயோ ஒரு பள்ளிக்கூடத்தில் தமிழ்ப் பண்டிதராய் இருந்து சீவியஞ்செய்தாரென்று நாம் எண்ணிவிடக்கூடாது; அல்லது புலமையை வயிற்றுப் பிழைப்புக்காக உபயோகித்தா ரென்று நினைக்கவும் கூடாது. அவர் அரசாங்க சேவையில் ஒரு கிளாக்காக ஊழியஞ்செய்து சீவித்துக்கொண்டு, சென்றவிட மெல்லாம் தமிழைக் கற்பித்து மாணவர்களுக்குத் தமிழினிமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யையும் ஆர்வத்தையும் ஊட்டி வந்தார். மேலதிகாரிகளும் இவரது புலமையை முன்னிட்டும் இவரைப் பேணிவந்தார்கள். முதலியார் செந்தமிழ்ச் சின்னத்தம்பி அவர்களும் தாம் வன பரிபாலனப் பகுதியிற் பிரதம இலிகிதராயிருந்தபோது நமது வித்துவானைப் பாராட்டிப் பேணியதை நானறிவேன்.

1910 அல்லது 12 வரையில் மட்டக்களப்பில் சைவப் பள்ளிக்கூட இயக்கம் தொடங்கிய காலத்தில் சைவப் புலவர் அருணாசல தேசிகமணி அவர்களும் நமது வித்துவானும் சமயப் போர்முனையில் பிரதம தளபதிகளாகக் காட்சியளித்தனர். தேசிகமணி பொதுமக்களைக் கவரக்கூடிய இனிய எளிய தமிழில் நகைச்சுவை ததும்ப உணர்ச்சியுடன் பேசுவார். வித்துவானவர்கள் சமயக் கருத்துகளை நன்றாக அடக்கி உயர்ந்த நடையில் கம்பீரமாகப் பேசுவார். தேசிகமணி முதற்பசி மக்களுள்ளத்தைத் தட்டியெழுப்பித் தகுதிபெறச் செய்தபின்பே வித்துவான் தமது பிரசங்கத்தைத் தொடங்குவார். இந்த மட்டக்களப்பு இரட்டையர்களின் வழக்கம் இதுவே. இவர்களது பிரசங்கமாரியால் மக்கள் உள்ளத்தில் உணர்ச்சி வெள்ளம் பெருகியது; சைவவித்து முளைத்தெழுந்தது; பல சைவப் பள்ளிக்கூடங்கள் மட்டக்களப்புக் கிராமங்களிற் தோன்றலாயின, யாழ்ப்பாணத்துச் சைவ நன்மக்கள் பலரது பேராதரவும் இங்கே மறக்க முடியாத ஒரு சிறந்த சேவையாகும். அக்காலத்திலே தமிழ் வள்ளலாக விளங்கிய முதலியார் கா. வ. மார்க்கண்டன், பதிவுக்கந்தோர்த் தலைவர் அருளம்பலச் சுவாமியார், வண்ணைத்தம்பி பஞ்சாட்சரம், தெல்லிப்பளை பொ. அம்பலவாணர், மல்லாகம் மாணிக்கம், ஐக்கியச் செல்லப்பா, அஞ்சா நெஞ்சு படைத்த மட்டக்களப்புக் குருநாதபிள்ளை கனகசபை முதலிய பிரமுகர்களை வித்துவான் சரவணமுத்தனின் சேவைக்கு ஊக்கமும் ஆக்கமும் அளித்த சைவ சமய சீலர்கள் எனக் குறிப்பிடுதல் மிகவும் பொருத்தமானதே.

வித்துவானை வாட்டிய நோய்

திடகாத்திரமாக உயர்ந்து பருத்த உருவமும், மேவி வளர்த்த குடுமியும், முறுக்கிய மீசையும் உடையவராகி, அஞ்சா நெஞ்சமும், சபைக்கு அஞ்சாத கல்வியும் படைத்த வித்துவான் வீர சரவணமுத்தன் முப்பத்தேழாவது வயதில் இவ்வுலகை விட்டு நீங்குவாரென ஒருவரும் எதிர்பார்த்திருக்கவில்லை. 1927ம் ஆண்டு திருக்கோணமலையில் வித்துவானவர்கள் வன பரிபாலனப் பகுதியில் உத்தியோக மாற்றம் பெற்று வந்திருந்தார். அங்கே கடமை புரிகையில் தமது ஓய்வு நேரங்களில் சில மாணவர்களுக்குப் பாடஞ் சொல்லிக் கொண்டும் வந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கோணமலையிலிருக்கும் பண்டிதர் கிருஷ்ணபிள்ளை: வித்துவானின் ஞாபகமாக அங்கே விளங்குகிறார். திருக்கோணமலையில் இருக்குங் காலத்தில் வித்துவானுக்கு நோய் கண்டது. ஒரு வகை விஷநீர்; உடல் முழுதும் சொறி சிரங்கு; தமக்குச் சனி பகையாயிற்றென்று சொல்லுவார். சனியைச் சாந்தி செய்தற்காகச் ''சனி வெண்பா'' என ஒரு நூல் இயற்றினார். இது முப்பது நேரிசை வெண்பாக்களால் ஆகியது. கல்லடி வேற்பிள்ளை அவர்களால் சாற்றுக் கவிபாடி அச்சிடப்பெற்றது. சிறிது சாந்தி பெற்றதுநோய். ஆயினும் அது மாறி வேறொரு வடிவத்தில் வயிற்றிற் குடிகொண்டது. 1929ல் சத்திர சிகிச்சைக்காகக் கொழும்புமா நகர்க்குக்கொண்டு சென்றார்கள். சத்திரச் சிகிச்சையும் வெற்றிகரமாக நடந்தேறியது. உறக்கத்திற் கிடந்த வித்துவானுக்கு ஒரு கனவுக் காட்சி; கொழும்புமா நகரில் உவேல்ஸ் இளவரசர் வந்தபோது தாம் இராவணனாக நடித்த நினைவு; பக்கத்தில் ஒருவருமில்லை; பாவம்; எழுந்தார் படுக்கையை விட்டு; வேகத்தின் வடிவான இராவண வீரனாக நடிக்கலானார்; தம்மையும் மறந்து, தமது நோயையும் மறந்து, சத்திர சிகிச்சைக் கட்டுகளையும் மறந்து நடிக்கலானார்; கட்டுகள் அறத்தொடங்கின. எத்தனையோபேர் ஓடிவந்து பிடியாகப் பிடித்துக் கட்டிலிற் படுக்க வைத்தார்கள்; மிகுபிரயாசம்; வெகு பரிதாபம், கட்டுகள் பிறண்டு குடல் குலைந்து வெளிவந்தது. வித்துவானின் ஆவியும் உடனே வெளியேறிற்று. அவரின் அறிவு பல நூல்களாகத் தமிழுலகுக்குப் பயன்படவேண்டியது. அதனைக் கால வெள்ளம் அடித்துக்கொண்டு போய்விட்டது.

கோடிக்கணக்கான உடல்களையெல்லாம் உண்டுவிட்டேனென்று பெருமைகொண்ட சுடலை நமது வித்துவானை விழுங்கியபோது தனது பெருமையை இழந்துவிட்டது. அந்தார் அழல்வாய்ச் சுடலைக்கு ஒரு வித்துவானது புகழுடம்பை விழுங்கும் ஆற்றலுமுண்டோ. இன்று நமது வித்துவான் ஆவி வடிவாய் நம்முடன் கலந்து நிற்கின்றார். தைப் பொங்கற் புற்கைக்குச் சுவை கொடுக்கும் பயறுபோல அவர் நம்முட் கலந்தார். வித்துவானது கல்வியறிவு, தமிழ்த் தொண்டு, முதலியவற்றைப் பாராட்டும் முறையில் மட்டக்களப்புக் கல்லடி உப்போடையில் சிவானந்த வித்தியாலயத்தில் வித்துவான் சரவணமுத்தன் ஞாபகம் என ஒரு பகுதி அமைக்கப்பட்டுள்ளது. சிவானந்த வித்தியாலயத்தில் வித்துவான் சரவணமுத்தன் தமது குரு விபுலானந்த அடிகளாரோடு ஆவிவடிவத்தில் வாழ்கின்றார். அவரை நாம் என்றும் நினைவு கூருவோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புலவர்மணி பற்றிய சில குறிப்புகள்

- 08-01-1899ல் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த மண்டூரில் பிறந்தார். இளம் பருவத்தில் சந்திரசேகர உபாத்தியாயரிடம் புராண இலக்கியங்களைப் பயின்றார். பிற்காலத்தில் யாழ்ப்பாணத்தில் நாவலர் காவிய பாடசாலையில் கல்விகற்றார். அவரும் பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்களும் ஒருசாலை மாணாக்கராவர்.

- இளமைக்காலத்தில் உதவித் தபாலதிபர் போன்ற சில உத்தியோகங்களைப் பார்த்தபின் சுவாமி விபுலானந்தரினால் ஆட்கொள்ளப்பட்டு ஆசிரியர் தொழிலை மேற்கொண்டார்.

- தமிழ் ஆசானாக திருகோணமலை இந்துக்கல்லூரியிலும் பின்னர் மட்டக்களப்பு அரசினர் கல்லூரியிலும் (தற்போது இந்துக்கல்லூரி) பணி ஆற்றினார்.

- இலங்கை சாகித்ய மண்டலம், வானொலி மதியுரைக்குழு பாடநூற் பிரசுரசபை ஆகியவற்றின் உறுப்பினராக இருந்து காத்திரமான பங்களிப்புச் செய்தார்.

- இவரது தமிழ்ப்பணிகளுக்காக இவருக்கு பண்டிதமணி, புலவர்மணி முதலிய பட்டங்கள் மக்களால் வழங்கப்பட்டன.

- யாழ் பல்கலைக்கழகம் "இலக்கிய வித்தகர்" என்ற பட்டம் வழங்கியது. கிழக்குப் பல்கலைக்கழகம் இலக்கிய கலாநிதி என்ற பட்டத்தையும், இந்துசமய கலாசாரத் திணைக்களம் "இலக்கியச் செம்மல்" என்ற பட்டத்தையும் தேசாந்த நிலையில் இவருக்கு வழங்கியது.

- பகவத்கீதை வெண்பா, கர்மயோகம், பக்தியோகம், ஞானயோகம், மற்றும் புலவர்மணி கவிதைகள், உள்ளதும் நல்லதும், பல்கலைக்கவி முதலிய இவரது நூல்கள் இதுவரை வெளிவந்துள்ளன.

- "தமிழ்தந்த புலவர்மணி" என்ற தொகுப்புநூல் இவரைப்பற்றி தமிழறிஞர்கள் பலர் எழுதிய 45 கட்டுரைகளைக் கொண்டதாக வெளிவந்துள்ளது. 25 கட்டுரைகளைக் கொண்டதாகிய இந்நூலைத் தொகுத்து வெளியிட்டவர், இவரது புதல்வரும் கொழும்புத்தமிழ்சங்கத் துணைத் தலைவருமான திரு. பெ. விஜயரத்தினம் ஆவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org